

காவ்யா

மறுவாசிப்பில் தமிழ் இலக்கியம்

ஞானி

மறுவாசிப்பில் தமிழ் இலக்கியம்

ஞானி

காவ்யா

நூல்	:	மறுவாசிப்பில் தமிழ் இலக்கியம்
ஆசிரியர்	:	ஞானி (கி. பழனிச்சாமி)
உரிமை	:	ஆசிரியருக்கு
முதற் பதிப்பு	:	டிசம்பர் 2001
வெளியீடு	:	லட்சுமி சுந்தரம் காவ்யா 16 – 17 வது குறுக்குத் தெரு, இந்திரா நகர், 2–வது தளம், பெங்களூர் – 560 038.
ஒளி அச்சு	:	ஜி.எம். சிஸ்டம்ஸ் காந்திபுரம், கோவை – 12.
அச்சாக்கம்	:	பிரிண்ட்மா, பெங்களூர்.
பக்கங்கள்	:	224
விலை	:	ரூ. 85.00

பதிப்புரை

எனக்கும் கோவை ஞானி அவர்களுக்கும் இருக்கும் உறவு இனியது. இருபது ஆண்டுகளுக்கும் மேலானது. நான் அவரைப் புரிந்து கொண்டது போலவே அவரும் என்னைப் புரிந்து கொண்டிருக்கிறார். எனவே எங்களுக்குள் அதிகப்படியான எதிர்பார்ப்புகளும் இல்லை; ஏமாற்றங்களும் இல்லை. அதனால் ஆண்டுதோறும் அவரது நூலை என்னால் தொடர்ந்து வெளியிட முடிகிறது. எங்கள் "உறவு" நுனிக்கரும்பிலிருந்து சுவைப்பது போன்றது என்று பழைய உவமையையே சொன்னாலும் பாதகமில்லை.

இது இவரது கட்டுரைகளின் தொகுதி. தமிழ் இலக்கியத்தை இதில் மறுவாசிப்பு செய்துள்ளார். 'வாசிப்பு' என்பது ஒரு அறிவு; ஆற்றல்; ஆச்சரியமும் கூட. இதனால் இவரிடம் புதுப்புது விளக்கங்கள் புள்ளிமான்களாகத் துள்ளி விளையாடுகின்றன என்று சொல்லலாமா? சொல்லலாம். இவரது நடை அபாரம். அது அலையா, அருவியா, ஆறா. இல்லை எல்லாமுமா. ஆம் அது தத்தும், தாவும், ஓடும். இவரது எண்ணத்துக்கும் பேச்சுக்கும் எழுத்துக்கும் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

எழுத்து எதற்கு?

பகிர்ந்து கொள்ளத்தானே; பக்குவப்படுத்தத்தானே. பீடம் இடவோ, பிரம்மாவாய் இனம் காட்டவோ, பராக்கிரமங்களை பறைசாற்றவோ அல்லதானே. இவரது எழுத்துக்களில் அறிவைப் போலவே அன்பு பிரவகிக்கிறது. அன்பில்லாத எழுத்தால், அது எவ்வளவு உயரமாக இருந்தாலும் என்ன பயன்?

வாசியுங்கள்; நேசியுங்கள்.

இதைத்தவிர வேறு என்ன எழுதுவது.

வளர்க 'வாசிப்பு'

– என்றும் அன்புடன்
காவ்யா சண்முகசுந்தரம்

முன்னுரை

மறுவாசிப்பு என்ற முறையில் தமிழ் இலக்கியத்தை மட்டுமல்லாமல், வரலாறு, மெய்யியல், வேளாண்மை, கல்வி, மருத்துவம் என்று தொடங்கி எல்லாவற்றையும் இன்று மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு நேர்ந்திருக்கிறது. உலக அளவில் நேர்ந்துள்ள பலவகையான நெருக்கடிகள் நம்மையும், நமக்குள்ளும் வந்து தாக்குகின்றன, தகர்க்கின்றன. இந்நிலையில் நம்மை நிலைநிறுத்திக் கொள்வதற்காக இந்த மறுவாசிப்பைச் செய்ய வேண்டி இருக்கிறது.

மறுவாசிப்பு என்ற இந்தச் செயல் முறை எல்லாக் காலங்களிலும், எலலாக் களங்களிலும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் தமிழ் இலக்கியம், வரலாறு, பண்பாடு முதலியவை அதிக அளவில் மறுவாசிப்புக்கு உள்ளாயின. தமிழின் மேன்மை என்று தொடங்கிப் பலவற்றை நமக்குள் உயிர்ப்பித்துக் கொண்டோம். பகுத்தறிவு, மார்க்சியம் என்ற முறையிலும், மறுவாசிப்பு செய்வதன் மூலம் தமிழ் இலக்கியத்தை நமக்கு நெருக்கமாகக் கொண்டுவந்தோம். ஒப்பியல் இலக்கியம், நாட்டார் வழக்காறு என்ற முறையிலும் வாசித்தோம். இலக்கியத்தில் மட்டுமல்லாமல், எல்லாக் களங்களிலும் செயல்படும் ஆதிக்கங்களைக் களைந்து கொள்ள விரும்பினோம். இந்நிலையில் தலித்தியம், பெண்ணியம், நவீனத்துவம், பின்–நவீனத்துவம் என்றெல்லாம் பேசுகிறோம்.

இன்றைய சூழலில் இலக்கியம் மட்டுமல்லாமல் இயற்கை, தேசம் முதலியவை நமக்குத் தேவைப்படுகின்றன. நமக்கான பொருளியல், நமக்கான அரசியல், நமக்கான கல்வி, நமக்கான தொழில்முறை முதலியவை பற்றியும் பேசுகிறோம். தமிழ்தான் நமக்கு உயிர் என்கிறோம். சமத்துவமும், சமதர்மமும் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை என்று கூறுகிறோம். இத்தகைய தேவைகளை முன்னிறுத்தித் தமிழ் இலக்கியத்தைத் தீவிரமான மறுவாசிப்புக்கு உட்படுத்துகிறோம்.

இந்த மறுவாசிப்பு என்ற முறையைத் தமிழில் தொடங்கி வைத்தவர்கள் என்று தொல்காப்பியர் தொடங்கி எத்தனை பேரை இங்குக் குறிப்பிடமுடியும். சங்க இலக்கியம் தொடங்கி, தற்கால இலக்கியம் வரை எல்லாவற்றையும் இப்படி மறுவாசிப்புக்கு இன்று வரை நூற்றுக் கணக்கான அறிஞர், ஆய்வாளர்கள் உட்படுத்தி வருகின்றனர். 20–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் இலக்கியத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்திய ஆற்றல் மிக்க பெரியவர்கள், அறிஞர்கள் என்று பலரை இங்கு நாம் நினைத்துக் கொள்கிறோம்.

21–ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைத்துள்ள இன்றைய நிலையில் மறு வாசிப்பின் தேவை அதிகரித்துள்ளது என்பதிலும் ஐயமில்லை. வாழ்வா? சாவா? என்ற நெருக்கடி இன்று உலகளவியலான நாகரிகம் முதலியவற்றிற்கும் நேர்ந்திருப்பதை உணர்ந்து, எல்லாக் களங்களிலும் நாம் செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இலக்கிய ஆய்வென்பது இந்த மாபெரும் பொறுப்புணர்வை உள்வாங்கிக் கொண்டு செயல்பட வேண்டி உள்ளது.

என்னைப் பொறுத்தவரை இத்தகைய ஆழ்ந்த ஈடுபாட்டோடு தமிழ் இலக்கியத்தைத் தொடர்ந்து சில பத்தாண்டுகளாக மறுவாசிப்புக்கு உட்படுத்தி வருகிறேன். மார்க்சியம் குறித்த என் மறுவாசிப்பை நண்பர்கள் அறிவார்கள். பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம் முதலிய கருத்தியல்களையும் மார்க்சிய நெறியில் உள்வாங்கிக் கொண்டு தமிழ் இலக்கிய ஆய்வை நான் செய்கிறேன். நவீனத்துவம், பின்–நவீனத்துவம் பற்றியும் எனக்கு ஆழ்ந்த அக்கறை உண்டு. மார்க்சியத்தை உள்வாங்கிக் கொண்ட நிலையில் இவை எல்லாவற்றின் வழியிலும், மனித விடுதலை என்ற உள்ளடக்கத்தை உயிர்ப்பிக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

கடந்த சுமார் ஐந்தாண்டுகளுக்குள் நான் எழுதிய கட்டுரைகளில் ஒரு பகுதியை இந்த நூலில் தொகுத்துள்ளேன். எனது பார்வையை உருவாக்கியவர்கள் என்ற முறையில் பெரியவர்கள், அறிஞர்கள், நண்பர்கள் என்று பலரை நினைத்துக் கொள்கிறேன். இத்தொகுப்பில் இடம்பெறும் கட்டுரைகளில் ஒரு சில, கருத்தரங்குகளில் வாசிக்கப்பட்டவை. இரண்டொரு கட்டுரைகள் மட்டும் இதழ்களில் இடம் பெற்றவை. இதற்காகவும் நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"காவ்யா" உரிமையாளரும், என்னிடம் பேரன்பு கொண்டவருமான திரு. சண்முக சுந்தரம் அவர்களின் ஒத்துழைப்பு இல்லாமல் இந்த நூல் வெளிவருவதற்கு வாய்ப்பு இல்லை. இவருக்கு என்மனம் நிறைந்த நன்றிகள் உரியவை. ஒளி அச்சுப் பதிவு செய்தோர், பிழை திருத்தம் பார்த்தவர், அச்சிட்டோர் என்ற முறையிலும் பலருக்கு என் நன்றிகள் உரியவை. எல்லாவற்றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்பதை நான் வற்புறுத்தும்பொழுது, என்னையும் தொடர்ந்து மறுவாசிப்புக்கு உட்படுத்திக் கொள்ளவே விரும்புகிறேன். நண்பர்கள் இந்த உதவியை எனக்குச் செய்வார்கள் என நம்புகிறேன்.

123, காளீசுவரர் நகர்,
கோயமுத்தூர் – 641 009.

நன்றியுடன்
ஞானி

உள்ளடக்கம்

1. நவீனத் தமிழ் இலக்கியம் - சில கேள்விகள்

1. நவீனத் தமிழ் இலக்கியம் என்று சொல்லும் பொழுது தமிழில் இத்தகைய போக்கு என்று தொடங்கியது? எந்த வகைகளில் தொடங்கியது? இத்தகைய போக்கினால் தமிழ் இலக்கியம் பெற்ற நன்மைகள் என்ன? இத்தகைய கேள்விகளுடன் தொடங்குகிறோம்.

ஆராய்ந்து பார்க்கும்பொழுது வள்ளுவரிலிருந்து தமிழ் இலக்கியத்தில் நவீனப் போக்கு தொடங்கியது என்று சொல்லலாம். பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நாவல் தோன்றுவதற்கு முன்பே ஆதியூர் அவதாணி என்ற செய்யுள் வடிவிலான நாவல் தோன்றியது. கூடவே எழும். செய்யுள் வடிவில் நாவல் அமைய முடியுமா? நாவலும் சிறுகதையும் நமக்கு ஆங்கில கல்வி மூலம் மேற்கிலிருந்து வந்தவை என்று கூறுகிறோம். ஏற்கனவே நமக்கு கதை சொல்லும் முறை இருக்கிறது. புராணங்கள், காவியங்கள், பிரபந்தங்கள் என்ற வடிவங்கள் இருக்கின்றன. கதை சொல்லும் மரபில் ஏற்பட்ட மாற்றம், பயன் என்ன? என்பது மேலும் ஒரு கேள்வி.

ஆங்கிலக் கல்வியோடு சேர்ந்து அச்சுத் துறையில் நூல்கள் வெளிவந்தன. கல்விப் பயிற்சி விரிவுபெற்றது. ஆங்கிலேயர் இந்தியாவுக்குள் ஒருவகையான முதலாளியத்தைக் கொண்டுவந்தனர். பெண்களுக்கும் கல்வி தரப்பட்டது. பெண்கல்வி, விதவை மறுமணம் முதலிய போக்குகள் ஏற்பட்டன. சாதிகள் தேவை இலலை. நகரங்கள் தோன்றின. இவற்றின் பயனாக சமூகச் சீர்திருத்தம் என்ற போக்கு விரிவுபெற்றது. புதிய பார்வைகள் வெளிப்பட்டன. இலக்கியத்திலும் புதிய போக்குகள், பார்வைகள் தோன்றின. இவை காலத்தின் தேவை. பழைய இலக்கியங்களைப் புதிய பார்வையில் பார்க்க நேரிட்டது. இப்படி நவீன இலக்கியம் தோன்றியது என்று வைத்துக்கொண்டால் இதன் ஒரு முக்கியக் கூறாக திறனாய்வுப் பார்வை அமைந்தது. தமிழ் இலக்கிய மரபில் திறனாய்வுப் பார்வைக்கு இடமில்லை என்று சிலர் கூறுகிறார்கள். திறனாய்வு இல்லாமல் இலக்கியத்தில் மாற்றங்கள் நேரமுடியாது. இலக்கியத்தில் நேரும் மாற்றம் என்பவை சமூகத்தில் நேரும் மாற்றங்களுடன் நேரடியாக உறவு கொண்டவை.

2. ஆங்கிலேயர், இந்தியாவைக் கைப்பற்றி தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியபொழுது, அவர்களின் ஆதிக்கத்துக்கு எதிரான இயக்கங்கள்

இங்கு உருவாயின. எங்களுக்கும் பேரிலக்கியங்கள், பெருவாழ்வு, ஆட்சிமுறை நாகரிகம் என்றெல்லாம் இருந்தன. இவற்றை நாங்கள் இழக்க முடியாது என்ற முறையில் இந்தியா முழுவதும் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியவர்கள் தமிழகத்தில் இத்தகைய மறுமலர்ச்சியின் வடிவங்கள்.

சங்க இலக்கியங்கள் கண்டறியப்பட்டன. தமிழ் நாகரிகத்தின் தொன்மைகள் அறியப்பட்டன. தமிழ் இலக்கிய ஆய்வில் ஒரு பெரும் வீச்சு நிகழ்ந்தது. இடைக்காலத்தில் உரையாசிரியர்கள் மூலம் தமிழ் ஆய்வில் பெற்ற பெரும் வீச்சுக்கு நிகராக இதைச் சொல்லமுடியும். தமிழ் இலக்கிய ஆய்வில் ஈடுபட்ட பேராசிரியர்கள் சில தலைமுறைகளில் தொடர்ந்தனர். இன்று அவர்களின் கடைசி தலைமுறை காணாமல் போய்க் கொண்டு இருக்கிறது. இலக்கியத்தை மக்கள் மத்தியில் இவர்கள் கொண்டு சேர்த்தனர். தமிழகத்தில் சில அரசியல் இயக்கங்களின் தோற்றத்திற்கும் இவர்கள் தொடக்கப் புள்ளியாக இருந்தனர். மனோன்மணியம் சுந்தரனாரை இங்கு நாம் நினைவு கொள்ள வேண்டும். அவர் எழுதிய நாடகம் தமிழ் மறுமலர்ச்சியின் குறிப்பிடத் தகுந்த சின்னம்.

தமிழ் நாகரிகம், ஆரிய நாகரிகத்துக்கு எதிரானது. தமிழ் தனித்து இயங்க முடியும். தமிழர்களுக்குத் தனி நாடு தேவை. தமிழர்களுக்கு சாதி இல்லை, மதம் இல்லை. ஆரியர் வருகை காரணமாகத்தான் தமிழர்களின் வாழ்வியல் நெறிகள் அழிந்தன. இத்தகைய கருத்துக்களின் ஆதாரத்தில் தமிழ் வாழ்வில் புத்துயிர்ப்பும், புதிய போக்குகளும் ஏற்பட்டன. இலக்கிய ஆய்வுகள் தொடர்ந்தன. சங்க இலக்கியம் முதற்கொண்டு தமிழ் இலக்கியத்தின் பல தளங்கள் பாட நூல்களில் இடம்பெற்றன. மேற்குலகின் தாக்கம் காரணமாகத் தமிழிலக்கியம் புதிய நெறிகளில் பயிலப்பட்டது. தமிழ் இலக்கியம் குறித்த கால ஆராய்ச்சிகள் முன்னுக்கு வந்தன. இலக்கியக் கூறுகள் ஆராயப்பட்டன. இலக்கியம் பற்றிய மதிப்பீடுகளும் தோன்றின. வையாபுரிப்பிள்ளை, தெ.பொ.மீ., அ.சா.ஞானசம்பந்தம், மு.வ. முதலியவர்களை இங்கு நினைவு கொள்ளலாம்.

தமிழர்களின் வரலாற்றாய்விலும் தேர்ந்த சில அறிஞர்களையும் நாம் இங்கு நினைவில் கொள்ள முடியும். தொகுத்துச் சொன்னால் தமிழின் வீறு வெள்ளமெனப் பெருகியது. மரபை மீண்டும் புதுப்பித்தல் அல்லது

மரபின் ஆக்கம் என இதை நாம் குறிப்பிட முடியும். தொல்காப்பியம் நமக்கு இன்றும் நெருக்கமான நூல். தமிழர் வாழ்வியலுக்கு திருக்குறள் ஆதார நூல். இப்படியெல்லாம் பல மதிப்பீடுகள் ஏற்பட்டன. இத்தகைய மதிப்பீட்டில் பாரதியின் இடத்தை - நாம் நினைவு கொள்ளலாம். வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல் கம்பனைப் போல் பூமிதனில் யாங்கெனுமே பிறந்ததில்லை என்று அவர் சொன்னதோடு, இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை என்று உறுதிப்படுத்தினார். மரபு வழியே வந்த தமிழின் பேராற்றல் எத்தகையது என்பதற்குப் பாரதியின் இந்தக் கூற்று ஒரு நல்ல சான்று. பாரதியின் பார்வைக்குள் திறனாய்வின் திறன் வெளிப்படுகிறது என்பதில் ஐயமில்லை.

3. தமிழ் எவ்வாறு நவீனப்பட்டது என்று பார்க்கும் பொழுது பத்திரிக்கையின் பணியை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். தமிழ் உரைநடையை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சேர்த்தவர்கள் பத்திரிக்கையாளர்கள். திரு.வி.க. மணிக்கொடி, பாரதியை இங்கு குறிப்பிட வேண்டும். சிறுகதை, நாவல் ஆகிய வடிவங்கள் வழியேயும் தமிழில் உரைநடை நவீனப்பட்டது. சாதாரண மக்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் இவற்றில் இடம்பெற்றன. ஒரு வகையில் சிறுகதை, நாவல் முதலிய ஆக்கங்கள் வழியேயும் செயல்படுவது வாழ்க்கை பற்றிய திறனாய்வு. திறனாய்வு இல்லாமல் புதிய வடிவங்கள், சிந்தனைப் போக்குகள், வாழ்வியலில் இல்லை என்ற உண்மையை நாம் இங்கு அழுத்திச் சொல்லலாம். மணிக்கொடியிலிருந்து சிறுகதை வளர்ச்சியின் முக்கிய மாற்றத்தை நாம் காண்கிறோம். பாரதி கவிதையைப் புதுமைப்படுத்தினார். மெய்யியலில் புதிய பார்வையைப் புகுத்தினார். இலக்கியம், சமுதாயம் குறித்துப் பேச வேண்டும் என்பதை அடிப்படை விதியாக்கினார். மனிதனுக்குள் இயல்பாகப் பொங்கும் கவித்துவத்தைப் பாரதிக்குள் முதன்முறையாக நாம் காண்கிறோம். செய்யுள் மரபிலிருந்து பாரதி கவிதைக்குப் புதிய மரபைத் தோற்றுவித்தார். கவிதையில், தமிழில் இது ஒரு புதிய திருப்புமுனை. இதைப் போலவே புதுமைப்பித்தன், மௌனி ஆகியவர்களையும் குறிப்பிட வேண்டும்.

தமிழ்க் கவிதை நவீனப்பட்டு வந்தது என்ற வரலாற்றில் இன்னொரு திருப்புமுனை புதுக்கவிதை ஆக்கம். புதுக்கவிதை என்ற புதிய போக்கு எழுந்த சூழலில் தான் கவிதை என்றால் என்ன? இலக்கியம் என்றால் என்ன? என்பது பற்றி ஆழமான ஆய்வுகள் எழுந்தன. மரபு வடிவிலான யாப்பு வடிவம் கவிதையைத் தீர்மானிக்க முடியாது.

உவமைகள், உருவகங்கள், சந்தம் முதலியவை கவிதையைத் தீர்மானிக்க முடியாது. இத்தகைய தொடக்க கேள்விகளின் வழியே கவிதை குறித்தும் இலக்கியம் குறித்தும் பார்வைகள் ஆழப்பட்டன. இலக்கியம் வணிகப் பொருளல்ல. கவிதை என்பது பிரச்சாரத் தொனியோடு செய்யப்படுவது அல்ல. கவிதை அல்லது இலக்கியத்துக்குள் வாழ்க்கை பற்றிய தரிசனம் தேவை. மரபின் வழியே தொடர்ந்து வந்த மதத்திற்கு இனி இலக்கியம் சேவை செய்ய முடியாது. வாழ்வின் அர்த்தம் என்ன? என்ற கேள்விக்குப் புதிய விடைகள் தேவை. இந்தச் சூழலில் இருத்தலியல் பார்வை இங்கு இடம் பெற்றது.

சிற்றிதழ்கள் முன்னுக்கு வந்தன. வணிக இதழ்களும் சிற்றிதழ்களும் வெவ்வேறு தளங்களில் நேரெதிரான தளங்களில் செயல்படக்கூடியவை. வாழ்க்கை வளங்களைத் தின்று கொழுப்பவை வணிக இதழ்கள். வாழ்க்கைக்குள் புதிய ஒளி சேர்ப்பவை சிற்றிதழ்கள். இந்த அடிப்படையில் எழுத்தாளர்கள், இரு துருவங்களில் பிரிந்தனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் பேரளவில் ஆற்றல்கள் திரண்ட காலம் என்று இதைச் சொல்ல முடியும். மணிக்கொடி, எழுத்து, கசடதபற, முதலிய இதழ்கள் வழியே வெளிப்பட்ட இந்தப் பேராற்றல் 80கள் வரை பெரும் வீச்சாய் அமைந்தது. தமிழை நவீனப்படுத்தியது இந்தப் போக்கு.

இதிலிருந்து வேறுபடுவது நவீனத்துவம் என்ற போக்கு. இதன் தொடக்கம் மௌனி, புதுமைப்பித்தன் ஆகியவர்களில் இருந்தது. புதுக்கவிதைக்குள் இதன் வீச்சு பெரியது. அசோகமித்திரன், நகுலன், சுந்தரராமசாமி முதலியவர்களையும் இங்கு குறிப்பிட வேண்டும். கவிதையில் ஞானக்கூத்தன், சி.மணி என்று பலரைக் குறிப்பிட முடியும். கல்கி, நா.பா., அகிலன் ஆகியவர்கள் தமிழின் நவீனப் போக்கோடு தொடர்புடையவர்கள், இந்தப் போக்கின் இன்னொரு அலை என முற்போக்கு இலக்கியத்தைச் சொல்லலாம். சமூகத்தைச் சீர்திருத்துவது மேம்படுத்துவது என்பதனோடு தொடர்புடையது இவர்களுடைய இலக்கியப் பார்வை. இந்தப் பார்வையை நாம் மறுக்க வேண்டியதில்லை. இந்தப் பார்வைக்கு இன்றளவும் தேவை இருக்கிறது.

நவீனத்துவம் என்ற போக்கை இதிலிருந்து வேறுபடுத்துவது வாழ்வியல் பற்றிய கலைசார்ந்த ஒரு ஆழ்ந்த தரிசனம். சமூகத்தைப் பொருளியல் அடிப்படையில் மாற்றியமைப்பது தேவைதான் என்ற போதிலும்; மனிதனின் உள்முகத் தேடலுக்கு இது உதவாது. வாழ்வின்

அர்த்தங்கள் அல்லது மேன்மைகள் பொருளியலோடு நெருக்கமான உறவு உடையவை அல்ல. பொருளும் அதிகாரமும் வாழ்க்கையை அழிக்கும். உயர்குணங்களை நாசமாக்கும். பிரபஞ்சம் மனிதனுக்காக இயங்கவில்லை. வாழ்க்கை புதிர்கள் நிறைந்தது. இருண்மையும், அபத்தமும் கொண்டது. பொருளியல் தேவைகளின் நிறைவு, வாழ்வின் நிறைவு ஆக முடியாது. இப்படி இயங்குகிறது நவீனத்துவம் என்ற பார்வை. கல்கி, நா.பா., முதலியவர்கள் வெளிப்படுத்தும் லட்சிய வேகம் வாழ்வின் சாரம் அல்ல. அவர்கள் கதாநாயகர்களைப் படைத்தார்கள். அவர்களுக்குள் ஏதோ ஒருவகையில் ஆதிக்க உணர்வு செயல்பட்டது. ஆதிக்க உணர்வைக் களைந்து கொள்ளும் எளிய மனிதன் நமக்குத் தேவை. நவீனத்துவம் என்ற இத்தகைய போக்கின் இன்னொரு பாய்ச்சலை 80க்குப் பிறகு நாம் காண்கிறோம். இதைப் பின் நவீனத்துவம் என்று குறிப்பிடுகிறோம். இலக்கியம் அல்லது வாழ்வைக் குறித்த உத்திகள் என்று இதனைக் கூற இயலாது. மேம்போக்காக இவை உத்திகள் என்று தோன்றினாலும், ஆழ்ந்து பார்க்கும்பொழுது வாழ்க்கை அல்லது இலக்கியம் பற்றிய அணுகுமுறை, பார்வை என இவற்றை நாம் புரிந்துகொள்ள இயலும்.

4. தமிழகத்தில் காந்தியம் அல்லது மார்க்சியத்தை முன்நிறுத்திய அரசியல் இயக்கங்கள் தோல்வியடைந்துள்ளன. திராவிட இயக்கங்களும் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. இந்துத்துவம் இன்று தீவிரப்பட்டு வருகிறது. சந்தைப் பொருளாதாரத்தின் தாக்கம் காரணமாக வாழ்க்கை அழிந்து வருகிறது. தமிழ் இயக்கங்களுக்கு வெற்றியில்லை. இத்தகைய சூழலில்தான் தீவிரமான புதிய சிந்தனைகள் நமக்குத் தேவைப்படுகின்றன.

குறுகியவை அனைத்தையும் உடைத்து / தகர்த்துப் பார்க்க வேண்டும். மரபு என்றால் என்ன? என்று தொடங்கி, நிறைய கேள்விகள் எழுகின்றன. கதாநாயகர்கள் நமக்குத் தேவை இல்லை. இறுக்கமாக கட்டப்படுகின்ற நாவல்கள் தேவை இல்லை. தொன்மையான இலக்கியங்கள் / காவியங்கள் என்பதற்காக அவற்றை நாம் வழிபட முடியாது. எளிய மனிதன் தான் இங்கு நமக்கு இலக்கு. இலக்கியம் என்பது இங்கு கதையாடல்கள். இவற்றில் புனிதம் இல்லை, உன்னதம் இல்லை. தர்க்கத்தால் இவை கட்டப்பட்டவை. இவற்றின் அடியில் அதர்க்கங்கள், உறைந்து மௌனமாய்க் கிடக்கின்றன. ஆணுக்கு அடியில் பெண்; உயர்சாதிக்கு அடியில் தாழ்த்தப்பட்டவர்கள், அதிகாரத்தின் கீழ்

மக்கள், ஆதிக்கத்தின் கீழ், தாவரங்கள் / உயிர்கள். இவை எல்லாவற்றையும் சம நிலைக்குக் கொண்டு வந்து இவற்றிற்கு இடையேயான உரையாடலைத் தொடர வேண்டும். இனி தாவரங்கள் பேச முடியும். விலங்குகள் மனிதனைக் குதற முடியும். இயந்திரங்களைத் தகர்க்கலாம், வாய்ப்பாடுகளை உடைத்து நொறுக்கலாம். எல்லாவற்றினுள்ளிருந்தும் அவற்றின் பொய்களை அதிகாரங்களை வெளியேற்ற முடியும். மலர்களைப் போலவே வேர்களும், மண்ணும் அழகானவை. தூய்மையில் மட்டும் மனிதன் வாழவில்லை. அசுத்தங்கள் இல்லாமல் இவன் வாழ முடியாது. எல்லாருக்குள்ளும், கதை சொல்லி இருக்கிறான். சமத்துவம் இருக்கிறது. பேரிலக்கியங்கள் என்பனவற்றைத் தோண்டிப் பார்த்தால், நாட்டார் இலக்கியங்கள் அவற்றுக்கு ஆதாரமாக அமைகின்றன. ஆதிக்கங்களுக்கு அடியில் மௌனமாய் உறைந்து கிடப்பவர்கள் இனிப் பேசட்டும், இதுகாலம்வரை ஒடுக்கப்பட்டவர்களின் ஆற்றல் இனி வெளிவரட்டும், சித்தர்கள் நமக்கு முன்னோடிகள். வள்ளுவரும் இளங்கோவும் நம்மை முன்னோக்கித் தூண்டுபவர்கள். இயற்கையோடு வாழ்தலில்தான் இன்பம், உழைப்பதும் பகிர்வதும் இன்பம். கல்வி நம்மை அடிமைப்படுத்துகிறது. நிறுவனங்கள் நம்மை அடிமைப்படுத்துகின்றன. அரசு அதிகாரத்துக்கு எதிராக நாம் கலவரம் செய்ய வேண்டும்.

பின் நவீனத்துவம் எல்லாவற்றையும் கலைத்துப் போடுகிறது. கதை, கவிதை, நாடகம் எல்லாவற்றையும் கலைத்துப் போடுகிறது. கம்ப இராமாயணத்தைக் கலைத்துப் போட்டால் நமக்குள் ராமனையும், ராவணனையும் காணமுடியும். வாலிக்கு முன் இராமன் நாணி நிற்பான். இராமன் சீதையைத் தீக்குளிக்கச் சொல்லமுடியாது. கூனியை இராமன் வாழ்த்துவான். அரசு அதிகாரம் கொடியது என்று இராமன் பேசுவான். இப்படி நம் காலத்துக்கு நெறுக்கமாக எல்லா இலக்கியத்தையும் கொண்டுவர முடியும். திருக்குறளில் புதிய ஒளியையும் காணமுடியும். பேரறிஞன், பெருங்கவிஞன் என்ற பெருமையை நாம் ஒதுக்கி விடுவோம். தமிழ் இலக்கியத்தில் ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாய், புதிய திசைகள், இலக்குகள் தேடிப் பயணம் செய்கிறோம்.

2. நவீனத்துவமும் தமிழ் இலக்கியமும்

1. மேற்கிலிருந்து நாம் எத்தனையோ சரக்குகள், கருவிகளை இறக்குமதி செய்தோம். அவற்றுள் ஒன்று என நவீனத்துவப் போக்கைக் குறிப்பிட – இனங்காண இயலும். அதிக அளவில் கூறுவதானால் மேற்கின் வெளிச்சத்தில் நவீனத்துவம் என்ற படைப்பு முறையை நமக்குள் – நமது மரபுகளில் இனங்கண்டு கொள்கிறோம்.

தொழில் நாகரிகம், குறிப்பாகப் பண்ட நாகரிகம் பெருகிய சூழலில் மனிதனுக்கு மரியாதை குறைந்தது – அழிந்தது. பொருளும் அதிகாரமும் உலகத்தைத் தம் ஆட்சிக்குள் கொண்டு வந்தன. புற உலகம் மனிதனுக்கு உவப்பாக உகந்ததாக இல்லை. புற உலகம் தரும் நெருக்கடியிலிருந்து மனிதன் தன் அகத்தினுள் தப்ப முயல்கிறான். தனக்குள் ஒரு பாலைவனச் சோலையைக் காண்கிறான் – கண்டுபிடித்து அதில் குடியேறுகிறான். தன்னை – தன் அகத்தை – சுயத்தைக் கண்டு கொண்டதாக நம்புகிறான். தனக்கான அறமும் அழகும் சார்ந்த உலகைப் படைத்துக் கொள்கிறான் – தன்னையும் படைத்துக் கொள்கிறான். இவன்தான் நவீனத்துவக் கலைஞன்.

முதலாளியம் என்ற பொருளியல் உற்பத்தி – வினியோகப் போக்கு இதன் பின்புலம். இருத்தலியல் என்ற மெய்யியல் இதன் உடன் நிகழ்வு. சர்ரியலிசம், குறியீட்டியல், படிமவியல் முதலியவை இதன் சில அம்சங்கள்.

நவீனத்துவத்தின் சாரம் அல்லது மையம் என ஒன்றைக் குறிப்பிடுவதானால் இப்படிச் சொல்லலாம். அதாவது கலைஞன் தன் அகத்தினுள் ஆழ்ந்த நிலையில் தன்னை இந்தக் கலையியல் போக்கில் இனங்கண்டு கொண்டான்.

இலக்கியம் மற்றும் கலைப்போக்கு என்ற முறையில் நவீனத்துவத்தைப் பொருள்படுத்தும்போது புதுமைப்பித்தன், மௌனி ஆகியவர்களின் சிறுகதைகளில் இப்போக்கின் செழுமையை நாம் கவனிக்க முடியும்.

புதுமைப்பித்தன் கதை – 'விநாயகர் சதுர்த்தி'யில் மருத வேளார் களிமண்ணில் பலவகை விநாயகர் படிமங்கள் படைக்கிறார். இவர் மகன் சுப்புவுக்கு அதிசயமாய் வெள்ளைக் களிமண் கிடைக்கிறது. அதில் செய்த

விநாயகர் உருவம் இவனை மெய்மறக்கச் செய்கிறது. இவன் வீட்டில் இல்லாதபொழுது விநாயகர் சதுர்த்தி கொண்டாடுவதற்காக துபாஷின் ஆட்களுக்கு இவன் மனைவி இந்தச் சிலையை விற்றுவிடுகிறாள். வீட்டுக்கு வந்த சுப்பு, மனைவியைக் கோபித்து வெளியேறுகிறான். துபாஷ் வீட்டில் நுழைந்து வெள்ளை விநாயகரைக் கண்டு அதை எடுத்துக் கொண்டு ஓடுகிறான். கம்பெனிக் காவலர்கள் துரத்துகிறார்கள். அவர்களிடமிருந்து தப்ப கசத்தில் குதித்து இறக்கிறான் சுப்பு.

வேடிக்கையாகக் கதை சொன்ன போதிலும் புதுமைப்பித்தன் சித்திரிப்பது இங்கு அக உலகில் அமர்ந்து கொண்ட கலைஞனைத்தான். தானும் படைப்பும் இந்தக் கலைஞனுக்கு ஒன்று. படைப்பை விற்கமுடியாது. தன்னை எந்த அதிகாரத்திற்கும் விற்க முடியாது.

புதுமைப்பித்தனின் 'கயிற்றரவு' நனவோடை உத்திக்கு மட்டும் அல்லாமல் நவீனத்துவ இருத்தலியல் சிந்தனைக்கும் அருமையான சான்று. பரமசிவம்பிள்ளை ஐம்பதாவது வயதில் பனைமரத்தடியில் அமர்ந்து மலம் கழித்த சமயம் பாம்பு தீண்டி இறக்கிறார். இறக்கும் தருவாயில் தன்னை முழுமையாகப் புரட்டிப் பார்த்துக் கொள்கிறார் – அல்லது இவரது அகம் இப்படி இவரைப் புரட்டிப் போட்டு தன் சிதறல்களைத் தானே பார்த்துக் கொள்கிறது. இந்தக் கதையிலிருந்து ஒரு பகுதி : "எத்தனை துன்பம் . . . எத்தனை நம்பிக்கைக்காக எத்தனை ஏமாற்று . . . எத்தனை கடவுள்கள் . . . வாய்க்கு ருசி கொடுக்க ஒரு கடவுள் . . . வயலுக்கு நீர் பாய்ச்ச ஒரு கடவுள் . . . வியாச்சியம் ஜயிக்க, சோசியம் பலிக்க, அப்புறம் நீடித்து, நிசமாக உண்மையில் பக்தியாய்க் கும்பிட எத்தனையடா எத்தனை? நான் தோன்றியபின் எனக்கு என்று எத்தனை கடவுள்கள் தோன்றினார்கள் எனக்கே இத்தனை என்றால் என்னைப் போன்ற அனந்தகோடி உயிர் – உடம்புகள் கொண்ட ஜீவநதியில் எத்தனை! ஒருவன் பிறந்தால் அவனுடன் எத்தனை கடவுளர்கள் பிறக்கிறார்கள்! அவனுடன் அவர்கள் மடிந்து விடுவார்களா? 'நான்' மடிந்து விடுகிறதா? அப்பொழுது ஒருவேளை அவர்களும் இந்த 'நானோடு' போய்விடக்கூடும். 'நான்' மடிந்து விடுகிறதா? . . .

மௌனியின் 'பிரபஞ்சகானம்' கதையில் கமலா பாடுகிறாள் – நலுங்கின்போது தன் காதலை நினைத்து இசைக்குள் தன்னை வெளியேற்றிக் கொள்கிறாள். இசையும் அவளும் ஒன்றிய நிலை – பிரபஞ்சம் அதுநாள்வரை இவளுக்குள் இழந்திருந்த அழகையும்

இசையையும் மீட்டுக் கொள்கிறது. மீட்ட நிலையில் பிரபஞ்சம் மீண்டும் அழகு பெறுகிறது. செவ்வியல் அல்லது எதார்த்தவாதம் என்று பிரித்து அறிகிற படைப்பு முறையிலிருந்து நவீனத்துவம் வேறுபடுவதை இங்கு உறுதிப்படக் கூறலாம்.

இந்தப் போக்கின் பெரும் வளர்ச்சியை அடுத்து வந்த தமிழ்ப் படைப்பாளிகள் பலரிடம் நாம் காண்கிறோம். சுந்தரராமசாமியின் ஜே.ஜே. : சில குறிப்புகள் மட்டும் அல்லாமல் அவரது 'பல்லக்குத் தூக்கிகள்', 'வாசனை' போன்ற கதைகள் – அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்', சா. கந்தசாமியின் 'அவன் ஆனது', முதலிய நாவல்கள், லா.சா. ரா. வின் 'அபிதா' நாவல், நகுலன் படைப்புகள் ஞானக்கூத்தனின் 'எட்டுக்கவிதைகள்' என நூற்றுக்கணக்கில் அடுக்கலாம்.

நவீனத்துவத்தின் அடுத்த கட்டமான பின்நவீனத்துவத்தையும் தமிழ்ப் படைப்புகளில் காண்கிறோம். தனக்குள் ஆழ்ந்த கலைஞனின் அடுத்த தப்படி இது. தவிர்க்க இயலாத தப்படி என்று இதைக் கூறலாம். இவன் நம்புகிற 'தானும் – இவனது அக உலகமும் மேலும் துண்டுகளாகி அவற்றுள் எந்தத் துண்டு 'தான்' என்று நிர்ணயிக்க முடியாத நிலையில் தன் மனம் பேதலித்து தனக்குள் வெளியேறி 'சிசோபெர்னிக்' என்ற மனநிலையில் தனக்குள் தவிக்கிறான். தன் பித்து மனநிலையை வெளியேற்றிக் கொள்ள நவீனத்துவப் படைப்பில் ஈடுபடுகிறான். பின் நவீனத்துவப் போக்குக்கு இன்றைய சந்தைப் பொருளியல் பின்புலம்.

2. நவீனத்துவம் என்பதைப் படைப்பு முறையாக – கலைஞனின் ஆளுமையாக அர்த்தப்படுத்திய நிலையில் இதை ஒரு தரிசனமாகப் பார்த்த நிலையில் 2000 ஆண்டுக்காலத் தமிழ் இலக்கியப் பரப்பு நம்முள் வெளிச்சத்திற்கு வருகிறது. இந்தப் படைப்புமுறை தமிழ்க் கலைஞனுக்கு அந்நியமானது அல்ல என்று அறிகிறோம்.

வரலாற்றுக் காலம் முழுவதும் கலைஞன் சமுதாயத்தின் ஆதிக்கப் போக்கிலிருந்து தனக்குள் அந்நியப்பட்டு வாழ்ந்திருக்கிறான். கடவுள், ஆன்மா, அறம், உண்மை, அழகு என்று இவன தேடி அலைந்ததையும் கண்டு பிடித்ததையும் வேறு எப்படி விளக்கமுடியும்?

தொல்காப்பியம் கலைஞனின் படைப்புமுறை பற்றி விரிவாக விளக்குகிறது. படைப்பின் உத்திகளை வகைப்படுத்தும் பொழுது

உள்ளுறை, இறைச்சி, குறிப்பு எனப் பேசுகிறது. சங்க இலக்கியங்களில் இந்த உத்தியின் செல்வாக்கை விரிவாகக் காணலாம். உள்ளுறை முதலிய உத்திகள் கவிதையில் செயல்படும் சந்தர்ப்பம் பற்றி இங்கு குறிப்பிட வேண்டும். தலைவன் பிரிந்த நிலையில் தனித்து விடப்பட்ட தலைவி, தலைவன் வருவானா அல்லது வரமாட்டானா என்று தவிக்கிறாள். இந்தச் சோகம் அல்லது அவலம் அவளை ஆட்கொண்ட நிலையில் கவிதை எழுகிறது. தீயிலிருந்து பூக்கிறது கவிதை மலர். மலர் மூலம் சோகம் தன்னை வெளியேற்றிக் கொள்கிறது.

மாலை வேளையில் கூடு திரும்பும் தாய்ப்பறவை கண்டு தலைவி உள்ளம் கலங்குகிறாள். தாய்ப்பறவையின் சோகத்தைத் தன்னுடன் ஒப்பிடுகிறாள். தலைவன் தன்னை மறந்தானோ என்ற நிலையில் நாரையைப் பார்த்துக் கேட்கிறாள் : "நீதானே சாட்சி. நீ பேச மாட்டாயா?" என்கிறாள்.

"என்னைக் கைவிட்ட அவனது மலையில் இன்னும் அருவிகள் நீரைக் கொட்டுகின்றனவே" என்கிறாள் இன்னொரு தலைவி. தீயவனின் மலையில் மழை பெய்யலாமா? அருவி கொட்டலாமா? என்பது அவள் கேள்வி.

கவிதை அல்லது மனநிலையில் ஒரு உச்சம். தலைவன் தன்னைக் கைவிட்டான் – காட்டில் யானை மிதித்த வேங்கை மரம் – தாழ்ந்த நிலையில் அதன் கிளையில் உள்ள அழகிய மலர்களைக் குறப் பெண்கள் கொய்கிறார்கள். உள்ளம் உடைந்து பொருமுகிறாள் தலைவி. இந்தக் கவிதையின் உட்பொருள் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. "நான் தாழ்ந்து போய்விட்டேன்; என்னை இந்த ஊர் ஏளனம் செய்யும். இனி உயிர்வாழ்க்கை வெறுக்கத்தக்கது."

நவீனத்துவம் ஒரு படைப்பு முறை என்று இனம் கண்ட நிலையில் இலக்கியத்தை இன்னும் நாம் ஆழ்ந்து விரிந்த அர்த்தத் தளங்களில் – பரிமாணங்கள் பலவற்றைக் கண்டு வாசிக்க முடியும். இது நமக்குப் பெரும் வாய்ப்பு.

உதாரணமாகத் திருவள்ளுவரின் ஒரு குறள். போர்க்களத்தில் வீரனின் ஆண்மை பற்றிப் பேசும் ஒரு குறள். "கான முயல்எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது". காட்டில் குறி

தவறாது, ஓடும் முயல்களை எய்த அம்பைக் காட்டிலும் யானையின் முகம்நோக்கி எறிந்து ஆனால் குறிதப்பிய வேலை ஏந்துவது வீரனுக்கு அழகு என்பது இதன் பொருள். வள்ளுவர் குறளின் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தை நீக்கிவிட்டு இந்தக் குறளை வாசிக்க முடியும். இந்நிலையில் இதன் அர்த்தப் பரிமாணங்கள் பலவாகின்றன.

நவீனத்துவம் என்ற பார்வையோடு துழாவினால் தமிழ் இலக்கியம் தன்னை இன்னும் பல தளங்களில் விரிவாகத் திறந்து கொள்ளும். நச்சினார்க்கினியர் இவ்வகையில் ஒரு சாதனையாளர். ஆன்மீகத் துறையில் திருமந்திரம் முதலிய சித்தர் பாடல்களை இப்படி விரித்து வாசிக்க முடியும். ஒரு சிறிய எச்சரிக்கையோடு இந்தக் கட்டுரையை முடிக்கலாம். மனிதனின் மனநிலை பலவகைப்பட்டது. தன்னை மறந்த நிலை இவற்றுள் ஒன்று. தன்னை மறக்காத இழக்காத மனநிலையில் உலகத்தோடு உறவு கொள்ளும் நிலைகள் பல. செவ்வியல், எதார்த்தவாதம் முதலியவை இவ்வகை நிலைகள். இவற்றிலிருந்து முற்றாகப் பிரிவுபடாததாக நவீனத்துவம் செயல்பட முடியும். அவ்வப்போது மனம் தகர்ந்தாலும் – உடைந்தாலும் நம்மைக் கூடியவரை சரிப்படுத்திக் கொண்டு இயல்பான மனநிலைக்குத் திரும்புகிறோம். உடைந்த உலகத்தை இணைத்துக் கொள்கிறோம். இணைப்பது நம் கடமை. பொய்யான – பிரமையான இணைப்பு மேலும் நம்மைத் தகர்க்கும். முதலாளித்துவத்தால் உடைந்து தகர்ந்த உலகை இணைக்கத்தான் வேண்டும். மாறுதல்களுக்கு ஒத்த நிலையில் மனித வளர்ச்சி நோக்கி இணைப்பை நாம் செய்யத்தான் வேண்டும்.

3. நவீன இலக்கியத்தின் கோட்பாட்டுச் சிக்கல்கள்

- ஞானி

தமிழில் வேதநாயகர் காலம் முதற்கொண்டு எழுதப்படும் இலக்கியத்தை நவீன இலக்கியம் என்று சொல்வது பொருந்தும். புராண காவிய மற்றும் பிரபந்த மரபிலிருந்து மேற்கின் தாக்கம் காரணமாகத் தமிழில் புதுவகை இலக்கியம் தோன்றியது. இத்தகைய நவீன இலக்கிய இயக்கம் பாரதியிடம் வந்தபொழுது இன்னும் ஒரு பாய்ச்சல் கண்டது. இத்தகைய போக்கை நவீனத்துவம் என்று குறிப்பிடுவது பொருந்தும். தமிழில் முற்றான ஒரு மறுமலர்ச்சியை இப்பொழுது நாம் காண்கிறோம். பாரதியை அடுத்து புதுமைப்பித்தன் மௌனி முதலியவர்கள் மூலம் இந்த நவீனத்துவப் போக்கு தமிழில் உறுதி பெற்றது. புதுக்கவிதை என்ற இயக்கம் நவீனத்துவப் போக்கின் பெரும் விளைச்சலாகத் தமிழுக்கு வாய்த்தது. 1980–க்குப் பிறகு மேலும் ஒரு பாய்ச்சல் தமிழ் இலக்கியத்திற்குள் எழுந்துள்ளது. பின்–நவீனத்துவ எழுச்சி என்று இதைத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். திறனாய்வுத் துறையில் இந்தப் போக்கின் தீவிரம் வெளிப்படையாகத் தென்படுகிறது. படைப்புத் துறையிலும் இதன் ஆக்கம் கூடிவருகிறது.

தமிழில் நவீனத்துவப் போக்குத் தோன்றியபொழுது, இலக்கியம் என்றால் என்ன என்பது பற்றிய புரிதல் நமக்குள் கூடுதலாக ஏற்பட்டிருக்கிறது. இலக்கியம் என்பது கதைபின்னுவதல்ல. இலட்சியங்களை முன்நிறுத்திப் படைப்பது இலக்கியம் என்பது பொருந்தாது. தலைவர்கள், மன்னர்கள் இறைவன் ஆகியவர்களை மையப்படுத்திப் படைப்பது இலக்கியம் இல்லை. போர்வெற்றி, காதல், திருமணம் என்ற முறையில் வாசகர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் முறையில் படைப்பது இலக்கியம் இல்லை. இலக்கியங்கள் என்ற பெயரில் நாம் நெடுங்காலமாக இவற்றை ரசித்துவந்தோம். பக்திச் சுவையை வெளிப்படுத்தும் இலக்கியங்களை ரசித்தோம். வாழ்வின் உன்னதங்கள் பற்றியும், மறத்திற்கெதிரான போராட்டத்தில் அறம் வெல்ல வேண்டும் என்பது பற்றியும் எழுதப்பட்ட இலக்கியங்களை நாம் கொண்டாடினோம்.

ஆனால் காலம் மாறிவிட்டது. வேதநாயகர் காலம் முதலே, இலக்கியம் மக்கள் மயப்படத் தொடங்கியது. காவியம் மற்றும் புராணத்தின் கூறுகள் சில தொடர்ந்த போதிலும், மக்கள் மயப்படுவது தொடர்ந்து அதிகரித்தது. யதார்த்தவாதம் என்று இந்தப் போக்கைக் குறிப்பிடலாம்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்க வேண்டும் என்பதோடுகூட வாழ்க்கையை விமர்சனம் செய்ய வேண்டும் என்பதும் யதார்த்தவாதத்தின் உள்ளடக்கமாக இருந்தது. யதார்த்தவாதம் மார்க்சியர் கைகளுக்கு வந்தபொழுது அரசியல் குரல் மேலோங்கியது; யதார்த்தவாதம் இறுக்கமடைந்தது.

இந்தச் சூழலில் நவீன இலக்கியப் போக்குகளில் குறிப்பிடத்தக்கதாக இருந்த, யதார்த்தவாதத்திற்கு எதிர்க்குரல் என்ற முறையில் நவீனத்துவம் எழுந்தது. ஒருவகையில் யதார்த்தவாதத்தை இந்தப் புதிய போக்கு செழுமைப்படுத்தியது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். நவீனத்துவம் படைப்புத் திறனுக்கு அழுத்தம் தந்தது. படிமம், குறியீடு என்பனவற்றின் வழியே இலக்கியத்தின் ஆற்றலைப் பெருக்கியது. மனிதனுக்குள் இருக்கிற கலைஞனைக் கண்டுபிடித்தது. இலக்கியம் துடிப்பும் வீச்சும் அழகும் பெற்றது. புதுமைப்பித்தனையும் மௌனியையும் நினைத்துக் கொண்டால், இவர்கள்மூலம் ஆற்றலோடு இலக்கியம் செயல்பட்டதைப் புரிந்துகொள்ள முடியும். இவர்கள் பழமையை உதறிக் கொண்டார்கள், பழமைக்குள்ளிருந்து புதிய வெளிச்சத்தை வெளிப்படுத்தினார்கள். வாழ்க்கை இவர்களுக்குள் தீட்சண்யத்தோடு வெளிப்பட்டது. இவர்களுக்குள் இலக்கியம் என்பது கவித்துவ வீறுடன் இயங்கியது. யதார்த்தவாதத்தின் இறுகிய தன்மை இவர்களுக்குள் அறவே இல்லை. படிமம் குறியீடு ஆகியவற்றுடன் வேறுபல உத்திகளையும் இவர்களின் இலக்கியம் வெளிப்படுத்தியது.

தமிழில் நவீனத்துவப் போக்கு நகுலன், அசோகமித்திரன், சுந்தர ராமசாமி முதலியவர்கள் மூலம் விரிவுபெற்றது. யதார்த்தவாதம் என்பது முதலாளியப் போக்குடன் ஒத்துச் செல்வது என்று வைத்துக் கொண்டால் நவீனத்துவத்தைப் பொறுத்தவரை, முதலாளியப் போக்கை மறுக்கக் கூடியது என்று சொல்வதற்கில்லை. ஆனால் முதலாளியப் போக்கைக் கேள்விக்குள்ளாக்கும் சில கூறுகள் நவீனத்துவத்துள் இயங்கியதை நாம் உணரமுடியும். பிராய்டியம் என்றும் இருத்தலியம் என்றும் வாழ்வின் இருண்மை மற்றும் அபத்தம் என்றும் நவீனத்துவவாதிகள் குறிப்பிட்டதை முதலாளியம் பற்றிய விமர்சனமாக நாம் எடுத்துக் கொள்ள முடியும். யதார்த்தவாதத்திற்குள் வந்த இறுக்கம் மார்க்சியத்திற்குள் நுழைந்து தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட முதலாளியப் போக்கு என்றுதான் நாம் புரிந்து கொள்ளமுடியும். இதன் காரணமாக மார்க்சியத்தை நவீனத்துவம் கேள்விக்குள்ளாக்கியதில் வியப்பில்லை.

1980–களின் இறுதியில் மார்க்சியத்தைப் போலவே முதலாளியமும் கடுமையான திறனாய்வுக்கு உள்ளாகியது. மார்க்சியம் குறித்து எழுந்த திறனாய்வை முதலாளியத்திற்கும் சேர்த்துச் சொல்வதுதான் பொருந்தும். இப்பொழுதுதான் பின்–நவீனத்துவம் தமிழுக்கு வந்து சேர்கிறது. எல்லாவற்றையும், அவற்றின் மௌனங்கள், புனிதங்கள், இறுக்கங்கள் ஆகியவற்றை உடைத்துப் பார்ப்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. உண்மை – பொய், நன்மை – தீமை, மேல் – கீழ், தூய்மை – தூய்மையின்மை, அழகு – அழகின்மை ஆகிய எதிர்நிலைகளைத் தகர்த்துப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக இலக்கியம் என்ற களத்தினுள் என்ன நேர்ந்தது என்பதை இங்கு குறிப்பிடலாம். இலக்கியத்தில் சொல்லப்பட்ட இலட்சியங்கள் என்பவை, உயர்மக்கள் மற்றும் தலைவர்களின் இலட்சியங்கள். தலைவர் தன் இலட்சியத்தைச் சாதிக்க வேண்டுமென்றால், தொண்டர்கள் ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியவர்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைத் தனக்குக் கீழ்ப்படுத்தி, அவர்களின் உழைப்பைச் சுரண்டி, அவர்களின் ஆளுமையைக் குறைவுபடுத்தித் தனக்கான பெருமைகள் சேர்த்து, ஆற்றல்கள் சேர்த்துக் கொண்டுதான், தான் இலட்சியத்தை அடைந்ததாகத் தலைவன் சொல்லிக் கொள்ளமுடியும்.

இதைப் போலவே உண்மை என்றும், நன்மை என்றும் நீதி என்றும் இலக்கியங்களில் உயர்த்திச் சொல்லப்படுபவை பெரும்பாலும் சமூகத்தில் உயர்ந்தோர்க்கானவை; ஆளும் வர்க்கத்தினர்க்கு உரியவை. உயர்ந்தவன் தன்னை அழகுபடுத்திக் கொள்வது என்பது, பலருக்கு அழகைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை அழிப்பதன்மூலம் தான் சாத்தியப்படும். ஒருவணிகன் பேசும் நீதி நியாயம் என்பவை, மக்களைச் சுரண்டுவதற்கான நீதியாகத்தான் இருக்கமுடியும். உயர்கல்விக்கான வாய்ப்புக்களை அரசு செய்யும்பொழுது ஏழை மக்களின் கல்விக்கான வாய்ப்புக்களைக் குறைப்பதன் மூலம்தான் செய்யமுடியும். நகரங்கள் அழகு பெறுவது என்பது கிராமத்தின் அழகுகளை அழிப்பதன் மூலம்தான் சாத்தியம். சட்டம், நீதி என்பவை சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவர்களுக்குச் சாதகமாகவும், தாழ்நிலையில் உள்ளவர்களுக்குப் பாதகமாகவும்தான் இருக்கமுடியும்.

இலக்கியம் என்பதனுள்ளும் ஏதோ ஒருவகையில் மையத்தில் அதிகாரம் குவிந்திருக்கிறது. கல்கி, பார்த்தசாரதி முதலியவர்களின் நாவல்களை இங்கு நினைவில் கொள்ளலாம். யதார்த்தவாதம் என்று பேசிய மார்க்சியர் படைத்த நாவல்களையும் இங்கு நினைவு கொள்ளலாம்.

நாவலின் மையத்தில் அதிகாரம் கட்டப்படுகிறது. தொழிலாளர்களின் போராட்டங்கள் முதலாளியத்தை அழிப்பதில்லை. முதலாளியத்தை வலுப்படுத்துவதோடு கட்சிக்குள் அதிகாரத்தைச் சேர்க்கிறது. படைப்புக்களில் ஆணின் அதிகாரம்தான் உறுதிப்படுத்தப்படுகிறது. கணவனோடு ஒத்துச் செல்வதால்தான் பெண்ணுக்கு வெற்றி என்கிறார்கள். படைப்புக்களில் இடம்பெறும் உண்மை, நன்மை, அழகியல் என்பனவெல்லாம் ஏதோ ஒருவகையில் மையத்தில் அதிகாரத்தைக் குவிப்பதாகவே இருக்கிறது.

இலக்கியம் என்பதும் ஒரு கட்டமைப்பு. அதிகாரம் இல்லாமல் இந்தக் கட்டமைப்பைச் செய்ய முடியாது. கலை, உன்னதம், உச்சம், தரிசனம், பேருணர்வு, பேரழகு என்பனவெல்லாம் இலக்கியத்தின் சில மையங்கள். அவற்றினுள் அதிகாரம் சேர்கிறது. பலரிடமிருந்து பறித்த அதிகாரக் குவியல்கள் இவை.

இலக்கியத்தில் மட்டுமல்லாமல் வாழ்வினுள்ளும் அதிகாரங்களைத் தகர்த்து வெளியேற்றுவது என்பது பின்–நவீனத்துவத்தின் குரல். பெண்ணை முதன்மைப்படுத்து, தலித்தை முதன்மைப்படுத்து என்கிறது இந்தக் குரல். அழகுக்கு எதிராக அசிங்கத்தை முதன்மைப்படுத்து, ஒழுங்குக்கு எதிராக ஒழுங்கின்மையை முதன்மைப்படுத்து, அறத்திற்கு எதிராக மறத்தை முதன்மைப்படுத்து என்கிறது இந்தக்குரல். அறம் என்பது பொய், நன்மை என்பது பொய் என்றும் இந்தக் குரல் வழக்காடுகிறது. கலகம் செய் என்பது இந்தக் குரல். மேன்மைகளை நொறுக்கு, உன்னதங்களைப் புரட்டிப்போடு என்கிறது இந்தக் குரல்.

இதன் தொடர்ச்சியாக நாம் எங்கே செல்கிறோம். அதிகாரமற்ற சூன்யத்திற்குச் செல்கிறோம். வாழ்வில் வரையறைகள் தேவையில்லை. ஆண் பெண் என்ற வேறுபாடு அவசியம் இல்லை. அசிங்கங்களை அழகுகளாக நாம் சூடிக்கொள்ள முடியும். எல்லா ஒழுங்குகளையும் சிதைத்துவிட வேண்டும். தாறுமாறான வாழ்க்கைதான் தேவை. திருடு, பொய் சொல்லு; இது திருட்டுமல்ல, பொய்யுமல்ல. கடவுள் இல்லை என்பது போல உயர்ந்தவனும் இல்லை, உயர்வும் இல்லை. உயர்சாதி எதை நல்லது என்கிறதோ, அதுவெல்லாம் நம்மைப் பொறுத்தவரை தீங்கானவை. கல்வி வேண்டாம், மருத்துவம்கூட வேண்டாம். எல்லாவற்றையும் கலந்து சாப்பிடு; நோய் வந்தால் தப்பில்லை. நாடென்றும் மொழியென்றும் நமக்கு இல்லை. நமக்குத் தீட்டு என்று இல்லை.

பின்–நவீனத்துவம் இந்த எல்லைக்குச் செல்கிறது. இதற்குமேல் பின்–நவீனத்துவத்தால் இயங்கவும் இயலாது. ஒருவகையில் வாழ்வைச்

சிதைக்கும் தத்துவமாக இது இப்பொழுது மாறி விடுகிறது. இதைப் பின்–நவீனத்துவத்தின் தீவிரவாதம் என்று குறிப்பிடுவது தான் பொருந்தும். அப்படியானால் பின்–நவீனத்துவப் போக்கில் நம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கூறுகளைத் தொகுத்துக் கொள்வது அவசியமாகிறது.

நமக்கு அதிகாரம் வேண்டாம். சிறிய அளவிலேனும் அதிகாரமில்லாமல் எந்த இயக்கமும் சாத்தியமில்லை. ஆகவே, பெரிய அதிகார மையங்களை உடைத்து நொறுக்குவது என்பதுகூடச் சிறிய அதிகார மையங்களைக் கட்டமைப்பதன் மூலம்தான் சாத்தியப்படும். மையங்கள் அதிகாரத்தைச் சேர்த்துக் கொள்ளும் என்பது உண்மைதான். ஆனால் அதிகாரம் இறுகும்போதே அதைக் களைவது பற்றியும் நாம் கவனத்துடன் இருக்கவேண்டும். நன்மை தீமை, உண்மை பொய், அறம் மறம், தூய்மை அசுத்தம் என்ற எதிர்நிலைகள் ஏற்றத்தாழ்வான சமூகத்தால்தான் உருவாகின்றன.

இந்த ஏற்றத்தாழ்வைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டுதான் முதலாளியம் அரசு அதிகாரம் முதலியவை தம்மை உறுதிப்படுத்திக் கொள்கின்றன. ஏற்றத்தாழ்வைக் களைவதன்மூலம் கூடியவரை சமத்துவத்தை நாம் நெருங்கிச் செல்கிறோம். முற்றான சமத்துவம் என்றேனும் சாத்தியப்படுமா என்ற கேள்விக்கு இப்போது விடைசொல்ல முடியாது. நன்மை தீமை என்பனவற்றைத் தீவிரமாக இருமுனைப்படுத்தும் போக்கு, நாம் சமத்துவத்தை நெருங்கிச் செல்லும்போது குறையத் தொடங்கும். வரலாற்றில் சமத்துவத்தைச் செயல்படுத்துவதற்கான சிந்தனைகள் மற்றும் செயல்முறைகளை நாம் மதிக்கிறோம். இவற்றை நன்மை என்றும் உண்மை என்றும் சொல்லுகிறோம். மனிதர்களின் படைப்புத்திறனை உடைமைச் சமூகம் மதிக்கவில்லை, அழிக்கவும் செய்கிறது. ஆனால் படைப்புத்திறன் இல்லாமல் எந்த மனிதனும் இல்லை. உடைமைச் சமூகத்தை அழிப்பதற்கும் மனிதர்கள் தம் படைப்புத் திறனை மேம்படுத்திக் கொள்வது இன்றியமையாதது. எந்த மனிதனுக்குள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான். அவன் அழகை விரும்புகிறான். செடியில் பூக்கும் மலரில்தான் அழகுள்ளது என்று ஒரு கலைஞன் சொல்லமாட்டான் – வேர்களும் மண்ணும்கூட அவன் பார்வையில் அழகானவைதான்.

இலக்கியம் என்பது ஒரு கதைசொல்லும் கட்டமைப்பில் இல்லை. கதை சொல்லாமல் மனிதன் வாழமுடியாது. எந்த ஒன்றையும் புனைந்து கொள்வது படைப்புத் திறனுடைய மனிதனுக்கு இயல்பு. தன்னை அழகுபடுத்திக் கொள்வதற்காக இன்னொருவரின் அழகை இவன் திருட மாட்டான். தன் ஆதிக்கத்திற்காக இன்னொருவனை இவன்

அடிமைப்படுத்த மாட்டான். உண்மை என்பது தனக்குத்தான் வசப்பட்டிருக்கிறது என்று இவன் நம்பமாட்டான். ஒவ்வொருவரின் பார்வையுள்ளும் உண்மையின் சில இழைகள் இருப்பதை இவன் ஏற்றுக் கொள்வான். இலக்கியம் என்பது கதை வடிவத்திலோ நாடகம் என்ற வடிவத்திலோ, படிமம் என்ற குறியீடுகள் வடிவத்திலோதான் இயங்க வேண்டும் என்பதும் இல்லை. மனிதனோடு கூட இயங்குவது இலக்கியம் மற்றும் கலை.

இலக்கியம் என்ற கட்டமைப்பை மட்டுமல்லாமல் தத்துவம், வரலாறு முதலிய கட்டமைப்புக்களையும் தகர்க்கச் சொல்கிறது பின்–நவீனத்துவம். இந்தத் தகர்ப்பின்வழியே எல்லாவற்றையும் உதறிக்கொள்வது தீவிரவாதம். பலவற்றைத் திரட்டிக் கொள் என்பது நமக்குரிய போக்கு. ஒருவகையில் இங்கு குறிப்பிடும் தீவிரவாதம் அரசியல் சொற்களில் சொல்வதென்றால் வலதுசாரி வாதம், பிற்போக்குவாதம். இதற்கு எதிராக நாம் நிறுத்துவது பின்–நவீனத்துவப் போக்கில் இடது சாரி வாதம் – முற்போக்குவாதம். இலக்கியம் என்ற வடிவத்தினுள் கதை மற்றும் நாடகங்கள் இருக்கின்றன. இவை எல்லாவற்றினுள்ளும் நீரோட்டமாக இருப்பது மனிதனின் கவித்துவம். சமத்துவ உணர்விலிருந்து பீறிடுவது இந்தக் கவித்துவம். பொருளிலிருந்தும் அதிகாரத்திலிருந்தும் தன்னை வெட்டிக்கொள்ளும் படைப்புத்திறன் மிக்க மனிதனின் கவித்துவம் இது. இவன் பார்வையில் வாழ்க்கை என்பது ஒரு பெரும் நாடகம்.

மாபெரும் வரலாற்றுச் சூழல் என்ற அரங்கினுள் நமக்குத் தரப்பட்ட சில பாத்திரங்களில் நாம் இயங்குகிறோம். வரலாற்றுச் சூழலை மாற்றுவதற்கான தீவிரத்துடனும் நாம் இயங்குகிறோம். நமக்குள் வரலாறும் பிரபஞ்சமும் வந்துபோகின்றன. நெடுங்கால வரலாற்றுடன் நாம் உறவுகொண்டிருக்கிறோம். இந்த உறவு என்ற புள்ளியைத் திறந்து பார்க்கும்போது வரலாற்றுக் காலம் என்பது நமக்குள் நிகழ்காலமாய்த் தட்டுப்படுகிறது. எந்த ஒரு தத்துவமும் தனக்குள் பிரபஞ்சத்தையோ வரலாற்றையோ முழு அளவில் அடக்குவதில்லை என்பது உண்மைதான். அதேசமயம் பிரபஞ்சம் மற்றும் வரலாற்றின் சில ஆற்றல்மிக்க கூறுகளை உள்ளடக்கும் தத்துவத்தின் வயப்படுவதில்தான் நமக்கான வளர்ச்சியும், நம் கால வரலாற்று வளர்ச்சியும் அடங்கியுள்ளன.

வரலாற்று இயக்கத்தோடு ஒத்து இயங்குவதன் மூலம்தான் நமக்கான ஆளுமை மற்றும் திறன்களைப் பெறுகிறோம். வரலாற்றின் வளர்ச்சிக்கு ஒத்த சில பண்புகளுக்குத்தான் அறம் என்றும் நன்மை என்றும் அழகு என்றும் நாம் பெயரிடுகிறோம். ஆக எல்லாவற்றையும் கலைத்துப்போட்டு, பின்னர் வரலாற்று வளர்ச்சிக்கு ஒத்த சில கூறுகளை

நமக்குள் திரட்டிக் கொள்வதன் மூலம்தான் இன்றைய வரலாற்றையும் வாழ்வையும் நமக்குள் திரட்டி மனிதராகிறோம்; கலைஞராகிறோம்; படைப்பாளியாகிறோம்.

யதார்த்தம் என்பது நம்மைப் பொறுத்தவரை இறுகிய சில கூறுகளில் நம்மை ஒட்டிக்கொள்வது அன்று. நம்மைச் சூழ இருக்கும் புற உலகில் ஒரு மாபெரும் யதார்த்தம். புற உலகத்தில் எவற்றோடு எல்லாம் நம் வாழ்வைப் பிணைத்துக் கொள்கிறோமோ அந்த அளவுக்கான யதார்த்தம்தான் நமக்கு வசப்படுகிறது. நாம் என்று குறிப்பிடும்போது ஏதுமற்ற வெறுமையாக நாம் – நம் அகம் என்றும் இருந்ததில்லை. வரலாற்றின் வெளிச்சங்கள் இருண்மைகள் ஆற்றல்கள் அவலங்கள் என எவ்வளவோ நமக்குள் கலந்தும் திரண்டும் இருக்கின்றன. இவற்றின் வழியேதான் நாம் புறவுலகை எதிர்கொள்கிறோம்; உள்வாங்கிக் கொள்கிறோம். நம் தேவைகள் ஆர்வங்கள் ஆற்றல்கள் ஆகியவற்றைப் பொறுத்ததான யதார்த்தத்தைத்தான் நமக்குள் வாங்கிக்கொள்ள முடியும். இப்படி உள்வாங்கிக் கொள்ளும்போது நாமும் உருமாறிப் போகிறோம். இத்தகைய இயக்கத்திற்கு என்ன பெயரிடுவது? எல்லா யதார்த்தங்களும் புனைவுகள்தான் என்கிறார்கள் பின்–நவீனத்துவவாதிகள். நாம் இதை ஏற்பதில் தடையில்லை. இதன்மூலம் நம்மை விரிவுபடுத்திக் கொள்கிறோம். நமக்கான உலகை விரிவுபடுத்திக் கொள்கிறோம்.

இலக்கியம் என்ற வடிவில் நம்மை நெகிழ்த்திக் கொள்வதற்கான உணர்வுகள் நமக்குள் இருக்கின்றன. தெய்வங்கள், பிசாசுகள் என்றெல்லாம் இலக்கியத்தின் இயக்கம் செயல்படுகின்றது. இலக்கியத்தில் பறவைகள் பேசும். விலங்குகள் அரசு அமைக்கும். குழந்தைகளோடு தெய்வங்கள் கொஞ்சும். மனிதன் தன்னை விரித்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இவை. இவற்றின்மூலமும் மனிதன் தன்னைத்தான் பதிவு செய்து கொள்கிறான்; தன்னைத் தேடுகிறான்; தன்னோடு விளையாடுகிறான்; தன்னை இசைத்துக் கொள்கிறான். இப்படித்தான் மனிதனுக்குள் படைப்புத்திறன் சேகரமாகிறது. இலக்கியம் என்ற கட்டமைப்பைத் தகர்ப்பதாகிய இயக்கத்தின் மூலம்தான் நம்மைப் பற்றிய மேலும் கூடுதலான புரிதலை நாம் பெறுகிறோம். இதற்காகப் பின்–நவீனத்துவத்திற்கு நாம் நன்றி சொல்வோம்.

தொகுப்புரை

1. தமிழில் நவீன இலக்கியத் தோற்றத்தை மேற்கத்திய பாதிப்பின் விளைவாக, வேத நாயகரிலிருந்து நாம் காண்கிறோம். இதற்கு முற்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றுக்காலம் முழுவதையும் ஒரு தொகுப்பாகக்

கொள்வதற்கில்லை. அக்கால அளவிலும் இலக்கிய வகைப்பாடுகளைக் கோட்பாட்டு அடிப்படையில் நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

2. நவீன கால இலக்கியம் என்பதையும், சில வகைகளில் பாகுபாடு செய்துகொள்வது தேவைப்படுகிறது. இம்முறையில்தான் பாரதிக்கு முற்பட்ட நவீன இலக்கியம் என்றும், பாரதியோடு தொடங்குகிற இலக்கியத்தின் முதன்மைக்கூறு நவீனத்துவம் என்றும், 1980–க்குப் முன்பே தோன்றிவிட்டது எனினும் 1980க்குப் பிறகுதான் இனங்காணப்பட்டது என்பதால் 1980–க்குப் பிற்பட்ட இலக்கியத்தின் முதன்மைக்கூறு பின்–நவீனத்துவம் என்றும் வகைப்படுத்துகிறோம்.

3. நவீனம் என்றும், நவீனத்துவம் என்றும், பின் நவீனத்துவம் என்றும் நாம் தற்கால நோக்கில் குறிப்பிட்டுச் சொல்வதாகிய இலக்கியம் அல்லது கலையின் கூறுகள் சிலவற்றைத் தமிழ் இலக்கியத்தின் எல்லாக்காலப் படைப்புக்களிலும் நாம் கண்டு சொல்லமுடியும். இவ்வாறு நவீன காலத்திற்கான சில கூறுகள் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன எனினும் அவற்றின் முதன்மைப்போக்கு, நவீனம் என்று நாம் குறிப்பிடும் போக்கிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

4. நவீனம், நவீனத்துவம், பின் நவீனத்துவம் ஆகிய போக்குகள் இலக்கியத்தில் இடம் பெறுவதைப் போலவே, கலை மற்றும் மெய்யியலிலும் காணத்தக்கவை ஆகும். அன்றியும் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலின் பொருளியல் கூறுகளோடு இவை இன்றியமையாத உறவுடையவை. நவீனத்திற்கு முற்பட்ட கால இலக்கியம் முதலியனவும், முதலாளியத்திற்கு முற்பட்ட பொருளியல் கூறுகளோடு உறவுடையவை. இவ்வாறு காண்பது மார்க்சியப் பார்வைதான் என்றபோதிலும் இலக்கியத்தின் தனித்தன்மையை மார்க்சியம் மறுப்பதும் இல்லை. யதார்த்தவாதம் முதலிய நவீன காலப் போக்குகள் சங்க இலக்கியம் முதலியவற்றிலும் தென்படுவதை இப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும்.

5. இலக்கியம் என்பதற்கு எல்லாக் காலத்திலும் ஒரே பொருள் இல்லை. அதாவது இலக்கியத்தின் உள்ளாக்கக் கூறுகளும் புறக்கூறுகளும் இலக்கியம் பற்றிய வாசகர்களின் சுவையுணர்வும் காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றன. ஆகவே இலக்கியம் என்ற பொதுச்சொல் காரணமாக நாம் ஏமாந்துவிடக்கூடாது. இதில் இன்னொரு சிக்கலும் உண்டு. முற்கால இலக்கியங்கள் எதையும் நாம் நிகழ்காலத்தில் வைத்துத்தான் வாசிக்கிறோம்; பொருள்படுத்துகிறோம். நம்கால

வரலாற்றுச் சூழல் மட்டுமல்லாமல், நம் தனிநபர் ஆளுமை, நாம் சார்ந்துள்ள சமூகப்பிரிவு முதலிய பல அம்சங்களும் இலக்கியம் பற்றிய நமது வாசிப்பைப் பாதிக்கின்றன. இதன் காரணமாகத்தான் இலக்கியப் பிரதி என்று குறிப்பிடும் தேவை ஏற்பட்டிருக்கிறது.

6. இலக்கியம் என்பதை வாழ்க்கையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது என்ற கூற்று பலதளங்களில் வைத்துப் பொருள்படுத்தக் கூடியதாக இருக்கிறது. இலக்கியம் என்பதற்கு இன்று முன்வந்துள்ள – மேம்பட்டுத் தெரிகிற – அழுத்தம் பெற்றிருக்கிற கருத்து மிக முக்கியமானது. இலக்கியத்தை வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாது என்பது மட்டுமல்ல, இலக்கியத்தை வாழ்வுக்குள் கரைத்துவிட வேண்டும். இலக்கியத்தில் வெளிப்பட்டுத் தெரிகிற கற்பனையோ நாடகப் பண்போ, படிமம் குறியீடு முதலிய உத்திகளோ, அங்கதம் அபத்தம் முதலிய உணர்வுகளோ, எல்லா மனிதர்களின் வாழ்வினுள்ளும் செயல்படுகிற கூறுகள்தான். எந்த மனிதனுக்குள்ளும் ஒரு படைப்பாளி / ஒரு கலைஞன் இருக்கிறான் என்பது மட்டுமல்ல. இன்றைய பார்வையை முன்னிறுத்திப் பார்க்கும்பொழுது, இலக்கியவாதியாய் ஒருவர் இருக்கிறார் என்பதற்காக, அவரை எந்தவகையிலும் சாதாரண மனிதன் என்பதிலிருந்து நாம் வேறுபடுத்தி உயர்த்திப் பார்க்க வேண்டியதில்லை. இத்தகைய உயர்த்திப்பேசுகிற தவறான பார்வை என்பதுகூட சமூகத்தில் நெடுங்காலமாக நிலவுகிற ஏற்றத்தாழ்வை உள்வாங்கிக் கொண்டதன் விளைவு என்றுதான் சொல்லமுடியும். ஏற்றத்தாழ்வை எந்த வடிவத்திலும் இன்று நாம் அங்கீகரிக்க வேண்டியதில்லை. ஓர் இலக்கியவாதி தன்னை மனிதன் மற்றும் படைப்பாளி என்று புரிந்துகொள்ளும் நிலையில் ஏற்றத்தாழ்வை – அதைப்போலவே தன்னைப்பற்றிய புகழ்ச்சியை ஏற்க மாட்டான்.

7. எந்த மனிதனுக்குள்ளும் வரலாற்றின் நெடுங்கால மரபுகள் சில அழுத்தமான கூறுகளில் இயங்குகின்றன. மரபின் இந்தக் கூறுகள் எல்லாக் காலங்களிலும் ஒரே படித்தாக இருப்பதில்லை. நிகழ்காலம் மற்றும் தன் சமூகப் பிரிவு என்ற தளத்தில் இருந்துதான் பழங்கால மரபை அவன் தனக்குள் வாங்கிக் கொள்கிறான்; அன்றியும் இதுபற்றிய புரிதலோடு செரித்துக் கொள்கிறான். புரிதலோடு செரித்துக் கொள்பவனைப் பழைய மரபுகள் அச்சுறுத்துவதில்லை, கிழித்துப் போடுவதில்லை. பழைய மரபுகள் முதலியவை சார்ந்த மொழி அவனைக் கட்டமைக்கிறது – என்பது உண்மைதான் என்ற போதிலும் இந்தக் கட்டமைப்பினுள்ளும் தொடர்கிற

எதிர்நிலைகளால் இவன் வெளியேற்றப்படுகிறான். இத்தகைய வெளியேற்றம் இவன் தன்னை மறு உருவாக்கம் செய்து கொள்வதற்குப் பயன்படுகிறது. திறனாய்வு என்பது இந்த அம்சத்தைத்தான் குறிக்கிறது. பழைய மரபுகளுக்குள் பதிந்துவிடுவது திறனாய்வாக இருக்க முடியாது. பழைய இலக்கியங்களை விளக்கிக் கொண்டிருப்பது இன்று எந்தவகையிலும் நமக்குப் பயன்படாது. நம் காலத் தேவைக்கேற்றவாறு பழைய இலக்கியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தவேண்டும். பழங்காலத்திற்குள் யாரும் புதைந்துவிட முடியாது, என்பதுபோலவே, பழைய இலக்கியத்தை, அது தோன்றிய சூழலுக்குள் சென்று இன்றுள்ள எவரும் வாசிக்கமுடியாது. இந்த உண்மையைப் புரிந்துகொண்ட நிலையில் பழைய இலக்கியத்தை நம் காலத்தில் வைத்து வாசிப்பதை ஏற்கமுடியும்.

8. இவ்வாறு பழைய இலக்கியங்களை நம் காலத்திற்குள், நமக்குள் கொண்டுவந்து வாசிக்கும்பொழுது காவியங்கள், புராணங்கள் என்பவைகூட நமக்கு நெருக்கமாக வந்துவிடுகின்றன. இன்றும்கூடக் காவியப் பண்பையும், புராணிகத்தையும் நாம் கொண்டிருக்கிறோம் அல்லது உற்பத்தி செய்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும். பிரபஞ்சம், வரலாறு ஆகியவற்றின் கூறுகள் சில / பலவற்றில் நம்மை நாம் இனங்காண்கிறோம். நமக்குள் அகண்ட தன்மையை உணர்கிறோம். நமக்குள் இராமன் மட்டுமல்ல, இராவணனும் இருக்கிறான். நமக்குள் மாறி மாறிப் போராடுகிறோம். மற்றவன் பார்வைக்குமுன் நம்மை நிறுத்தி நம்மை நாம் மதிப்பிட்டுக் கொள்கிறோம். சமூகத்தில் நடைபெறும் குற்றங்கள் முதலியவற்றோடு நாமும் உறவுகொண்டிருக்கிறோம். சமூகத்தின் மேன்மைகள் நமக்குள்ளும் வந்திருக்கின்றன. சமத்துவம் என்ற பார்வைதவிர வேறு எந்தப் பார்வையும் நமக்கு இயல்பான பார்வையாக இருக்கவும் முடியாது. ஆக இத்தகைய இலக்கிய வாசிப்பின் வழியே சமத்துவம்தான் நமக்கு உயரிய அறம் என்ற புரிதலைப் பெறுகிறோம். இந்த உணர்வைப் பெறுவதற்காக மீண்டும் மீண்டும் இலக்கியத்தைப் பயிலலாம் அல்லது பெற்றபின் விட்டுவிடலாம். மனிதர்களை அவர்களது அகத்தோடும் புறத்தோடும் சேர்த்துப் பயில்வதைக் கற்றுக்கொள்வதற்காகத்தான் இலக்கிய வாசிப்பு நமக்குப் பயன்பட்டிருக்கிறது. இலக்கிய வாசிப்பென்பதும் இத்தகைய நெறிகளில் இயங்கினால் மட்டுமே அது இலக்கிய வாசிப்பு அல்லது இலக்கியக் கல்வியாக அமையும். இதற்குரிய அணுகுமுறைதான் திறனாய்வு முறை. மனித விடுதலைதான் இதன் முதன்மையான மற்றும் இறுதியான நோக்கம். தமிழகச் சூழலில் தமிழ்மக்களின் விடுதலைதான் தமிழ் இலக்கியத்தின், தமிழ்த் திறனாய்வின் நோக்கம், மற்றும் செயல்பாடு.

4. தமிழில் திறனாய்வு இன்றுவரை - நாளை

தமிழில் கல்வியாளர்கள் மேற்கிலிருந்து இலக்கியப் பார்வைக்கான சில கருத்தமைவுகளைக் கொண்டு வந்தார்கள். அ.சா. ஞானசம்பந்தம், மு.வ., தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் என்று தொடங்கி இவ்வகையினரைச் சொல்லலாம். க.நா.சு., சி.சு. செல்லப்பா, வெங்கட சாமிநாதன் முதலிய இலக்கியவியலாளர்கள் இலக்கியத்தை ஒரு தனித்துறையாக, இலக்கியத்தின் உள்விதிகளைக் கண்டு இரசிப்பதாக இலக்கியத்தை எடுத்துரைத்தார்கள். மார்க்சியரைப் பொறுத்தவரை இலக்கியத்தின் சமூக / வரலாற்றுப் பரிமாணங்களுக்கு அழுத்தம் தருவதன்மூலம் இலக்கியத்தின் அரசியல் நோக்கத்தை வற்புறுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் நோக்கத்தைத் தமக்குள் வரித்துக் கொண்டவர்கள் தமிழ் இலக்கியத்தின் மேன்மை, தொன்மை, தமிழர் பண்பாட்டின் மேன்மை ஆகியவை குறித்துப் பேசினார்கள். தமிழ்க் கல்வியியலாளருள் ஒரு முக்கியப் பகுதியாக இருந்த புலமை நெறியினருக்குள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒத்த அரசியல் உணர்வு ஓரளவுக்குச் செயல்பட்டது என்று கூறலாம்.

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பினருக்கும், மார்க்சியருக்கும் அவரவர்க்கான அரசியல் உணர்வு கூடியவரை அவர்களது இலக்கியப் படிப்பு, இலக்கியப் பார்வை ஆகியவற்றைத் தீர்மானித்தது என்று சொல்ல முடியும். இவர்களின் இலக்கிய இரசனை தமிழின் திறம் அறிவதாகவும், தமிழ்ப் பண்பாட்டைப் போற்றுவதாகவும் இருந்தது. எதிர்காலத்தில் தமிழர்க்கான ஆட்சி தேவையென்பதும் இவர்களது இலக்கியத் திறனாய்வின் நோக்கமாக இருந்தது. மார்க்சியருக்குத் தமிழிலக்கிய மேன்மையில் ஈடுபாடு இல்லை. தமிழ்ச் சமூகத்தினுள்ளும் வர்க்கங்கள் செயல்பட்டன என்பதை மெய்ப்பிப்பதன் மூலம் மார்க்சியரின் வர்க்கப் பார்வையை இலக்கியத் திறனாய்வின் மூலம் வெளிப்படுத்த முனைந்தனர். பொற்காலம் இறந்த காலங்களில் இல்லை. எதிர்காலத்தில்தான் இருக்கமுடியும் என்பதும் இவர்கள் எண்ணம். புலவர்கள் எப்பொழுதும் ஆதிக்க வர்க்கத்தின் பகுதியினர் என்ற கருத்தை இலக்கிய ஆய்வின் அடிப்படைகளில் ஒன்றாக இவர்கள் கடைப்பிடித்தனர்.

க.நா.சு. முதலிய இலக்கியவியலாளர்க்கு அரசியல் நோக்கம் இல்லை. வரலாற்றின் அல்லது சமூக இயக்கத்தின் பகுதியாக

இலக்கியத்தைக் காண்பது இவர்களுக்கு உடன்பாடில்லை. அன்றியும் அரசியல் அரங்கில் தி.மு.க. பெற்று வந்த செல்வாக்கு இவர்களுக்குப் பிடிக்கவில்லை. மார்க்சியரின் அரசியலையும் இவர்கள் விரும்பவில்லை. இலக்கியத்தின் தனி இயக்கம் பற்றிய ஈடுபாடு இவர்கள் அளவில் முழுமையாக இருந்தது. புலவர்கள், திராவிட இயக்கத்தின் வழியே மார்க்சியத்தை நெருங்கியிருக்க முடியும். மார்க்சியர் தமிழ் இலக்கியம் பற்றிய பெருமிதப் பார்வை கொள்ளாததன் விளைவாக, புலமை நெறியினர் மார்க்சியரை விட்டு விலகினர் என்றும் கொள்ளலாம்.

கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்கால அளவில் இத்தகைய போக்குகள் செயல்பட்டன என தொகுத்துக் காணமுடியும். இங்கு உடனடியாக சில விமர்சனக் கருத்துக்களை நாம் முன்வைக்கலாம். இலக்கியத்திற்குத் தனி இயக்கம் உண்டு என்பதில் ஐயமில்லை. இலக்கியத்தின் வழியேயும் சமூகமும் வரலாறும் இயங்குகின்றன என்பதிலும் ஐயமில்லை. அரசியல் அல்லது சமூக இயக்கங்கள் தீவிரம் கொள்ளும் நிலையில் இலக்கியம் பற்றிய பார்வையிலும் சில திரிபுகள் ஏற்படத்தான் செய்யும். இலக்கியவாதிகள் என்று தம்மை நிறுவிக் கொள்பவர், சமூகத்தின் பல பிரிவுகளுள் குறிப்பிட்ட ஒரு பிரிவைச் சார்ந்தவராகத்தான் இருக்கின்றனர். அரசியலில் எப்பொழுதுமே மாறுபட்ட, தீவிர, எதிர்நிலைகள் செயல்படுகின்றன. இலக்கியம் தன்னளவில் ஒரு படிப்பாளியை முழுமையாகத் தனக்குள் கவர்ந்து வைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையது. இலக்கிய இயக்கத்தின் ஆழத்தில் வரலாற்று இயக்கம் இருக்கத்தான் செய்கிறது. இலக்கியப் பார்வை என்பது வாழ்வியல் பார்வையின் ஒரு குறிப்பிட்ட வெளியீடுதான். வாழ்வியல் பார்வை என்பதனுள் மெய்யியல் பார்வை தவிர்க்க இயலாதது. இன்னும் சரியாகச் சொன்னால் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் செயல்படும் முரண்பட்ட சக்திகளின் ஏதாவது ஒன்றிரண்டின் சார்பிலிருந்துதான் இலக்கியப் பார்வையும் உருக்கொள்கிறது. ஆகவே இலக்கியம், இலக்கியக் கல்வி, இலக்கியத் திறனாய்வு என்று தொடங்குபவர் தமக்குள் முனைந்து செல்லும்பொழுது வரலாற்றின் இயக்கத்தினுள் இலக்கிய இயக்கத்தையும் தம்மையும் காண்பவராகிவிட வேண்டும். இலக்கியத்தின் தனி விதிகளுக்குள் ஒருவர் ஒதுங்கிவிட முடியாது. இலக்கிய இயக்கத்தை அரசியல் இயக்கத்தினுள் சுருக்கிவிடவும் கூடாது. இலக்கியம் வெறும் இரசனைக்குரியது, பண்பாடு கற்பிப்பது என்பதும்கூட இலக்கியம் பற்றிய பகுதிப் பார்வைதான்.

மேற்கத்திய இலக்கிய வரையறைகள் மூலம் தமிழிலக்கியம் கற்பதில்

ஓர் ஆபத்தும் உண்டு. மேற்கத்திய நாகரிகத்திற்கு ஒருவர் தன்னை இரையாக்கிக் கொள்வதான ஆபத்து இது. தமிழ் மரபுக்குள்ளிருந்தே தற்காலத்திற்கான இலக்கியப் பார்வையை உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்று சிலர் விருப்பம் தெரிவித்த போதிலும் அதற்கான முயற்சிகள் முனைப்புக் கொள்ளவில்லை. தமிழைப் பற்றிய பெருமித உணர்வு, இத்தகைய முனைப்புக்குத் தடையாக இருந்தது என்று சொல்லலாம்.

இதற்கு மேலும் ஒன்றைச் சொல்ல வேண்டும். தமிழிலக்கிய படிப்பு, பார்வை, திறனாய்வு என்பதன் தொடர்பாகத்தான் நாம் இங்கு பேசுகிறோம். தமிழிலக்கியம் என்ற கருத்தாக்கத்தைத் தமிழர்களது இலக்கியம், தமிழர்க்கான இலக்கியம் என்பதிலிருந்து பிரித்துப் பேச முடியாது. தமிழரது இலக்கியம் என்று சொல்லி, பெருமிதப் பார்வை பற்றிப் பேசுவதிலும் அர்த்தம் இல்லை. தமிழன் வாழ்வில் இன்று பெருமிதம் இல்லை. தமிழர்க்கு நிலம் இல்லை. வாழ்வு இல்லை. தமிழர் நடத்தும் அரசியல் தமிழ் மக்களுக்கான அரசியலாகவும் இல்லை. இலக்கியத்தை எப்பொழுதும் ஒரு மொழி சார்ந்ததாக, உத்திகள் சார்ந்ததாக அல்லது கொள்கைகள் சார்ந்ததாக வாசிப்பதில் பயனில்லை. தமிழக வரலாற்றின் ஒரு பகுதி இயக்கமாகச் செயல்படுவது தமிழிலக்கியம். தமிழிலக்கியம் பற்றி பேசும்பொழுது தமிழ்நாட்டின் இயற்கை, திணைவளம், மக்களின் தொழில் ஆகியவற்றிலிருந்து தமிழிலக்கியத்தைப் பிரித்துப் பேச இயலாது. தமிழிலக்கியம் பற்றிப் பேசும்பொழுது திருவள்ளுவர், இளங்கோ ஆகியவர் மூலம் வெளிப்பட்ட அறத்திலிருந்து தமிழிலக்கியத்தைப் பிரித்துப் பேச முடியாது. சித்தர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியவர் தமிழ் மக்களின் ஆக்கத்தோடு எவ்வாறு நெருக்கமாக இருந்தனர் என்பதிலிருந்து தமிழிலக்கியத்தைப் பிரித்துப் பேசமுடியாது.

இப்படி தமிழக வரலாற்றுக்குள் இயங்கிய சக்திகள், மரபுகள், கொள்கைகள், போராட்டங்கள் ஆகியவற்றிலிருந்து தமிழிலக்கியத்தைப் பிரித்துப் பேசமுடியாது. தமிழகத்தில் உழவர்கள், கைவினைஞர்கள் இவர்களின் ஆக்கத் திறன்களிலிருந்து தமிழைப் பிரித்துப் பேசமுடியாது. இலக்கியம் படிப்பது என்பது, மக்களின் வாழ்வையும் சேர்த்துப் படிப்பதாகத் தான் கொள்ள முடியும். இலக்கியம் மக்களுக்குள் இயங்குகிறது. இலக்கியத்தின் மரபுகள் மக்கள் வாழ்வோடு நெருக்கமானவை.

இன்று தமிழிலக்கியம் பற்றிப் பேசும்பொழுது தமிழ் மக்கள் எந்தெந்தக் களங்களில் எவ்வாறெல்லாம் குன்றியிருக்கிறார்கள், குறைபட்டு இருக்கிறார்கள், சிறைப்பட்டு இருக்கிறார்கள் என்பதையும்தான்

நாம் பேச வேண்டும். மனிதனுக்கு விடுதலை வேண்டும். மனிதர்களின் வாழ்விலிருந்து சுரண்டலையும் ஒடுக்கு முறையையும் அகற்ற வேண்டும். சுரண்டலும் ஒடுக்கு முறையும் பல்வேறு விதங்களில் செயல்படுகின்றன. இலக்கியவாதி என்பவன் தனக்கான படிப்புக்காகவும் பயிற்சிக்காகவும் வாழ்வுக்காகவும் சுரண்டல் சமூகத்தின் ஒரு பகுதியாகத் தான் செயல்பட வேண்டியிருக்கிறது. படிப்பாளிகள், நிபுணர்கள், அறிவாளிகள், பேராசிரியர்கள் ஆகியோர் சுரண்டலோடு தாங்கள் கொண்ட உறவிலிருந்து தம்மைத் துண்டித்துக் கொள்ள இயலாது. இதுமட்டுமல்ல அரசியல், பொருளியல் களங்களில் செயல்படும் ஆதிக்கச் சக்திகளோடு இவர்கள் ஏதோ சில வகைகளில் உறவு கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அவ்வளவு பேருக்கும், நகர வாழ்க்கை, வாழ்க்கை வசதிகள், சொந்தமான வீடு, உயர்படிப்பு, அனைத்துலகத் தொடர்பு, நவீனப் போக்குவரத்துச் சாதனங்கள், நவீன அறிவியல் ஆகியவற்றோடு உறவு கொண்டவர்கள் இவற்றின் ஆதரவில் வாழ்பவர்கள். இவை இல்லாமல் இவர்கள் வாழ்க்கையை நுகரமுடியாது. இந்த வாழ்க்கை வசதிகளின் ஒரு பகுதி, இவர்களின் இலக்கியப் படிப்பு, கலை ரசனை.

மக்களுக்கான விடுதலை என்று பேசும்பொழுது இந்த உயர்படிப்பாளிகளின் வாழ்க்கை வசதிகள் கேள்விக்குள்ளாகும். இந்தக் கேள்விகளுக்கு முழு அளவில் தமக்குள் இடம் கொடுத்து தம்மைப் பற்றிய அடிப்படையான திறனாய்வுப் பார்வை கொள்கிறபோதுதான் இவர்கள் சரியான இலக்கியப் பார்வையும் கொள்ளமுடியும். தமிழ் மக்களும் இன்று இந்தியாவின் அரசியலாலும், பொருளியலாலும் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். உலக அளவிலான வல்லரசுகளின் ஆதிக்கத்தில் இந்தியாவின் அரசியல், பொருளியல் இயக்கங்கள் இருக்கின்றன. இவை பற்றிய புரிதலோடுதான் தமிழ் மக்களின் வாழ்க்கை பற்றிய புரிதலையும் கொள்ள முடியும்.

இப்பொழுது நாம் முதலில் கூறிய கல்வியியலாளர் இலக்கிய இயலாளர் முதலியவர்களின் தமிழ் இலக்கியம் பற்றிய பார்வை எத்தகைய வரையறைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். க.நா.சு., வெங்கட் சாமிநாதன் போன்ற இலக்கிய இயலாளர்க்குத் தமிழ் மக்களின் விடுதலையில் அக்கறை இல்லை. திராவிட முன்னேற்றப் பார்வை கொண்ட கல்வியியலாளர்க்குத் தமிழ் மக்கள் இன்று அகப்பட்டுள்ள அனைத்துலகம் வரை விரிந்து செல்லும் அரசியல், பொருளியல் பற்றிய புரிதல் இல்லை.

அரசியல் பொருளியல் ஆகிய சக்திகளின் பின்புலத்தில் இலக்கியத்தை வைத்துப் பார்ப்பது என்ற மார்க்சியப் பார்வை இலக்கிய இயக்கத்தைக் குறைத்துப் பார்க்கிற பார்வைதான். மக்களின் படைப்பாற்றல்களுள் ஒரு முக்கியமான ஆற்றல் இலக்கியம். மனிதர் தம்மைத் தாமே படைத்துக் கொள்ளாமல் வாழ்க்கையை நேசிக்க முடியாது. இயற்கையோடும் சக மனிதர்களோடும் கொள்ளும் ஆரோக்கியமான உறவில் தான் மனிதர்கள் வாழமுடியும். சமூகத்தில் நிலவும் பல்வேறு முரண்களுக்கிடையில் அகப்பட்டு அந்த முரண்களால் தம் உணர்வும் அறிவும் ஆற்றல்களும் தீவிரப்பட்டு ஒரு கட்டத்தில் முரண்களின் மோதலைத் தமக்குள்ளும் வெளியிலும் தீர்த்துக் கொள்ளும் நிலையில் மக்கள் விடுதலை உணர்வைப் பெறுகிறார்கள். இந்த விடுதலை உணர்வுதான் வாழ்வின் பால் நேசமாகவும் பிற உயிர்கள்பால் அன்பாகவும் தம் கதையைப் பிறர்க்குச் சொல்லும் இலக்கிய இரசனையாகவும் வெளிப்படுகிறது. விடுதலையோடு உறவுடையது இலக்கியம் / கலை. மார்க்சியத்திற்குள் வந்து செறிந்திருக்கிற முதலாளியப் பார்வை, மனிதர்களின் விடுதலை உணர்வை கண்டு கொள்ளாது. அன்றியும் புறக்கணிக்கும்.

இப்பொழுது சரியாகச் சொல்லலாம். இதுவரையிலான தமிழிலக்கியத் திறனாய்வுகள், தமிழ் பற்றிய, இலக்கியம் பற்றிய சரியான புரிதலோடு நடைபெறவில்லை. தமிழிலக்கியத் திறனாய்வாளர்கள், நகரம் சார்ந்தவர், உயர்படிப்பாளர்கள், வாழ்க்கை வசதிகள் சார்ந்தவர். இவர்கள் தமக்குள் படைப்பாளிகளாகக் கூட இருக்கவில்லை. இலக்கியம் மட்டும்தான் படைப்பு என்றுகூட இவர்கள் தவறாகவே கருதிக் கொண்டனர். வாழ்வைப் புதிதாகப் படைக்கும் எதுவும் படைப்பு என்ற தகுதியைப் பெறும். படைப்பு என்பது முன்னைய தளைகளிலிருந்து மனிதனை விடுதலை செய்யவல்லது. இந்த விடுதலைக்கான அறத்தை, இயக்கத்தை அவனது படைப்பு வெளிப்படுத்தும். இலக்கியத்தின் தனிவிதிகள் பற்றிப் பேசுவதற்குமுன், இலக்கியம், படைப்பு என்பதுபற்றி நாம் பேசவேண்டும். எத்தகைய முரண்பட்ட சூழலுக்கு எதிர்வினையாக இலக்கியம் படைக்கப்படுகிறது என்ற அடிப்படை உண்மையிலிருந்துதான் இலக்கியத் திறனாய்வு தொடங்க வேண்டும். தமிழிலக்கியத் திறனாய்விற்கும் இதுதான் தொடக்கப் புள்ளி.

2. தமிழிலக்கியம் பற்றிய திறனாய்வுப் போக்குகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாக இருப்பதன் அடிப்படையான காரணம் பற்றி சிந்திக்கும்போது ஒரு உண்மை புலப்படுகிறது. திறனாய்வாளரின்

இலக்கியப் பிரக்ஞை பிளவுண்டதாக அந்நியமானதாக இருக்கிறது என்பதுதான் அந்த உண்மை. அதாவது இவர்களின் இலக்கியப் பார்வை அல்லது இலக்கியப் பிரக்ஞை அந்நியமான சமூகச் சூழலில் இவர்களுக்குள் இடம் பெற்றிருக்கிறது.

இங்கு மார்க்சின் அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் சுருக்கமான அளவிலேனும் புரிந்து கொள்ளத்தக்கது. மனிதன், இயற்கையிலிருந்தும் இறுதியாகத் தன்னிலிருந்தும் அந்நியப்பட்டிருக்கிறான் / அந்நியப்படுத்தப் பட்டிருக்கிறான் என்பது மார்க்சு கண்ட உண்மை. இயற்கையோடும் சமூகத்தோடும் தன்னோடும் மனிதன் முழுமையாக நிறைவு கொண்டிருக்க வேண்டும். இயற்கை உடைமையாளர்களின் ஆளுகைக்குள் சென்ற நிலையில் மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் முறையில் படைக்க முடியாது. உடைமையாளர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக இவன் படைக்க வேண்டும். இவன் பெறுவது கூலி. கூலிக்காக இவன் தன்னை விற்றுக் கொள்கிறான். வயிற்றுக்கான உணவு, தலைவைத்துப் படுப்பதற்கான இடம். உடலின் தூண்டலுக்கான புணர்ச்சி என்ற அளவில் இவனுக்கு வாழ்க்கை சுருங்கி விடுகிறது. சமூகம் பல பிரிவுகளாகச் சிதறியிருக்கிறது. ஏற்றத்தாழ்வுகள் தோன்றிவிட்டன. சமூகத்தோடு இவன் கொள்ளத்தக்க நிறைவான உறவு இவனுக்கு இல்லை. ஒன்றுக்கொன்று எதிர்நிலையான சமூகப் பிரிவுகளில் இவன் ஒரு பிரிவைச் சேர்ந்தவன். இன்னொரு பிரிவு இவனைப் பொறுத்தவரை பகைப்பிரிவு, பகை உறவுகளுக்கிடையில்தான் இவன் தனக்குள் சிறுத்துப் போகிறான். சமூகம் பிளவுண்ட நிலையில் இவன் தனக்குள்ளும் பிளவுபடுகிறான்.

பொருளுக்கே முதன்மை. மனிதனுக்கு மரியாதை இல்லை. சமூகம் முழுதும் சென்றுவரக்கூடிய விரிந்த தளத்தோடு இவனுக்கு உறவில்லை. தன்னைப் படைத்துக் கொள்ளும் சுதந்திரம் இவனுக்கு இல்லை. இயற்கை இவனுக்குள் விரிவாக இடம்பெறுவதில்லை. தன்னை விற்றுக் கொள்கிற மனிதன் தன்னைப் படைத்துக் கொள்ள முடியாது. பொருளுக்கும் அதிகாரத்திற்கும் தன்னை அடிமைப்படுத்திக் கொள்கிறவன், விரிவான சுதந்திரமான வாழ்க்கை பற்றிச் சிந்திக்க முடியாது. பிளவுண்ட நிலையில் இவனிடம் கோபங்கள், ஆத்திரங்கள், ஆசைகள் பெருக்கெடுக்கும். தனக்குள் ஏற்பட்ட வெறுமையை, கனவுகளைக் கொண்டு, கற்பனைகளைக் கொண்டு இவன் நிறைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவனுக்குள் உணர்வுகள் கொந்தளிக்கின்றன.

இவனுக்குள் காமம் பொங்குகிறது. இவன் தன் வசத்தில் இல்லை. அடிக்கடி இவனுக்குப் போதைகள் தேவைப்படுகின்றன. தன்னை மறந்த நிலை இவனுக்கு இன்பம் தருவதாகத் தோன்றுகிறது. வாழ்க்கையின் முழுப்பரப்பு இவன் பார்வைக்குள் அகப்படுவதில்லை. குறுகிய பரப்புக்குள் இவன் வாழ்கிறான். வரலாறு என்பது இவனைப் பொறுத்தவரை விரிந்ததாகவோ நீண்ட கால அளவை உள்ளடக்கியதாகவோ இல்லை. வரலாற்று இயக்கம் இவனுக்குத் தெரிவதில்லை. தான் ஏன் அடிமைப்பட்டிருக்கிறேன் என்ற அக்கறைகூட இவனுக்கு இல்லை. புலன்களை அவ்வப்பொழுது அடைத்துக் கொள்வதற்குரிய காட்சிகளும் பேச்சுக்களும் இவனுக்குப் போதும்.

முதலாளிய சமூகம் இப்படித்தான் இவனைப் பிளவுண்டவனாக தனக்குள் அந்நியப்பட்டவனாகச் செய்திருக்கிறது. முழுமையான மனிதனாக இருக்க வேண்டியவனைத் துண்டித்து, தகர்த்து சில திறன்களில் மட்டும் இவனைச் சுருக்கி பெருக்கி வைக்கிறது. முதலாளியத்தோடு இவன் ஒத்து இயங்க வேண்டும். முதலாளிய அதிகாரத்திற்கு இவன் சேவகம் செய்ய வேண்டும். கடைத் தெருக்களில் நுகர்வுகளில் இவனைக் கட்டுப்படுத்த வேண்டும். முதலாளியம் வாழ்க்கை வசதிகளில் இவனை மயக்கி, இந்த வாழ்க்கை வசதித் தேட்டத்திற்காகவே இவனை முதலாளியத்திற்குள் உட்கவர்ந்து கொள்ள வேண்டும். அரசு அதிகாரத்தை இவன் கேள்விக்குட்படுத்தக் கூடாது. முதலாளியம் உழைக்கும் மக்கள் மீது திணிக்கும் சுரண்டலுக்கு இவன் ஒத்துச் செல்ல வேண்டும்.

அரசு தேவை என்று இவன் பேசவேண்டும். இன்பத்திற்காகத்தான் வாழ்க்கை என்று இவன் சொல்ல வேண்டும். வரலாற்றில் அடிமைத்தனம் நீடிக்கும் என்று இவன் சொல்ல வேண்டும். குடும்பம், மனைவி, குழந்தை இவர்களோடுதான் வாழ்க்கை என்று பேச வேண்டும். இத்தகைய வாழ்விலும் விடுதலைக்கான பிரதேசங்கள் உண்டு என்றும் இவன் சொல்வான். கலை உணர்வுகளில் தோயும்பொழுது மனிதன் சுதந்திரம் என்ற பிரதேசத்தினுள் இயங்குவதாக இவன் கருதுகிறான். இயற்கையின் அழகுகள் இன்னும் மிச்சமிருக்கின்றன. அவற்றைப் பார்த்து, தனக்குள் உள்வாங்கிக் கொண்டு அப்புறம் அவற்றைப் பலமடங்கு பெருக்கி, ஓவியமாகத் தீட்டி கவிதை புனைந்து தன்னைத்தானே இன்புறுத்திக் கொள்ளமுடியும் என்றும் இவன் நினைக்கிறான். வெளியில் இல்லாத சுதந்திரத்தைத் தன் அகத்தினுள் அனுபவிக்க முடியும் என்று இவன்

கருதுகிறான். வெளியில் தனக்குச் சுதந்திரம் பறிக்கப்பட்டது ஏன் என்ற கேள்வி இவனுக்கு எழவில்லை. வெளி உலகம் தன் ஆளுகையில் இல்லாதபொழுது அகஉலகம் தனக்கு எவ்வாறு கட்டுப்படும் என்ற கேள்வி இவனுக்கு இல்லை. வெளிஉலகம் முதலாளிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அந்த முதலாளிகள் உற்பத்தி செய்யும் மாயைகளில் இவன் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதை இவன் தெரிந்து கொள்ளவில்லை. முதலாளி தன்னை நிலைநிறுத்திக் கொள்ள கூலிகளைக் கொண்டு இலக்கியத்தை உற்பத்தி செய்கிறான். பத்திரிகைகளைக் கடைத் தெருவில் பரப்புகிறான். இசைத் தட்டுக்களை விற்பனை செய்கிறான். உணர்வுக் கிளர்ச்சியூட்டும் இசைக் கோலங்களை உற்பத்தி செய்கிறான். பக்திப் பரவசத்தை வெளியில் கொட்டுகிறான். வகைவகையான ஆடைகளையும் அணிகலன்களையும் ஆடம்பரப் பொருட்களையும் தயாரித்து கடைத் தெருவில் நிரப்புவது போலவே கலைப்பொருட்களையும், பண்பாட்டுப் பண்டங்களையும் கடைத் தெருக்களில் நிரப்புகிறான். இலக்கியம் கலை பண்பாடு என்று பேசுபவர் முதலாளிகளால் சிறைப் பிடிக்கப்படுகின்றனர்.

இலக்கியம் போதும் கலை போதும் என்று இவர்கள் வாழ்வில் கிட்டாத நிறைவை இலக்கியத்திற்குள், கலைக்குள் காண்கின்றனர். புற உலகின் சிக்கல்கள் இவர்களின் அகத்திற்குள்ளும் வந்து இவர்களைத் தாக்கும்போது இவர்கள் நிலை குலைந்து போகிறார்கள். வெளியில் எட்டிப் பார்த்து, முதலாளியம் ஒழிக, அரசு அதிகாரம் ஒழிக என்று சிலமுறை முழங்கிவிட்டு அப்புறம் உள்ளே போய் பாதுகாப்பாக வாழ்வின் எல்லையை மேலும் சுருக்கிக் கொண்டு வாழ்ந்துவிடப் பார்க்கிறார்கள். இவர்களுக்கான வாழ்க்கை வசதிகளை உற்பத்தி செய்ய கோடிக்கணக்கான உழவர்களும் பிறரும் இருக்கிறார்கள்.

அவர்களின் வாழ்வைத்தான் தாங்கள் திருடி அனுபவிக்கிறோம் / பறித்து அனுபவிக்கிறோம் என்ற குற்ற உணர்ச்சி இவர்களிடம் இல்லை. முதலாளியத்திற்கு இவர்கள் செய்யும் சேவையை உழைப்பு என்றும் அவர்கள் தரும் கூலியை தம் உழைப்புக்கான ஊதியம் என்று இவர்கள் உண்மையாகவே கருதிக் கொள்கிறார்கள். உழைக்கும் மக்களை, அவர்களின் உடல்நலனை அப்புறம் இயற்கையை அழிப்பதற்காகத்தான் முதலாளி தனக்கு ஊதியம் தருகிறான். போனஸ் தருகிறான். பரிசுகளும் பாராட்டுகளும் தருகிறான் என்று இவர்கள் நினைப்பதில்லை. குற்ற உணர்வு தோன்றாதவாறு இவர்கள் தம்மை நிறைத்துக் கொள்ளவே முயற்சி செய்கின்றனர்.

வாழ்க்கை என்பது பற்றி இவர்களுக்கு கணிப்பு இல்லை. வாழ்வின் அர்த்தங்கள் எப்படி உற்பத்தியாகின்றன என்பது பற்றிய புரிதல் இல்லை. ஆழ்ந்து பார்த்தால் இவர்கள் தமக்குள் சிதைந்திருப்பது இவர்களுக்கே தெரியும். இதைத்தான் பிளவுண்ட பிரக்ஞை என்று நாம் கூறுகிறோம். வாழ்வின் பிற தளங்களிலிருந்து தம்மை ஒதுக்கிக் கொண்டு, அல்லது வாழ்வின் பிற தளங்களிலிருந்து தம்மை விலக்கிக் கொண்ட நிலையில் இவர்கள் இலக்கியத்தினுள் ஆழ்ந்திருக்கிறார்கள். வாழ்க்கை புரிபடாதது. இலக்கியம் புரியக்கூடியது வாழ்க்கை குழப்பமானது. இலக்கியத்தினுள் குழப்பம் இல்லை. வாழ்க்கையினுள் அழகு இல்லை. இலக்கியத்தினுள் அழகு இருக்கிறது. இப்படி இவர்கள் கருதுகிறார்கள். இலக்கியத்தின் தனிநிலைபற்றி இவர்கள் கண்டுபிடிக்கிறார்கள். திறனாய்வு என்றும் இவர்கள் பேசுகிறார்கள். இலக்கியம் பற்றிய பேச்சுகூட இவர்களுக்கு வாழ்வுக்கான வாய்ப்பாகியிருக்கிறது. இலக்கிய விமரிசனத்தினுள் இவர்கள் அதிகாரிகளாக, பேராசிரியர்களாக மாறியிருக்கிறார்கள். அரசு இவர்களுக்கு இலக்கியத்துறை என்று எல்லை வகுத்துத் தந்திருக்கிறது. இவர் திறனாய்வாளர் என்று சிலர்க்கு முத்திரையிட்டிருக்கிறார்கள். இலக்கியம் தா என்று இவர்களிடம் வாசகர்கள் ஓயாமல் கேட்கிறார்கள். நீ தமிழ் தெரிந்தவன். எங்களுக்கு தமிழ் உணர்வைக் கொடு என்றும் வாசகர் கேட்கின்றனர். நாங்கள் அறிவற்றவர்கள். நீ அறிந்தவன் என்றும் முகம் பார்த்து நிற்கின்றனர். இலக்கியம் பேசியவர் வாழ்ந்து விடமுடியும்.

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அரசு அல்லது நிர்வாகிகள் இலக்கியம் என எல்லை வகுத்து தந்திருக்கிற இடத்தில் அமர்ந்து வேலை பார்க்க வேண்டும். அரசு அதிகாரமும் முதலாளியமும் கைகோர்த்துக் கொண்டு தீவிரமாகச் செயல்படுவதன்மூலம் வாழ்வின் ஆதாரங்களிலிருந்து பலரைப் பிரித்தெடுத்து அவர்கள் மூலம் தம் அரசியலை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்த கட்சிக்காரர்கள் இலக்கியமும் அரசியல்தான் பேசவேண்டும் என்று இலக்கியத்தின் எல்லையைச் சுருக்கினார்கள். அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் அரசியல் என்று இவர்கள் அரசியலின் தளத்தைச் சுருக்கினார்கள். அரசியல் களத்திலிருந்து பிரித்துக் கொண்ட நிலையிலும் வாழ்வின் தளம் இருக்கத்தான் செய்கிறது என்ற அடிப்படையில் இலக்கியத்தின் வழியே வாழ்வைத் தரிசிக்க முடியும் என்ற முறையில் சிலர் இலக்கியம் செய்தார்கள். நெடுங்கால அளவில் நிறைய இலக்கியங்களைக் கொண்ட தமிழ் மொழி என்ற களத்தினுள் தமிழே தமக்கு வாழ்வு என்ற முறையிலும்

பலர் செயல்பட்டார்கள். ஏற்கனவே இயற்கை, சமூகம், தான் என்பனவற்றின் ஒருங்கிணைந்த கோலத்தில் செயல்படுவதன் மூலம் தம்மைத்தாமே படைத்துக் கொள்கிற வாழ்வின் பெரும் வீச்சிலிருந்து தமக்குள் வெட்டுப்பட்டு அந்நியமான நிலையில் படைப்பாளர்களாக இருக்க வேண்டிய இலக்கியவாதிகள் இலக்கியம் பற்றிய தனிப்படிப்பு, இலக்கியப் பயிற்சி, இலக்கியத் திறனாய்வு என்ற துண்டங்களில் செயல்படுவதன் மூலம் தமக்கென வாழ்வை நிர்ணயித்து கொண்டார்கள். இவ்வகைச் செயல்பாடுகள் மூலம் ஒற்றைப் பரிமாணங்களில் தம்மைத் தொடர்ந்து உருவாக்கிக் கொள்கிறார்களே ஒழிய உலகைப் புதிதாகப் படைக்கிற படைப்புச் செயலிலிருந்து இவர்கள் விலகித்தான் இருக்கிறார்கள். இந்த ஒற்றைப் பரிமாணம் தான் இவர்களிடம் ஆளுகை செலுத்துகிறது. இந்த ஒற்றைப் பரிமாணத்தை இவர்கள் தமக்குப் பலமெனக் கருதுவதன் மூலம் தம்மை இழந்து விடுகிறார்கள். இலக்கியம் என்ற இயக்கம் எல்லாருடைய வாழ்வினுள்ளும் இயங்குவதை இவர்கள் பார்க்க மறுப்பதன்மூலம் தம்மைச் சிறுமைப்படுத்திக் கொள்கிறார்கள். மனிதர் தம்மைப் படைத்துக் கொள்வதான வாழ்வியலை முதலாளியம் சிதைத்திருக்கிறது. இதைக் காண்பதை அரசியல் என்று இலக்கியவாதிகள் அஞ்சி ஒதுக்குகிறார்கள். இதன்மூலம் மேலும் தமக்குள் அந்நியப்பட்டு இலக்கியத்தின் ஓரங்களில் பதுங்குகிறார்கள்.

அண்மைக் காலத்தில் ஒப்பியல் இலக்கியம் என்று இலக்கியக் கல்வி தமிழ்த்துறைகளில் இடம் பெற்றிருக்கிறது. இந்த நெறி, பேராற்றல் மிக்கது. இரண்டு இலக்கியவாதிகளின் இரு படைப்புக்களை ஒப்பிட்டுக் கற்பதைப் போலத் தோற்றம் தரும் இந்தக் கல்வியியல் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட மொழிகளுக்கிடையில் இலக்கியங்களை ஒப்பிட்டுக் கற்பதன் மூலம், இலக்கியம் பற்றிய அடிப்படைகளைக் கற்பதாக மாறியிருக்கிறது. இதற்கு அப்பாலும் ஒப்பியல் இலக்கியக் கல்வி செல்கிறது. இந்த இடத்தில்தான் இலக்கியம் கல்வியென தன்னை நிறுவிக் கொள்கிறது. இலக்கியத்தோடு பிற நுண்கலைகளை ஒப்பிடுகிறது. ஒப்பிட்டு கலையின் இயல்பைக் கற்கிறது. அப்புறம் விளையாட்டு தச்சுவேலை, கைத்தறி நெசவு, பாண்டங்கள் புனைதல் எனத் தொடர்ந்து சென்று வாழ்வின் எல்லாக் களங்களிலும் செயல்படும் மனிதர்களின் படைப்புச் செயல்பாட்டிலிருந்து இலக்கியம் இது எனத் திரட்டிக் கொள்கிறது. அதாவது இலக்கியத்தை வாழ்வின் ஆக்கச் செயல்பாடு எனக் காண்கிறது. வாழ்வியலின் ஆக்கத்தில் இயங்குவது இலக்கியம். வண்ணங்களும், வடிவங்களும்,

ஆடல்களும், பாடல்களும் அப்புறம் கதை சொல்வதும், நாடகீயமும் அப்புறம் முரண்பாடுகளின் மோதலில் வாழ்வு தன்னைப் படைத்துக் கொள்வதும், படைப்பின் போது கிடைக்கும் பரவசமும் பரவசத்தில் கிட்டும் விடுதலையும் என்று இலக்கியம் பல்வேறு பரிமாணங் கொள்கிறது. ஒற்றைப் பரிமாணத்தில் நிற்பது இலக்கியமாகாது. அறிவைத் தொகுப்பது இலக்கியமாகாது. அதிகாரத்தைத் திரட்டிக் கொள்வது படைப்பாகாது. ஏவல் செய்வது, வழிபாடு செய்வது படைப்பு ஆகாது. திறனாய்வு இப்படி வாழ்க்கைக்குள் ஊடுருவிச் செல்வதன் மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். திறனாய்வுக்கு எல்லை இல்லை. ஒற்றைப் பரிணாமத்தில் திறனாய்வு இயங்க முடியாது. பன்முகப் பரிமாணங்களில் திறனாய்வு இயங்க வேண்டும். தன்னைப் பற்றியும் திறனாய்வு பார்த்துக் கொள்ள வேண்டும். வாழ்வைப் புதிதாகப் படைக்கும் செயலின் ஆதாரக் கூறு திறனாய்வு. இலக்கியம் பற்றிய திறனாய்வு வாழ்வைப் புதிதாகப் படைக்கும் நோக்கோடு இயங்க வேண்டும்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு என்பது தமிழர்களுக்கு / தமிழக மக்களுக்கு விடுதலையை, புதிய வாழ்வைப் படைப்பதாக இருக்க வேண்டும். திறனாய்வு இப்படி பல பரிமாணங்களில் பல தளங்களில் ஒருங்கிணைந்த நோக்கோடு செயல்படுவதாக இருக்க வேண்டும். தமிழ்ப் பேராசிரியர்கள் இதைச் செய்யவில்லை. க.நா.சு., செல்லப்பா இதைச் செய்யவில்லை. மார்க்சியரும் இதை செய்யவில்லை. இவர்கள் மேற்கொண்ட கோணங்கள், இவர்களைத் தமக்குள் பிரித்து வைத்தன. முரண்பட்டு நிற்கச் செய்தன. தம் செயல்பாடே திறனாய்வு என இவர்கள் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முனைந்தனர். இதன்மூலமும் இவர்கள் திறனாய்வின் எல்லையைச் சுருக்கினார்கள். படைப்புச் செயலைச் சுருக்கினார்கள். இவர்களைத் தம் முடக்கங்களிலிருந்து இப்பொழுதேனும் நாம் விடுவித்துப் பார்க்க வேண்டும். இவர்களை விடுவிப்பதும் திறனாய்வுச் செயல்பாடுதான்.

5. தமிழின் மெய்யியல்

1. மெய்யியல் என்பது குறித்து விரிவான வரையறைகள் உள்ளன. இந்த வரையறைகளுக்குள் இப்பொழுது நாம் செல்ல வேண்டியதில்லை. எனினும் ஒரு முக்கியமான வரையறை - வாழ்வின் அர்த்தம் என்ன? என்பதுதான். வாழ்வின் அர்த்தம் தேடுகிற நோக்கில்தான், கடவுள், ஆன்மா, மேலுலகம், கீழுலகம், பல பிறப்புக்கள், என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. வாழ்வுக்கும், சிந்தனைக்கும் என்ன தொடர்பு? இறுதி உண்மை என்பது பொருளா? சிந்தனையா? பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கு ஏதாவது நோக்கம் உண்டா? பரிணாமம் ஏதாவது நோக்கத்தோடு செயல்படுகிறதா? வாழ்வின் இறுதிப் பொருள் எது? மரணத்துக்கு என்ன அர்த்தம்? மரணத்தோடு வாழ்க்கை முடிவடைந்து விடுகிறதா? இப்படியும் கேள்விகள் எழுந்தன. இவ்வகை கேள்விகளையும் உள்ளடக்கியதாகத்தான் – வாழ்வின் அர்த்தம் என்ன என்ற கேள்வியை நாம் முதன்மைப் படுத்துகிறோம். இந்த அர்த்தம் என்ற அடிப்படையில் தான், வாழ்வின் லட்சியம் செயற்பாடுகள் முதலியவை தீர்மானமாகின்றன.

2. இந்தக் கேள்விகள் எல்லாமே, மனிதனின் மனம் சார்ந்து எழும் கேள்விகள் என்ற போதிலும், இவ்வகைக் கேள்விகள் எழுவதற்கான, வரலாற்று, பொருளியல் சூழல் என்பது நம் கவனத்துக்கு உரியது. மனிதன் தான் இவ்வகைக் கேள்விகளை எழுப்புகிறான். வாழ்வின் துயரங்கள், காரணமாகத்தான், இவ்வகைக் கேள்விகள் எழுகின்றன. மனிதத் துயரத்தின் மூலங்கள் எவை என்பது பற்றி, மெய்யியலாளர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டு. வரலாற்றுச் சூழலை, ஒட்டித்தான் இவ்வகை கருத்து வேறுபாடுகளும் எழுகின்றன. கடவுள், ஆன்மா முதலிய கருத்துக்களும், குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் மனித இருப்புக் குறித்த கேள்விகளாகத் தான் எழுகின்றன. வரலாற்றை கடந்ததாக நமக்குச் சிந்தனைகள் செய்ய முடியாது. விலங்குகளின் துயர் குறித்து நமக்கு ஆய்வில்லை. இவற்றையும் உள்ளடக்கி, மனிதச் சிந்தனை செல்லுமானால் வரவேற்கத்தான் வேண்டும். இதன் காரணமாக, மனிதச் சிந்தனை இன்னும் ஆழ்ந்து செல்ல முடியும்.

இயற்கை குறித்தும், உயிரினங்கள் குறித்தும், தற்காலத்தில் மிகுதியாக சிந்திக்க வேண்டிய தேவை நமக்கு எழுந்துள்ளது. இதுவும்கூட மனித வாழ்க்கைக்குள் வந்துவிட்ட நெருக்கடியின் விளைவாக உள்ளது. மனிதன்தான் இந்த உலகத்தில் மையம் என்ற சிந்தனையை விட்டுவிடக் கூடிய தேவையும் ஏற்பட்டு இருக்கிறது. பொதுவாக உயிர் இயக்கம்

குறித்து மனிதன் சிந்திக்க வேண்டியவன் ஆகிறான். கூடவே இயற்கையின் வரையறைகள் குறித்து சிந்திக்க வேண்டியவனாகிறான். மனிதன் தன் மனத்தை கடந்து செல்ல வேண்டும் என்று நெடுங்காலம் முதலே பேசி வருகிறான். பிரபஞ்சம் தொடர்ந்து விரிகிறது. வாழ்வின் எல்லைகள் குறித்த ஆய்வுகளும் விரிவடைகின்றன. கணினி முதலியவை மீண்டும் மனித இருப்புக் குறித்த சில விளக்கங்களைத் தருகின்றன. க்ளோனிங் மனித வாழ்வியலுக்குள்ளும் வந்துவிடக் கூடும். பூமியை விட்டு வேறு கிரகங்களில் குடியேறுவது பற்றியும் மனிதன் இன்று சிந்திக்கிறான். மீண்டும் மனித வாழ்வின் அர்த்தம் தான் என்ன? என்ற கேள்விக்கே வந்து சேர்கிறோம்.

3. மனிதன் தன் துயரங்களை, தீர்த்துக் கொள்வதற்காகத்தான் சிந்தனையில் ஈடுபடுகிறான். பல்வேறு செயல்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். எந்த ஒரு மனிதனும் சுயமாக இவற்றைச் செய்கிறான் என்று சொல்ல முடியாது. இவனது சிந்தனை மற்றும் உணர்வுகளுக்குள், குடும்பம், கல்வி பயிற்சி, என்று பலவற்றின் பாதிப்புகள் இருக்கின்றன. தான் வாழும் கலாச்சாரம், தன் கால பொருளியல், அரசியல், இறுதியில் உலகளவிலான பொருளியல் மற்றும் அரசியல் சூழல் இவை எல்லாமே – மனிதனைச் சிந்திக்க வைக்கின்றன. மனிதனின் சிந்தனைக்குள் பாதிப்பைச் செலுத்துகின்றன. இன்னும் ஆழ்ந்து பார்த்தால், இவனைச் சூழ்ந்துள்ள பல்வேறு சக்திகளும் இவனது சிந்தனையையும் இறுதியாக வாழ்வியலையும் கட்டமைக்கின்றன என்பது தெரியும்.

இவன் தனக்காக வாழ்கிறான் என்பதைக் காட்டிலும் இவனைக் கொண்டு வேறு யார் யாரோ வாழ்கிறார்கள். சுயமாக சிந்திக்கிறான் என்பதுகூட உண்மையில்லை. இவனுடைய சிந்தனைக்கடியில் குடும்பம் மற்றும் பல உலகளாவிய சக்திகள் செயல்படுகின்றன. இன்று சந்தைப் பொருளாதாரம் என்பது ஒரு மாபெரும் சக்தி. இந்தியாவுக்குள்ளும் நம்மைப் பாதிக்கிற பல்வேறு சக்திகள் குறித்து நாம் பேச முடியும். நமக்குத் தேவையான கல்வியை நாம் பெற முடியவில்லை. நல் வாழ்க்கைக்கான சமூகச் சூழல் இன்றில்லை. நம்பகமான உறவில்லை. வெட்டி ஆர்ப்பாட்டங்களிலும், பொழுதுபோக்குகளிலும் நம்மை இழக்கிறோம். பொய்களிலும், பிரம்மைகளிலும், போலித்தனத்திலும் நாம் வாழ்கிறோம். நேர்மையை நம்மால் கடைபிடிக்க முடியவில்லை. ஊழலில்லாமல் வாழ்வில்லை. நாம் உண்ணும் உணவு, காய், கனி முதலியவற்றின் வழியே நஞ்சு சேருகிறது. மருந்துகளே நஞ்சாகின்றன.

வாழ்வில் நிறைவும், நிம்மதியும் இல்லை. எந்தச் சமயத்திலும் நமக்கு விபத்துக்கள் நேரலாம். வெடிகுண்டுகள் எங்கும் வெடிக்கலாம். போலித் துறவிகள் இன்று பெருகிவிட்டனர். சோதிடர்கள், போலிச் சாமியாரின் பின்னே இன்று மக்கள் ஓடுகின்றனர். இப்பொழுது மீண்டும் அதே கேள்வி, நம் வாழ்விற்கு அர்த்தம் என்ன? நம் வாழ்வை நாமே தீர்மானிக்கவும், அழகுபடுத்தவும் முடியுமா? நாம் தனியர்கள் அல்ல! ஒரு சமூகத்தில் வாழ்கிறோம். வேற்றுமைகள் தேவை என்ற போதிலும் இவை பிளவாகிவிடக் கூடாது. இப்படி எல்லாம் இன்று சிந்திக்கிறோம்.

நம் சிந்தனைக்குள் செயல்படுவது மெய்யியல். இன்று நமக்கு மெய்யியல் பார்வை தேவை. பொருளையும் அதிகாரத்தையும் சேர்த்துக் கொள்வது இன்று வாழ்க்கை இல்லை. வாழ்க்கை எளிமைப்பட வேண்டும். அறம் தழைக்கவேண்டும். என் வாழ்க்கை எனக்காக மட்டுமில்லை. இன்று முதலாளிகள் தேவையில்லை, வல்லரசுகள் தேவையில்லை. மத நிறுவனங்கள் தேவையில்லை, இவை எல்லாமே அதிகார பீடங்கள், மக்களின் அறிவு, உழைப்பு ஆகியவற்றைச் சுரண்டுவதன் மூலமே இவை வலுப்பெறுகின்றன. அதிகாரம் எந்த வகையிலும் மனிதனை அழிக்கும். அன்பில், நேசத்தில், உறவுகளில், பிறருக்காக தன்னை இழப்பதில்தான் மனிதனுக்கு வாழ்க்கை எழ முடியும். இதற்கு ஒட்டுமொத்தமாக நாம் தர வேண்டிய பெயர் சமதர்மம்.

4. நான் மார்க்சியன். மார்க்சிய கட்சியோடு; எனக்கு இன்று எந்த உறவும் இல்லை. எனினும் மார்க்சியத்துக்குள் தான் இருக்கிறேன். கட்சிகள் மார்க்சியத்தைக் கட்டுப்படுத்திய வரலாறு எனக்குத் தெரியும். மார்க்சியத்தின் ஆழங்களும், உள்ளுறை ஆற்றல்களும் மிக விரிவானவை. மார்க்ஸ், மாவோ, முதலியவர்களை இன்னும் நாம் ஆழ்ந்து கற்க வேண்டும். சோவியத் யூனியன் தகர்வோடு மார்க்சியம் தகர்ந்து விடவில்லை, என்பது மட்டுமல்ல மார்க்சியத்துக்கான ஆற்றல்களும் அதிகரித்திருக்கின்றன. வர்க்கப் போராட்டம் என்ற அளவில் மார்க்சியத்தைக் குறுக்கிவிட இயலாது. வர்க்கப் போராட்டங்களின் வழியே, வர்க்கங்களைக் கடந்து செல்வது தான் மார்க்சியம். இது மார்க்சியத்தின் அரசியல். இது மெய்யியல் அடிப்படையிலான அரசியல்.

மார்க்சியத்தின் மெய்யியல் அந்நியமாதல் என்ற கோட்பாட்டிலிருந்து தொடங்குகிறது. இயற்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும், இறுதியாக தன்னிலிருந்தும் அந்நியமாகிற நிலை அழிய வேண்டும். எல்லா வகை ஆதிக்கமும் அழிந்த நிலையில் மனிதன் மீண்டும் இயற்கையோடும்,

சமூகத்தோடும் தன்னோடும் நிறைவான உறவில் வாழ்வான். இதுதான் மார்க்சிய மெய்யியலின் அடிப்படை.

5. இப்பொழுது தமிழ் மெய்யியல் குறித்துச் சொல்லலாம்.

20-ம் நூற்றாண்டுத் தமிழகத்தில் மெய்யியல் பார்வை அழுத்தம் பெறவில்லை என்பதை, முதலில் குறிப்பிட வேண்டும். பெரியாரின் திராவிட இயக்கம், தமிழனுக்குச் சாதி, மதம், கடவுள் இல்லை என்று பேசியது. இதன் பொருள், வரலாற்றில் தமிழனுக்குச் சாதியோ, மதமோ, கடவுளோ இல்லையென்று ஆகாது. இன்று இவை தேவை இல்லை, இவை எதிர்காலத்தில் தமிழனுக்குத் தேவை இல்லை என்பதாகத்தான் பெரியாரின் கூற்றை நாம் பொருள்படுத்தவேண்டும். வரலாற்றை பொருள்படுத்துவது என்பது நிகழ் கால தேவைகளையொட்டித்தான் என்பதனை நாம் ஏற்கமுடியுமானால், பெரியார் இவ்வாறு கூறியதை இப்படிப் பொருள்படுத்த முடியும். தொன்மையான தமிழ் வரலாற்றைத் தேடிச் செல்வோமானால் குறிப்பாக சங்க காலத்தில் தமிழன் மீது, சாதியோ, மதமோ, கடவுளோ வந்து அமர்ந்து கொள்ளவில்லை. சங்க காலத்திலேயே இவை நுழைந்துவிட்டன எனினும், தமிழ் மக்களின் வாழ்வியலை இவை தீர்மானிப்பவையாக இல்லை. வரலாற்றுப் போக்கில் தமிழ்ச் சமுதாயத்துக்குள் மட்டுமல்லாமல், எல்லா சமூகத்தினுள்ளும் மதமும், கடவுளும் சடங்குகளும் ஆற்றலும் ஆதிக்கமும் பெற்றன. வரலாற்றில் வர்க்கங்களின் தோற்றத்தை ஒட்டி நாம் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். திரும்பவும் சொல்லலாம். மனிதன் தன்னைப் புரிந்து கொள்வதற்காக, தன் சூழலை, வாழ்வை மாற்றி அமைப்பதற்காக தோற்றுவித்த இவ்வகைக் கருத்தாக்கங்கள் நாளடைவில் மாறுபட்ட சமூகச் சூழலில் மனிதனை அழுத்தும் கருத்துக்களாகின்றன.

திராவிட இயக்கத்தினரின் வினோதமான ஒரு கருத்தாக்கம் இங்கு குறிப்பிட வேண்டும். 20-ம் நூற்றாண்டுச் சூழலில், பார்ப்பனியத்தின் ஆதிக்கத்தைப் பெரியார் மறுக்க வேண்டி இருந்தது. காங்கிரஸ் கட்சி வட்டாரத்திலும் வெளியிலும் பெரியாருக்கு நேர்ந்த அனுபவங்கள், பார்ப்பனியத்தைக் கடுமையாக அவர் சாடுவதற்குக் காரணங்களாயின. தமிழக வரலாற்றினுள் சாதி, முதலிய கருத்துக்களைப் புகுத்தியவர் பார்ப்பனர்தான் என்றும் பெரியார் விவாதித்தார். தமிழகத்தின் எத்தகைய பொருளியல் மற்றும் அரசியல் சூழல் காரணமாக தமிழகத்திற்குள் பார்ப்பனர் நுழைந்து வலுப்பெற்றனர் என்பது குறித்து நம்மிடம் பார்வையும் ஆய்வுகளும் இல்லை. அன்றியும் இந்திய வரலாற்றில் பார்ப்பனியம் என்ற கருத்தாக்கத்தின் உள்ளுறையையும் நாம் ஆழமாக அறிந்து

கொள்ளவில்லை. இது குறித்து விரிவான ஆய்வுக்குத் தேவை உண்டு. எனினும், இப்போதைக்கு நான் தவிர்க்கிறேன்.

தமிழனுக்குச் சாதி, மதம், கடவுள் வேண்டாம் என்று பெரியார் கூறியவை லட்சியம் குறித்த கருத்துக்கள். பகுத்தறிவு மூலம், இவற்றை அகற்றிவிட முடியும் என்று பெரியார் நம்பினார். பகுத்தறிவு என்பதன் எல்லைக்கும் அப்பால் பொருளியல் சூழலோடும் தமிழ்ச் சமூகத்தின் ஆதிக்க சக்திகளோடும் இவை உறவுடையதாக இருப்பதைப் பெரியார் போதியளவு பார்க்கவில்லை. சமதர்மம் வந்தாலொழிய இவை அழியா என்பதும் பெரியார் கருத்தாக இருந்தது. பெரியாரின் மெய்யியலை, இவ்வகை பகுத்தறிவுக் கருத்துக்களில் முடக்கிவிட இயலாது. பெரியாரின் மெய்யியல் என்று அவரது தன்மானம் என்ற கருத்தியலைத்தான் குறிப்பிட முடியும். இது நெடுந்தொலைவு செல்லும். வர்க்கம் மற்றும் சாதியற்ற சமூக ஆக்கத்தை உள்ளடக்கி இந்தக் கருத்தியல் விரிவு பெறும் தன்மையுடையது. பெரியாரிடமும் ஒரு வகையான ஆன்மீகப் பார்வை செயல்பட்டது. இதற்கு பெரியாரியர் அழுத்தம் தருவதில்லை. குறைந்த அளவிலேனும் பெரியாரை ஒரு சித்தர் என்று நாம் சொல்ல முடியும். இப்படிச் சொல்வதற்கான தடையங்களைப் பெரியாரின் வாழ்வுக்குள் நாம் காணமுடியும். பெரியாரியத்தை மேலும் வளர்ப்பது ஆழப்படுத்துவது என்ற முறையில் நம் சிந்தனைகள் செல்ல வேண்டும். பெரியாரைக் குறைத்துப் பேசுவதன் மூலம் தமிழ் மெய்யியலை நாம் வளர்க்க முடியாது.

6. 20-ம் நூற்றாண்டுச் சூழலில், தி.மு.க. வினர் தமிழர்களின் தொன்மை, மேன்மை குறித்து நிறையப் பேசினர். தெற்கில் குமரிக்கண்டம், வடக்கில் சிந்து வெளி நாகரிகம் முதலியவற்றை உள்ளடக்கி தமிழின் தொன்மை, மேன்மை (நாகரிகம் குறித்து) பேசினர். தமிழர்கள் பேரரசுகளை நிறுவியது குறித்தும் பேசினார்கள். தமிழர்கள் கடல்கடந்து வணிகத்தில் ஈடுபட்டார்கள். அரசுகளைத் தோற்றுவித்தார்கள், நகரங்களைப் படைத்து பெரும் இலக்கியங்கள் படைத்தனர். இமயம் வரை படையெடுத்து வென்றனர். தமிழின் தனித்தன்மை குறித்தும் பேசினர்.

இவ்வகைப் போக்கு ஆங்கிலேயருக்கு எதிரான இந்தியாவின் விடுதலை பேரியக்கத்தோடு தொடர்புடையது என்பதையும் இந்திய நாகரிகம் என்பது ஆரிய நாகரிகம் தான் என்று சிலர் அழுத்தம் தந்ததற்கு எதிர்வினையாக திராவிட நாகரிகம் குறித்து பேசவேண்டி இருந்தது என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். திராவிட நாகரிகத்தின் மேன்மை குறித்த கருத்துக்கள் பொய்யானவையும் அல்ல. இவ்வகைக்

கருத்துக்கு விரிவான ஆதாரங்கள் உண்டு. ஆரியம், திராவிடம் என்ற முரண்பட்ட போக்குகளுக்கு இடையிலான போராட்டம் இன்றைக்கோ, நாளைக்கோ, ஓயமுடியும் என்று தோன்றவில்லை. சங்க காலம் முதற்கொண்டே இத்தகைய முரண்பாட்டின் மோதலின் தொடக்கத்தை நாம் காண்கிறோம். ஆரிய நாகரிகம் என்பதை மேலுலகம், பிரம்மம், வேள்வி, சாதி, சடங்குகள் முதலியவற்றைச் சார்ந்தது என்று நாம் கொண்டால், திராவிடம் என்பதை இந்த உலகம், வேளாண்மை, கோவில், பூசை முதலியவற்றை உள்ளடக்கிய உலகியல் சார்ந்தது என்று நாம் வேறுபடுத்த இயலும். சாங்கியம், வைசேடிகம், சார்வாகம், சமணம், பௌத்தம் முதலிய மெய்யியல் போக்குகளையும், ஆரியர்களின் வைதீகத்திற்கெதிராக நாம் நிறுத்த முடியும். கூடவே ஒன்றை நாம் குறிப்பிட வேண்டும். இவை வரலாற்றின் எதிர்நிலைகள். ஒன்றை மற்றது பாதிக்கவும், ஊடுருவவும் செய்யும். எப்பொழுதும் இவை தனித்தனியே பிரிந்து இயங்க முடியாது. திராவிடத்துக்குள், ஆரியமும் வந்துவிடும். திரும்பவும் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

நம் பார்வையில் தெளிவு ஏற்படுத்தக் கூடியது மெய்யியல் பார்வைதான். கடவுளோ, கடவுள் மறுப்போ மனித வாழ்வியலுக்குள் என்ன பாதிப்பைச் செய்கிறது என்ற கேள்விதான் முக்கியம். கடவுள் மனித வாழ்க்கையை முழுமையாகத் தனக்குள் கரைத்து அழித்துவிடக் கூடாது. மதநிறுவனங்கள், மனிதனைத் தன் ஆதிக்கத்தின் கீழ் அடிமையாக்கி விடக்கூடாது. ஆதிக்கத்தின் சார்பில் மதம் செயல்படக் கூடாது. மனிதனின் விடுதலைக்கு மதம், உதவ இயலுமானால் நாம் வரவேற்க இயலும். மத எல்லைக்குள் செயல்படும் புரோகிதர்கள் நமக்கு வேண்டாம். தீர்க்கதரிசிகளும் சித்தர்களும் நமக்குத் தேவை.

7. தி.மு.க. தமிழக அரசியலில், தமிழர் வாழ்வியலுக்குள் எத்தகைய ஆக்கங்களைச் செய்தது என்பது குறித்து இங்கு நாம் விரிவாக பேச வேண்டியதில்லை. தமிழர்களுக்கு இன, மொழி உணர்வை இவர்கள் ஏற்படுத்தினார்கள். தமிழனுக்குத் தனி அரசியல், தனி நாடு தேவை என்றும் பார்ப்பனியத்தை ஒதுக்க வேண்டும் என்றும் உணர்வை ஏற்படுத்தினார்கள். தமிழனுக்குத் தேவையான அரசியல், பொருளியல் குறித்த உணர்வையும் ஏற்படுத்தினார்கள். சங்க இலக்கியத்தின் காதல் வாழ்வை மேம்படுத்தினர். தமிழ் இலக்கியத்தின் மேன்மையை எடுத்துச் சொன்னார்கள். தமிழிலக்கிய திறனாய்வில் ஆரியச் சார்பை விளக்கினார்கள். இப்படித் தமிழர்களுக்குப் பெருமித உணர்வை ஊட்டியபொழுதே தற்செருக்கையும் இவர்கள் புகுத்தினார்கள். தமிழனுக்கு

இணையானவன் உலகில் இல்லை. தமிழ் இலக்கியத்துக்கு நிகராக உலகில் இல்லை என இப்படி எல்லாம் தமிழனுக்குக் கற்பித்தது மூலம் வரலாற்றுச் சூழலிலிருந்து தமிழர்களைப் பிரித்தார்கள். தான் அடைய வேண்டிய உயர்வு இனி எதுவும் இல்லை என்ற உணர்வைத் தமிழனுக்குத் தந்தது மூலம் எல்லா அறிவும் எனக்குள்ளேயே இருக்கிறது என்று கற்பித்தார்கள். தமிழிலக்கிய ஆய்வு வளர்ச்சி பெறவில்லை. மார்க்சியம் மற்றும் பிற மெய்யியல்களை ஆழ்ந்து கற்க வேண்டியதில்லை. தமிழ் மன்னர்களைப் பெருமைப்படுத்தினார்கள். தமிழர்களின் படையெடுப்புகளைப் போற்றினார்கள். காதல், பெண் இன்பம், உலகியல் இன்பம் ஆகியவற்றைப் போற்றி முதலாளிய போக்கை ஊக்குவித்து, நுகர்வியத்தை வளர்த்தார்கள். அரசியலில் அதிகாரத்தைச் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை, பொருள் சேர்ப்பது தவறில்லை.

இத்தகைய போக்கின் விளைவை இன்று பெரிய அளவில் பார்க்கிறோம். தமிழன் தனக்குள் குறுகி இறுகி விட்டான். வள்ளுவரையும், இளங்கோவையும், சங்க இலக்கியத்தையும் இவர்கள் தம் அளவில் குறைத்தார்கள். கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களுள் இவர்கள் மதத்தை மட்டுமே கண்டனர். தமிழனின் வரலாற்றை, இலக்கிய ஆக்கத்தைக் காணவில்லை, மேலும் இவர்கள் அற உணர்வில் செழிக்கவில்லை.

8. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் தோன்றிய சைவ, சமய மறுமலர்ச்சி, தனித்தமிழ் மற்றும் தமிழ்த் தேசிய இயக்கம் பற்றியும் நாம் பேசவேண்டும்.

சைவ சமயம் தன் மத இறுக்கத்தைக் குறைத்துக் கொண்டது என்பது உண்மை. எனினும் வள்ளலாருக்கும், சித்தர்களுக்கும் அவர்கள் உரிய இடத்தைத் தரவில்லை. திராவிட இயக்கத்துக்கான தூண்டுதலை, சைவ சமயத்தின் ஒரு பகுதியினர் தந்தனர். தனித்தமிழ் இயக்கத்துக்கும் இவர்கள் காரணமாக இருந்தனர். பார்ப்பனியத்தை இவர்கள் மறுத்தார்கள். தமிழ் என்பதைச் சமய இலக்கியங்களோடு, குறுக்கிக் கொண்டனர். தனித்தமிழ் தேவை என்பதில் நமக்கு மறுப்பில்லை. தமிழர்களின் இன உணர்வு என்பதை மரபு இனமாக குறுக்கிவிட முடியாது. தமிழ்த் தேசிய இன உணர்வுதான் இன்று நமக்குத் தேவை. தமிழ்த் தேசியம் என்பதனுள் பெரியாருக்கு மட்டுமல்லாமல் மார்க்சியத்துக்கும் இடமுண்டு, அதாவது, தமிழர்களுக்கான, பொருளியல் குறித்து நாம் கூடுதலாகப் பேசவேண்டும். தமிழ் மக்களின் இயற்கை வளங்களைப் பிறருக்கு விட்டுத் தர இயலாது.

சமதர்மம் தான் தமிழ் மக்களுக்கான வாழ்வுரிமை. முதலாளியத்திடமும், அரசியல் ஆதிக்கத்திடமும் தமிழ் மக்களை ஒப்படைக்க முடியாது. தமிழ் மக்களுக்குத் தேசம், இயற்கை, வாழ்வுரிமையும், விடுதலையும் வேண்டும். இந்திய தேசியம் தமிழ் மக்களின் அடிமைத்தனம் மீது எழ முடியாது. இந்துத்துவம் தமிழர்களின் வாழ்வியலை அழிக்கும். தமிழ் மக்களின் மெய்யியலை அழிக்கும். தமிழ்த் தேசிய உணர்வுடையவர், தமிழ் மெய்யியலை வளர்த்தெடுக்க வேண்டும். சமதர்மத்தை உள்ளடக்கியதுதான் தமிழ் மெய்யியல்.

9. தமிழ் இலக்கியங்களுக்குள், வரலாற்றுக்குள் ஆதி பொதுமைச் சமூகம், ஒரு பெரும் நீரோட்டமாக தொடர்ந்து வருவதைக் காணமுடியும், வரலாற்றுக்குள் வந்துவிட்ட ஏற்றத்தாழ்வுகள், தனி உடைமை, அரசு அதிகாரம் ஆகியவற்றுக்கு எதிராக இந்தப் பொதுமைக் கூறுகள் செயல்படுகின்றன. 'இருவேறு உலகத்தியற்கை' என்று வள்ளுவர் கூறினார். திருச் செல்வம் ஒரு பக்கம், தெள்ளியராதல் மறுபக்கம் – இப்படி இருவேறு உலகம் ஏற்பட்டதை வள்ளுவர் குறிப்பிடுகிறார். பக்குடுக்கை நன்கணியனார், இப்படி உலகம் இருவேறுபட்டதைக் கண்டு நொந்தார். ஒரு தெருவில் ஒரு வீட்டில் மணமுரசு, இன்னொரு வீட்டில் சாப்பறை, இத்தகைய உலகத்தைப் படைத்தவன் பண்பில்லாதவன் என்றார் நன்கணியனார். பண்பில்லாதவர்கள் உலகத்தை அழிக்கின்றனர். பண்புடையவரால் தான் உலகம் வாழ்கிறது என்றார் இன்னொரு கவிஞர். பெரியோர் என்றும் சிறியோர் என்றும் மனிதர்களை வேறுபடுத்துகிற உலகப் போக்கு கணியன் பூங்குன்றனார்க்கு உடன்பாடில்லை. வாழ்க்கை எளியதாகவே இருக்க முடியும். உண்பது நாழி, உடுப்பது இரண்டு என்றார் நக்கீரர். செல்வத்துப் பயன் ஈதல், நாமே துய்ப்போம் என்றால் நாம் இழந்துவிடுவது பல. பாரி முதலிய வேளிர்களின் சாவைப் புலவர்கள் ஏற்கவில்லை. இறந்தவனை எரிக்கலாம் அல்லது புதைக்கலாம். இது குறித்து விவாதங்கள் தேவையில்லை என்றார் இன்னொரு கவிஞர். களவு மனம் தமிழர்களின் மனநிலை. செல்வமோ, குலமோ, இடையில் குறுக்கிட வேண்டியதில்லை. இவை காரணமாக பெற்றோர் குறுக்கிட வேண்டியதில்லை. வாழ்வை அன்பே தீர்மானிக்கட்டும். செல்வமோ, குலமோ, தீர்மானிக்க முடியாது. இது தமிழ் அறம்.

ஆரிய பிரகதத்தனுக்குக் கபிலர் இந்த அறத்தை எடுத்துரைத்தார். வள்ளுவர் ஒப்புரவுக்கு அழுத்தம் தந்தார். பேரறிவாளனிடம் சேரும் செல்வம் ஊருணி நீரால் நிறைவு செய்வது போன்றது என்றார் வள்ளுவர். மழை தானே பெய்து, ஊருணி தானே நிரம்புகிறது. ஊருணியைக்

கேட்காமலும் எடுத்துக் கொள்ளலாம். நயனுடையவனிடம் சேரும் செல்வம், பயன் மரம் உள்ளூரில் பழுத்த மரம் போன்றது என்றார் வள்ளுவர். மரம் ஊருக்குப் பொது. பழங்கள் எல்லோருக்கும் உரியவை. மழை நீர் தனி ஒருவருக்குச் சொந்தம் ஆக முடியாது. ஊருணியும் ஊர் மக்களுக்கான பொதுவுடைமை. ஊர் நடுவில் உள்ள மரமும் மக்களுக்குச் சொந்தம். நிலத்தில் தனி உடைமை தேவை இல்லை. ஒருவனிடம் பெருகும் செல்வத்துக்கு அவன் மட்டுமே காரணம் அல்ல ஊரே கூடி உழைக்கும் போதுதான் ஒருவனுக்குச் சேருகிறது செல்வம். அறிவுடையவனுக்கு இந்த உண்மை புரியும். நான் தான் செல்வம் சேர்த்தேன். எனக்குத்தான் இதன் மீது உரிமை என்று கூறுபவன் அன்பற்றவன். அன்பகத்தில்லாதவன் வாழ்க்கை பட்ட மரத்தின் வாழ்க்கை. பாலை நிலத்தில் இருக்கும் இந்த மரம் தளிர்ப்பதில்லை. இப்படி எல்லாம் வள்ளுவர் பேசுவது தமிழ் அறம். இதற்கு நம் காலத்துப் பெயர் சமதர்மம்.

10. சமுதாயத்தில் வர்க்க வேறுபாடுகள் மிகுந்த நிலையில் கோவலன் திருடனாகிறான். அந்நிய நாட்டிற்குப் பிழைக்க வந்தவன் கையில் எப்படி விலை மதிப்பற்ற சிலம்பிருக்க முடியும். ஆகவே அவன் கள்வன் கொல்லப்படுதலுக்கு உரியவன் நெடுஞ்செழியன் கோவலனைக் கொன்று அறம் பிழைத்தான். அறமே இப்பொழுது அவனுக்குக் கூற்றுவனாக எதிரில் வந்தது. பாண்டியன் இறந்தான் இப்படி ஏற்றத்தாழ்வை அடிப்படையாக கொண்டிருக்கிற ஒரு பெரிய நகரில் சான்றோர் வாழ முடியாது. கற்புடைய பெண்கள், தெய்வம் இருக்கமுடியாது. ஆகவே இந்த நகரம் அழிவுக்குரியது. அழிப்பதற்குரியது. இப்படிச் செல்லுகிறது. இளங்கோவின் அறம். இளங்கோ சமணராக இருக்கலாம். எனினும் தமிழ் அறத்தைத் தான் இவர் தழுவி நிற்கிறார்.

புகார் நகரில் தீ பற்றியது போல வறுமையின் கொடுமையில் மக்கள் வாழ்கின்றனர். இந்த வறுமையைச் செல்வர் தீர்க்கமுடியாது. மன்னர் தீர்க்க மாட்டார்கள். தெய்வமே முன்வந்து எடுக்க எடுக்க குறையாத அமுதசுரபியைத் தந்தாலன்றி இந்த வறுமைத் தீ குறையாது. இப்படிச் செல்கிறது சாத்தனார் சிந்தனை. அமுதசுரபி என்ற கற்பனை இவருக்குள் எழுந்தது இப்படித்தான்.

நாடு முழுவதும் இராவணர்கள். தெய்வமே அவதாரம் எடுத்து வந்தாலொழிய இந்த இராவணர்களை ஒழிக்க முடியாது. அப்படி வரும் தெய்வம் மன்னரின் அரண்மனையில் பிறந்திருந்தாலும் அரசைத் துறந்து வந்தால் ஒழிய மக்களின் துயரை அறிய முடியாது.

தாழ்த்தப்பட்டவர்களோடும், ஏழைகளோடும் உறவு கொண்டால் மட்டுமே ராமன் இவர்கள் சார்பில் போரிட இயலும். இப்படிச் செல்கிறது கம்பன் வகுத்த அறம். தமிழிலக்கியத்தின் சாரம் என இத்தகைய அற உணர்வைத்தான் குறிப்பிட முடியும். தமிழிலக்கியத்துக்கு மையமென்று சித்தர்களைக் குறிப்பிட வேண்டும். இவர்களுக்குச் சாதி, மதம், சடங்குகள் இல்லை. பொருளோடு, அதிகாரத்தோடு இவர்களுக்கு ஒட்டுறவு இல்லை. கணியன் பூங்குன்றன் முதல் வள்ளுவர் வழியாக தொடர்கிறது, இந்த சித்தர் இயக்கம். திருமூலர், வள்ளலார் முதலியவர்கள், இந்த இயக்கத்தின் வெளிப்பாடுகள். நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் சித்தர் இயக்கத்திலிருந்து வேறுபடுத்திப் பார்க்க இயலாது. பெரியாரும் சித்தர் இயக்க வீச்சை பெற்றவர். இதன் தொடர்ச்சி என பாரதி, புதுமைப்பித்தன் முதலியவர்களையும் நாம் காண முடியும். ஆழ்ந்து பார்த்தால் வேளாண்மைச் சமூகத்தில் இவர்கள் வேர் பிடித்தவர்கள், கிளை பரப்பியவர்கள். இயற்கையோடு இவர்கள் இயைந்தவர்கள். உழவர்களின் விளைச்சலில் இயற்கையின் பங்கு அதிகம். இதன் காரணமாக உழைப்பும், பகிர்வும், இவர்களுக்கு வாழ்க்கையாக அமைகிறது. இயற்கையை, தமக்குள் உள்வாங்கிக் கொண்டவர்கள் அன்பையும், அறத்தையும் சேர்த்தே உள்வாங்கிக் கொள்கிறார்கள்.

இந்தியச் சமூகத்தை, ஆசிய முறைச் சமூகம் என்றார் மார்க்ஸ். இங்கு நிலத்தில் தனி உடைமை இல்லை, அரசோடு அதிக உறவில்லை. ஒவ்வொரு கிராமச் சமூகமும் தனி அரசு போல செயல்படுகிறது. இதில் ஏற்றத்தாழ்வு உண்டெனினும் இன்று நாம் காணும் பேரளவிலான ஏற்றத்தாழ்வு என்று இல்லை. வேளாண்மைச் சமூகத்தை, இயற்கையை நாம் தொடர்ந்து அழிப்போம் என்றால் வாழ்வின் ஆதாரங்களையும், தமிழ் வளத்தையும் சேர்த்தே அழிப்போம்.

11. தமிழ மக்கள் இறைவனோடு கொண்ட உறவு குறித்து இங்கு சிலவற்றைச் சொல்லலாம். ஏற்றத்தாழ்வு குறைவாக இருக்கிற சமூகத்தில் இறைவனுக்கு மனிதர் தம்மை இழக்க மாட்டார்கள். அந்நியமாதலுக்கு அதிகம் ஆட்பட மாட்டார்கள். ஏற்றத்தாழ்வான உலகை படைத்தவனைப் பண்பிலாதவன் என்று இவர்கள் கூறமுடியும். வள்ளுவரும் இறைவனை வசை பாடுகிறார். இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக இவ்வுலகியற்றியான் என்கிறார். காதலியோடு, தலைவன் இல்லத்திலிருந்து வாழும் வாழ்க்கையின் பேரின்பம் தாமரைக் கண்ணான் உலகில் இருக்க முடியுமா? என்கிறான் வள்ளுவரின் தலைவர். வள்ளுவர் மேலுலகத்தைப்

பொருட்படுத்தவில்லை. மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்கிறார் வள்ளுவர். மழை பெய்யவில்லை என்றால், தானமும் தவமும் இல்லை என்கிறார். முறைப்படி இல்லறத்தில் வாழ்பவனுடைய வாழ்க்கை, வானத்து அமரர்களுக்கு நிகரான வாழ்க்கை என்கிறார். உயிர்களைக் கொன்று உண்ணாதவனை, மண்ணுயிர்கள் இறைவனாகத் தொழும் என்கிறார். பொய்த்தவ வேடர் கொண்டவர்களை இகழ்ந்துரைக்கிறார். முறை செய்து காப்பாற்றும் மன்னவனை மக்கள் இறையென போற்றுவர். மெய்ப் பொருள் காண்பது அறிவு என்கிறார். உலகியல் வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாக படைக்க வேண்டும் என்பதுதான் வள்ளுவர் நோக்கம்.

சிலம்பில் கண்ணகி தெய்வமாகிறாள். மதுரை நகரில் மதுரையின் காவல் தெய்வமாகிய மதுராபதி கண்ணகிக்கு முன்வர அஞ்சுகிறது. மணிமேகலையின் அறத்திற்குத் தெய்வங்கள் ஒத்துழைக்கின்றன. ஆபுத்திரன் செய்யும் நற்செயலுக்குத் தெய்வம் உதவுகிறது. இந்திரன் உலகம் ஆபுத்திரனுக்கு வேண்டாம். வறியவரின் பசிதீர்க்கும் வாய்ப்புக்கு ஆதாரமாக இந்த மண்ணுலகமே தேவை. 12 ஆண்டு பசி தீர்ப்பதாகிய நாவல் மரத்தினடியில் நாவல் பழத்திற்காக, தவம் செய்கிறான் விருட்சிகன். இவனைச் சாத்தனார் பாராட்டவில்லை.

பெரிய புராணத்தில் நாம் என்ன பார்க்கிறோம். சிவகோசரியாருக்கு இறைவன் நெருக்கமாக இல்லை, இறைவன் கண்ணப்பனிடமே தன்னைக் காண்பிக்கிறார். பூசலாரின் மனக்கோயிலுக்குள்தான் இறைவன் முதலில் எழுந்தருளினார். கணணப்பனின் கதையாக்கத்தின் உயிர்ப்பை நமக்குள் உள்வாங்கிக் கொள்ள இயலுமானால் சேக்கிழாரின் படைப்பு நெறியிலேயே நந்தனுக்கு நாம் வாழ்வளிக்க முடியும். நந்தனைக் கொன்ற பார்ப்பனர்களை இறைவனுக்கு எதிரில் நிறுத்த முடியும். படைப்பிலக்கியத்தில் இப்படி செயல்படும் உரிமை நமக்குண்டு. தமிழிலக்கியம் இந்த உரிமையை நமக்கு வழங்கியிருக்கிறது.

தமிழ் இலக்கியத்தினுள்ளும் மன்னருக்குப் பெருமை, அந்தணர்க்குப் பெருமை, முதலியவை இடம் பெறுகின்றன. இவற்றை எல்லாம் இன்று நாம் களைந்து பார்க்க முடியும். திருமூலரை முன்னிறுத்தி, அன்பை அழிப்பவர்கள், சிவநெறிக்கெதிரானவர்கள் என்று சொல்லமுடியும். தமிழிலக்கியத்தை நம் கால நோக்கில் வாசிப்பதற்கான அணுகுமுறை இன்று தெரியவந்திருக்கிறது. சாதி, ஆண், ஆதிக்கத்தை நாம் ஏற்பதற்கில்லை. தனி உடைமை அரசு அதிகாரத்தை நாம் மதிக்க வேண்டியதில்லை. இது தமிழர் மெய்யியல்.

6. தமிழர் வகுத்த சமூக அறம்

தமிழகத்தில் கம்பராமாயணம் பெற்ற செல்வாக்கைச் சிலப்பதிகாரம் பெறவில்லை. அதேசமயம் சிலப்பதிகாரம் பெற்ற செல்வாக்கைக் கூட மணிமேகலை பெறவில்லை என்பதற்கான சில காரணங்களை இங்கே குறிப்பிட முடியும். ஆனால் இவ்விரு காப்பியங்களும் கூறும் அரசியல் அறத்தை நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டியது இன்றைய தேவையாகும். தமிழகத்தில் ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் தமிழுணர்வு மேலோங்கி இருந்தது. சிலப்பதிகாரத்தில் தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைத்த கனகன், விசயன் என்ற வடநாட்டு மன்னர்களை வெற்றிகொள்ள, சேரன் செங்குட்டுவன் படையெடுத்துச் சென்றான். இமயத்தில் கல் எடுத்து கனக விசயர்களின் தலையில் ஏற்றி வந்து கண்ணகிக்குச் சிலை அமைத்தான். ஆரியத்திற்கு எதிரான உணர்வு எழுச்சி பெற்றுவந்த சூழலில் சேரன் செங்குட்டுவன் படையெடுப்பைச் சொல்லும் சிலப்பதிகாரத்திற்குச் செல்வாக்குக் கிடைத்தது என்பது முக்கியமான காரணம். வேறு சில காரணங்களும் இருந்தன. சிலப்பதிகாரம் தமிழகத்தின் மூவேந்தர்களையும், மூன்று நாடுகளையும் சிறப்பித்துச் சொல்வதோடு மூன்று தமிழ் மன்னர்களுக்கு இடையே இருக்க வேண்டிய ஒற்றுமையையும் கூறுகிறது. தமிழ்ப் பெண்ணாகிய கண்ணகியின் கற்பு மேன்மையையும், அநீதிக்கு இடமளித்த மன்னனுக்கு எதிரான கண்ணகியின் ஆவேசத்தையும் சொல்கிறது. தமிழகத்தில் நிலவிய சமணம், சைவம் ஆகிய சமயங்களை அவற்றிற்கிடையேயான வேற்றுமை கருதாமல் சிலப்பதிகாரம் சிறப்பிக்கின்றது.

இவற்றோடு சிலப்பதிகாரத்தின் காவியச் செம்மை குறித்து எவ்வளவோ நுட்பங்களுடன் எடுத்தியம்ப முடியும். பழங்காலத்தில் தமிழகம் பெற்றிருந்த எண்ணற்ற கலைகளின் மேன்மையைச் சிலப்பதிகாரம் தனக்குள் பொதிந்து வைத்திருக்கிறது. கணிகை என்ற போதும் மாதவியின் கலைத் திறன்களை மட்டுமல்லாது கற்பு மேன்மையையும் சிலப்பதிகாரம் பதிவு செய்திருக்கிறது. தமிழகத்தின் இயற்கை வளங்களை விரிவாகச் சிலம்பு எடுத்துரைக்கிறது. இயற்கை வழிபாடுகள் சொல்லப்படுகின்றன. பல்வேறு இசைப் பாடல்கள் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் உணர்வின் பலதிறப்பட்ட மேன்மைகளைக் கொண்டாடுவதற்குச் சிலப்பதிகாரம் நமக்கு ஆதாரமாக விளங்கியது என்று சொல்வதில் மிகை எதுவுமில்லை. தமிழ் மக்களின் குறைபாடுகளையும் சிலப்பதிகாரம்

சொல்லாமல் இல்லை. கோவலனை மையப்படுத்திப் பார்க்கும்போது சில குறைகள் தெளிவாகத் தெரிகின்றன. ஆட்சிமுறை ஒழுங்குற அமையவில்லை என்பதையும் சிலப்பதிகாரம் கொண்டு புரிந்து கொள்ள முடியும்.

ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் அரசியல் எழுச்சிக்குச் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்ற செய்திகள் ஆதாரமாக இருந்ததைப் போல மணிமேகலையின் செய்திகள் அரசியல் உணர்வின் எழுச்சிக்குப் பெருமளவில் பயன்படவில்லை. சிலம்பின் தொடர்ச்சி என்ற முறையில் மணிமேகலை கற்கப்பட்டது என்பதில் ஐயமில்லை.

தமிழுணர்வின் எழுச்சி என்பதற்கு முக்கியமான கூறாகப் பகுத்தறிவுணர்வு இருந்தது. சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் மணிமேகலையில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் கூடுதலாக இருந்தன. கூடுதல் என்று சொல்வதைக் காட்டிலும் ஏராளமாக இருந்தன என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். சிலப்பதிகாரத்திலும் கண்ணகி மதுரையை எரித்தது, வானுலகம் சென்றது என்பன போன்ற இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்ற பொழுதிலும் அவை தமிழுணர்வாளர்களிடம் மறுப்புணர்வை ஏற்படுத்தவில்லை. மதுரை எரிப்பு என்ற நிகழ்ச்சியை, மக்களின் எழுச்சி மற்றும் புரட்சி என்பதாகவும் பொருள்படுத்திக் கொள்ள நம் சமகாலச் சூழல் இடமளித்தது. பிரஞ்சுப் புரட்சி முதலானவற்றை ஏற்கனவே நம் தலைவர்கள் நமக்கு உணர்ச்சிகரமாக ஊட்டியிருந்தார்கள். வானுறையும் தெய்வம் என்பது திருக்குறளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. வையத்தில் வாழும் முறைப்படி வாழ்ந்தவர்கள் மனிதர்களுக்குள் தெய்வமாகப் போற்றப்படுவார்கள் என்பது வள்ளுவரின் மறை.

மணிமேகலையில் அன்றைய தமிழகச் சூழலுக்குத் தேவையான அரசியல் எழுச்சிக்கான காரணிகள் இல்லை. மணிமேகலையின் தவம் என்பது பகுத்தறிவுணர்வுக்கு ஒத்த முறையில் இல்லை. பகுத்தறிவுக்கு ஏற்ற வகையில் தவம் பற்றி வள்ளுவர் கூறியிருந்தாலும், பகுத்தறிவு வட்டாரத்தில் அக்கருத்து எடுபடவில்லை.

பழங்காலச் சூழலில் தமிழகத்தில் நிலவிய வறுமையைப் பற்றி மணிமேகலை சொல்வதைப் போல சிலப்பதிகாரம் சொல்லவில்லை. இதனால் தமிழகத்தின் வறுமை பற்றிப் பேசுவது சமகாலச் சூழலில் அரசியல் உணர்வெழுச்சிக்கு எதிரிடையாகப் போய்விடும் என்பதும், அரசிளங் குமரன்

தவறு செய்தான் என்பது மீண்டும் தமிழ் உணர்வின் எழுச்சிக்கு ஒரு தடையாக ஆகிவிடும் என்பதும் காரணங்களாயின.

இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் இரண்டொன்று என்ற அளவில் மணிமேகலையில் இடம் பெற்றிருந்தால் தமிழ் உணர்விற்குப் பாதகமாக இருந்திராது. மணிமேகலைக் காப்பியத்தில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகளை நீக்கிப் பார்த்தால் இது ஒரு காப்பியமாக அல்லது ஒரு கதையாகக் கூட நிற்க முடியாது. இதில் சிக்கல் என்னவென்றால் ஒரு காப்பியத்தை அல்லது இலக்கியத்தை அதன் உள்ளியக்கத்தை மையப்படுத்திக் காண்பது என்ற முறையில் பகுத்தறிவாளர்களின் இலக்கியக் கல்வி அந்நாளில் அமையவில்லை. இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் என்பவை உலக அளவில் எந்தவொரு காப்பியத்திலும் இடம்பெறும். கண்ணகி மதுரையை எரித்தாள் என்பது வரலாற்று நிகழ்ச்சியாக இருக்க முடியாது என்ற போதிலும், அநீதிக்கு இடம் தரும் ஒரு நகரம் அல்லது நாகரிகம் அழியத்தான் வேண்டும் என்பது கவிஞனுக்குள் செயல்படும் அற உணர்வு. வள்ளுவரும் கடவுள் பற்றி ஆங்காங்கே சொல்லியிருக்கிறார். இவற்றையெல்லாம் நாம் கவிதை இயக்கத்தின் ஒரு பகுதியாகத்தான் காண இயலும். பகுத்தறிவாளர்கள் இப்படி காப்பியங்கள் மற்றும் கதைகளைப் பொருள்படுத்துவது இல்லை. குழந்தைகட்குச் சொல்லப்படும் கதைகளில் எவ்வளவோ அற்புதங்கள் இடம் பெறுகின்றன. காக்கையை நரி ஏமாற்றும், காக்கை நரிக்கு விருந்து வைக்கும் இப்படித் தொடங்கி எத்தனையோ நிகழ்ச்சிகள். பகுத்தறிவிற்கு ஒத்தவையாக இருப்பது இல்லை. எனினும் இத்தகைய கதைகள் நம் குழந்தைகளின் ரசனைக்கு உரியவை. நாமும் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.

எடுக்க எடுக்கக் குறையாத உணவை வழங்குவது அமுதசுரபி. சிந்தாதேவி ஆபுத்திரனுக்கு அமுதசுரபியை வழங்கினாள். இன்னொரு சமயம் கோமுகிப் பொய்கையில் ஆபுத்திரனால் இடப்பெற்ற அமதசுரபி மணிமேகலையின் கைகளுக்கு வந்தது. அமுதசுரபியில் இருந்து மணிமேகலை இட்ட உணவை உண்டு காயசண்டிகை தன் பன்னிரண்டாண்டுப் பசியில் இருந்து விடுதலை பெற்றாள். உதயகுமாரனிடம் இருந்து மணிமேகலையைக் காப்பாற்ற மணிமேகலா தெய்வம் அவளை மணிபல்லவத் தீவிற்கு வான்வழியே எடுத்துச் சென்றது. தீவதிலகை கற்பித்த மந்திரங்களைப் பயன்படுத்தி மணிமேகலை கோப்பெருந்தேவி விதித்த தண்டனைகளில் இருந்து தப்பினாள். பொதிய மலையில் இருந்த நாவல் மாரத்தின் கனியை உண்ட முனிவன் அடுத்த பன்னிரண்டு

ஆண்டுகளுக்குப் பசியில்லாமல் இருந்து தவம் செய்தான். இப்படி எத்தனையோ இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் மணிமேகலையில் இடம் பெறுகின்றன.

தமிழக வரலாற்றுச் சூழலில் இருந்து மணிமேகலையின் கதைப் பொருளை எவ்வாறு கற்பதென்பது தான் இலக்கிய மாணவர் என்ற முறையில் நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். தமிழகச் சூழலில் சங்க காலத்தை அடுத்து வந்த காலத்தில் கொடிய வறுமை நிலவியது. வறுமையைத் தீர்க்கும் முயற்சியில் அரசர்கள் ஈடுபடவில்லை; செல்வர்களும் ஈடுபடவில்லை. அரசென்பதுகூட நிலைகுலைந்திருந்தது. இந்தச் சூழலில் வறுமை தீர்க்கும் முயற்சியில் புத்த சமயத்தினர் ஈடுபட்டிருக்க முடியும். அரசிளங்குமரன் தவறு செய்கிறான். அவன் ஒரு வகையில் தண்டிக்கப்படுகிறான். தவம் என்ற முறையில் விருச்சிகனைப் போன்ற முனிவர்கள் பசி தீர்த்துக் கொள்வதற்காகத் தவம் செய்கிறார்கள். பசிப்பிணி கொடியதாக உள்ளது. மனிதனின் எல்லா உணர்வுகளையும் ஒடுக்கக்கூடியது. பசிப்பிணி தீர்ப்பதுதான் பேரறம். இந்த உணர்வை மையப்படுத்துகிறது மணிமேகலை. கணிகை மகள் என்ற போதிலும் அவள் கணிகையர் தொழிலில் ஈடுபடவில்லை. இல்லறத்திலும் ஈடுபட அவளுக்கு வழியில்லை. மணிமேகலை தவம் மேற்கொள்கிறாள். பல்வேறு தத்துவங்களைக் கற்று உண்மை அறிகிறாள். பெண் ஒருத்தி இப்படி அறிவைத் தேடி அலைய முடியும். பௌத்த சமயம் இப்படிப் பெண்ணைப் படைக்கிறது.

சிலம்பின் இயக்கம் ஒருவகையில் அமைய, மணிமேகலையின் இயக்கம் இன்னொரு வகையில் அமைகிறது. தமிழகச் சூழல் கண்ணகியைப் படைத்ததைப் போன்று மாதவியையும் படைத்தது. இதே சூழல்தான் மணிமேகலையையும் படைக்கிறது. இல்லறம் மட்டும் அல்லாமல் துறவும், தவமும் வாழ்க்கை நெறிகள்தான் என்று கூற முனைகிறது மணிமேகலை. வறுமையும், களவும், கொலைகளும், அநீதிகளும் நிலவும் சூழலுக்கு எதிர்வினை என்ற முறையில் கண்ணகியின் எழுச்சியை மட்டுமல்லாமல், மாதவி மற்றும் மணிமேகலையின் எழுச்சியையும் நம்மால் காணமுடியும். தமிழ் உணர்வின் எழுச்சிக் காலத்தில் சிலப்பதிகாரம் பெற்ற செல்வாக்கைப் புரிந்து கொள்வதைப்போல மணிமேகலையையும் நமது காலச் சூழலில் வைத்துப் புரிந்து கொள்ள முடியும். மணிமேகலை ஓர் அசலான தமிழ்க் காப்பியம். புத்த சாதகக் கதைகளில் மணிமேகலை இடம் பெறவில்லை. மணிமேகலையில் இடம்பெறும் ஆபுத்திரன் கதை ஓர் அசலான தமிழ்க்கதை.

இந்தக் கதைக்கு நிகரான இன்னொரு கதையை உலக அளவில் தேடினாலும் நமக்குக் கிடைக்காது. இந்தக் கதைக்காகவும் தமிழர்கள் பெருமை கொள்ள முடியும்.

இலக்கியங்கள் எப்பொழுதும் வரலாற்றுச் சூழலைப் பிரதிபலிப்பதாக மட்டும் அமைவது இல்லை. வரலாற்றுச் சூழலுக்கு ஆற்றல்மிக்க எதிர்வினைகளைத் தரக்கூடியவைகளாகவும் அமைகின்றன. ஆழ்ந்து பார்த்தால் சிலப்பதிகாரத்தைப் போலவே மணிமேகலையும் ஒரு பேரிலக்கியம் என்பது தெளிவாகிறது. வறுமைக்கு எதிராக மட்டுமல்லாது ஆட்சியாளர்களின் அநீதிக்கு எதிராகவும் மணிமேகலை இயங்குகிறது. அரசனுக்குத் தெரியாமல் கோப்பெருந்தேவி மணிமேகலைக்குத் துன்பம் தருகிறாள். சிறைக் கோட்டத்தையும் அறக்கோட்டமாக மணிமேகலை மாற்றுகிறாள். வறுமை ஒழிந்தால் களவு மற்றும் கொலைகளுக்கும், சிறைகளுக்கும், தேவையில்லை என்பது உண்மை. தனக்குப் பிறப்பு அற வேண்டும் என்பதற்காக மணிமேகலை தவம் செய்யவில்லை. சமூகத்தின் நலம் கருதி மணிமேகலை தள் ஆளுமைகளை உதறினாள்; அறச்செயல் மேற்கொண்டாள்.

இன்றைய சமூகச் சூழலை வெளிப்படுத்துவதில் மணிமேகலைக் காப்பியம் இன்று சிறப்பாகப் பயன்பட முடியும். மணிமேகலையை அரச குமாரன் வற்புறுத்தி அடைய முயலும் போக்கு; கோப்பெருந்தேவியின் கொடுமைகள் போன்றவை இன்றும் நடப்பாக உள்ளன. அமுதசுரபி என்ற வளமான கற்பனை இன்றும் பொருத்தமாகவே உள்ளது. இக்கால கட்டத்தில் தமிழகத்தில் களப்பிரர்களின் வருகையையும், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் போன்ற புலவர்களின் எழுச்சியையும் இதற்கும் சற்று முந்தி எழுந்த வள்ளுவரையும் நம்மால் இன்றும் பொருத்திப் பார்க்க இயலும். வறுமை இன்றளவும் தீரவில்லை; அநீதிகளுக்குக் குறைச்சல் இல்லை; களவும் கொலையும் இன்றும் தொடர்கின்றன; பெண்களுக்குப் பாதுகாப்பில்லை; தெய்வங்கள் இருந்து பயன் இல்லை; அநீதிகளுக்கு அரசுகள் ஆதரவாக உள்ளன; அநீதிகளே அறமாகி வருகின்றன. இத்தகைய கொடிய சமூகச் சூழலுக்கு எதிர்வினைகள் தேவை.

உதயகுமாரன் கொல்லப்பட்ட பிறகும், வற்றாத அமுதசுரபி கையில் வந்தபோதும் மணிமேகலையால் புகார் நகரில் வாழமுடியவில்லை. அவள் தத்துவம் பயில காஞ்சி நகர் சென்று விட்டாள். மணிமேகலைக் காப்பியத்தின் மையம் அறம் என்று கூறலாம். இன்று எப்படிப் பெருநகரங்களில் வறுமை

உள்ளதோ அதேபோல அன்று புகார் நகரத்தில் பசியால் வாடினோர் மலிந்து கிடந்தனர். எடுக்க எடுக்க குறையாத அமுதசுரபி கொண்டு உலக அறவியில் இருந்து வறியவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும், நோயாளிகளுக்கும் தொண்டாற்றினாள் மணிமேகலை.

இப்படியொரு பசிக் கொடுமை தமிழகத்தில் அன்று ஏன் ஏற்பட்டது? மூவேந்தர்களும் வேளிர்களும் தங்களுக்குள் இடையறாது சண்டையிட்டுக் கொண்டனர். இந்தப் போர்களின் எண்ணிக்கை ஐநூறு என்று கணக்கிட்டுள்ளார் அறிஞர் அப்பாத்துரையார். போர்களின்போது நகர்களும், அரண்மனைகளும் தீயிடப்பட்டன. குளங்கள் யானைகளைக் கொண்டு அழிக்கப்பட்டன. எல்லாவற்றையும் எல்லாரோடும் பகிர்ந்து கொள்ளும் பாரி போன்றவர்கள் ஒழிக்கப்பட்டனர். அதிகாரங்களைக் குவித்துக் கொண்ட அரசர்களுக்கே இனி வாழ்க்கை என்றாயிற்று. சங்க காலம் இப்படித்தான் சீர்குலைந்தது. வறுமை பெருகியது; அநீதிகளே அதிகாரம் செய்தன. ஒற்றுமையும் உட்பகையும் நாட்டையும் மக்களையும் சிதைத்தன. இருவேறு உலகங்கள் தோன்றியதை வள்ளுவர் குறிப்பிட்டார். செல்வமும் அறிவும் எதிரெதிர் திசைகளில் இயங்குகின்றன. இது பண்பற்ற உலகியல். இதற்கு என்ன மாற்று என்று ஆராய்கிறார் வள்ளுவர்.

'ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்று அதற்கான தீர்வைக் காட்டுகிறார். ஊர் நடுவே உள்ள குளம் இயற்கையாக மேகம் தந்த மழை நீரால் நிறைந்திருக்கிறது. தேவையானோர் தேவைக்கேற்ப குளத்தில் இருந்து நீரை எடுத்துக் கொள்ளலாம். பேரறிவாளர்களிடம் சேர்ந்துள்ள செல்வம் அத்தகையது என்கிறார் வள்ளுவர். பலருடைய உழைப்பினால் ஒருவரிடம் சேர்ந்துள்ள செல்வம் பலருக்கும் பயன்பட வேண்டும். அந்தச் செல்வம் எப்படி வந்தது என்று செல்வருக்கும் தெரியும்.

இது பணத்திற்கு மட்டுமல்ல, அறிவுக்கும் பொருந்தும். பலரின் உழைப்பால் சேர்ந்த அறிவையும் பணத்தையும் பலருக்கும் பகிர்ந்து கொள்கிற செயல்முறைதான் ஒப்புரவு. சாத்தனாருக்கும், இளங்கோவடிகளுக்கும் ஒப்புரவு என்பது என்னவென்று தெரியும். மணிமேகலை ஒப்புரவு செய்த பெருமகள். வள்ளுவர், ஒப்புரவு செய்தால் கேடு வரும் என்றால் தன்னை விற்றாயினும் அதைச் செய்ய வேண்டும் என்கிறார். தன்னை இழப்பது பேரின்பம் மட்டுமல்ல ஒருவகையில் தன்னைப் பெறுவதற்கும் அதுவே வழி.

குறிப்பு : ஒப்புரவு முதுவேனில் 2001 இதழில் 'தமிழர் மறந்த சமூக அறம்' என்ற தலைப்பில் வெளிவந்தது.

7. தமிழில் நாவல்கள்

தமிழிலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாக நாவல் இலக்கிய வரலாறு அமைகிறது. தமிழில் கதை சொல்லும் முறை நெடுங்காலமாக இருந்து வருகிறது. கதை சொல்லும் முறையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது நாவல். இந்தத் திருப்பங்கள் இன்னும் தொடர்கின்றன. தமிழில் காவியங்களும் புராணங்களும் நெடுங்காலம் செழித்திருந்தன. காவியம் அல்லது புராணத்தின் பாதிப்பு தமிழ் நாவல்களில் இன்றும் தொடர்கிறது. சமயத்தின் வழிவந்த ஆன்மீகம் என்ற போக்கு, தற்காலச் சூழலுக்கேற்றவாறு புதிய அர்த்தம் பெற்று நாவலுக்குள் இயங்குகிறது. துப்பறியும் கதை நாவலை ஒரு சமயம் ஆக்கிரமித்திருந்து இன்று விலகியிருக்கிறது. (நவீனத்துவம் என்ற தளத்துக்குள் மீண்டும் இடம் பெற வாய்ப்பு உண்டு).

நாவல் என்பது ஒரு கலை என்ற முறையில் நாவலின் இலக்கியத்தரம் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. நாவலின் இயங்குதளம் எதார்த்தத்தளம் எனப் பலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அப்புறம் முற்போக்குவாதிகளால் இலக்கணம் சொல்லப்பட்டு இன்று இந்தப் போக்கு தகர்ந்து வருகிறது. நவீனத்துவம் என்பது நாவல் இலக்கியத்திற்குள் மெல்ல நுழைந்து இன்று பரவலாகி வருகிறது. நாவல், சமூக விமரிசனம் சொல்ல வேண்டும் என்ற முற்போக்கு வட்டாரத்தின் கருத்து, அதற்கான நியாயங்களோடு செயல்பட்ட போதிலும் அதன் குறைகளும் நாளடைவில் பெரிதாகத் தெரியவந்தன. சமூகம் பற்றிய சித்திரிப்பு முற்போக்கு நாவல்களில் ஆழமாகவோ சரியாகவோ இல்லை. அன்றியும் பொருளாதார / அரசியல் தளத்தில் மட்டும் நாவல் இயக்கத்தை நிலைநிறுத்திக் காண்பது, மனிதனைப் பற்றிய உண்மை சொல்வது ஆகாது. மனிதனுக்குள் இயங்கும் வரலாற்று அம்சத்தை இந்த நாவல்கள் தமக்குள் கொண்டுவரவில்லை. மனிதனுக்குப் புறம்பானது ஆன்மீகம் என்று இந்த நாவலாசிரியர்கள் கருதினார்கள். இன்று இந்தப் போக்கு சற்று மாறி வருகிறது.

மனிதனின் உளவியல் மிக முக்கியமானது. இந்த அம்சம் தமிழ் நாவலுள் அதிகம் இடம்பெற்றதாகச் சொல்ல முடியாது. மேம்போக்கான மனச்சித்திரிப்புகள் சொல்வது உளவியல் அல்ல. ஃபிராய்டிய உளப்பகுப்பாய்வு என்பது உளவியலின் ஒரு பகுதி. உளவியல் இன்னும் விரிந்த தளங்களில் இயங்குகிறது.

தமிழில் சரித்திர நாவல்கள் என்பது ஒரு காலத்தின் தேவையை நிறைவு செய்வதாகக்கூட இருந்தது என்று சொல்லலாம். காலத்தின் தேவையைக் கட்டுப்படுத்துவதாகவும் அது இயங்கியது. தமிழில் வணிகச் சக்திகள் மேலோங்கிவரும் காலநிலையில் நாவலின் கலை அம்சம் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறது. நாவல் உற்பத்தியும் வணிகத்தின் பகுதியாகிறது. வணிகச் சக்திகளின் கைகளில் வாசகர்களை இது பிடித்துத் தருகிறது. வட்டார நாவல்கள் என்பவை சரியாகச் சொல்வதானால், வட்டாரத்தின் வரலாறு சொல்ல வேண்டும். சமூகப் பழக்கவழக்கங்களை விவரிப்பது வட்டார மொழி நடையைக் கையாள்வது ஆகியவற்றோடு வட்டார நாவல் தேங்கிவிட்டது. நவீனத்துவம் வருகிறபோது, கதை சொல்லும் போக்கு தளர்ந்திருக்கிறது. நாவலின் கட்டமைப்பு பெரிதும் மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இப்படித் தமிழ் நாவலின் வரலாற்றைத் தொகுத்துச் சொல்லலாம்.

இதில் நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான உண்மை. நாவல் என்பது இலக்கியம். இலக்கிய வரலாற்றில் ஒரு கட்டம். மனிதனை மையப்படுத்துகிறது நாவல். அவனது சமூக உறவுகளையும் வட்டாரத்தோடு, வரலாற்றோடு அவன் கொண்டுள்ள தொடர்புகளையும், அவனது அகத்திற்குள் சென்று அவன் மாட்டிக் கொண்டிருக்கும், உளவியல் / ஆன்மீகச் சிக்கல்களையும் சொல்லும் முறையில் தனக்குள் விரிவடைகிறது நாவல்.

நாவல் முதலாளியத்தின் வார்ப்பு என்பதில் ஐயமில்லை. நாவலை முதலாளியம் கட்டமைக்கிறது. அத்துடன் எல்லை வகுக்கிறது என்றும் சொல்லலாம். முதலாளியம் மனிதனைக் கட்டுப்படுத்துகிறது. உடைக்கவும் செய்கிறது. இந்தப் போக்கில் இலக்கியம் தன் மரபுமுறையிலிருந்து மாறுதல் அடைகிறது. இலக்கியத்தின் முக்கியக்கூறு கதைசொல்லல். இன்னொரு கூறு மனிதனின் அக உலகத்தை விரிவுபடுத்துவது. வாழ்வின் ஆற்றலை அழகுகளைச் சொல்வதோடு வாழ்க்கையை அர்த்தப் படுத்துவது இலக்கியம். ஆற்றல் மிக்க படிமங்களை உருவாக்குவதன் மூலம் இலக்கியம் தனக்கான இருப்பை நியாயப்படுத்துகிறது. கதை சொல்லாமல் மனிதன் வாழ முடியாது. வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து அர்த்தப்படுத்துவது கதை. கதைக்குள் நாடகம் இயல்பானது. நிகழ்ச்சிகளைத் தொகுத்து கதை எடுத்துரைக்கும். சிலவற்றை மிகைப்படுத்தும். உயர்த்திச் சொல்லும். சிலவற்றை அழகோடு சொல்லும். சிலவற்றை மறைக்கும். கேளிக்கை, வீரம், கோபம், பெருமிதம் முதலிய உணர்வுகளோடு கதை இயங்கும். கதை தன்னைப் பல்வேறு வடிவங்களில் மாற்றிக் கொள்ளும்.

இயற்கையோடு, அதிக அளவில் பிரபஞ்சத்தோடு, அப்புறம் தன்னோடு, உறவுடையவன் மனிதன். இவன் தன்னை மனிதனென காண்பதற்குக் கூட வரலாற்றில் நெடுங்காலம் தேவைப்பட்டது. நிலப்பிரபுக்களையும் தனக்குள்ளிருந்து வெளியேற்றிய பிறகுதான் இவன் தன்னை மனிதனென அறிந்தான். உலகத்தை இவன்தான் படைக்கிறான். அப்போது தன்னையும் படைத்துக் கொள்கிறான். பொருளை / பண்டங்களைப் படைக்கிறபொழுது இவன் தன்னைப் பெறுகிறான் / இழக்கிறான் / போராடுகிறான்.

இந்த மனிதன் முதலாளிய மனிதன். இவனுக்குள் தவிர்க்க இயலாமல் சோசலிச உணர்வு தோன்றுகிறது. இவன் தனக்குள் வரலாற்றைக் காண்கிறான். மனிதர்களுக்குள் சமத்துவம் என்பதை மனிதனின் இயல்பு என அறிகிறான். விடுதலையை விரும்புகிறான். ஆதிக்கங்கள் வேண்டாம் என்கிறான். எல்லா மனிதர்களுக்கும் விடுதலை என்று முழங்குகிறான். இது சோசலிச உணர்வு.

எதார்த்தவாதத்தினுள், அதன் உச்சமென தன்னைச் சொல்லிக் கொண்ட சோசலிச எதார்த்தவாதம், உண்மையில் சோசலிசம் பற்றிப் பேசவில்லை. சோசலிசம் பற்றிப் பேசத் தொடங்கினால் அது எதார்த்தவாதமாகவும் இருக்கமுடியாது. நாவலை ஒரு கலை என்று குறிப்பிடுகிறோம். கதை சொல்வதற்கான உத்திகள், குறைந்த அளவிலாவது இருக்குமானால் கலை என்று சொல்லலாம். உத்திகளில் பாத்திர வார்ப்பு, உரையாடல், மொழிநடை, ஆகியவற்றையும் சேர்த்துச் சொல்லலாம். நாவலுக்குள் மானுடவியல் கூறுகளை உள்ளடக்குவதும் உத்தி எனலாம். முரண்நிலையையும் மோதலையும் கொண்டு இயங்குகிற நாடகப் பாங்கையும் உத்தி என்று சொல்லலாம். இவை எல்லாம் ஒன்றினுள் பலவற்றைச் சொல்வதற்கான உத்திகள். கதையின் தர்க்கம் சிதையாமல் உத்திகள் இயங்க வேண்டும். வாசகனின் மன ஒருமையை உருவாக்க வேண்டும். இப்படி இயங்குவது கலை என்று சொல்லுகிறோம். கலையின் எல்லையை, தரத்தை இந்த அளவில் சுருக்கிவிடக் கூடாது. கலை இன்னும் தீவிர கதியில் இயங்கும்.

நவீனத்துவப் போக்கில் கலையின் இயக்கம் உச்ச வீறு பெறுகிறது. உதாரணத்திற்குக் 'கடலும் கிழவனும்', டாக்டர் 'பாஸ்டஸ்' என்பனவற்றைக் குறிப்பிடலாம். 'கரமசாவ் சகோதரர்கள்' நாவலைக் குறிப்பிடலாம். வாழ்க்கை இங்கு பல பரிமாணங்களில் ஒருசேர சொல்லப்படுகிறது. வாழ்வின் முரண்கள் / புதிர்கள் இங்கு சொல்லப்படுகின்றன. கதை சொல்லும் கலைஞன் தன்னை அழித்துக் கொள்கிற அளவுக்கு இங்கு

கலையின் தீவிர இயக்கம் நடைபெறுகிறது. கண்ணகியின் ஆவேசம், பாஞ்சாலியின் ஆவேசம் – கலையின் தீவிர கதியை நமக்கு உணர்த்தக் கூடியவை. கும்பகர்ணன் தனக்குள் கண்ட முரண்நிலை, கலையின் இயக்கத்திற்கு இன்னொரு சான்று. கதை சொல்வதைக் கடந்து, இலக்கியத்தின் எல்லையைத் தனக்குள் உதறிக் கொண்டு கலை இங்கு வாழ்வின் ஆதார, சக்திக்குள் தன்னைக் கரைத்துக் கொள்கிறது. வாழ்வின் ஆதார சக்தி தெரியாமல் மனிதன் பல களங்களில் தடுமாறுகிறான். இதற்கு எத்தனையோ காரணங்கள். முதலாளியச் சமூகம் மனிதனை இப்படி வாட்டி எடுக்கிறது. கலைஞன் தன்னைத்தானே தண்டித்துக் கொள்கிறான். தன்னை அழித்துக்கொண்டு கலையைப் பிறப்பிக்கிறான்.

அண்மைக் காலத்தில் வாசகனுக்குள்தான் இலக்கியம் / நாவல் நிறைவடைகிறது என்ற கோட்பாடு சொல்லப்படுகிறது. எழுத்தாளனுக்குள்ளும் இயங்கும் அதிகாரம் பற்றி இந்த கோட்பாடு பேசுகிறது. இந்த அதிகாரத்தைத் தலைகீழாக்கி வாசகன் தனக்குள் வாசிக்க வேண்டும். இப்படி வாசிக்கும்போது, வாசகனுக்குள் இருக்கும் விமர்சகன் தானும் படைப்பாளியாகிறான். இலக்கியம் இவ்வாறுதான் காலந்தோறும் அவ்வக் காலத்துக்குரிய புதிய பொருளோடு வாசிக்கப்படுகிறது என்று இந்தக் கோட்பாடு சொல்கிறது. இப்படிச் சொல்வதில் சாதக பாதக அம்சங்கள் ஆய்வுக்குரியவை.

ஒரு பழைய இலக்கியத்தை அந்தக் காலத்துக்குச் சென்று நாம் வாசிக்க முடியாது. பழங்காலத்து ஆசிரியரின் உளப்பாங்கை இக்காலத்தைச் சேர்ந்த நம்மால் புரிந்து கொள்ளமுடியாது. இது ஆய்வுக்குரிய ஒரு சிக்கலான பொருள். இறந்த காலத்தைத் தெரிந்து கொள்வதற்கு நம்மிடமிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். இது சாத்தியம் எனத் தோன்றவில்லை. நம் காலத்தை, நம்மை நாமே எந்த அளவில் புரிந்துகொண்டோம் என்பதும் உடன் எழும் ஒரு கேள்வி. நம் படிப்பும் சிந்தனையும் நமக்குப் போதாதவை. இன்னும் ஆழமாகத்தான் செல்ல வேண்டும். நேரமில்லை என்பது ஒரு காரணமாகாது. நம்மை நாமே இழந்துவிட்டு நம்மை நாமே தேடிப் பெறாமல் நாம் வாழ முடியுமா? இன்னொருவன் கைகளில் நம்மை ஒப்படைத்து விட்டு அவன் நம்மை வைத்து வாழ்வதை ஒப்புக் கொள்ள முடியுமா? நாடகக் காட்சிகளில் இன்னொருவர் சொல்லும் கதைகளில் நம்மைக் கொடுத்து விடமுடியுமா? நம்மைப் பெற வேண்டாமா? எப்படிப் பெறுவது? இலக்கியம் உதவி செய்கிறதா? இப்படியெல்லாம் பல சிந்தனைகள் நமக்குள் எழுகின்றன. நாம் தொடர்ந்து தேட வேண்டும். நாவல் / கதை என ஆரம்பித்து இங்கு வந்திருக்கிறோம்.

நமக்குள் தேட வேண்டும் என்ற நிலைக்கு வந்திருக்கிறோம். புறத்திலும் அகத்திலும் நம்மைத் தேடித் தொகுக்க வேண்டும். நமக்குள் ஊனமிருந்தால் நம்மை ஊனப்படுத்தியவர் யார் என்றெல்லாம் சிந்திக்க வேண்டும். இப்படி நமக்குள் தூண்டலை ஏற்படுத்துவதற்காகத்தான் நாம் இலக்கியம் படிக்கவேண்டும்.

2. வரலாற்றுக் காலம் முழுவதும் மனிதன் சில சக்திகளோடு போராடுவதும் வெற்றி பெறுவதுமாக இருக்கிறான். சில சமயங்களில் தோல்வி அடைவதும் தவிர்க்க இயலாது. முதலாளிய வரலாற்றுக் கட்டத்தில்தான் மனிதன் தன்னை மையப்படுத்தி இயற்கை, பிரபஞ்சம் முதலியவற்றைப் பதிந்து கொண்டான். முதலாளியத்திற்கு முற்பட்ட காலங்களில் மனிதனுக்கு மையமாக இருந்தது கடவுள் அன்றியும் ஆன்மா. மனிதர் வாழும் உலகம் என்பது மேல் உலகத்திற்கும் கீழ் உலகத்திற்கும் இடைப்பட்ட உலகம். இறைவனிடமிருந்து புறப்பட்ட உயிர் அல்லது ஆத்மா மீண்டும் இறைவனை அடைய வேண்டும். தவம் முதலிய முயற்சிகளின் மூலம் புலன்கள் மற்றும் ஆசைகளை மனிதன் அறவே துறந்து இறைவனை அடைய வேண்டும்.

முதலாளிய கட்டத்தில் இறைவன், ஆத்மா, மேலுலகம், கீழுலகம், தவம் முதலிய அனைத்தும் கேள்விக்குள்ளாயிற்று. அறிவியலும் தொழில் நுட்பமும் பெரும் வளர்ச்சி கண்டன. மனிதனால் இயற்கையைக் கட்டுப்படுத்துவதோடு வசப்படுத்தவும் முடியும். இயற்கையின் பேராற்றல்களை மனிதன் வசப்படுத்தினான். பூமிப்பரப்பு முழுவதும் மனிதன் சென்று வந்தான். கடலும் வானமும் மனிதனுக்கு வசப்பட்டன. எல்லாவற்றையும் வகைப்படுத்தினான், வசப்படுத்தினான். மாபெரும் கட்டிடங்கள் அணைகள் என எவ்வளவோ படைத்தான்.

மன்னராட்சி இனித் தேவையில்லை. மன்னர்களை வெற்றி கண்டு அல்லது ஒழித்து மக்களாட்சியை நிறுவமுடியும். பிரெஞ்சுப் புரட்சி முதலியவை நடைபெற்றன. இருள் கண்டங்கள் ஒளி பெற்றன. மனிதனின் சாதனைகள் மகத்தானவையாய்த் தெரிந்தன. முதலாளியம் எல்லா நாடுகளினுள்ளும் தன் மேலாண்மையை விரிவுபடுத்தியது. நோய் நொடிகள் குறைந்தன. வாழ்க்கை வசதிகள் அனைத்து மக்களுக்கும் எளிதாக வந்துசேரும். பிரபஞ்சம் முழுவதும் மனிதனின் தனி ஆட்சி செல்லுபடியாகும்.

இவன் முதலாளிய மனிதன். மகத்தானவன் என்று இவன் கவிஞர்களால் புகழப்பட்டான். பழைய உலகத்தைத் தகர்த்து புதியதோர்

உலகத்தைப் படைப்பதற்கான உறுதியை இவன் மேற்கொண்டான். சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளில் தன்னை வெளிப்படுத்தினான்.

முதலாளியக் கோட்பாடு இன்றளவும் மனிதனுக்குள் ஆதிக்கம் செலுத்துகிறது. வரலாற்றில் முதலாளியம் மறுக்கப்பட்டு சோசலிசம் அரங்கேறியது என்பது உண்மைதான். சோசலிசம் தன்னளவில் முதலாளியத்தை வெற்றி கொள்ள இயலவில்லை. முதலாளியத்தை உள்வாங்கிக் கொண்டதாகத்தான் சோசலிசம் இருந்தது. சோசலிசம் பொருளியலில் மட்டுமல்லாமல் அரசியல், கல்வி, தொழில், வேளாண்மை, மருத்துவம், சூழல் பாதுகாப்பு, வாழ்வியல் முறை என்று சமூக வாழ்வின் அனைத்துக் களங்களிலும் தன்னை விரிவுபடுத்திக் கொள்ளும் முறையில் வளர்ந்தாலொழிய முதலாளியத்தை வெற்றி கொள்ள இயலாது.

ஏகாதிபத்தியமாக தன்னை வலுப்படுத்திக் கொண்ட முதலாளியம் தொடக்க காலத்தில் எவ்வளவுதான் சாதனைகள் செய்திருந்த போதிலும் முதலாளியம் இன்று மாபெரும் ஆதிக்கமாக, ஆதிக்க சக்தியாக மாறியுள்ளது. மனிதனுக்குள் முழுமையாக நுழைந்து அவனை அழிக்கும் வல்லமையை முதலாளியம் பெற்றுள்ளது. இதுபற்றி ஏராளமான விவரங்களோடு நாம் பேசுவதற்கு இடம் உண்டு.

மனிதனின் இந்த மாபெரும் வரலாற்றைச் சொல்வதற்குரிய இலக்கிய வடிவம் நாவல். தமிழ் நாவல்களில் இந்த மனிதனை நாம் குறைந்த அளவிற்கேனும் காண்கிறோம். குறைந்த அளவிற்குத்தான் காண்கிறோம் என்றும் இங்கு நாம் சொல்வதிலும் தவறில்லை.

முதலாளியத்தின் இரண்டு கட்டங்களிலும் மனிதன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள போராடுகிறான். இந்த போராட்டம்தான் மனிதரைப் படைக்கிறது. போராட்டங்களின் மூலம்தான் மனிதன் தனக்கான ஆளுமையை, பண்புநலன்களைப் பெறுகிறான். போராட்டத்தின் மூலமே மனிதன் தனக்கான வாழ்வை, உலகத்தை பெறுகிறான். இந்த போராட்டம் இன்றளவும் தொடர்கிறது. நிலச்சீர்திருத்தத்திற்காக உழவர்கள் நடத்திய போராட்டம் முதலாளிய வகைப்பட்ட போராட்டம். கூலி உயர்வு, வேலைவாய்ப்பு முதலியவற்றிற்காகத் தொழிலாளர் நடத்தும் போராட்டங்கள் முதலாளிய வகைப்பட்ட போராட்டங்கள். ஜனநாயகத்திற்கான போராட்டங்கள் அனைத்தும் முதலாளியத்தை உள்வாங்கிக் கொள்கிற போராட்டங்கள். ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண்களின் போராட்டங்களும் சாதியத்திற்கு

எதிராக தலித்மக்கள் நடத்தும் போராட்டங்களும் முதலாளியத்தை முன்னெடுத்து செல்வதற்கான போராட்டங்கள். மண்டல் ஆணைக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டுமென்ற நோக்கில் நடைபெறும் போராட்டங்களும் இத்தகையவை.

தமிழ் நாவல்களில் 'பஞ்சும் பசியும்', 'வேள்வித்தீ' என்று தொடங்கி எத்தனையோ நாவல்களில் இத்தகைய போராட்டங்கள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவிற்கு வந்து சேர்ந்த முதலாளியம் என்பது முற்போக்கு தன்மையுடையது என தோற்றம் தந்த போதிலும் இறுதி ஆய்வில் பிற்போக்குத்தனமானது என்றே நம்மால் மதிப்பிட முடியும். வரலாற்றிற்குள் சோசலிசம் என்பது வந்துவிட்ட நிலையில் முதலாளியத்தின் பிற்போக்குத்தனம் வெளிப்படையாகத் தெரிகிறது. இது குறித்து தமிழ் நாவல்கள் கண்டுகொண்டதாக தெரியவில்லை.

குடும்பத்திற்குள் மட்டுமல்லாமல் எந்த ஒரு சமூக நிறுவனத்தினுள்ளும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் முறையில் ஆணோ, பெண்ணோ, ஆதிவாசியோ நடத்தும் போராட்டத்தை நாவல்கள் சித்தரிக்கின்றன. வாழ்வின் பல்வேறு சிக்கல்களும் சமூகத்தின் வரலாறு மற்றும் பொருளியல் சூழலோடு நெருக்கமான தொடர்புடையவை. வாழ்வின் முரண்கள் என்பவை புறத்தில் மட்டும்தான் இருக்கின்றன என்று சொல்லமுடியாது. அகத்தினுள்ளும் இந்த முரண்கள் பதிந்திருக்கின்றன. ஆகவே, ஒவ்வொருவரும் நடத்தும் போராட்டம் என்பது புறத்தில் மட்டுமல்ல, தனக்குள்ளும் நடத்தும் போராட்டம் ஆகிறது. போராட்டத்தின் இந்த அகப் பரிமாணத்தை நுட்பமாக சித்தரிக்கும் நாவல்கள் சிறந்த நாவல்களாகின்றன. வரலாறு, பொருளியல் முதலியவை குறித்தும் தீர்க்கமான சித்தரிப்புக்கள் தேவை என்ற போதிலும் தமிழ் நாவல்களில் தீர்க்கமான சித்தரிப்புகள் பெரும்பாலும் இல்லை. வாழ்க்கையைப் பற்றி சொல்வதே போதும் என்ற முறையில் உணர்ச்சிகரமாக வாழ்வைச் சித்தரிப்பதோடு தமிழ் நாவலாசிரியர்கள் ஒய்ந்து விடுகிறார்கள். இவர்களைப் பொறுத்தவரை அரசியல் மற்றும் பொருளியல் குறித்து ஆழ்ந்த அக்கறை கொள்வதில்லை. அரசியலில் இருந்து இவர்கள் ஒதுங்கியிருக்கிறார்கள். வாழ்வின் சிக்கல்களைக் குடும்ப எல்லைக்குள் வைத்து இவர்கள் தீர்க்க விரும்புகிறார்கள். இவர்களைப் போலவே நாவலாசிரியர்களும் செயல்படுகிறார்கள். வாழ்க்கையை அதன் குரூரங்களோடு விரிவாக இவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள். நாவல்களில் காதலை அல்லது காமத்தை மையப்படுத்துகிறார்கள். இப்படி எவ்வளவோ நாம் சொல்லலாம்.

8. தமிழ் இலக்கிய ஆய்வில் மார்க்சிய நோக்கு

குறிப்பு : நண்பர் சு. துரை அவர்களின் முனைவர் பட்டத்துக்கான ஆய்வுக்கு எழுதிய அணிந்துரை.

சு. துரை தமிழ் இலக்கியத் திறனாய்வுக்குள் கடந்த சில பத்தாண்டுகளாக செயல்படும் மார்க்சியரை மூன்று வகையினராகப் பார்க்கிறார். கட்சி சார்ந்தவர்களை இவர் மரபு மார்க்சியர் எனக் குறிப்பிடுகிறார். செவ்வியல் மார்க்சியர் என்றும் இவர்களைக் கூறலாம். மார்க்ஸ் முதலியவர்கள் கூறிய அடித்தளம், மேற்கட்டு முதலிய மார்க்சிய வரையறைகளை இறுக்கமாக இவர்கள் இன்றும் கடைப்பிடிக்கிறார்கள் என்று கூறமுடியும். கட்சிக்கு இவர்கள் முதன்மை தருகிறார்கள். சோசலிச யதார்த்தவாதம் என்ற ஸ்டாலினிய வரையறையைத் தொடர்ந்து வற்புறுத்துகிறார்கள். கட்சிக்கு வெளியில் இருப்பவர்களை இவர்கள் மார்க்சியர் என ஏற்பதில்லை. மனிதநேயம் அல்லது முற்போக்கு என்ற பெயரில் இவர்களோடு ஒத்துழைப்பவர்களைக் கட்சிக்குள் இவர்கள் இடம் பெறாவிட்டாலும் பாராட்டுவார்கள். கட்சியின் இலக்கிய கொள்கைளை மறுத்து எதுவும் இவர்கள் பேசிவிடக்கூடாது. இவர்களும் கலை இலக்கிய அமைப்புகளை வைத்துக் கொள்கிறார்கள். தமிழ் இலக்கியத் துறையில் புலமை நெறியாளர்களை மட்டுமல்லாமல் திராவிட இயக்கச் சார்பாளர்களையும் இவர்கள் கடுமையாக விமர்சனம் செய்வார்கள்.

அன்னியமாதல் மார்க்சியர் என்று சு. துரை எஸ்.என். நாகராசன் முதலியவர்களைக் குறிப்பிடுகிறார். அன்னியமாதல் என்ற மார்க்சியக் கோட்பாட்டிலிருந்து இவர்கள் தொடங்குகிறார்கள் என்பதைத் தவிர அன்னியமாதல் என்ற கோட்பாட்டிற்குள்ளேயே இவர்கள் முடங்கிவிடவில்லை. நாளடைவில் மார்க்சியத்தில் கீழை மார்க்சியம் என்ற ஒரு போக்கை இவர்கள் தழுவிக் கொண்டார்கள். மேலை மார்க்சியத்திலிருந்து கீழை மார்க்சியத்தை எஸ்.என். நாகராசன் வேறுபடுத்தியதோடு, தெளிவான வரையறைகளையும் முன்வைத்தார். உற்பத்தி சக்திகளுக்கு மேலை மார்க்சியம் முதன்மை தருகிறது. உற்பத்தி உறவுகளுக்குக் கீழை மார்க்சியம் அழுத்தம் தருகிறது. பகை முரண்பாட்டிற்கு அழுத்தம் தருவது மேலை மார்க்சியம். நட்பு முரண்பாட்டுக்கு அழுத்தம் தருவது கீழை மார்க்சியம். இந்தியா முதலிய கீழைநாடுகளின் தனித்தன்மைகள் சிலவற்றிற்குக் கீழை மார்க்சியம்

முக்கியத்துவம் தருகிறது. ஆசிய உற்பத்தி முறை என்பது பற்றி அக்கறை கொள்கிறது. உலகம் முழுவதிலும் சமுதாயப் படிமுறைகள் என்பவை ஒரே மாதிரியாக இருக்க முடியாது. ஆங்கிலேயர் வரும்வரை இந்தியாவில் நிலப்பிரபுத்துவம் இடம் பெறவில்லை. நிலத்தில் தனி உடமை பெரும்பாலும் இங்கு இல்லை. இப்படி எல்லாம் சில வரையறைகளைக் கீழை மார்க்சியம் முன்னிறுத்துகிறது. வர்க்கப் போராட்டத்தைக் கீழை மார்க்சியம் மறுக்கவில்லை. கட்சி வேண்டாம் என்றும் சொல்வதில்லை. இந்தியாவில் மதங்களுக்கு அழுத்தம் அதிகம். அன்னியமாதல் என்று தொடங்கினால் மதம் பற்றிக் கூடுதலான புரிதல் நமக்குக் கிடைக்கும். கீழை நாடுகளில் உழவர் சமூகத்திற்கு முதன்மை கொடுக்க வேண்டும். மேற்கில் நிலவியது போல இங்கு பாட்டாளி வர்க்கம் பெருமளவில் இல்லை. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்று சொல்லி கட்சியின் அதிகாரத்தை இங்கு முதன்மைப்படுத்த முடியாது.

கீழை நாடுகளின் பண்பாட்டுச் செழுமையை மதிக்க வேண்டும். இத்தகைய செழுமைமிக்க பண்பாட்டு மரபுகளிலிருந்து மார்க்சியத்தை இங்கு வளர்த்தெடுக்க முடியும். இது குறித்து லெனின் அக்கறையோடு சொல்லியிருக்கிறார். கீழை மார்க்சியர் என்ற நெறி மாவோவிலிருந்து தொடங்குகிறது. சுதந்திரம் பிரிவுபடாதது என்ற மார்க்சின் வரையறையை எஸ்.என். நாகராசன் திரும்பத் திரும்ப எடுத்துரைக்கிறார். ஆண்டானுக்கு விடுதலை வேண்டுமென்றால் அடிமைக்கு விடுதலை தரவேண்டும். முதலாளி வர்க்கத்தையும் அன்னியமாதலில் இருந்து விடுவிக்கும் முறையில் உழைப்பாளி வர்க்கம் போராட வேண்டும். இக்குறிப்புக்கள் கீழை மார்க்சியம் பற்றி குறைந்தளவுக்கேனும் புரிந்து கொள்வதற்கு உரியவை.

சு. துரை அமைப்பியல் மார்க்சியம் என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் இதற்குள் அமைப்பியலை மறுக்கக்கூடிய பின்-அமைப்பியல், நவீனத்துவம், பின் – நவீனத்துவம் போன்ற போக்குகளும் உள்ளடங்குகின்றன. தலித்தியம், பெண்ணியம் ஆகியவற்றிற்கு இவர்கள்தான் அழுத்தம் தந்து பேசுகிறார்கள். சோவியத் ஒன்றியத்தில் சோசலிச தகர்வுக்குப் பிறகு இன்று இங்கு இவ்வகைப் போக்கு முக்கியத்துவம் பெறுகிறது.

மார்க்சியத்தையேகூட சிலசமயம் இவர்கள் தள்ளிவைப்பதையும் கூடப் புரிந்து கொள்ள முடியும். அதிகாரம் எங்கு செயல்பட்டாலும் அதை

இவர்கள் மறுக்கிறார்கள். கட்சி அமைப்புக்குள் செயல்படும் அதிகாரத்தை இவர்கள் ஏற்க மாட்டார்கள். கட்டு அவிழ்த்தல் என்ற முறையில் இலக்கியம், தத்துவம், வரலாறு முதலிய எல்லாக் களங்களினுள்ளும் செயல்படும் அதிகாரத்தை இவர்கள் தலைகீழாகப் புரட்டிப் பார்க்கிறார்கள். பிரதி என்ற கோட்பாட்டை முன் நிறுத்துகிறார்கள். இறுதியில் சூன்யம் என்கிறது வரை இவர்கள் தொடர்கிறார்கள். இவர்களோடு நமக்கு உடன்பாடும் மறுப்பும் உண்டு என்றாலும், அதிகாரக் களைவு என்பதை நாம் பெருமளவில் ஏற்கமுடியும். மரபு மார்க்சியருக்கு இவர்கள் நேர் எதிராக முரண்படுகிறார்கள். கீழை மார்க்சியர்கள் இவர்களோடு நெருக்கமாக இருக்க முடியும்.

அமைப்பியல் மார்க்சியரைப் பொருத்தவரை கட்சி அமைப்பு என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தனித்தனியாக பெரிதும் வேறுபட்ட குரல்களோடு இவர்களை ஒருவகை இயக்கத்தினுள் வைத்து நாம் காணமுடியும்.

தன் ஆய்வுக் கட்டுரைகளில் அங்கங்கே இந்த மூன்று வகை மார்க்சியர் குறித்து சு.துரை சொல்லிச் செல்கிறார். இவற்றைத் தொகுத்துப் பார்த்துக் கொள்வதோடு நமக்குள் மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக இந்தக் குறிப்புக்கள் பயன்படும் என்று நம்புகிறேன். கீழை மார்க்சியம் குறித்துக் கூடுதலான சில விவரங்களையும் இங்கு தரவேண்டியிருக்கிறது. ஏற்கனவே நான் கூறியபடி இந்த விரிவான ஆய்விலிருந்து துரை அவர்களின் சார்பு எத்தகையது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

மேலும் இங்கு ஒரு குறிப்பையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். எந்த வகை மார்க்சியர் என்றாலும், தமிழ் இலக்கிய ஆய்வில் இவர்களில் பெரும்பாலானோரை மூல ஆய்வாளர்கள் என்று சொல்வதற்கில்லை. கலாநிதி கைலாசபதி முதலிய ஒரு சிலருக்கு இந்தத் தகுதி உண்டு. ஏற்கனவே புலமை நெறியாளர்கள் மற்றும் வரலாற்றாய்வாளர்கள் திரட்டித் தந்திருக்கிற விவரங்களை இவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தமக்குரிய மார்க்சியப் பார்வையிலிருந்து சில மதிப்பீடுகளைத் தருகிறார்கள். ஆகவே கல்வியாளர்கள் எவரிடமிருந்து இவர்கள் விவரங்களை எடுத்துக் கொள்கிறார்கள் என்று சு.துரை அவர்கள் குறிப்பிடவில்லை. ஆய்வின் எல்லை கருதி இந்த விவரங்களை ஆய்வாளர் தரவில்லை என்று நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

இலக்கியத்தினுள்ளும் அரசியலைக் கண்டறிவதுதான் மரபு மார்க்சியரின் நோக்கமாக இருக்கிறது என்கிறார் ஆய்வாளர். இலக்கியத்தின் அழகியல் குறித்து இவர்கள் அக்கறை கொள்ளவில்லை. இலக்கியத்திலிருந்து வரலாற்றினைத் தொகுப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் இவர்கள் அக்கறை கொள்ளவில்லை. தமிழ் இலக்கியம் குறித்த மூல ஆய்வுகளில், இவர்களில் கலாநிதி கைலாசபதி போன்ற ஒரு சிலரே ஈடுபட்டனர். பெரும்பாலானவர்கள் புலமை நெறியினர் மற்றும் கல்வியாளர்கள் கண்டுரைத்த விவரங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு தமக்கான மார்க்சிய நோக்கிலிருந்து இலக்கியம் குறித்த மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளனர். வாழ் நிலையில் இருந்து வர்க்க ஆய்வை செய்வதற்குப் பதிலாகத் தமக்குத் தெரிந்த வர்க்கப் பார்வையை வாழ்வுக்குள் அல்லது இலக்கியத்திற்குள் செலுத்திப் பார்க்கிற முயற்சியைத் தான் இவர்கள் நம்பியிருக்கிறார்கள். மார்க்சிய வாய்ப்பாடுகளைத் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். புலவர்கள் அல்லது படைப்பாளிகள் எப்பொழுதுமே ஆளும் வர்க்கச் சார்பினர் என்பது இவர்களது முக்கியமான வாய்ப்பாடு.

வள்ளுவர், இளங்கோ முதலியவர்களை இந்த வாய்ப்பாட்டை வைத்து மடக்கிப் பிடிக்கின்றனர். பெரும் கவிஞர்கள் மற்றும் படைப்பாளிகள் மக்கள் வாழ்வியலின் நெருக்கடிகளிலிருந்துதான் இலக்கியம் படைக்கின்றனர். வாழ்வியல் நெருக்கடிகளுக்கு எதிர்வினை என்ற முறையில்தான் இவர்களின் படைப்புக்கள் அமைகின்றன. மற்றும் இவர்களுக்குள் இயங்கும் படைப்பியக்கம் என்பதை எளிய வாய்ப்பாட்டினுள் அடக்கிவிடவும் முடியாது. படைப்பாளிகளாக இல்லாமல் இலக்கியம் பற்றிய திறனாய்வில் ஈடுபடுவதில் உள்ள ஆபத்தை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை. இவர்களிடம் தமிழ்ப் பற்று இல்லாத காரணத்தால் இவர்களது தமிழ்நடை கூட கரடு முரடாகத்தான் இருக்கிறது.

மன்னரின் ஆட்சி அதிகாரம் தனிவுடமை முதலியவற்றை இந்த இலக்கியவாதிகள் ஏற்றுக் கொண்டுதான் எழுதுகிறார்கள் என்பது இவர்கள் கருத்து. இவர்களிடம் ஆணாதிக்கம் செயல்பட்டது என்பது இன்னொரு குற்றச்சாட்டு. வரலாற்றில் தனிவுடமை அரசு முதலியவற்றின் ஆக்கங்கள் இல்லாமல் வரலாற்றில் வளர்ச்சி ஏற்படவும் இல்லை. மார்க்சியப் பார்வை பெருமளவில் ஏற்பட்டபிறகுதான் அரசும் தனிவுடமையும் இல்லாமல் மனிதனால் வாழமுடியும் என்ற தெளிவு ஏற்பட்டிருக்கிறது. மன்னராட்சி என்றவுடன் நிலக்கிழார்கள் என்ற வாய்பாட்டை உடனடியாக

மார்க்சியர் பயன்படுத்துகின்றனர். இந்தியச் சமூகம் பற்றி அறவே ஆய்வில்லாமல் தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். இன்னொன்றையும் இங்கு நாம் கூறவேண்டும். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட ஆதிப்பொதுமைச் சமூகத்தின் ஆற்றல் மிக்க கூறுகள் அறம் என்ற பெயரிலும், பண்பாடென்ற பெயரிலும் வரலாற்றுக் காலம் முழுவதும் தொடர்கின்றன. வள்ளுவரின் ஒப்புரவு இதற்கு ஒரு சான்று. இந்த அறம்தான் பேரிலக்கியங்களின் அடி நீரோட்டமாக இயங்குகிறது. மார்க்சியர் இதைக் கண்டு கொள்ளமுடியும். ஆதிக்க அரசியலைத் தமக்குள்ளும் வரித்துக் கொண்ட மார்க்சியர் இந்த உண்மையை காணாததில் வியப்பில்லை. இதன் காரணமாகவே வள்ளுவர் முதலிய தமிழ்ச் சான்றோரை இவர்கள் இகழ்ந்துரைக்கவும் செய்கின்றனர்.

அறம் என்றும், மதம் என்றும், பக்தி என்றும் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற அடிக்கருத்துக்கள் பற்றிய ஆய்வுகளில் மரபு மார்க்சியரின் கருத்துக்களும் திராவிட இயக்கத்தவர் கருத்துக்களும் பெரும் பகுதி ஒத்திருப்பதை ஆய்வாளர் தொடர்ந்து சுட்டிக் காட்டுகிறார். மதத்தினுள்ளும் நடைபெறும் வர்க்கப் போராட்டம் குறித்து எங்கல்ஸ் கூறியிருப்பதை இவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. மதம் மக்களுக்கு அபின் என்ற மார்க்சின் கூற்றை அவரது ஒட்டுமொத்தமான கருத்துரைக்குள் வைத்துப் பார்ப்பதை விடுத்து இந்த ஒரு வாக்கியத்தை தனியே பிரித்துஅதையே மார்க்சின் மூலக் கருத்தாக்கி இவர்கள் தமிழில் சமய இலக்கியங்கள் குறைத்து மதிப்பீடுகள் செய்வதை இவர் விரிவாக எடுத்துக் காட்டுகிறார். மதம் என்ற தொகுதிக்குள் வர்க்கப் போராட்டம் நடைபெறும் என்பதை இவர்கள் ஒப்புக்கொண்டிருந்தால் தமிழ்ச் சமயங்களின் ஆற்றல் மிக்க கூறுகளை இவர்கள் பாராட்டியிருக்க முடியும்.

மதத்தினுள்ளும் மனிதநேயத்திற்கும் இடம் உண்டு என்பதற்கு மேல் இவர்கள் பார்வை விரிவு பெறுவதில்லை. மனிதநேயம் என்ற கருத்தியலுக்குள் முதலாளியம் கூட முடங்கிக் கொள்ள முடியும். மார்க்சியர் இந்தச் சொல்லை மிகுந்த கவனத்துடன் தான் பயன்படுத்த முடியும். மதம் பற்றிய சரியான மார்க்சிய ஆய்வில் கடவுள், ஆன்மா, மேலுலகம், கீழ் உலகம் முதலிய கருத்தாக்கங்களின் உள்ளடக்கங்களை வரலாறு மற்றும் பொருளியல் சூழலிலிருந்து மார்க்சியர் கண்டறிய முடியும். இதற்கான வாய்ப்புக்களைத் தவறவிட்ட நிலையில்தான் திராவிட இயக்கத்தவரின் பார்வைக்கு ஒத்த பார்வையை இவர்களும் வெளியிடுகின்றனர். இதன் காரணமாகவும் இலக்கியத்தின் உள்

இயக்கமாகிய படைப்பியக்கத்தையும், அதன் அழகியலையும் இவர்கள் காணத் தவறுகின்றனர்.

மரபு மார்க்சியர் தமிழ் இலக்கியத்தை அதன் உள்ளியக்கத்தோடு காணாததைப் போலவே அமைப்பியல் மார்க்சியரும் காணத் தவறுகின்றனர். எனினும் தமிழ் இலக்கிய ஆய்வுக்கு இவர்கள் சில முக்கியமான ஆய்வுக்கருத்துக்களை வழங்கி உள்ளனர். சங்க இலக்கியங்களைத் தொகுப்பதில் உள்ள அரசியலை இவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். சான்றோர் இலக்கியமாக சங்க இலக்கியம் தொகுக்கப்பட்டுள்ளது. அடிமைகளும், தாழ்த்தப்பட்டவர்களும் இலக்கியத்தின் ஓரத்திற்கு ஒதுக்கப்பட்டனர். பெண்களுக்குரிய பங்கு இலக்கியத்தில் இடம்பெறவில்லை. குறிப்பிட்ட வரலாறு மற்றும் குறிப்பிட்ட வகுப்பினர் தேவைக்காக இலக்கியம் தொகுக்கப்பட்டது என்ற கருத்து அடிப்படை முக்கியத்துவம் உடையது. ஒவ்வொரு இலக்கியமும் காலந்தோறும், அந்தந்தக் காலத்துக்குரிய மற்றும் வாசிப்பவர்களின் தேவை கருதி பொருள்படுவதை இவர்கள் விளக்கியுள்ளனர். உரையாசிரியர் முதலியவர்களைப் புரிந்து கொள்வதற்கு இந்தப் பார்வை பயன்படுகிறது. நெடுங்காலத் தமிழ் இலக்கியம் நிகழ்கால இலக்கியம் ஆவதை இவர்கள் விளக்குகிறார்கள். இந்தப் பார்வையின் வழியே தமிழ் இலக்கியத்தை என்றும் புதியதாய் நமக்குள் புதுப்பித்துக் கொள்ள இயலும். ஆனால் இவர்களும் தமிழ் இலக்கியத்தினுள் ஆதிக்கங்களைக் காண்கிறார்களே ஒழிய ஆக்கங்களைக் காண்பதில் குறைந்தளவுக்கே அக்கறை செலுத்துகின்றனர்.

அன்னியமாதல் என்று இவர் குறிப்பிடும் மார்க்சியரைப் பொருத்தவரை தமிழ் இலக்கியத்திற்குள் செயல்படும் ஆற்றலை தமக்குள் வரித்துக் கொள்வதில் உறுதியாக இருக்கிறார்கள். தமிழ் இலக்கியத்திற்குள்ளிருந்து சமதர்மம் என்பதை இவர்கள் கண்டு சொல்லுகிறார்கள். இலக்கியத்தில் படைப்பியக்கியத்திற்கு அழுத்தம் தருகிறார்கள். மார்க்சியத்திற்குள் இடையறாது செயல்படுகிற அறத்திற்கு அழுத்தம் தருகிறார்கள். மதம் என்பதை மனிதனோடு சார்த்திப் பொருள்படுத்துகிறார்கள். இவர்கள் தமிழ்நேயம் மிக்கவர்கள். இவர்களின் வரிசையில்தான் ஆய்வாளர் சு.துரை அவர்களுடம் இடம் பெறுகிறார்.

தத்துவம், வரலாறு, பொருளியல் என்று எல்லாக் களங்களினுள்ளும் வர்க்கப் போராட்டம் நடைபெறுகிறது என்பதை மார்க்சியம்

எடுத்துரைக்கிறது. மதம், குடும்பம் என்பனவற்றுள்ளும் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை நாம் காணத் தவறக்கூடாது. சாதியம் என்ற அமைப்பினுள்ளும் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். வர்க்கப் போராட்டம் என்பதை அதன் விரிந்த தளத்தில் பொருள்படுத்துவதன் மூலமே சாதி அமைப்பு முதலியவற்றினுள் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை நம்மால் காண முடியும். தத்துவம் மட்டுமல்லாமல், சாதியும் ஒரு குறிப்பிட்ட வரலாறு மற்றும் பொருளியல் சூழலிலிருந்து தோன்றுகிறது மற்றும் வளர்கிறது. சாதி அழிவதற்கும் வேறு ஒரு வரலாறு மற்றும் பொருளியல் சூழல் தேவைப்படுகிறது. இத்தகைய ஆய்வு முறையைத்தான் மார்க்சிய ஆய்வுமுறை என்று குறிப்பிடுகிறோம். இலக்கியத்தினுள்ளும் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை இந்த நோக்கில்தான் நம்மால் புரிந்து கொள்ளமுடியும். தமிழ் இலக்கியத்தினுள்ளும், தமிழ் இலக்கிய ஆய்வு மற்றும் திறனாய்வுக்குள்ளும் வெளிப்படையாக என்று இல்லாமலும் வெகுநுட்பமாகவும் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தை நாம் கவனிக்க முடியும்.

தமிழ் இலக்கியத்தினுள் செயல்படும் அரசியல், மதவாதம், முதலாளியம் முதலிய போக்குகளை நிதானமான ஆய்வுக்கு நாம் உட்படுத்திப் புரிந்து கொள்ளமுடியும். மார்க்சியரும் தமக்குள் பிரிந்தும் பிளவுபட்டும் செயல்படுகின்றனர். இவர்களினுள்ளும் வெகு நுட்பமாகச் செயல்படுவது வர்க்கப் போராட்டம் என்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியுமானால் சு. துரை அவர்களின் ஆய்விலிருந்து நம்மால் மேல்செல்ல முடியும். திராவிட இயக்கத்தினுள்ளும் பல்வேறு வடிவங்களில் முதலாளியம் செறிவு பெற்றுள்ளது. அதைப்போலவே மார்க்சியத்தினுள்ளும் முதலாளியம் நுழைந்து தங்கியிருப்பதை நாம் கவனிக்க முடியும். கட்சிக் கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் ஆகியவை பற்றி நாம் இங்கு வெளிப்படையாகப் பேசவேண்டியதில்லை. இலக்கியத்தின் முதல் நோக்கம் இரசனையாக இருக்கலாம். ஆனால் இறுதி நோக்கம் மனித விடுதலையாகத் தான் இருக்க முடியும். தமிழ் இலக்கிய ஆய்வு முதலியவற்றுக்கும் தமிழனின் விடுதலைதான் இறுதி நோக்கமாக இருக்க முடியும். இடையில் பல்வேறு திசைகளில் பிரிந்தும் முரண்பட்டும் படைப்பாளிகள் மற்றும் ஆய்வாளர்கள் இயங்குவதை நம்மால் மறுக்கமுடியாது. இவர்களுக்குள்ளும், இவர்களை வசப்படுத்தியும் எத்தனையோ சக்திகள் தமக்குள் போராடுகின்றன. மனித விடுதலையில் நாட்டம் கொண்டுள்ளவர்கள் திசைகள் மற்றும் இலக்குகளைக்

குறுக்கிவிடுகிற வெற்றுக் கலவரங்களில் தம்மை இழந்து விடமுடியாது. வெற்றுக் கலவரங்களில் ஈடுபடுபவர்களில் மார்க்சியரென்றும் சிலரை இனம் காணமுடியும். .துரை அவர்களின் ஆய்வை ஆழ்ந்து கற்பவர்கள் வெற்றுக் கலவரங்களிலிருந்து இவர் விலகி நிற்பதைக் காணமுடியும். அங்கங்கே இடம்பெறும் தொகுப்புரைகள் இவரது பார்வையைத் தெளிவுபடுத்துகின்றன.

சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், காவிய இலக்கியம் என்று தமிழ் இலக்கிய வரலாற்றில் தொடர்ந்துவரும் பல்வகைப் போக்குகளையும் மார்க்சிய நோக்கில் விரிவாக ஆராயும் இந்த நூலில் இலக்கியம் என்றும், அறம் என்றும், மதம் என்றும், பக்தி என்றும் தொடர்ந்து விளக்கங்கள் தருகிறார். விரிவான மேற்கோள்களையும் எடுத்தாள்கிறார். ஒவ்வொரு இலக்கியவகை குறித்தும் ஆசிரியரின் தரும் முடிவுகளைக் காட்டிலும், இலக்கியம், அறம், மதம் முதலியவற்றைத் தெளிவுபடுத்தும் முறையில் இவர்தரும் குறிப்புக்கள் அல்லது விளக்கங்கள். நம்மை அங்கங்கே நிறுத்தி வைத்து சிந்திக்க வைக்கின்றன. இவை குறித்தெல்லாம் திராவிட இயக்கங்களும், மார்க்சிய இயக்கங்களும் எங்கே, எவ்வாறு எல்லாம் வேறுபடுகின்றன என்பதை விடாப்பிடியாக விவரிக்கிறார் ஆசிரியர். விளக்கங்கள் முற்றுப் பெறுவதில்லை. எனினும் இவை குறித்து ஒரு தொகுப்பான பார்வையை இங்கு முன்வைக்க முடியும்.

மார்க்சிய வரையறைகளின்படி இலக்கியம், மதம், அறம் முதலியன எல்லாமே மேல்கட்டுமானத்தின் பகுதிகள். இவற்றையெல்லாம் தீர்மானிப்பது அடிக்கட்டுமானம் என்கிறது மார்க்சியம். சிற்சில சந்தர்ப்பங்களில் மேல்கட்டுமானமும் அடிக்கட்டுமானத்தின் மீது செல்வாக்கைச் செலுத்த முடியும். இதற்குமேல் மரபு மார்க்சியம் செல்வதில்லை. ஆனால் மரபு மார்க்சியத்தினுள் மார்க்சியத்தின் முழு இயக்கமும் கட்டுப்படவும் இயலாது.

அடிக்கட்டுமானம் என்பதனுள் உற்பத்தி சக்திகளும், உற்பத்தி உறவுகளும் அடங்கி உள்ளன. உற்பத்தி சக்தி என்பதனுள் நிலம், கருவிகள் முதலியவற்றோடு மனிதர்களையும் உள்ளடக்குகிறோம். முதலாளி, தொழிலாளி, நிலக்கிழார், பண்ணை அடிமை என்ற முறையில் உற்பத்தி உறவுகள் வகைப்படுத்தப்படுகின்றன. மேல்கட்டுமானம் என்பதனுள் தத்துவம், அரசியல், மதம், இலக்கியங்கள் முதலியவை

அடங்குகின்றன. அறிவியலும் இதனுள் தான் அடங்கும். இது பொதுவான வரையறை.

கருவிகள் என்று சொல்லும்பொழுதே, அறிவியல், கணிதம் முதலியவை உடன் எழுகின்றன. மனிதர்கள் என்று சொன்னவுடன் இலக்கியம், அறம், கலை முதலியவைகள் உள்ளடங்குகின்றன. நவீன காலச் சூழலில் அரசியலும் தத்துவமும் இதனுள் அடக்கம். எல்லாவற்றையும் வரலாறு மற்றும் பொருளியல் சூழலில் வைத்துப் பார்க்க வேண்டும் என்பதற்குத்தான் இந்த அடித்தளம் மற்றும் மேற்கட்டுமானம் பற்றிய வரையறை. பொருளியல் சூழலை மாற்றினால் மட்டுமே மனிதனை அறம் முதலியவற்றில் நிலைநிறுத்த முடியும் என்பதையும் நாம் இங்கு மறுப்பதில்லை. இதற்காகத்தான் வர்க்கப் போராட்டங்கள்.

வரலாற்றுக்குள் வந்துவிட்ட மனிதனைப் பொருத்தவரை, அவனுக்குள் மொழி முதலிய வரலாற்றுத் திறன்கள் சிறிய அளவிலோ, பெரியளவிலோ இயங்குகின்றன. இவற்றிலிருந்து மனிதனைப் பிரித்துப் பார்க்க முடியாது. மொழி இல்லாமல் மனிதனுக்குள் இயக்கம் இல்லை. கதை சொல்லாமல் மனிதன் இல்லை. கதைகள் வழியே தான் தன் அனுபவங்களைத் தொகுத்து அர்த்தப்படுத்திக் கொள்கிறான் மனிதன். மனிதனுக்குள் கலைஞன் இருக்கின்றான். எல்லாவற்றையும் இவன் அழகியலுக்குள் கொண்டு வருகிறான். இதைப் போலவேதான் அற உணர்வும், இலக்கியமும். வரலாற்றுக்கு முற்பட்ட ஆதிப்பொதுமைச் சமுதாயத்தில் மனிதர்கள் இனக்குழுவாக வாழ்ந்தார்கள். கூடி உழைத்தார்கள் பகிர்ந்து கொண்டார்கள். பிறகு வர்க்கங்களாகப் பிளவுபட்டார்கள். மனிதன் தனக்குள் அன்னியமானான். வரலாற்றுக் காலத்துக்கு முன்பு இயற்கையோடும், சமுதாயத்தோடும், தன்னோடும் ஒன்றியிருந்த மனிதன் இப்பொழுது இயற்கையிலிருந்தும், சமுதாயத்திலிருந்தும், தன்னிலிருந்தும் பிளவுபட்டான் / அன்னியமானான். அன்னியமாதல் என்ற இந்தப் பிளவு அவனுக்குள் துயரமாக உறைந்தது. இது வேண்டாமென்றாலும் அவனால் தவிர்க்க இயலவில்லை. ஆகவே தன் கனவுகள், கற்பனைகளில், தன் முன்னைய சொர்க்கத்தை அடிக்கடி நினைத்துக் கொண்டான். இலக்கியம் முதலிய வடிவங்களில் மீண்டும், மீண்டும் தன்னைப் பதிவு செய்தான். தனிவுடமையோ, அரசோ இவனுக்கு உடன்பாடில்லை. எல்லாவற்றோடும் ஒன்றியிருக்கிற சொர்க்கம் தான் இவனுக்குத் தேவை.

இயற்கையோடும், சமுதாயத்தோடும், ஒன்றியிருக்கிற சமூகம்தான் இவனுக்கு மீண்டும், மீண்டும் தேவை. இதுதான் இவனுக்கு அறம். சமதர்மம் என்று பெயர் சொல்லப்படுவது தான் இந்த அறம். இந்த அறத்தில்தான் மனிதன் பிறரோடும், உயிரினங்களோடும், இயற்கையோடும், நேசத்தோடும் வாழ முடியும். கொண்டும், கொடுத்தும் உறவாட முடியும். இந்த அற உணர்வின் காரணமாகத்தான் ஆதிக்கங்களுக்கு எதிராக இவன் கலகம் செய்கிறான். கிளர்ந்தெழுகிறான். சாவதுகூட இன்பம் என்று கருதுகிறான்.

தமிழ் இலக்கியம் மட்டுமல்லாமல் உலகின் எந்த மொழி இலக்கியமும் இந்த மனிதனின் துயரங்கள், போராட்டங்கள் மற்றும் கனவுகளைத் தான் பதிவு செய்கின்றன. பொதுமை அறத்திலிருந்து இவனைப் பிரித்துப் பார்க்க இயலாதது போலவே இவனைக் கலையிலிருந்தும், இலக்கியத்திலிருந்தும் பிரித்துப் பார்க்க முடியாது. எல்லாச் சமூகங்களினுள்ளும் கடவுள் என்று தொடங்கி எத்தனையோ நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவை காலந்தோறும் வெவ்வேறு வடிவங்களில் செயல்படுகின்றன. தனிவுடமை அரசு முதலிய ஆதிக்கச் சக்திகள் கடவுள் கருத்து முதலியவற்றைத் தம் வசப்படுத்திக் கொண்டபோதிலும் இத்தகைய ஆதிக்க நிறுவனங்களுக்கு எதிரான கலவரங்களும் தொடர்கின்றன. எங்களுக்குச் சமத்துவம் வேண்டும் என்ற முறையில் மதங்களினுள்ளிருந்தும் கலவரங்கள் வெடிக்கின்றன. பக்தி இல்லாமல் எந்தக் காலத்திலும் மனிதன் இல்லை. கடவுளிடம் தான் பக்தி செலுத்த வேண்டுமென்பதில்லை. தான் சார்ந்த தேசத்தின் மீது, தத்துவத்தின்மீதும், மொழியினிடத்தும், தலைவனிடத்தும் மனிதன் பக்தி செலுத்துகிறான். தேவை ஏற்படுகின்றபொழுது களைந்து கொள்கிறான். மீண்டும் புதிய வடிவங்களில் நம்பிக்கையும் பக்தியும்.

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இந்த மனிதனின் கதையைத்தான் நெடுகப் பார்க்கிறோம். இயற்கை இல்லாமலும் இல்லை. அதேபோல் குடும்பம் ஆண்/பெண் உறவு இல்லாமலும் இவன் இல்லை. இவை மட்டுமே இவனுக்குப் போதுமானதாக இல்லை. வரலாற்றுக்குள் இவன் விரிந்து செல்கிறான். ஒற்றைப் பரிமாணங்கள் இவனுக்கு எப்பொழுதுமே உவப்பாக இல்லை. ஆதிக்கம் இவனுக்கு உடன்பாடு இல்லை என்பதைப் போலவே வறுமை முதலியனவும் இவனுக்கு உடன்பாடில்லை. குறுகிய எல்லைகளில் இவனது தெய்வமும் இருக்கமுடியாது. மண்ணையும் விண்ணையும் ஆட்கொள்வதாக இவனது தெய்வம் இருக்க முடியும்.

தெய்வங்களை உதறிக் கொள்ளவும் இவனால் முடியும். தெய்வம் கீழிறங்கி வந்து மனிதனுக்காக உழைக்க வேண்டும் என்பதும் இவனது விருப்பம். கதைகள் மட்டுமல்லாமல், கற்பனைகள் இவனுக்கு இதமாகவும், இன்பமாகவும் இருக்கின்றன. இப்படியே தொடர்ந்து தமிழ் இலக்கியத்தின் பல்வேறு பகுதிகளை நாம் வாசிக்க முடியும். பொருள்படுத்த முடியும். தமிழ் இலக்கியத்தோடு உறவாடமுடியும். ஆய்வுகள் என்பவை இதற்காகத்தான். தனிமனிதச் சூழலிலிருந்து தற்காலச் சூழல் என்ற குறுகிய வரையறைகளிலிருந்து விலகி வரலாற்றுக்குள், வரலாற்று இயக்கத்துக்குள் மனிதன் தன்னைக் காண்பதற்காக இத்தகைய ஆய்வுகள் தேவை. பகவத்கீதை சொல்வது போல ஒரு விஸ்வரூப தரிசனத்திற்குள் மனிதன் தன்னைக் காணமுடியும். இத்தகைய தரிசனத்தின் போதுதான் மனிதன் புதிய ஆற்றல் மற்றும் புதிய பார்வைகளைப் பெறுகிறான். இத்தகைய பார்வையின் வழியே வள்ளுவரோடும், இளங்கோவோடும் ஆழ்வார்கள், நாயன்மார்களோடும் நாம் உறவாட முடியும். எத்தனை அளவு பெரிய / பேர் இலக்கியத்தைத் தமிழன் பெற்றிருக்கிறான். இவன் எப்படி சிறுத்துப் போக முடியும். தன் குடும்பம், தன் கட்சி என்று எப்படி இவனால் சிறைப்படுத்திக் கொள்ளமுடியும். தமிழின் வழியே, தமிழ் இலக்கியத்தின் வழியே, தமிழ் வரலாற்றின் வழியே இவன் உலகத்தோடு உறவு கொள்கிறான். சமதர்மத்தோடும், விடுதலையோடும் இவன் உறவு கொள்கிறான்.

ஆதிக்கம் இவனுக்கு வேண்டாம், அடிமைத்தனமும் வேண்டாம். இயற்கையோடும், உயிரினங்களோடும் இவன் ஒத்து வாழ்வான். மார்க்சியம் தான் இவனுக்கு இத்தகைய அகண்டமான பார்வையைத் தந்திருக்கிறது. இத்தகைய மார்க்சியத்தைத் தான் இவனால் நேசிக்கமுடியும்.

இலக்கியம் என்றோ, அறம் என்றோ, மதம் என்றோ, தனித்தனியாக ஆய்வைத் தொடங்கி தொடர்ந்து பயணம் செய்தோமென்றால் இறுதியில் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து காணுகின்ற ஒரு பெருங்காட்சிக்குள் செல்லமுடியும். இந்த இடத்தில் இலக்கியத்தையும் அறத்தையும் நம்மால் வேறுபடுத்திக் காணமுடியாது. நெடும்பயணத்தை மேற்கொள்பவர் களுக்குத்தான் இந்த பெருங்காட்சி சாத்தியம். இடையிடையே தங்கி விடவும் நேரும்.தங்கிவிட்ட நிலையிலும் சில இடைவெளிகளில் அந்தப் பெருங்காட்சியை சிறிய அளவிலேனும் நம்மால் கவனம் குவித்துப் பார்க்க முடியும். இதற்குத்தான் ஆய்வு என்பது தேவை. இவ்வகையில் சங்க

இலக்கியமோ, அற இலக்கியமோ, பக்தி இலக்கியமோ அல்லது காவிய இலக்கியமோ ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல்வேறு இலக்கியங்களாகவும் கொள்வதற்கில்லை. குறைந்தளவுக்கு ஒரு ஆயிரமாண்டுக் காலத் தமிழ் இலக்கியத்தை ஆராய்கிறார் சு. துரை அவர்கள்.

பல்வேறு தடங்களில் இவ்வகை இலக்கியங்கள் வழியே நாம் இவரோடு பயணம் செய்கிறோம். எத்தனையோ வகையான மனித அனுபவங்களை இந்த இலக்கியங்கள் சொல்லுகின்றன. எல்லா நேரங்களிலும் மனித விடுதலை என்ற இலக்கிலேயே மனத்தைப் பதித்துக் கொண்டிருக்கவும் முடியாது. அங்கங்கே தங்கி மனிதன் ஓய்வெடுத்துக் கொள்கிறான். குறுகிய எல்லைகளிலும் சுழல்கிறான். மீண்டும் பயணம் புறப்படுகிறான். கடவுளின் கதை என்று சொல்லப்படும் புராணங்கள் வழியேயும் மனிதனின் கதையை நம்மால் வாசிக்கமுடியும். சங்க இலக்கியத்தில் இருந்து கம்பரது காவியத்திற்குள் வருகிறபோது நாம் காண்பது பேருலகம். பிரபஞ்சம் அளவு விரிந்த உலகம். இங்கும் பேசப்படுவது மனித விடுதலை. இந்த மனித விடுதலையைக் கடவுள் இடையில் வந்து தடுக்கவும் செய்கிறார். அப்புறம் கடவுள் என்றால் என்னவென்று புரிந்து கொண்டு மீண்டும் பயணம் புறப்படவே வேண்டும். கடவுள் நம்மை இடையிடையே வந்து தடுக்கும் கதைகள் பெரிய புராணத்தில் நிறையவே உள்ளன. சித்தர் இலக்கியம் பற்றி சு. துரை ஆராயவில்லை.

சித்தர் இலக்கியத்திற்குள் செல்லும்பொழுது மேலும் நாம் பயணம் தொடரமுடியும். இடையிடையே மாயங்கள், திரைகள் நம்மைத் தடுக்கின்றன. போர்கள் நம் கண்களை மறைக்கின்றன. அழகுகளும்கூட நம் கண்களை மறைக்கும். திரைகளைக் களைந்து, கட்டுக்களை அறுத்துக் கொண்டு நாம் செல்ல வேண்டும். இலக்கிய வாசிப்பும் இப்படித்தான் இருக்கமுடியும். மார்க்சியத்தைக் கூட நாம் தூக்கிச் சுமக்க வேண்டியதில்லை. நாம் செல்லும் பாதைகளை / நாம் செல்லவேண்டிய பாதைகளை அகலத் திறந்து விடுகிறது மார்க்சியம். இலக்குகளை எட்டும்பொழுது இடையில் காணாமல் போனதாக நாம் கருதுகிற எத்தனையோ மனிதர்களை அங்கு காணமுடியும். அவர்களுக்குள்ளும் ஏதோ ஒரு வகையில் இலக்கு நோக்கிய பயணம் இருக்கத்தான் செய்தது. மெய்பொருள் நாயனார் மட்டுமல்ல முத்தநாதனும் அந்த இலக்குக்கு வந்து சேர்ந்திருக்கிறான். கண்ணகி போய்ச் சேர்ந்த அந்த தேவருலகில் அவள் பாண்டிய நெடுஞ்செழியனையும் கண்டாள் என்று சிலம்பு கூறுகிறது.

இலக்கியப் பயணம், தத்துவப் பயணம் என்பனவெல்லாம் இந்த இலக்கை தன் ஆழத்தில் கொண்டிருக்கின்றன. தோண்டித் துருவிப் பார்த்து இதை நாம் கண்டறிய வேண்டும். சு. துரை இத்தகைய பயணத்தில் இருப்பவர் இத்தகைய ஆய்வு இவருக்குள் மேலும் மேலும் தொடர வேண்டும். தமிழனை, தமிழ் இலக்கியத்தை, தமிழ் வரலாற்றை எடுத்து நிறுத்தவேண்டிய காலச் சூழலில் நாம் வாழ்கிறோம். சு. துரை போன்ற ஆற்றல்மிக்க ஆய்வாளர்கள் இன்று நமக்குத் தேவை.

சோவியத் ஒன்றியம் தகர்ந்ததை ஒட்டி மார்க்சியம் இன்று கடுமையான கேள்விகளுக்கு உள்ளாகி இருக்கிறது. மார்க்சியத்திற்குள்ளிருந்து அதன் உள்ளுறை ஆற்றல்களை மேம்படுத்தினால் ஒழிய இன்றைய உலகச் சிக்கல்களை எதிர்கொள்வதாக மார்க்சியம் இருக்கமுடியாது. கட்சி சார்ந்தவர்களைப் பொறுத்தவரை இந்த உண்மையை ஒப்புக் கொள்வதில்லை. உலக அளவில் மார்க்சிய இயல் என்ற ஆய்வுத்துறை கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. இந்த மார்க்சியம் ஆக்க முறையிலான மார்க்சியம். இதற்கான தூண்டுதல்கள் மார்க்ஸ் முதலியவர்களின் படைப்புகளிலிருந்தே கிடைக்கின்றன. மார்க்சியத்தை வெறும் அரசியலாக மட்டுமே பார்த்தவர்கள் அல்லது செயல்படுத்தியவர்கள் மார்க்சியத்தின் நுட்பங்களைப் புறக்கணித்தனர். இன்று இவற்றையெல்லாம் திரும்பிப் பார்க்க வேண்டி இருக்கிறது. மார்க்சியத்திற்கு வெளியில் வளர்ச்சி பெற்றிருக்கிற அறிவுத்துறை மற்றும் கலைத்துறை ஆக்கங்களையும் மார்க்சியர் உள்வாங்கிக் கொண்டு மார்க்சியத்தைப் புதுப்பிக்க வேண்டி இருக்கிறது. கட்சி சார்ந்தவர்கள் தமக்குள் இறுகி இருப்பதன் காரணமாக இத்தகைய மறுபார்வைக்கு அவர்கள் இடம் தருவதில்லை. கட்சிக்கு உள்ளிருந்து சில கசப்பான அனுபவங்களைப் பெற்று அதேசமயம் மார்க்சியத்தைக் கைவிடாதது மட்டுமன்றி மார்க்சியத்தின்பால் மேலும் மேலும் நேயம் கொண்டவர்கள் தமிழகத்திலும் இருக்கின்றனர். இவர்களையும் உள்ளடக்கித்தான் இன்று மார்க்சியம் பற்றிப் பேசுவது வளமான பார்வையாக இருக்க முடியும். இப்படிப் பேசத் தொடங்கி இருக்கிறார் நண்பர் துரை அவர்கள். இந்த ஆய்வு நூலின் முதன்மையான ஆக்கக்கூறு இது என்று குறிப்பிடலாம்.

மார்க்சியத்தைப் பொறுத்தவரை அடித்தளம், மேற்கட்டு என்று தொடங்கி எல்லா கருத்துக்களும் மீண்டும் மீண்டும் மறு ஆய்வுக்கு உரியவை என்பதில் ஐயம் இல்லை. இயங்கியலை மேலும் வளர்த்துச்

செல்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு. தொடர்ந்து சொல்லி வருகிற பொருள்முதல்வாதம் இன்றைய சூழலில் மேலும் மறுவார்ப்புக்கு உரியது. மார்க்சியத்துக்கான மெய்யியல் என்னும் வகையை இயங்கியல் என்பதற்குள் முடக்கிவிட முடியாது. கலை இலக்கிய பார்வை என்ற முறையில் மார்க்சியம் தன்னை ஆழமாகவும் விரிவாகவும் புதுப்பித்துக் கொள்ள வேண்டிய வாய்ப்புக்கள் நேர்ந்துள்ளன. அமைப்பியல் முதலிய புதிய அணுகுமுறைகள் இதற்கான தேவையை ஏற்படுத்தி உள்ளன. தமிழகச்சூழலில் தமிழவன் முதலியவர்கள் இம்முறையில் கடுமையாகவே உழைத்துவருகின்றனர். கட்சி மார்க்சியர் என்று சொல்லப்படுபவர்கள் சிலருள்ளும் புதிய வகைத் தேடலையும் நாம் தொடர்ந்து பார்க்கிறோம். இவர்களால் தமிழ்ச்சமூகம் ஆக்கம்பெறும் என்பதிலும் ஐயம் இல்லை. தமிழகத்தில் செயல்படும் மார்க்சியருள் ஒரு வகையினரை மரபு மார்க்சியர் என்று சொல்வது பொருந்தும். அந்நியமாதலுக்கு அழுத்தம் கொடுத்துப் பேசுவதனால் மட்டுமே எஸ்.என். நாகராசன் முதலியவர்களை அந்நியமாதல் மார்க்சியர் என்று பெயரிடுவது பொருத்தமானது எனத் தோன்றவில்லை. எனினும் இப்போதைக்கு வேறு பெயர் இல்லை என்பதால் இதை ஏற்கலாம். அமைப்பியல் மார்க்சியம் என்பது மேற்கிலும் வழக்கில் வந்த ஒரு சொல். பின் நவீனத்துவம் முதலியவற்றையும் இந்தத் தொடரால் குறிப்பது பொருத்தம் இல்லை என்றாலும் இப்போதைக்கு வேறுபெயர் இல்லை. எனினும் இத்தகைய வகைப்பாடுகளைச் செய்வது தேவையாகவும் இருக்கிறது. அல்தூசர் முதலியவர்கள் மார்க்சியத்தை கலைத்துப் போட்டார்கள் என்பது ஒரு முக்கியமான உண்மை.

நண்பர் துரை அவர்கள் மேற்கொண்ட செல்நெறி என்று ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட முடியும். மார்க்சிய நோக்கில் அவருடைய தீவிரமான ஈடுபாடு இந்த ஆய்விலிருந்து தெளிவாகத் தெரிகிறது என்பது மட்டும் அல்ல. தமிழகச் சூழலில் வர்க்கப் போராட்டத்தை உள்வாங்கிக் கொண்ட தமிழ்த்தேசியம் என்னும் பார்வைதான் இவருக்குள் கருக்கொண்டு வளர்ந்து வருகிறது என்பதையும் இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் புலமை நெறியாளர் என்று குறிப்பிடப்படும் தமிழ்ச் சான்றோர்களின் ஆய்வுகளை நாம் உள்வாங்கிக் கொள்வதில் தவறிவிடக் கூடாது. இவர்களிடம் வெளிப்பட்ட தமிழ்ப்பற்று தமிழ்ச்சமூகத்தின் மேன்மை முதலியவற்றை உள்வாங்கிக் கொண்டதோடு இதன் அடிப்படையில் தமக்கான அரசியலைத் திராவிட இயக்கத்தவர் படைத்துக் கொண்டனர். அதேசமயம் புலமையாளர்களின் ஆய்வுகளில் பெரும்பகுதியைப் புறக்கணித்ததோடு தமிழின் தொன்மை,

மேன்மை ஆகியவற்றின் அடிப்படையில் உருவான திராவிட இயக்க அரசியலையும் மார்க்சியர் கடுமையாக மறுத்தனர். திராவிட இயக்க அரசியலினுள் சாதியம் மற்றும் இனச்சார்பை மட்டுமே பார்த்த மார்க்சியர் இதற்கு எதிராக வர்க்கச் சார்பை முன்னிறுத்தினர். இவர்களிடம் தமிழ் ஊற்றம் பெறவில்லை. இவர்கள் தம்மைத் தமிழர் என உணர்வு கொள்ளவில்லை. தேசிய இனம் என்ற கருத்தாக்கத்தை இவர்கள் மறுத்தனர். சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனச்சிக்கல் கடுமையாக இருந்தது என்பதையும் தேசிய இனப் போராட்டங்களை ஸ்டாலின் கடுமையாக ஒடுக்கினார் என்பதையும் இவர்கள் அறிந்திருக்கக் கூடும் என்றாலும் வெளிப்படையாக அதை இன்றுவரை ஒப்புக் கொள்வதில்லை. சோவியத் ஒன்றியத்தில் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை இருந்தது என்பதை இவர்கள் வாயளவில் எடுத்துரைத்தனரே அன்றி இந்தியச் சூழலுக்கு இவர்கள் பொருந்திப் பார்க்கவில்லை. பெரியவர் ஜீவா அவர்களைப் பொறுத்தவரை ஆழமான தமிழ் உணர்வு கொண்டவர் என்பதில் ஐயமில்லை. தமிழ் இலக்கியங்களின் மேன்மையை அவர் தெளிவாக அறிந்திருந்தார். தமிழ்த் தேசியத்திற்கு அவர் நெருக்கமாக இருந்தார் என்று கூறுவதிலும் தவறு இல்லை. ஆனால் மக்கள் மத்தியில் பெரும் அளவு செல்வாக்குப் பெற்றிருந்த ஜீவா அவர்களைக் கட்சிக்குள் இருந்த தலைவர்களே மதிக்கவில்லை. கட்சிக்குள் ஊடுருவி நிலைபெற்ற பார்ப்பனியம்தான் ஜீவாவை முன்னுக்கு வராமல் தடுத்தது என்ற உண்மையைக் கட்சி சார்ந்தவர்கள் இன்றுவரை ஒப்புக் கொள்வதில்லை.

பார்ப்பனியப் போக்கை மார்க்சியம் ஒப்புக் கொள்ள முடியாது என்ற போதிலும் பார்ப்பனியச் செல்வாக்கு காரணமாக மார்க்சியமும் திரிபு அடைந்தது. இவர்கள்தான் தமிழுக்கு எதிராகச் செயல்பட்டனர். சங்க காலம், சங்க இலக்கியம், தொல்காப்பியர் காலம் முதலியவற்றைப் பின்னுக்குத் தள்ளிப்பார்ப்பதில் இவர்கள் மகிழ்ச்சி கொண்டனர். இறுதியாக என்ன நேர்ந்தது? திராவிட இயக்கத்தோடு தோழமை கொண்டு மார்க்சியர் உரையாடியிருக்க வேண்டும். இது நடைபெறவில்லை என்பது மட்டும் அல்ல. மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று வரும் திராவிட இயக்க அரசியலைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும் என்ற வெறித்தனத்தோடு இவர்கள் செயல்பட்டனர். இன்றுவரை இவர்களால் இதில் வெற்றிபெற முடியவில்லை.

தமிழ்த்தேசிய அரசியல் என்பது இன்று திராவிட இயக்க வட்டாரத்தினுள்ளும் முடங்கிக் கிடக்கிறது. மைய அரசை எதிர்ப்பது மட்டும் போதாது. ஏகாதிபத்தியத்தின் ஊடுருவலை முழு அளவில்

எதிர்த்தாக வேண்டும். சீர்கெட்ட முதலாளியப் போக்கை எந்த வடிவத்திலும் நம்மால் ஏற்க முடியாது. தமிழ் மக்களின் வாழ்வுக்கு ஆதாரமான நீர், நிலம், காடு முதலிய இயற்கைச் சக்திகளை அழிக்கிற போக்கை நாம் இம்மியளவும் ஏற்க முடியாது. திராவிட இயக்கத்தினர் மட்டும் அல்லாமல் மார்க்சியரும் இத்தகைய பார்வையில் உறுதிகொள்ளவில்லை. இந்த இடத்தில் சரியான திசைவழியில் முன்செல்லக் கூடிய தகுதி தமிழ்த்தேசியம் என்ற அரசியலுக்குத்தான் வாய்த்திருக்கிறது. மார்க்சியரினுள்ளும் தமிழ்த் தேசியத்தை முன் எடுத்துச் செல்லும் ஒரு வளமான போக்கு இன்று உருவாகி உள்ளது. பெரியாரியமும் மார்க்சியமும் தமிழ்த்தேசிய அரசியலுக்குள் பொருத்தமாக இணைய முடியும். திராவிட இயக்கத்திற்கு இன்று எவரும் எதிர்நிலை எடுக்க முடியாது. திறனாய்வின் மூலம் தமிழ்த்தேசிய அரசியலுக்குள் இவரை இணைக்க முடியும் – மார்க்சியரையும்தான். மனித விடுதலை மார்க்சியத்தின் இலக்கு என்றால் தமிழ்த்தேசிய அரசியலின் மூலம்தான் இதை இங்கு சாதிக்க முடியும். இது சர்வதேசியம் என்ற அரசியலுக்கு எதிரானதும் அன்று. துரை அவர்களைப் பொறுத்தவரை தமிழ்த்தேசிய அரசியலோடு தன்னை இணைத்துக் கொண்டுள்ளார் என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. வியக்கத்தக்க ஓர் உண்மை என்னவென்றால் மரபு மார்க்சியரோடு இவர் இல்லை. அந்நியமாதல் மார்க்சியர் என்று இவரால் குறிக்கப்படுகிற எஸ்.என். நாகராசன் முதலியவர்களோடுதான் இவர் இருக்கிறார். அமைப்பியல் மார்க்சியரிடமிருந்து ஆக்க முறையில் தேவையானவற்றை இவர் எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை. இவருடைய ஆய்வைத் தொடர்ந்து படிப்பவர் இவரது நடுவுநிலையையும் ஐயுற முடியாது. இந்த அளவுக்கு நேர்மைத் திறத்தோடு இவர் செயல்பட்டிருக்கிறார். அந்நியமாதல் என்று தொடங்கிய மார்க்சியர்தான் தமிழ்த்தேசிய அரசியலை உள்வாங்கிக் கொள்ள முடிகிறது என்பதும் ஒரு முக்கியமான உண்மை. மார்க்சியத்திற்குள்ளிருந்து அந்நியமானவர்கள் மரபு மார்க்சியர் என்பதும் ஒரு உண்மை.

சங்க இலக்கிய ஆய்வில் புறநானூறு பற்றியும் அற இலக்கிய ஆய்வும், திருக்குறளையே முதன்மைப்படுத்தியும் மார்க்சியர் ஆய்ந்துள்ளனர். சங்க இலக்கியத் தொகுப்பினுள் இதைப்போலவே அற இலக்கிய தொகுப்பினுள் பிற இலக்கியங்களுக்கு அழுத்தம் தந்து ஆராயவில்லை என்று குறிப்பிடுகிறார். குறிப்பாக இலக்கியத்தின் அற இயலை ஆராயவில்லை. உருவ இயலுக்கும், உளவியலுக்கும், ஸ்டாலினியப் போக்கில் முக்கியத்துவம் இல்லை என்பதையும் இவர்

குறிப்பிடுகிறார். தொகுத்துப் பார்த்தால் அரசியலுக்கு முதன்மைதரும் மார்க்சியர் இலக்கியத்தின் பிற கூறுகளுக்கு முக்கியத்துவம் தராதது புரிந்து கொள்ளக்கூடியதுதான். மனிதனை, அவனது பன்முகப் பரிமாணங்களை ஒதுக்கிவிட்டு / அழித்துவிட்டு அரசியல் எனும் ஒற்றைப் பரிமாணத்தில் பார்ப்பது மார்க்சியத்தையேகூட முடக்குவது ஆகிவிடும்.

சமுதாயத்தில் சில குறிப்பிட்ட காலங்களில் கலை அடைந்திருக்கிற உன்னதத்தை அந்தச் சமுதாயத்தின் பொருளியல் சூழலிலிருந்து விளக்கமுடியாது என்று மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். மதம் ஒருமுறை தோன்றியபிறகு, அதன் உள்ளியக்கத்திலேயே வளர்ச்சி பெற்றுவிடுகிறது என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார். இலக்கியத்தின் தனித்தன்மை குறித்தும் எங்கல்ஸ் குறிப்பிடுகிறார். இலக்கியத்தினுள்ளும் படைப்பியக்கம் என்று கூறப்படுகிற உள்ளியக்கத்தை நாம் காணமுடியும். புறச்சூழலுக்கு எதிர்வினை என்ற முறையில் ஆற்றலோடு இந்த உள்ளியக்கம் செயல்படுகிறது. புறச்சூழலில் கடுமையான நெருக்கடிகள் நிலவும்பொழுது, அகம் தன்னை இந்த உள்ளியக்கத்தின்மூலம் காத்துக் கொள்ளவும் செய்கிறது. கடுமையான தீக்காயங்கள் பட்டநிலையில், கடும் வேதனையை உணராமல் இருப்பதற்கு பயன்படுகிற அபின்போல என்றும் இதனைக் குறிப்பிலாம்.

இலக்கியத்தின் இந்த அம்சத்தை, புரிந்து கொள்ள இயலவில்லை என்றால், இலக்கியத்தை வாசிப்பதற்கானத் தகுதி நமக்கு இல்லை என்று சொல்லி விடலாம். விண் உலகில் தெய்வங்களுக்கிடையில் நடக்கும் சண்டைகள் முதலியவை மண்ணுலகில் மனிதர்களுக்கிடையில் நடைபெறும் போராட்டங்களையே பிரித்தோ, மிகைப்படுத்தியோ வெளிப்படுத்துகின்றன என்ற மார்க்சின் கூற்றையும் இங்கு நினைவு கொள்வது பொருந்தும். மனிதனின் அன்னியமான நிலவரங்களுக்கும் இலக்கிய ஆக்கத்திற்கும் இன்றியமையாத உறவுண்டு. பட்டுப்புழு பட்டு இழைகளை நூற்பதை உதாரணப்படுத்தி மில்டன் முதலிய பெருங்கவிஞர்களுக்குள் நடைபெறும் இடையறாத உள்ளியக்கம் குறித்தும் மார்க்ஸ் கூறியிருக்கிறார். பால்சாக் – தன்வர்க்க வரையறைகளைக் கடந்தும் தன் படைப்புகளுக்குள் எவ்வாறு செயல்பட்டார் என்பதை இந்த உள்ளியக்கம் கொண்டுதான் புரிந்து கொள்ளமுடியும். மார்க்ஸ்க்கு இந்த உண்மை தெரிந்திருந்தது. டால்ஸ்டாய் பற்றிய லெனின் மதிப்பீட்டிலும் இடம்பெறுவது இந்த உண்மைதான். மார்க்சியத்தின் இத்தகைய விரிவான வரையறைகளைத் தமிழ் இலக்கிய ஆய்வுக்கும் மார்க்சியர்கள்

பயன்படுத்தி இருக்க முடியும். கிரேக்க இலக்கியத்தைப் போலவே, தமிழ் இலக்கியமும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட வரலாற்றை உடையது. தமிழ் இலக்கியத்தில் உலகளாவியதென அறியப்பட்ட வீரயுகம் என்பதை கலாநிதி கண்டு உரைத்ததில் தமிழ் இலக்கியத்தின் செழுமை புலப்படுகிறது. கலாநிதி கைலாசபதி அவர்களின் ஆய்விலுள்ள குறைபாடுகளை நீக்கிப் பார்த்தாலும் சங்க இலக்கியத்தினுள் வீரயுகத்தின் சில அரிய கூறுகளை நம்மால் இனம் காணமுடியும்.

மார்க்சிய நோக்கிலான சிந்தனைகள் முதலியவற்றைத் தமிழ் மக்களிடையே தூண்டுவதற்கும், வலுப்படுத்துவதற்கும் நெடுங்காலத் தமிழ் இலக்கிய ஆய்வை மார்க்சியர் பயன்படுத்தியிருக்க முடியும். நெடுங்காலம் வாழ்ந்த எந்த ஒரு சமூகத்தினுள்ளும் இயல்பான பொருண்மைவாதம் மற்றும் இயங்கியல் கூறுகளைக் கண்டெடுக்க முடியும். பொருளுக்கும், அதிகாரத்திற்கும் முதன்மைதராத பொதுமைச் சமூகத்தின் கூறுகளையும் இத்தகைய இலக்கியங்கள் வெளிப்படுத்துவதையும் காணமுடியும். தமிழ்ச் சமூகத்தினுள் மரியாதையோடு இடம் பெறுவதற்கான இத்தகைய வாய்ப்புக்களை, மார்க்சியர் இழந்து விட்டனர். மார்க்சியம் என்ற பேரறிவு இவர்களின் கண்களை அடைத்துவிட்டது. மார்க்சியம் இவர்களுக்குள் தற்செருக்காய், அதிகாரமாய் மாறிவிட்டதை வேறு எப்படி விளக்க முடியும். இவ்வகைப் புரிதலுக்கும் சு. துரை அவர்களின் ஆய்வு நமக்குள் வழி திறக்கிறது.

தமிழ் இலக்கியத்தில் ஆய்வு செய்த எந்த ஒரு மார்க்சியரையும் விட்டுவிடாமல், எல்லோருடைய ஆய்வுகளையும் இவர் தொகுத்துப் பார்க்கிறார். இந்த வகையில் இவரது ஆய்வு முயற்சி போற்றத்தகுந்தது. ஆற்றல் மிகுந்த ஆய்வுப் பொருள் ஒன்றை எடுத்துக் கொண்டதிலும் இவரது அரிய திறம் வெளிப்படுகிறது. ஆய்வுகள் மலினப்பட்டு வரும் சூழலில் தமிழில் ஆய்வுக்கு இவரது ஆற்றல்மிக்க பங்களிப்பை நாம் பெரிதும் போற்றவேண்டும். தமிழ் இலக்கிய ஆய்வில் இவர் ஒய்ந்துவிடாமல் தொடரவேண்டும் என்பதும் நம் விருப்பம். தமிழுக்கு நெருக்கடி நேர்ந்துள்ள இக்காலச் சூழலில் தமிழை மேம்படுத்தும் இத்தகைய ஆய்வாளர்கள் நம் வணக்கத்திற்குரியவர்கள்.

மார்க்சியமும் தலித் இலக்கியமும்

முதலில் மார்க்சிய இலக்கியக் கோட்பாடு பற்றிக் காண்போம். மரபு முறையிலான மார்க்சியத்தில் அடித்தளத்திற்கு முதன்மையும் மேற்கட்டுமானத்திற்கு அடுத்த இடமும் தரப்படுகிறது. இதைப்போலவே உற்பத்திச் சக்திகளுக்கு முதன்மையும் உற்பத்தி உறவுகளுக்கு அடுத்த இடமும் தரப்படுகிறது. மேற்கட்டுமானத்தின் ஒரு பகுதி கலை இலக்கியம், மெய்யியல் ஆகியவை. அடித்தளம் தான் எப்பொழுதும் தீர்மானிக்கும் சக்தி. உற்பத்திச் சக்திகள் வலுப்படும்போது உற்பத்தி உறவு தானே மாறும். ஸ்டாலினிய சோவியத்யூனியனில் இவ்வகை மார்க்சியம் தான் செயல்படுத்தப்பட்டது. இந்தச் செயல்பாட்டில் கட்சிக்குத் தான் இறுதி அதிகாரம். இலக்கியக் கோட்பாட்டை நிர்ணயிப்பதும் கட்சிதான். கருத்து மாறுபட்டவர்களை எல்லாம் களைந்து எடுத்த பிறகு மிச்சமிருக்கிற கட்சிதான் இலக்கியக் கோட்பாட்டைத் தீர்மானித்தது.

இந்த இலக்கியக் கோட்பாடு தான் சோசலிச எதார்த்தவாதம். கட்சியின் நெறிப்படுத்தலில் சோசலிசம் உருவாகியது. சோசலிசம் என்ற அரசியலை முன்னிறுத்தி எழுத்தாளர்கள் இலக்கியம் படைக்க வேண்டும். அரசியல்தான் இலக்கியத்தை நிர்ணயித்தது. இந்த அரசியலுக்குத் தம்மை முழுமையாக ஒப்படைக்க முடியாதவர்கள், ஒன்று தற்கொலை செய்து கொண்டனர், அல்லது சிறைப்படுத்தப்பட்டனர், அல்லது நாட்டை விட்டு வெளியேறினர்.

சோவியத் யூனியன் தகர்வதற்குச் சில பத்தாண்டுகளுக்கு முன்பே, சோவியத் யூனியனில் கட்டப்படுவது சோசலிசமா? சோசலிச எதார்த்த வாதம் இலக்கியப் படைப்புகளுக்கு ஆதாரம் ஆக முடியுமா? என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. சோவியத் யூனியன் தகர்ந்த பிறகு சில உண்மைகள் மார்க்சியருக்குத் தெளிவுபட்டன. சோவியத் யூனியனில் உருவாக்கப்பட்டது சோசலிசம் அல்ல. மேற்கத்திய நாடுகள் இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகளில் சாதித்த தொழில் புரட்சியை நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளில் சோவியத் யூனியனில் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக கனரகத் தொழில் பெருக்கம், கட்சி அதிகாரப் பெருக்கம் முதலியவை நேர்ந்தன. சோவியத்துகள் முன்பே ஒழிக்கப்பட்டன. கனரகத்தொழில், ராணுவப் பெருக்கம் முதலியவைகளுக்காகக் கூட்டுப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டன.

தொழிற்சங்க உரிமைகள் தொழிலாளர்க்கு மறுக்கப்பட்டன. உழைப்பாளர் முகாம்களில் பத்தாயிரக்கணக்கில் மக்கள் அடைத்து வேலை வாங்கப்பட்டனர். நகரங்கள் பெருகின. ராணுவப் பெருக்கம் கனரகத்தொழில் ஆகியவற்றிற்காக விஞ்ஞானிகள் உற்பத்தி செய்யப்பட்டனர். ஆழ்ந்து பார்க்கும்பொழுது கட்சி, ராணுவம், அரசு, நிர்வாகம், தொழில் மற்றும் கூட்டுப்பண்ணை நிர்வாகம் முதலிய பல களங்களிலும் முதலாளிய அதிகார நிர்வாக முறையே செயல்பட்டது. இறுதியில் ஆதிக்கம் பெற்றது முதலாளியப் போக்கு அதாவது மார்க்சியத்தினுள் நுழைந்து, மார்க்சியத்தின் அனைத்துக் களங்களையும் முதலாளியம் ஆக்கிரமித்துக் கொண்டது. கட்சி அதிகாரமும் அரசு அதிகாரமும் தங்கு தடையின்றி இணைந்து செயல்பட்டன.

இப்பொழுது திரும்பிப் பார்க்கும்பொழுது சில உண்மைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன. முதலாளியமும் சோசலிசமும், கம்யூனிசமும் ஒன்றுக்கொன்று முற்றாக முரண்பட்ட பொருளியல் மற்றும் சமூக அமைப்பு என்பது உண்மையானால், முதலாளிய நிர்வாக / அதிகாரமுறை ஆகியவற்றைக் கொண்டு சோசலிசத்தை உருவாக்க முடியாது. உற்பத்திச் சக்திகளுக்கு / சனரகத் தொழிலுக்கு முதன்மை தந்ததை மாவோ ஏற்கவில்லை. மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாக கருதி ஸ்டாலின் செயல்பட்டதை மாவோவால் ஏற்கமுடியாது. தலைமை பீடங்களிலுள்ளும் அதிகாரம் செறிவு பெற்று மக்களை அடிமைத்தனத்தில் ஆழ்த்தமுடியும். அறிவியலும் தொழில் நுட்பமும், இவற்றின் அடிப்படையிலான பெரும் தொழில் முயற்சிகளும் மக்கள் மீது சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் பேரளவில் திணிக்கும். இயற்கை நாசமாகும். இந்நிலையில் உளவுத்துறை மற்றும் அதிகாரத்தின் காரணமாக மனித உரிமைகள் மறுக்கப்படும். இவ்வளவும் சோவியத் யூனியனில் நிகழ்ந்தன.

ஸ்டாலின் காலத்திலும் அதற்கு முன்பும் மார்க்சியத்தினுள் நுழைந்துவிட்ட முதலாளியப் போக்குகளை முற்றாகக் களைந்தால் ஒழிய மாாக்சியம் இன்றைய சூழலில் நமக்கு ஆற்றலையும் புதிய வெளிச்சங்களையும் தராது. மார்க்சியத்திற்கு இத்தகைய உள்ளுறை ஆற்றல்கள் உண்டு. இப்பொழுது மார்க்சியத்தின் இயக்கப் போக்கிற்கு நம் பார்வையைத் திருப்புவோம். பெரும் தொழிலும் சோசலிசமும் ஒத்துப் போகமுடியாது என்று ஏங்கல்ஸ் கூறியிருப்பதை நினைவுபடுத்தி மேற் செல்லலாம்.

மார்க்சிய இலக்கிய கோட்பாட்டில் ஏற்பட்ட தவறுகள், திரிபுகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்கு முன்பு மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டின் சாதகமான அம்சங்களை இங்கு தொகுத்துக் கொள்ளலாம். இலக்கியம், இலக்கியத்தில் கையாளப்படும் சிக்கல்கள், மனிதர்களுக்கிடையில் ஏற்படும் நெருக்கடிகள், இலக்கியப் போக்குகள் முதலியவற்றை வரலாறு மற்றும் பொருளியல், சமூகச்சூழலில் வைத்து மார்க்சியம் பார்க்கிறது. இந்த அடிப்படையில் சமூக மாற்றம் அதிலும் குறிப்பாக சோசலிசம் நோக்கிய சமூக மாற்றம் என்பதற்கு அழுத்தம் தருகிறது. மார்க்சியம் மேன்மக்களுக்கு அதுவரையிலான இலக்கியம் தந்த முதன்மையை மறுத்து தொழிலாளர்கள், உழவர்கள், முதலில் உழைக்கும் மக்களுக்கு அழுத்தம் தருகிறது. மனிதர்களின் குணங்கள் குறைபாடுகள் முதலியவற்றைப் பொருளியல் சூழலில் வைத்துக் காண்பதன் மூலம், மனிதர்களின் குற்றம் குறைகளுக்குத் தோற்றுவாய் பொருளியல் அமைப்பு; எனவே அதை மாற்ற வேண்டும் என்ற உணர்வை வாசகர்களுக்குத் தருகிறது.

படைப்பாளி என்பவன் தன் மன விவகாரங்களுக்குள் ஆழ்ந்து இருக்க வேண்டியது இல்லை. மக்களின் வாழ்வோடு தான் தனக்கும் வாழ்வு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். இலக்கியம் என்பது இறுதியில் சமூக மாற்றத்திற்கு பயன்படவேண்டிய ஒரு கருவி. இலக்கியம் எதார்த்தத்தைப் பிரதிபலிக்க வேண்டும். தன் சமகாலப் பொருளியல் சூழலைச் சரிவரப் புரிந்து கொள்வதன் மூலமே எதார்த்த வாழ்வை வைத்து இலக்கியம் படைக்க முடியும். சமூகத்தில் அனைத்துமே மாறிக் கொண்டு இருக்கின்றன. இந்த மாற்றங்களை இலக்கியவாதி அவற்றை விரிந்த அளவில் வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும். இறுதியில் மக்களின் விடுதலை தான் இலக்கியத்தின் குறிக்கோளாக இருக்க முடியும். சோசலிசம் என்ற இலக்கை எய்துவதன் மூலமே மக்கள் விடுதலையை எய்த முடியும். போராட்டம் இல்லாமல் வாழ்க்கை இல்லை. போராட்டங்கள் வழியே தான் மக்கள் தமக்கான வரலாற்றைப் படைத்துக் கொள்ள முடியும்.

மார்க்சிய இலக்கியக் கோட்பாடு என்ற முறையில் சில பொதுவான வரையறைகளை இங்கு முன் வைத்திருக்கிறோம். சோவியத் யூனியனில் முதலாளியத்தைக் கடந்து சோசலிசம் நோக்கி முன்னேறிக் கொண்டு இருப்பதாக அவர்கள் கருதிய சூழலில் மேற்குறிப்பிட்ட வரையறைகளோடு கட்சிக்கு, கட்சித் தலைமைக்கு முக்கியத்துவம் தரும் போக்கு ஏற்பட்டது. கட்சி, அரசின் நிர்வாகத் துறைகளில் இலக்கியமும் ஒன்றாயிற்று. சோவியத் யூனியனைப் பொருத்தவரை சோசலிசம் தான் நமது உடனடியான இலக்கு என அவர்கள் கருதிச் செயல்பட்டனர். சோவியத்

யூனியனுக்கு வெளியில் இந்தியா முதலிய நாடுகளிலும் இதுபோலவே கருதப்பட்டது. இந்தியாவைப் பொருத்தவரை அன்றும் சரி இன்றும் சரி உடனடி இலக்காக சோசலிசம் இருக்க முடியாது. இந்தியாவில் செயல்பட்ட பொதுவுடமைக் கட்சிகள் உடனடி இலக்கு என்ற முறையில் தேசிய சனநாயகம், மக்கள் சனநாயகம், புதிய சனநாயகம் என்று தனக்கு உரிய முறையில் இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டார்கள்.

குருச்சேவையும், நேருவையும் முற்றாக நம்பியவர்கள் ஆயுதப் போராட்டம், புரட்சி இல்லாமலேயே சோசலிசத்திற்குள் நுழைந்துவிட முடியும் என நம்பினார்கள். உலக அளவில் சோசலிசத்திற்கான காலகட்டத்தில் வாழ்கிறோம் என நம்பி இவர்கள் சோசலிச எதார்த்தவாதம் பற்றித் தீவிரமாகப் பேசினார்கள். மார்க்சியம் இவர்களுக்கு மாபெரும் உலகப் பார்வையைத் தந்தது. உலகை முற்றாக மாற்றிவிட முடியும் என்ற பெரும் நம்பிக்கையைத் தந்தது. தம் கட்சி வகுத்த நெறியைத் தவிர வேறு வழியிருக்க முடியாது எனத் திடமாக நம்பினார்கள். சோவியத் யூனியன் அல்லது மக்கள் சீனம் தங்களுக்குப் பின்புலமாக இருக்கிறது என்பதையும் உறுதியாக நம்பினார்கள்.

ஆனால் வரலாறு இவர்களின் நம்பிக்கைகளை மெய்ப்பிக்க வில்லை. தங்களுக்கும் தங்கள் கட்சிகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் என்ன நேர்ந்தது என்று இவர்கள் இன்று சுயபரிசீலனை செய்து கொள்ள வேண்டிய நிலமை ஏற்பட்டு உள்ளது. எந்த அளவுக்குச் செய்கிறார்கள் என்ற ஆய்வை இப்பொழுது நாம் மேற்கொள்ளவில்லை.

– 2 –

மார்க்சிய இலக்கியக் கோட்பாட்டின் சாரமான சில உண்மைகள் பற்றி இப்போது பார்க்கலாம். "பிரதிபலிப்பு" என்ற கோட்பாடு பற்றி லெனின் கூறினார். ஆனால் சாதாரணமான எளிய பிரதிபலிப்பை அவர் தன் கருத்தில் கொண்டிருக்கவில்லை. கண்ணாடியில் பிரதிபலிப்பதைப் போன்று வெற்றுப் பிரதிபலிப்பு அல்ல இது. ஃபையர்பாக் பற்றி மார்க்ஸ் வகுத்த ஆய்வுரையில் ஒன்றை நாம் குறிப்பிடலாம். சூழல் மனிதனைப் பாதிக்கிறது என்பது உண்மையில் ஒரு பாதி மட்டுமே. உண்மையின் மறுபாதி, சூழலை மனிதன் தனக்கு உரிய வகையில் மாற்றுகிறான் என்பது ஆகும். அதாவது புறஉலகம் மனிதனைப் பாதிக்கும்பொழுது / தாக்கும்பொழுது மனிதன் புற உலகத்தை நோக்கி தன் எதிர்வினையைத் தருகிறான். வரலாற்றின் வழியே தனக்குள் சேர்ந்திருக்கிற ஆற்றல்கள் உணர்வுகள், பார்வைகள், ஆகியவற்றைத் தனக்குள் திரட்டிக் கொண்ட மனிதன் தன் எதிர்வினையைத் தருகிறான். எதிர்வினை என்பது இங்கு

பிரதிபலிப்பு. வறுமைமிக்க சூழலில் ஒருவன் திருடுவது சாதாரணப் பிரதிபலிப்பு. வறுமைக்கானச் சூழலை மாற்றி அமைக்க வேண்டும் என்பது மனிதனின் ஆற்றல்மிக்க எதிர்வினை. வாழ்நிலைதான் சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்பது மார்க்சின் ஒரு கூற்று. சிந்தனை மனிதனைப் பற்றும்பொழுது பௌதீக சக்தியாக அது மாற்றம் அடைகிறது என்பது மார்க்சின் இன்னொரு கூற்று.

மார்க்சின் கருத்துப்படி, அடிப்படையில் மனிதன் படைப்பாளி / படைப்பவன். வரலாற்றில் கருவிகள் பொருட்கள் முதலியவற்றைப் படைக்கிற பொழுதே மனிதன் தன்னையும் படைத்துக் கொள்ளுகிறான். ஓவியங்கள், சிற்பங்கள் மட்டுமல்லாமல் பண்ணைகள், நாடு நகரங்கள் இவனது படைப்புகள். படைப்புச் செயல் இன்றி இவனுக்கு வாழ்க்கையில்லை, வளர்ச்சி இல்லை. மார்க்ஸ் கூறினார் சிற்பத்தைப் படைக்கும் போதே அவன் சிற்பியாகிறான். படைக்கப்பட்ட சிற்பம் தன் இருப்பின் போது பலரைக் கலைஞர்களாகப் படைக்கிறது. தேனீ தன் உள்ளார்ந்த இயல்புக்கு ஏற்றபடி கூடு கட்டுகிறது. வேறுவகையில் தேனீக்களால் கூடு கட்ட முடியாது. ஆனால் மனிதனைப் பொருத்தவரை உள்ளார்ந்த தன் அழகியல் விதிகளின்படி கலைப்பொருட்கள், கட்டிடங்கள் படைக்க முடியும்.

மில்டன் "சுவர்க்க நீக்கம்" என்ற காவியத்தை எப்படிப் படைத்தார் என்பதை விளக்கும்போது மார்க்ஸ் எழுதினார். பட்டுப்புழு பட்டு உற்பத்தி செய்வது அதற்கு இயல்பு. அதாவது பட்டு உற்பத்தி அதன் வாழ்வுச்செயல். பட்டு உற்பத்தி தான் அதற்கு வாழ்வு. பட்டு உற்பத்தி செய்யாமல் அதற்கு வாழ்வு இல்லை. பட்டு உற்பத்தி செய்வதன் மூலம் உயிர்வாழ்வையும் அது அழித்துக் கொள்கிறது. எனினும் பட்டு உற்பத்தியில் வாழ்வின் நிறைவை அது காண்கிறது. இப்படித்தான் மில்டனும் காவியம் படைத்தார். மில்டன் ஒரு மாபெரும் கலைஞர். மில்டன் மட்டும் தானா? படைப்புச் செயலில் ஈடுபடும் ஒவ்வொரு மனிதனும் கலைஞன். இந்தப் படைப்பு செயல்தான் அவன் வாழ்வுக்குப் பொருள் தருகிறது; அழகு தருகிறது. நிறைவு தருகிறது.

சில வரலாற்றுச் சூழலில் இந்தப் படைப்பு செயலே மனிதனை அழிக்கவும் செய்கிறது. முதலாளியச் சூழலில் தொழிலாளி செய்யும் உற்பத்தி இறுதியில் மூலதனமாக முதலாளியிடம் குவிந்து, தொழிலாளியின் மீது சுமையாக, அதிகாரமாக, அழுத்தி அவனது படைப்புச் செயலை அழித்து, இறுதியில் அவனை உற்பத்திக்கான கருவிகளில் ஒன்றாக மாற்றுகிறது. இந்தச் சூழலில் தான் இவனுக்கு

வாழ்க்கை அர்த்தமற்றுப் போகிறது. இயற்கையையும், சமுதாயத்தையும் இந்த உழைப்பாளி தனக்குரியதாக வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும், உரியதாக திரும்பவும் மாற்றி அமைத்துக் கொள்ளும் வரை, இவனது அவலம், வேதனை இவனை விட்டு நீங்காது.

இத்தகைய புரட்சிகர செயற்பாட்டின் மூலமே இந்த மனிதன் இந்த உலகத்தையும் தன்னையும் தனக்கு உரியதாகப் பெறுகிறான். மார்க்ஸ் கூறியபடி வரலாற்றில் தன்னைத் திரும்பத் திரும்ப இழக்கிறான். மீண்டும், மீண்டும் தன்னைப் பெறுகிறான். வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் இவ்வாறு பொருளுக்கும் அதிகாரத்திற்கும் தன்னை இழக்கிறான், தவிக்கிறான். தனக்குள் உயிர் பெற்று ஆற்றல் பெற்று தன்னை மறைத்திருக்கிற – தன்னை அழுத்தியிருக்கிற சக்திகளைத் தூக்கி எறிகிறான். தூக்கி எறியும்பொழுதே புதிய ஆற்றல்களையும், புதிய வெளிச்சங்களையும் பெறுகிறான். இது வரலாறு. இயற்கையிலிருந்தும், சமுதாயத்திலிருந்தும் தன்னிலிருந்தும் அன்னியமாகும் மனிதன், தொடர்ந்த புரட்சிச் செயல்பாடுகள் மூலம் இயற்கையையும் சமுதாயத்தையும் தன்னையும் பெறுவான். இப்படிச் செல்கிறது மார்க்சின் பார்வை.

மார்க்ஸ் கண்ட மனிதனை, படைப்பாளி / கலைஞன் எனக் கூறினோம். உலகைப் பொதுவாக்குவது இவனது பார்வை / இலட்சியம். மனித வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துவிட்ட சக்திகளை அழிப்பது, இவன் செயல்பாடு. இவனுக்குள் மிகச் சிறிய அளவிற்கேனும் இன்று காணப்படும் இந்த நீரோட்டம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இவனுக்குள் சிறிய அளவிலோ சில சமயங்களில் பேரளவிலோ ஓடிக் கொண்டிருக்கிறது.

ஆதிப்பொதுமைச் சமுதாயத்தில் இவன் உலகை அனைவருக்கும் பொதுவாகப் பெற்றிருந்தான். இவன் வேட்டையாடினான். பொருட்களைப் படைத்தான். இவற்றை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். தன்னுணர்வு இன்றிச் செயல்பட்டது அந்தப் பொதுமைச் சமூகம். அப்புறம் தனியுடமை, குடும்பம், அரசு ஆகியவை தோன்றின. வரலாற்றில் எவ்வளவோ நடைபெற்றன. எனினும் முன்னைய பொதுவுடமைச் சமூகத்தைக் கனவுகளில் மட்டுமல்லாமல் வாழ்வில சிறிய அளவிலேனும் கண்டான். வள்ளுவர் கூறிய ஒப்புரவு இதன் ஒருவடிவம். பௌத்தர்களின் சங்கம் இன்னொரு வடிவம். இப்படி எத்தனையோ வடிவங்கள் "பங்கித்தின்றால் பசியாறும்" என்பது இதன் குறுகிய வடிவம். நட்பு, தோழமை என்று பேசுகிறோம். தன்னை இழப்பதன் மூலம் தன்னைப் பெறுவது முடியும் என்று பேசுகிறோம். ஊருக்கு உழைப்பது உயர் அறம் என்கிறோம்.

இலக்கியங்கள் இத்தகையவர்களைத் தான் நாயகர்கள் என்று போற்றுகின்றன.

பொருளுக்கும் அதிகாரத்திற்கும் உலகம் வசப்பட்ட சூழலில் உலகச் சூழலை மாற்றுவதற்காக உயிர் கொடுத்தவர்கள் வரிசையில் ஏசுவைக் காண்கிறோம். புத்தர் முதலியவர்களைப் போற்றுகிறோம். வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால் என்று கம்பர் கண்ட காட்சியைப் போற்றுகிறோம். கொடுங்கோலர்களின் அழிவிற்கு மகிழ்கிறோம். வரலாற்றுக் காலம் முழுவதும் மறைந்தும் தெளிந்தும் ஓடிய இந்த நீரோட்டத்திற்குத் தான் இன்று சோசலிசம் எனப் பெயரிட்டு உள்ளோம். அடிக்கடி அறுபட்ட நிலையிலும் வரலாறு தொடர்கிறது. நீரோட்டம் தொடர்கிறது. வரலாற்றை நம் தேவைகளுக்கு ஒத்த முறையில் இப்படித்தான் பொருள் கொள்கிறோம். இன்று நமக்குத் தேவையான பார்வைகளை வரலாற்றிலிருந்து மரபு எனத் தொகுக்கிறோம். லெனின் கூறியதை இங்கு நினைவுபடுத்தி கொள்ளலாம். முன்னைய வரலாற்றின் மரபுகளின் தொடர்ச்சியாக மார்க்சியத்தைப் படைக்கிறோம். ஆதிக்க சக்திகளின் சார்பில் இப்படி வரலாற்றை நாம் அர்த்தப்படுத்தவில்லை. ஆதிக்க சக்திகளை ஒதுக்கிவிட்டும் வரலாற்றை அர்த்தப்படுத்த முடியாது. வரலாற்றில் அவர்கள் மூலம் நாம் காயப்பட்டு இருக்கிறோம். திரிந்த நிலையிலும் திறன்கள் பெற்றிருக்கிறோம்.

கலைஞன் என்ற முறையில் வரலாற்றுக்குள்ளும் நமக்குள்ளும் ஆழ்ந்து செல்லும்பொழுது வரலாற்றுக்கும் முற்பட்ட அந்த ஆதிவாசி, பொதுவுடைமையாளன், சன்னியாசி நமக்குள் காலம்தோறும் தொடர்ந்து இயங்குவதைக் காண்கிறோம். உலகம் பொது என முழங்குபவன் இந்தக் கலைஞன், இவனே படைப்பாளி. இவனே மனிதன். ஆதிக்கத்தைத் தனக்குள்ளும் வெளியிலும் இவன் அனுமதிக்க மாட்டான். தன்னை அழிக்கிற சக்திகளை எதிர்த்துப் போராடுவதன் மூலம், போராட்டத்தில் தன்னை இழப்பதன் மூலம் இவன், இந்தக் கலைஞன் / இந்த மனிதன் தன்னைப் பெறுகிறான்.

மார்க்சியத்தினுள் ஆழ்ந்து செல்லும்பொழுது மனிதனுக்குள், கலைஞனுக்குள், படைப்பாளிக்குள் சோசலிசம் என்ற காட்சியைக் காண்கிறோம். மார்க்சிய நோக்கில் இலக்கியம் பற்றிய ஆழ்ந்த பார்வை இதுவாகத்தான் இருக்கமுடியும். இதுதான் மார்க்சிய நோக்கிலான மெய்யியல் பார்வை. வரலாற்றுப் புரிதலிலான மெய்யியல் பார்வை.

இப்பொழுது கட்சி சார்ந்த மார்க்சியத்தின், சோசலிச எதார்த்தவாத இலக்கியக் கோட்டிபாட்டின் குறைகள், திரிபுகள் மற்றும் கோளாறுகளை

மதிப்பிட்டுக் கொள்ளலாம். வெற்றுப் பிரதிபலிப்பு, மார்க்சியக் கோட்பாடு ஆகமுடியாது. கலைஞன் வேறு, தொழிலாளி வேறு என்று பிரிக்க முடியாது. அதிகாரத்தின் எந்த வடிவத்தையும் மார்க்சியத்தினுள் அனுமதிக்க முடியாது. கட்சி ஓர் ஆதிக்க நிறுவனமாக செயல்பட முடியாது. மார்க்சியவாதிக்குள் ஆழ்ந்த வரலாற்றுப் பார்வை, மெய்யியல் பார்வை தேவை. வறுமை, கொடுமைகள் என்ற அளவில் கலைஞன் தன் பார்வையை மேம்போக்காக வைத்துக் கொள்ள முடியாது. தானும் கலைப்படைப்புமாக அவன் ஒன்றாகி விட வேண்டும்.

மார்க்சியத்தினுள் ஆழ்ந்து செல்லும் பொழுது, மிக விரிந்த வரலாற்றுப் பார்வை ஏற்படுகிறது. இயற்கை, சமூகம், வரலாறு ஆகிய அனைத்தையும் தழுவிக் கொள்ளும் வகையில் அவன் பார்வை விரிவுபட வேண்டும். வரலாற்றில் அடிபட்டு, அடிமைப்பட்டு, காயப்பட்டுத்தான், தனக்குள் தன் பார்வைக்குள், இத்தகைய விரிந்த களம் ஏற்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும். ஓரங்களில் கலைஞன் ஒதுங்கி இருக்க முடியாது. கட்சிக்கு அடிமைப்பட்டு தன் பார்வையைக் குறைத்துக் கொள்ள முடியாது. ஆத்திரத்தில், கோபங்களில் தன்னை அழித்துக் கொள்ள முடியாது. தனக்குள் ஆழ்ந்து செல்லும்பொழுது தான் வரலாற்று வழியாகத் தனக்குள் திரண்டிருக்கும் சக்திகளைத் தனக்குள் பெறுகிறான். சமுதாயத்தின் கூட்டுமனத்தைத் தனக்குள் சந்திக்கும் தருணங்களில்தான் தெய்வங்கள், பிசாசுகள், தொன்மங்கள், புராணங்கள் ஆகியவற்றின் உள்ளியக்கத்தை அறிகிறான். கடவுளையும் பிசாசுகளையும் வரலாற்றுச் சூழல் தான் தனக்குள் தோற்றுவித்தது என உணர்கிறான். வரலாற்று இயக்கத்தை முடமாக்கும் ஆதிக்க சக்திகளுக்கு எதிர்வினை ஆற்றுபவர்களின் வரிசையில் தன்னைக் காண்கிறான். கட்சிவாதம், தொழிற்சங்க வாதம், பொருளாதார வாதம், அறிவு மற்றும் அறிவியல் வாதம் ஆகியவற்றிற்கு இடம் தந்த கட்சிகளின் பார்வையில் மார்க்சியம் தளைக்காது. இத்தகைய கட்சியின் எல்லைக்குள் கலைஞன் படைப்பாளியாக விரிய முடியாது. இப்படிக் கட்சியால் குறுகத் தரித்து உருவாக்கப்பட்டது தான் சோசலிச எதார்த்த வாதம்.

– 3 –

மார்க்சியத்தின் இலக்கியக் கோட்பாடு என்று பேசுவதைவிட இலக்கியக் கோட்பாட்டுக்கு மார்க்சியம் தந்த ஆதாயங்கள் அல்லது மார்க்சியத்தின் வழியே இலக்கியம் பெற்ற ஆக்கங்கள் என்று பேசுவது தான் இன்னும் பொருத்தமாக இருக்க முடியும். இலக்கியம் பொதுவாக

மனிதனைப் பற்றிப் பேசுகிறது. முரண்பாடுகளுக்குள் சிக்கி தவிக்கும் மனிதனின் வேதனைகளைச் சொல்லுகிறது. வேதனைக்களுக்குள் அகப்பட்ட மனிதன் வெளியேறத் துடிக்கிறான். நெருக்கடிகளுக்குள் அகப்பட்ட நிலையில் வாழ்வுக்கான அர்த்தம் சிதைவதையுணர்கிறான். நெருக்கடிகள் எப்படி எந்த வரலாற்றுச் சூழலில் ஏற்பட்டன என்றும் சிந்திக்கிறான். வரலாற்றுக் காலம் முழுவதும் ஏதாவது சில நெருக்கடிகளின் ஊடேதான் மனிதன் வாழந்திருக்கிறான். வரலாற்றின் வழியே தனக்குள்ள சக்திகள் மூலம் தன்னை வலிமைப்படுத்திக் கொள்ள முனைகிறான். விடுதலை மட்டுமே இவனுக்கு இறுதி இலக்கு.

மனிதனின் இந்தக் கதையைச் சொல்வது தான் இலக்கியம். காவியங்களும், புராணங்களும் இந்தக் கதையைத்தான் சொல்லுகின்றன. நம் காலத்துச் சிறுகதைகளும், நாவல்களும், நாடகங்களும் எத்தனையோ வடிவில் வெளிப்படுத்துகின்றன. இறுதி இலக்கு என்ற வெளிச்சம் இடையிறாது தெறிக்கிறது. புற உலகைப் புரிந்து கொள்வதிலும் அக உலகைப் புரிந்து கொள்வதிலும் வரலாற்றுக் காலம் நெடுகிலும் எத்தனையே மயக்கங்கள், மாயைகள், திரிபுகள் மனிதனுக்குள் எழுந்திருக்கின்றன. இவை எல்லாமே இலக்கியத்தின் வடிவங்களாகவும், மரபுகளாகவும் செயல்பட்டு இருக்கின்றன. மாயைகளை, திரிபுகளை, தொடர்ந்து மனிதன் கடந்து வந்திருக்கிறான். இன்றும் இந்த நிலை தொடர்கிறது. என்றாவது திரிபோ மாயையோ இல்லாமல் மனிதன் அகத்தையும், புறத்தையும் முற்றாக புரிந்து கொள்ள முடியுமா என்பதும் நமக்குள் எழும் கேள்வி. தடுமாற்றங்கள் இருந்த போதும் தடைகளைத் தகர்த்துக் கொண்டும் மனிதன் பயணம் செய்கிறான்.

இலக்கியம் பற்றி ஒரு பொதுவான கோட்பாடு என்று இதைச் சொல்லலாம். மனிதனைப் பற்றிய இத்தகைய இலக்கிய ஆக்கத்திற்கு வரலாறு, பொருளியல், மெய்யியல் மட்டுமல்லாமல் வேறு பல மானுடவியல் மற்றும் அறிவியல் துறைகளும் பங்களிக்கின்றன. மனிதன் அகப்பட்டுள்ள நெருக்கடிகளை மேலும் மேலும் சரிவர புரிந்து கொள்வதற்கும், படைப்பு முயற்சிகளில் ஈடுபடுவதற்கும் கூடியவரை அதிக அளவிலான வரலாறு, உளவியல் துறைகளில் அறிவு தேவைப்படுகிறது. படைப்பாளி எந்த அளவுக்குப் பலதுறை அறிவின் வழியே நெருக்கடிகளை ஆழப்புரிந்து கொள்கிறானோ, அந்தளவுக்குப் படைப்பியக்கம் அவனுக்குள் தீவிரப்படும். படைப்பாளி முன்னைய சமூகத்தோடு, கருத்தியல்களோடு, வரலாற்றோடு ஒரு போர் நடத்துகிறான். உரையாடல் நடத்துகிறான். அவற்றிலிருந்து

தன் காலத்திற்கான, தன் பயணத்திற்கான அர்த்தங்களைச் சேகரிக்கிறான். கலைஞன் தனக்குள் ஒரு மெய்யியலாளனாகச் செயல்படுகிறான். இப்படி செயல்படும் பொழுது படைப்பாளி / கலைஞன் வரலாற்றில், தன் காலத்தின் குரலாகச் செயல்படுகிறான். தன் வரலாற்றுக்கால நெருக்கடிகள், பார்வைகள், வெளிச்சங்கள் ஆகியவற்றை உள்வாங்கி வெளிப்படுத்தும் கலைஞன், தான் என்ற தன்னிலையை இழக்கிறான். இவன் வழியே வரலாறு அல்லது சமூகம் அல்லது இலக்கியம் தன்னை வெளிப்படுத்துகிறது. இவன் குரல் மக்களின் விடுதலைக்கான குரல். வாழ்வை அழிக்கும் அதிகாரத்திற்கு எதிரான குரல். மனித விடுதலை தான் இலக்கியத்தின் கருப்பொருள்.

இலக்கியம் பற்றிய பேருருவக் கோட்பாடு என இதைச் சொல்லலாம். இப்படி குறிப்பிட்டவுடன் இலக்கியம் பற்றிய நுண் உருவக் கோட்பாடு எனவும் சில இங்கு சொல்ல வேண்டும். காலம் தோறும் இலக்கியத்தின் வடிவங்கள் மாறுகின்றன. கருப்பொருள்கள் மாறுகின்றன. உத்திகள் மாறுகின்றன. இப்படி ஒவ்வொன்றும் எவ்வாறு ஏற்பட்டது என்ன தேவையோடு இயங்குகிறது என்று ஆராய்வது நுண்ணுருவம் பற்றிய ஆய்வு. இலக்கியத்தில் அறத்திற்கு என்ன இடம்? மெய்பாடு அல்லது சுவை உணர்விற்கு என்ன இடம்? மரபுக் கவிதையும், புதுக்கவிதையும் ஏன் வேறுபடுகின்றன? நாவலும் சிறுகதையும் வேறுபடுவது எதனால்? இவற்றிலிருந்து கவிதை எவ்வாறு வேறுபடுகிறது? அற இலக்கியமும் பக்தி இலக்கியமும் எவ்வாறு வேறுபடுகின்றன. அழகியல் என்பது என்ன? இப்படி பற்பல கேள்விகளை எழுப்பிக் கொண்டு இலக்கியத்தின் நுண் உருவங்கள் பற்றி ஆய்வு செய்யலாம். கோட்பாடு வகுக்கலாம்.

காலம்தோறும் இலக்கியங்கள் மாறுபட்ட அர்த்தங்களை வாசகர்களுக்குத் தருகின்றன. இலக்கிய வாசிப்பில் வாசகனுக்குள்ள உரிமை என்ன? ஒரு பிரதி இவனுக்குள் எப்படி இலக்கியம் ஆகிறது. இலக்கியத்தில் தர வேறுபாடு உண்டா? இலக்கியம் உண்மை சொல்கிறதா? எதார்த்தம் என்பது என்ன? கற்பிதம் செய்து கொள்ளப்படாத எதார்த்தம் என்று ஒன்று இருக்க முடியுமா? இலக்கியத்தினுள் பன்முக பார்வைக்கான நியாயம் என்ன? இப்படி எல்லாம் இன்று பல கேள்விகள் எழுந்துள்ளன. இந்த கேள்விகளின் காரணமாக இலக்கியத்திற்கான பெரும் கோட்பாடு உண்டு என்பதை மறுத்துவிட இயலாது. திரும்பவும் சொல்லலாம், மக்கள் விடுதலை தான் இலக்கிய கோட்பாட்டிற்கும் மையம்.

– 4 –

மக்கள் விடுதலை நோக்கில் தான் இலக்கிய கோட்பாடு அமைய முடியும் என்ற பொது கருத்தின் அடிப்படையில் தலித் இலக்கியம் பற்றி, தலித் இலக்கியத்திற்குத் தனி கோட்பாடு தேவையா என்பது பற்றி இபபொழுது பார்க்கலாம். முதலில் தலித் சமூகத்தின் விடுதலை எவ்வாறு சாத்தியப்படும் என்பது பற்றிய பார்வை செலுத்துவது தேவை. அதன் வழியே இலக்கியக் கோட்பாட்டிற்குச் செல்லலாம்.

வரலாற்றின் விளிம்பில் அல்லது வெளியில் இருக்கும் தலித் மக்கள் வரலாற்றின் மையத்தை நோக்கி இயங்கியாக வேண்டும். ஆதிக்க சக்திகளிடமிருந்து வரலாற்றைக் கைப்பற்றி தமதாக்கிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் தான் மக்களுக்கு விடுதலை சாத்தியம். இத்தகைய நோக்கு பாட்டாளிகள் உட்பட உழைக்கும் மக்கள் அனைவருக்கும் மார்க்சியம் முன் வைத்திருக்கிற நெறி.

பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் உட்பட புதிய காலனியம் / ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் அந்தந்த நாட்டு முதலாளியத்தோடும், அரசு அதிகாரத்தோடும் மக்கள் மீது உச்ச அளவில் சுரண்டலையும், ஒடுக்குமுறையையும் தொடர்ந்து திணிக்கிற இன்றைய சூழல் பாட்டாளி வர்க்கமும் வரலாற்றின் ஓரத்திற்கு விரட்டப்படுகிறது. உழவர்கள் மேலும் அதிக தொலைவிற்கு விரட்டப்படுகிறார்கள். தலித் மக்களின் நிலைமை மேலும் கடுமையாகும். பெண்களின் நிலைமை பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை. இத்தகைய நிலவரங்கள் இங்கு தெளிவாகத் தெரிகின்றன. பாட்டாளிகள் உழவர்கள் அளவில் மார்க்சியருக்கும் கடுமையான சிக்கல் ஆகிவிடுகிறது. இந்த பின்னணியில் தான் தலித் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறோம்.

வேறு எந்தச் சமூகப் பிரிவைக் காட்டிலும் தலித் மக்கள் தீண்டாமை எனப்படுகிற சாதிக் கொடுமைக்குக் கடுமையாக உள்ளாக்கப் பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு சாதியும், சாதியடுக்கின் தனக்கு மேலுள்ள சாதி / சாதிகளால் இழிவாக நடத்தப்படுகிறது என்பது உண்மை என்றாலும், தீண்டாமைக் கொடுமையால் பாதிக்கப்படுவது தலித் சமூகம் தான். சாதியம் என்ற அமைப்பு தகர்க்கப்பட்டால் ஒழிய தீண்டாமை யிலிருந்து தலித் மக்களுக்கு விடுதலை இல்லை என்பது புரிந்து கொள்ள முடியும். தீண்டாமையைப் பிற சூழலிலிருந்து தனிப்படுத்தித் தகர்க்க

முடியுமா என்பது கேள்வி எனினும் தீண்டாமைக்கு எதிராக நாங்களும் மனிதர்கள்தான் என்ற முறையில் தன்மானத்தோடு தலித் மக்கள் பிற சாதியினருக்கு எதிராக போராடித் தான் தீரவேண்டும். இது தலித் மக்களின் உடனடிக் கடமை. இதற்காக நூற்றுக்கணக்கானவர் பல்லாண்டுகளுக்கு உயிர் கொடுத்தும் போராட வேண்டியிருக்கும். தவிர்க்க இயலாதது இந்த இழப்பு. கிராமப்புறங்களில், இத்தகைய போராட்டங்களின் விளைவாக ஆதிக்கச் சாதியரோடு மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் இணைந்து தலித் மக்கள் மீது தாக்குதல் தொடுப்பதும் கண்கூடு. இந்தச் சூழலில் தலித் மக்களோடு ஒத்துழைக்கும் முறையில் தோழமை இயக்கங்களும் தேவைப்படுகின்றன.

நாம் ஏற்கனவே பார்த்தபடி சமுதாயம் முழுவதும் உள்ள உழைக்கும் மக்கள் மீது ஆதிக்கவாதிகளின் சுரண்டல் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் தலித்மக்கள்மீது சாதிய கொடுமையோடு சுரண்டலின் அடிப்படையில் ஒடுக்குமுறையும் கடுமையாக திணிக்கப்படும் என்பதையும் சேர்த்துப் பார்த்தால் தலித் மக்கள் இந்த இருவகை போராட்டங்களிலும் ஒருசேர போராட வேண்டிய நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறார்கள். தலித் மக்கள் மத்தியில் கடந்த ஒரு தலைமுறைக் காலத்தில் தோன்றியுள்ள படிப்பாளிகளும் அறிவாளிகளும் இந்த நிலவரங்களைப் பற்றிய தெளிவு பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். முதலில் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக போராட்டம். பிறகு தான் வேறுவகை போராட்டம் என்று. இந்த இரண்டு வகைப் போராட்டத்தையும் எதிர்நிலைப்படுத்துவது என்ற போக்கு ஏற்கக்கூடியதாக இல்லை. இந்த இருவகைப் போராட்டத்தையும் எப்படி ஒருங்கிணைத்துச் செய்வது என்பதும் சிக்கலாக உள்ளது.

வரலாற்றின் மையத்தை நோக்கி தலித் மக்கள் நகர வேண்டும், இயங்க வேண்டும் என்று கூறினோம். எப்படி இதைச் செய்வது? என்பது ஒரு கேள்வி. கிராம்சி கூறியபடி புரட்சிகரமான சமூக மாற்றத்திற்கான முன் நிபந்தனைகளில் ஒன்று, புரட்சியில் ஈடுபடும் மக்கள் தம் கலாச்சார மேலாண்மையை நிறுவ வேண்டும். 'பாட்டாளி வர்க்கத்தினுள் சோசலிச உணர்வுகளைப் புகுத்துவது அறிவாளிகளின் கடமை' என்று லெனின் கூறியதையும் இங்கு நினைவு கூறலாம். மரபு வகையிலான அறிவாளிகளிலிருந்து, மரபின் ஆதிக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட உயிர்ப்பாற்றல் மிக்க அறிவாளிகள் பற்றியும் கிராம்சி கூறியதை இங்கு நினைவு கூறலாம்.

மரபுமுறை வேளாண்மையில் தேர்ந்த அறிவுடையவர்கள் கிராமப்புறத்தில் உள்ள தலித் மக்கள். நவீன முறையிலான சாகுபடி முறை நிலவளத்தையும், நீரையும் மக்கள் நலத்தையும் கடுமையாகப் பாதிக்கிறது என்பதால் இப்போது மரபுமுறை வேளாண்மைக்கு மெதுவாகவேனும் திரும்ப வேண்டியிருக்கிறது. தலித் மக்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமையமுடியும். சிறு நிலவுடமையாளராகவாவது இருக்கும் தலித் மக்கள் இதைப்பற்றி சிந்திக்க முடியும். வேளாண்மையைப் போலவே கால்நடை வளர்ப்பிலும் தலித் மக்களின் தேர்ச்சியைக் குறிப்பிடலாம்.

நகரத்தில் தீண்டாமை குறைவு என்பதைக் காரணம் காட்டி நகரிய பெருக்கத்திற்குத் தலித் மக்கள் காரணியாக இருக்கலாமா என்பது பற்றியும் சிந்திக்கலாம். காலணிகள் தயாரித்தல், தோல் பதனிடுதல் ஆகிய துறைகளில் தலித் மக்களின் தேர்ச்சியை நகர்ப் புறங்களில் தலித் மக்கள் அல்லாத பிற சாதியைச் சேர்ந்த சிறிய / பெரிய முதலாளிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். துணிகளைச் சலவைச் செய்தல், முடி திருத்துதல் ஆகியனவும் நகரியம் சார்ந்த தொழில்கள் ஆகி வருகின்றன. தலித் மக்களுக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள், இட ஒதுக்கீடு காரணமாக கூடிவருகின்றன. இவற்றின் விளைவாக வாழ்க்கைத் தரத்தில் இவர்கள் மேம்படலாம். இது வரவேற்கத்தக்கது போக்கு தான், என்ற போதிலும் முதலாளியத்திற்கு அதிகாரத்திற்கும் இவர்கள் சிறைப்படுகிறார்கள் என்பதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய சூழலில் நடுத்தர மக்கள் பெருமளவு நுகர்வியத்திற்கு பலியாகி வருகிறார்கள். தனியார்துறை, அரசுத்துறை, கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும், இவர்கள் மூலம் தான் ஏகாதிபத்தியம், முதலாளியம் அரசு அதிகாரம் செயல்படுகின்றன. ஆதிக்க சக்திகளை இவர்கள் உள்வாங்கிக் கொண்டவர்கள். ஆதிக்க சக்திகள் இவர்களுக்குத் தரும் பதவி பாதுகாப்பு, அலங்காரங்கள் வழியே ஆதிக்க சக்திகளுக்கு இரையாகி மலினப்பட்டு தன் ஆன்ம பலம், அறவுணர்வு ஆகியவற்றை இழந்து வாழ்வின் அர்த்தங்களை இவர்கள் அழித்துக் கொள்கிறார்கள். இவர்கள்மூலம் தான் உழைக்கும் மக்கள் மீது சுரண்டலும் ஒடுக்குமுறையும் திணிக்கப் படுகின்றன. இவர்கள்தான் ஆதிக்கத்தை உள்வாங்கி கொண்ட மத பீடங்களோடும் ஒத்துழைக்கிறார்கள்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் காரணமாக நடுத்தர மக்களோடு சேர்ந்து படித்த தலித் மக்களும் அரசுத்துறை நிறுவனங்களில் பணி

புரிகிறார்கள். நடுத்தர மக்களின் அனைத்து வாய்ப்புகளும் இவர்களுக்குக் கிடைக்கின்றன. ஆதிக்கத்தை இவர்களும் உள்வாங்கி கொண்டுச் செயல்படுகிறார்கள். அவ்வப்போது நச்சுத் தீண்டல் போல, மின் தாக்குதல் போல இவர்களின் சாதிப்பெயர் சொல்லி, இவர்களை இழிவுபடுத்தி வலிமை அழிக்கும் போக்கும் பிற சாதியினரால் கடைப்பிடிக்கப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் சீறிப் பாய்வது இன்றியமையாதது ஆகிறது.

வரலாற்றில் மையத்தைக் கைப்பற்றுவது பற்றிப் பேசுகிறோம். ஆதிக்கச் சக்திகளுக்குச் சேவை செய்வதன் மூலம் மக்களுக்கான வரலாற்று இயக்கத்தை அழிக்கத்தான் செய்வோம். ஆகவே ஆதிக்கச் சக்திகளுக்கு எதிர்நிலையில் தான் நாம் இயங்கியாக வேண்டும். இன்றைய சமூக சூழலில் கல்வி நிறுவனங்கள் தரும் கல்வி ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொள்கிற கல்விதான். மார்க்சிய இயக்கங்கள் மட்டும் அல்லாமல் தலித்தியக்கங்களும் சீரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். பள்ளிக் கல்வியின் பகுதியாக இது அமைய முடியாது. மாலை நேரத்திலோ விடுமுறைக் காலங்களிலோ இத்தகைய மாற்றுக்கல்வியில் நம் மாணவர்களுக்குப் பயிற்சி தர வேண்டும். கல்வி மேலும் மேலும் உலகளாவியதாக விரிவு பெற்று வருகிறது. பலதுறை கல்வியில் நம் மாணவர்களை தேர்ச்சி பெறச் செய்ய வேண்டும்.

மூன்றாம் உலக நாட்டு மக்கள் நலன்களையும், ஆப்பிரிக்க, அமெரிக்க கருப்பின மக்கள் நலன்களையும் உள்வாங்கி கொண்டவர்களாக நம் மாணவர்கள் விரிவடைய வேண்டும். உலக அளவில் நம் பார்வை பதிய வேண்டும். அரசுப் பணிகளில் அமர்ந்திருப்பவர் கூடுதலான வேலைத் திறன்கள் பெறத்தான் வேண்டும். மேல் சாதியினர் இவர்களை குறைத்துப் பேச இடம் தரக்கூடாது. அன்றியும் மக்கள் நலன் கருதி உயர் அதிகாரிகளையும் மறுத்து இவர்கள் தீவிரமாக செயல்பட்டு ஆக வேண்டும். ஒரு தலைமுறைக் காலம் விடாப்பிடியாக இத்தகைய செயல்பாடுகளில் தலித் மக்களை தலித் இயக்கங்களோடு சேர்ந்து பிற இயக்கங்களும் தூண்ட வேண்டும்.

ஆதிக்கச் சக்திகளால் தூண்டப்படும் நுகர்வியத்திற்குத் தலித் மக்கள் பலியாக வேண்டியது இல்லை. அதைப் போலவே அதிகார வெறி மேட்டிமைத்தனம் முதலியவற்றையும் இவர்கள் தம் குணங்கள் ஆக்கிக் கொள்ள வேண்டியது இல்லை. எளிய முறையிலான வாழ்வியலில் இவர்கள் பயின்றவர்கள். அதிகாரம் இவர்களுக்குள் இல்லை. தலித் மக்கள் கடுமையான உழைப்பாளிகள். பெண்கள் கூடுதலான சுதந்திரம் உடையவர்கள். பறை, முதலிய கலை உணர்விலும் தேர்ந்தவர்கள். மதம் இவர்களுக்குள் ஆதிக்கம் பெறவில்லை. இவ்வகை போக்குகள்

காரணமாக குறைந்த அளவுக்கு இவர்களேனும் முதலாளியம், அரசு அதிகாரம் ஆகியவற்றின் ஆதிக்க உணர்வை உள்வாங்கி கொள்ளாதவர்களாக இருக்க முடியும். அன்றியும் மேட்டுக் குடிகளின் நாகரிகம் சார்ந்த அலங்கோலங்களை இவர்கள் பரிகசிக்க முடியும். ஆதிக்க உணர்வில் மையங்கொள்ளாத ஒரு வாழ்வியல் நெறிக்கு இவர்கள் ஆதாரமாக முடியும்.

இவர்களால் இயற்கை நாசப்படவில்லை. மண்ணோடும், நீரோடும் இவர்கள் நெருக்கமானவர்கள். உயிரினங்கள் இவர்களின் நேசத்துக்கு உரியவை. இவர்களின் தெய்வங்கள் இவர்களைப் போலவே எளிய தெய்வங்கள். சமூகத்தை எவ்வாறு மீண்டும் திருத்தி அமைப்பது என்று தேடும் ஆய்வாளர்களுக்கு இவர்கள் சான்றாதாரமாக இன்றும் அமைய முடியும். உயர் சாதியினரின் அதிகாரம், திமிர்த்தனம் காரணமாக இவர்களுக்குள்ளும் காயங்கள் உண்டு. உயர்சாதியினர் பற்றி இவர்கள் கேலிச் சித்திரங்கள் புனைகிறார்கள். சமூகச் சூழலில் இவர்கள் மீது குவிக்கப்படும் நெருக்கடிகள் காரணமாக இவர்கள் தந்திரங்கள் கற்றிருக்கிறார்கள். பொய்யர்கள் என்றும், சோம்பேறிகள் என்றும் தந்திரக்காரர்கள் என்றும் உயர் சாதியினர் சொல்லும் வசை மொழிக்கு அடியில் ஊடுருவிப் பார்த்தால் உயர் சாதியினரின் அவலட்சணங்கள் தெரியும். இவர்களுக்கும் கதைகள் உண்டு. கதைகளும் பாடல்களும் உண்டு. ஒரு சமூகமாய்த் தம்மைத் தக்க வைக்கும் திறன்களை இவர்கள் பெற்றிருக்கிறார்கள்.

இவ்வகைத் திறன்கள் பண்புகள் வழியே நவீனகால சமூக்த்தினுள் இவர்கள் மெல்ல மெல்ல நவீனகாலச் சமூக மையம் நோக்கி நகரமுடியும். உலக அளவிலான பார்வையையும், அறிவையும் திறன்களையும் தமக்குள் உயர்த்திக் கொள்ள வேண்டும். ஆதிக்கத்தை உள்வாங்கிய மார்க்சியர் உட்பட சமூக மாற்றத்திற்கான அனைத்து இயக்கங்களையும் கேலி செய்வதன் மூலம் அவற்றை நேரிய நிலைப்பாட்டிற்குள் கொண்டுவர இவர்கள் உதவிசெய்ய முடியும்.

– 5 –

தலித் இலக்கிய கோட்பாடும், தலித் மக்களின் விடுதலைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவே இருக்கமுடியும். தலித் மக்களின் விடுதலை உழைக்கும் மக்கள் விடுதலையின் ஒரு பகுதியாகவே இருக்கவும் முடியும். தலித் மக்கள் தம்மீது சுமத்தப்பட்டுள்ள சாதி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதை மட்டுமே தமக்கான

திட்டமாகவும் கொள்ள முடியாது. ஒட்டு மொத்தமான மக்களின் விடுதலையிலிருந்து தம் சமூகத்தின் விடுதலையைத் தனித்துப் படைத்துக் கொள்ளவும் முடியாது. இந்நிலையில் தலித் மக்கள் தம்மளவில் மட்டுமே சாதி அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான இயக்கச் செயல்பாட்டையும் வகுக்க முடியாது. அனைவரும் கடுமையான முரண்பாட்டில் தான் அகப்பட்டுள்ளோம்.

தமிழகத்தில் சாதி ஒழிப்புக்கு அழுத்தம் தந்து அதையே தம் திட்டமென தலித் அரசியல் பேசுபவர்களின், இலக்கிய கோட்பாடும் இலக்கிய ஆக்கமும் எவ்வாறு உள்ளன என்று பார்க்கலாம். ஆதிக்கத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சிய கட்சிகளின் இலக்கியக் கோட்பாட்டை ஒத்ததாகவே இவர்களின் கோட்பாடும் இருப்பதை உடனடியாக புரிந்து கொள்ள முடியும். இவ்வகை மார்க்சியரின் இலக்கிய ஆக்கம் அரசியலையே முதன்மை நோக்கமாக கொண்டது. சரியாகச் சொன்னால் இவர்கள் கருத்துப்படி மார்க்சிய அரசியலின் பகுதியாகவே இலக்கியம் இருக்கமுடியும். தொழிலாளிகள் நல்லவர்கள். முதலாளிகளும் நிலவுடமையாளர்களும் தீயவர்கள், மற்றும் கொடியவர்கள். தொழிலாளர்களின் தன்மானத்தை முதலாளிகள் மதிப்பதில்லை. முதலாளியச் சுரண்டல், தொழிலாளர் குடும்பப் பெண்களைத் தமக்கு உரிமையாக்கிக் கொள்வதையும் உள்ளடக்கிக் கொள்வதாக நடக்கிறது. தொழிலாளர்களுக்குள் அக முரண்பாடு இல்லை. உளவியல் சிக்கல்கள் இல்லை. முதலாளிகள் நுகர்வியத்தில் ஊறியவர்கள், தொழிலாளிகள் இப்படி இல்லை. தலைவர்கள் புனிதமானவர்கள். கட்சி மிக முக்கியம். வர்க்கவுணர்வே படைப்பாளி கொண்டிருக்க வேண்டும். கலை கலைக்கவே என்பது வர்க்க எதிரியின் போக்கு. உருவத்திற்கு முக்கியம் இல்லை. உள்ளடக்கம் தான் முக்கியம். வர்க்க உறவின் ஆதாரத்தில் மக்களைத் திரட்டுவதற்குத் தான் இலக்கிய படைப்பு தேவைப்படுகிறது.

கட்சி சார்ந்த மார்க்சியரின் இலக்கியக் கோட்பாடு இப்படி அமைந்து இருந்தது. கட்சி தன் ஆதிக்கத்தை அரசியல் அரங்கில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் அரங்கில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதன் மூலம் அரசு அதிகாரத்தில் இடம் பெறமுடியும். அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் சோசலிசத்தைப் படைக்க முடியும்.

சாதிய அரசியலை நோக்கமாகக் கொண்டு தலித் இலக்கிய கோட்பாடு வகுப்பவர்கள் தமிழகச் சூழலில் மேலே குறிப்பிட்ட

மார்க்சியரைப் போலத்தான் செயல்படுகின்றனர். கட்சி சார்ந்த மார்க்சியரின் இலக்கிய கோட்பாட்டின் தொடர்ச்சியான சற்று வேறுபட்ட பதிவு தான் என்று இதை கருத முடியும். இவர்கள் சாதிய சமூகத்தினுள் தம்மைத் திணித்தவர்கள் எனப் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் மீது கடுமையான கோபத்தை வெளிப்படுத்துகின்றனர். தலித் மக்களிடம் காணப்படும் குணத்திரிபுகள் உயர்சாதியினர் தமக்குள் பதித்தவை என்று கூறுகிறார்கள். தமக்கு மேற்பட்ட சாதியினரைப் பழித்துக் கூறுவதைத் தங்களுக்குத் தேவையான குணம் என்று கூறுகிறார்கள். வசைமொழிகள் மூலம் தமக்குள் பதிந்துள்ள கோபதாபங்ளை விடுவித்துக் கொள்ள முடியும் என விரும்புகிறார்கள். "பழையன கழிதலும்" நாவலில், கவுண்டர் சமூக திமிர்த்தனத்திற்கு எதிர்வினையாக காத்தமுத்து தன்முனைப்போடு நடந்து கொள்கிறார். தன் எல்லைக்குள் வந்த விதவையை தனக்கு வைப்பாக்கிக் கொள்ள முனைகிறார். இவருடைய மகள் கவுரி தன் தந்தையிடம் குற்றம் காண்கிறாள். காத்தமுத்துவிடம் உள்ள குணத்திரிபைச் சிவகாமி வெளிப்படுத்துகிறார். ஆனால் தலித் விமர்சகர் காத்தமுத்துவிடம் நிறை காண்கிறார். இவ்வாறு சிவகாமி பார்ப்பது தலித் சாதிக்குள் தோன்றிய படித்த நடுத்தர மனிதரின் போக்கு என்கிறார் விமர்சகர்.

கன்னியர் மடத்தில் பெண்கள் காமத்திற்கு இரையாவதை அல்லது இரையாக்கப்படுவதை (கருக்கல், விடிவெள்ளி) மறைத்திருக்க வேண்டும் என்ற இந்தக் கோட்பாட்டாளர் கூறுகிறார். இவரும் இன்னும் சிலரும் தலித் மக்களிடம் காணப்படும் சில கலாச்சார கூறுகளை எதிர்க்கலாச்சாரக் கூறுகள் எனச் சிறப்பித்துக் கூறுகின்றனர். இவர்கள் தமக்கு ஆதாரமாக அமைப்பியலின் சில வரையறைகளைக் கூறுகிறார்கள்.

தலித் சமூகத்தைப் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியருக்கு எதிரான அரசியல் அரங்கில் முன்நிறுத்துவது இவர்கள் நோக்கம். படித்த தலித் இளைஞர்களை இயக்கத்தினுள் திரட்ட இவர்கள் இவ்வாறு செயல்படுகிறார்கள். தலித் இலக்கியத்தைத் தலித் தான் படைக்க முடியும் என்கிறார்கள். தலித் இலக்கியத்தில் அழகியல் பார்க்க வேண்டியது இல்லை என்கிறார்கள். அறம், நேர்மை, தியாகம் முதலிய பண்புகளைப் பார்ப்பனிய பண்புகள் எனக் கூறுகிறார்கள். தலித் இலக்கியத்திடம் குறை காண்பவர்களைச் சாடுகிறார்கள். தலித் அல்லாதவர்கள் எழுதியவை / எழுதுகிறவை தலித் இலக்கியமாக இருக்க முடியாது என்கிறார்கள்.

கட்சி சார்ந்த மார்க்சியர் முன்பு எவ்வாறு 'தம் எதிரிகளிடம்' மூர்க்கத்தனமாக நடந்து கொண்டார்களோ அதேபோல் இவர்களும்

எதிரிகளைக் கண்டுபிடித்து மூர்க்கத்தனமாக நடந்து கொள்கிறார்கள். சிவகாமி தம்மவர் என்பதால் அடக்கமாக விமர்சனம் செய்கிறார்கள். இமயத்தை வெளியில் வைத்துச் சாடுகிறார்கள். அறிவழகன் போன்றவர் தம் வட்டத்தில் இல்லை என்பதால் கண்டு கொள்ள மறுக்கிறார்கள். டேனியல் வர்க்கப்பார்வையின் எல்லைக்குள் வைத்து தலித் மக்களின் வாழ்வையும் போராட்டத்தையும் எழுதினார். ஆனால் அவரைத் தலித் அரசியல் எல்லைக்குள் சங்கடத்தோடு தான் வைக்கிறார்கள். பூமணியின் 'நைவேத்தியம்' இவர்களின் பார்வைக்கு வெளியே நிற்கிறது. 'புதிய தரிசனங்கள்' (பொன்னீலன்) இவர்களின் பார்வைக்குள் வருவதில்லை.

தலித் அரசியலை முற்றான அரசியலாகக் கருதும்போது தான் தவிர்க்க இயலாமல் இத்தகைய அதிகாரப் போக்கு வருகிறது. அதிகாரத்தை உள்வாங்கிக் கொண்ட மார்க்சியரும் இதைத்தான் செய்தனர். இதன் காரணமாகவே முதலாளிய ஆதிக்கப் போக்கிலிருந்து மார்க்சியம் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. தலித் அரசியலையும் முற்றான அரசியலாகக் கருதும்போது தலித் மக்களுக்குச் சில சாதகங்கள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. ஆனால் முதலாளிய எல்லைக்குள் தொடர்ந்து உற்பத்தி ஆகும் அடிமைத்தனத்திலிருந்து இவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ள இயலாது. தலித் அரசியல் என்ற கலக அரசியலைக் கடந்து செல்வது பற்றி இவர்கள் சிந்திக்க வேண்டும். முதலாளியத்தைத் தனக்குள்ளிலிருந்து வெளியேற்றி கொள்கிற மார்க்சியத்தின் இலக்கிய கோட்பாடு பற்றி முன்பு கூறினோம்.

இந்தக் கோட்பாட்டில் படைப்பாளிக்கு / கலைஞனுக்கு / மெய்யியலாளனுக்கு முக்கியத்துவம் உண்டு என்று கூறினோம். கிராம்சியின் சொற்களில் கூறுவதானால் இவர்களைப் புத்துயிர்ப்புடைய அறிவாளிகள் என்ற எல்லைக்குள் வரக்கூடியவர்கள். சமுதாயத்தை முற்றான படைப்பியல் நோக்கில் புதுப்பிக்க விரும்புபவர்கள் இவர்கள். இவர்கள் வரலாற்றிலிருந்து ஆற்றல்களையும் பார்வைகளையும் செறித்துக் கொள்பவர்கள். அடிப்படையில் இவர்கள் மெய்யியலாளர்கள்.

இத்தகைய வாய்ப்பு தலித் கலைஞர்களுக்குச் சாத்தியமில்லையா? என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தலித் மக்கள் வரலாற்றுக்கு வெளியே தள்ளப்பட்டவர்கள். அதனாலேயே இவர்களுக்கு வரலாறு இல்லை என்று சொல்ல முடியுமா? இவர்களை வைத்து அடிமைப்படுத்தி ஆதிக்கச் சக்திகள் தமக்கான வரலாற்றைப் படைத்துக் கொண்டார்கள் என்பது உண்மைதான். இவர்களின் வழியே வரலாற்றுத் தேர், இவர்களை

மிதித்தும், காயப்படுத்தியும் சென்றிருக்கிறது. வரலாற்றின் இந்த எதிர்மறைக் கூறுகளை இவர்கள் தமக்குள் நினைவுபடுத்திக் கொள்வது சாத்தியமில்லையா? ஆதிக்க சக்திகளின் வரலாற்றைப் படைக்கிற தளமாக இன்றும் இவர்கள் இருக்கிறார்கள். சில தொழில் வகைகள், கலைகள், கதைகள் ஆகியவை இன்னும் இவர்களிடத்தில் தங்கி உள்ளன. தலித் மக்களிடமிருந்து படிப்பாளிகளும் அறிவாளிகளும் இப்பொழுது தோன்றிய வண்ணமிருக்கிறார்கள். வரலாறு, பொருளியல், கலைகள் எனப் பலவற்றைக் கற்கிறார்கள். இத்தகைய கல்வியின் மூலம் வரலாற்றின் தடத்தைத் தமக்குள்ளும் கண்டு கொள்கிறார்கள்.

ஒரு புதிய சமுதாயத்தைத் தலித் மக்களுக்காகவும் சேர்த்துப் படைக்க வேண்டும் என்ற பார்வை கொள்கிறார்கள் / கொள்ள முடியும். எளிமை இயற்கையின் மீது நேசம் / கடுமையான உழைப்பு முதலிய நற்பண்புகள் இவர்களிடமும் தங்கியுள்ளன. இவர்கள் மார்க்சியத்திற்கு நெருக்கமாக வரமுடியும். இந்த மக்கள் வரலாற்றுக் காலத்தில் செத்துப் பிழைத்தவர்கள். ஒரு புதிய சமூக அமைப்புக்காகச் சாவதற்கு இவர்கள் தயக்கம் கொள்ள மாட்டார்கள். நிச்சயமாக ஆதிக்க உணர்வு அற்ற மார்க்சியம் இவர்களுக்குள் தழைக்க முடியும். இவர்களின் அரசியல் தலித் சாதிகளுக்கே ஆன குறுகிய அரசியலாக இருக்க முடியாது. விரிந்த தளங்களில் இவர்கள் சிந்திக்க முடியும், செயல்பட முடியும். இவர்களால் மன உறுதியோடு போரிட முடியும். தேவைப்படும்பொழுது எதிரிகளை மன்னிக்கவும் முடியும். வரலாற்றின் முரண்களும், நெருக்கடிகளும் எல்லோருக்குள்ளும் தான் செயல்படுகின்றன. கோபத்தில் ஒருவர் நிலைத்திருக்க முடியாது. காயங்கள் ஒருவரை ஆழப்படுத்த முடியும். மீண்டும் இங்கு ஏசுவை நினைத்துக் கொள்ளலாம்.

வரலாற்றை உள்வாங்கிய நிலையில்தான் மனம் எல்லையற்று விரிவுபெறுகிறது. செல்வப் பெருக்கும், அதிகாரப் பெருக்கும் வரலாற்றில் தோன்றி பிறகு அழிந்து போனதைப் பார்க்கிறோம். இவற்றின் வழியே மனிதன் ஆக்கம் பெற்றுள்ளான். பெற்ற ஆக்கம் எத்தகையது? உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை தேவைதான். இவை தனக்காக மட்டுமல்ல, எல்லோருக்கும் தான். ஆயுதங்கள் தான் மனிதனை நிர்ணயித்தனவா? இல்லை. ஆணவம் என்ன ஆயிற்று? வரலாற்றின் மேற்பரப்பில் எவ்வளவோ நடைபெற்றன. உள் ஆழங்களில் என்ன சேர்ந்திருக்கிறது. அந்த நீரோட்டத்திற்கு என்ன பெயர்? எல்லோருக்கும் பொதுவான வாழ்வு. உழைப்பில் இன்பம். பகிர்தலில் இன்பம். அன்பில் தழைக்கும் இந்த வையம். இங்குதான் தென்றல் தவழ்கிறது. மலர்கள் விரிகின்றன.

காற்றில் இசை கலந்திருக்கின்றது. இப்படி எல்லோருக்குமான ஒரு உலகம் வேண்டும். இந்தக் கனவைத் தனக்குள் கொண்டிருப்பதுதான் இலக்கியம். வரலாற்றை உள்வாங்கிய கலைஞனுக்கு மெய்யியலாளனுக்கு இந்த பார்வை சாத்தியம். இந்தப் பார்வையை இலக்காக வைத்துக் கொண்டு தான் வாழ்க்கை / இலக்கியம் / அரசியல் இயங்க வேண்டும். ஆதிக்கத்தைத் தனக்குள்ளிருந்து வெளியேற்றிக் கொள்கிற அரசியலுக்கு இது சாத்தியம், வர்க்கப் போராட்டத்தின் மூலம் வர்க்கங்களைக் கடந்து செல்ல வேண்டும். சாதிகளுக்கு எதிரான போராட்டத்தின் மூலம் சாதிகளைக் கடந்து செல்ல வேண்டும், அரசுகள் உதிர்ந்து போக வேண்டும். மக்கள் தம்மை சுயமாக நிர்வாகம் செய்து கொள்ள வேண்டும். இது மார்க்சியத்தின் பார்வை.

இலக்கியம் இந்தப் பார்வையைத் தனக்குள் வரித்துக் கொள்ள வேண்டும். தனக்குள் அதிகாரத்தைக் கொண்டிருக்கிற இலக்கியத்திற்கு / அரசியலுக்கு இந்த பார்வை சாத்தியமில்லைதான். இந்தப் பார்வையைத் தனக்குள் கொள்ளாத இலக்கியம் மனிதனை மேம்படுத்தாது.

டேனியலுக்கு வர்க்கப் பார்வை தெரியும் 'அடிமைகள்' நாவலில் நைனார் பெருகக் கட்டி வாழ்ந்து இப்பொழுது ஏலத்தில் விடப்படுகிற வீட்டை ஏலத்தில் எடுத்து கண்ணம்மாளுக்குத் தருகிறார் கந்தன். நைனாத்தியின் குழந்தைக்குப் பால் கொடுத்த நிலையில் தன் கணவனை இழக்கிறாள் செல்லாச்சி. 'தண்ணீர்' நாவலில் புங்கொடுசிங்கி தலித் மக்களுக்குத் தன் நிலத்தைத் தானமாக தருகிறாள். பாறைகளுக்கு இடையில் வெட்டிய கிணற்றில் தண்ணீர் ஊறவில்லை. சிங்கியைத் தொழுது மாதன் வெட்டுகிறான். தண்ணீர் பீச்சி அடிக்கிறது. 'கானலில்' பாதிரியார் தடுமாறுகிறார். வரலாற்றின் முரணில் தான் அகப்பட்டு கொண்டிருப்பதை அறிந்து கண்ணீர் விடுகிறார். வரலாற்றின் நெருக்கடி இன்னும் வழி திறக்கவில்லை. இப்படி கருணையில் விரிந்திருக்கிறது டேனியலின் பார்வை. வரலாற்றை உள்வாங்கி கொண்ட ஒரு தலித்துக்கு இப்பார்வை சாத்தியந்தான்.

'பழையன கழிதலில்' காத்தமுத்துவின் பல நெருக்கடிகளை சொல்லியிருக்க முடியும். ஆதிக்க சமூகத்தின் நெருக்கடிகளுக்கு இடையில் சிக்கி, நேரிய வழிக்கு இடமின்றி ஆணவத்தில், காமத்தில் தன்னைச் சிதறடித்துக் கொண்டிருந்தவர் காத்தமுத்து. இவ்வாறு சித்திரித்திருந்தால், நாவலின் ஆழமும், கலையழகும் மேம்பட்டிருக்கும்.

கௌரியின் பார்வை முற்போக்கு அரசியலுக்கு ஒத்ததுதான். 'ஆனந்தாயி' நாவலில் இடம்பெறும் பெரியண்ணன் தலித் என்றாலும் பொறுக்கித் தனமான முதலாளியச் சூழலில் ஒத்து இயங்குவதன் மூலம் தன்னை அழித்துக் கொண்டிருக்கிறார். அதிகாரம் கொழுத்த சூழலுக்கு ஆனந்தாயி தரும் எதிர்வினை ஓர் அற்புதம். இலட்சுமி மட்டுமென்ன, வாழ்வியல் நெருக்கடிகளில் சிக்கி தவிக்கிற அபலை, இலட்சுமி. பெரியண்ணனுக்குக் கீழும் அவருக்குச் சேவகம் செய்ய ஒரு தலித் இருப்பதைக் காண்கிறோம்.

'கோவேறு கழுதைகள்' நாவலில் ஆரோக்கியத்தின் அவலம் நம்மை பெரிதும் பாதிக்கிறது. முன்னையச் சமூகம் தனக்குள் திணித்திருக்கிற அடிமைத்தனத்திலிருந்து ஆரோக்கியத்திற்கு விடுதலை இல்லை. முதலாளியம் கிராமத்திற்குள்ளும் நுழைந்து ஆரோக்கியத்தின் வாழ்வை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்குகிறது. ஆரோக்கியம் கதறுகிறாள். மனிதர்களை இப்படிக் கிழித்து போடுகிற சமூக நடைமுறை நமக்குத் தேவையில்லை. ஆரோக்கியத்தின் அவலம் நம் நெஞ்சைச் சுடுகிறது. சுகமாய் இனிக்கவில்லை. மனிதநேயம் என்பது, மக்களின் வாழ்வை அழிக்கும் எதிரிகளுக்கு இரக்கப்படுவது அல்ல. மனிதர்களுக்குள் வரலாற்றின் வழியே வந்த நேயம் இது. மனிதனுக்குத் தான் இந்த நேயம் சாத்தியம். இயற்கையை, உயிர்களை வாழ்விப்பது மனிதநேயம். அழிப்பது மனித நேயம் ஆகாது.

இறுதியாக இப்படி முடிக்கலாம். குறுகிய அரசியல் கடந்து வாழ்வியல் பார்வை மேற்செல்ல வேண்டும். மெய்யியலை நாம் எப்பொழுதும் இழந்து விடமுடியாது. இந்த மெய்யியலைத் தனக்குள் காத்து வளர்ப்பது இலக்கியம். இலக்கியம் எத்தனையோ தளங்களில் இயங்கலாம். எனினும் இந்த இறுதி தளத்தின் வீச்சு / வெளிச்சம் இல்லாமல் இலக்கியம் நம்மை படைக்க முடியாது. இந்த விதி நம் அரசியலுக்கும் பொருந்தும். மார்க்சியத்திலிருந்து பெறும் இந்த ஒளி தான் தலித் அரசியலுக்கும் இலக்காக இருக்கமுடியும். தலித் அரசியல் அதன் வளர்ச்சிப் போக்கில் அனைத்து மக்களின் விடுதலைக்கான அரசியலின் பகுதியாகி விட வேண்டும்.

குறிப்பு : மதுரை, தமிழ்நாடு இறையியல் கல்லூரி – தலித் ஆய்வு மையத்தில் முன் வைத்த கட்டுரை.

10. புதுமைப்பித்தன் என்று ஒரு கலைஞன்

புதுமைப்பித்தனைப் பற்றிப் பேசும்பொழுது, அவர் தன்னிகரற்ற கலைஞர் என்றோ மேதை என்றோ அடைமொழி இல்லாமல் நம்மால் பேச முடிவதில்லை. என்னதான் நாம் எட்டித் தொட முயன்றாலும் அவர் நம் கைகளுக்கு முற்றாக பிடிபடுவது இல்லை. இதன் காரணமாக புதுமைப்பித்தனை நம்மால் அறிந்து கொள்ளமுடியாது என்று ஒதுங்கி நிற்பதற்கும் நம் மனம் இடம் கொடுப்பதில்லை. நமக்குள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான். புதுமைப்பித்தனை நாம் புரிந்து கொள்வதன்மூலம்தான் நம் மனத்தை அல்லது நம் அகங்காரத்தைத் திருப்திபடுத்திக் கொள்ள முடியும் என்ற முறையிலும் புதுமைப்பித்தனை நமக்குள் வசப்படுத்திக் கொள்ளத்தான் முயற்சி செய்கிறோம். இப்படிச் செய்யும் முயற்சியின்போது புதுமைப்பித்தனின் சிறுகதைகளில் இருபது அல்லது முப்பதுதான் தேறும் என்று சொல்லுகிறோம். அல்லது சிறுகதை என்ற கலை இயலின் விதிமுறைகள் புதுமைப்பித்தனிடத்தில் அங்கங்கே தவறி விடுகின்றன என்று சொல்லத் தொடங்குகிறோம். வாழ்க்கை மீது நமக்கு இருப்பதைப் போல நம்பிக்கை அவரிடம் இல்லை என்றும் சொல்லுகிறோம். இப்படியெல்லாம் புதுமைப்பித்தனை நாம் அணுகும்போது, புதுமைப்பித்தனே ஒருமுறை குறிப்பிட்டதைப்போல நம் அளவுகோல்களைக் கொண்டு புதுமைப்பித்தனை அளந்தறியவே முற்படுகிறோம் என்ற உணர்வைச் சில சமயங்களில் நாம் மறந்து விடவும் செய்கிறோம்.

புதுமைப்பித்தன் இறந்து 50 ஆண்டுகளுக்கு மேல் கழிந்த நிலையிலும் புதுமைப்பித்தனை நாம் திரும்பத் திரும்ப வாசிக்கிறோம். புதுமைப்பித்தனை முன்வைத்து தம்மை முக்கியப்படுத்திக் கொள்கிற அல்லது முதன்மைப்படுத்திக் கொள்கிற போக்கு சிலரிடத்தில் தென்பட்ட போதிலும் இதனை ஒதுக்கி விட்டுத்தான் நாம் புதுமைப்பித்தனை வாசிக்க விரும்புகிறோம். ஒரு மேதையை எட்டித் தொட திரும்பத் திரும்ப செய்யும் முயற்சியின்போது நமக்குள்ளும் ஆழமும் அகலமும் நீட்சி பெறவே செய்யும். என்னதான் இடைக்காலத்தில் கலை உணர்வை நமக்குள் மேம்படுத்திக் கொண்ட போதிலும் இன்னும் புதுமைப்பித்தனிடத்தில் உள்ள சில உச்சங்கள் நமக்குள் வசப்படுவதில்லை. சிறுகதைக் கலையை மேலும் நுட்பமாக கற்றுக் கொள்வதற்காக புதுமைப்பித்தனைச் சிலர் திரும்பத் திரும்ப வாசிக்கக் கூடும்.

புதுமைப்பித்தனிடத்தில் காணப்படும் முரண்பாடுகளின் உள்ளியக்கம் தான் என்ன என்பதை புரிந்து கொள்வதற்காகவும் சிலர் இந்தத் தேடலில் ஈடுபடக்கூடும். புதுமைப்பித்தனிடம் காணக்கூடிய நம்பிக்கை வறட்சிக்கான அவரது குடும்பச் சிக்கல்கள் என்று தொடங்கி இயந்திர நாகரிகம், என்றெல்லாம் ஆராய்ந்து விவரங்களைத் தொகுக்கவும் சிலர் விரும்பமுடியும். இவற்றுக்குள் எல்லாம் புதுமைப்பித்தன் இதுவரை அகப்பட்டவரா? என்ற கேள்விக்கும் இடம் இருக்கிறது. புதுமைப்பித்தனை ஒரு கலைஞன் என்றும், மேதை என்றும் நாம் கருதி இதற்கான கூறுகள் மற்றும் இயக்கங்களைத் தேடுகிறபொழுது புதுமைப்பித்தனை ஒரு மனிதன் என்று வைத்தும் தான் இந்தத் தேடலை நிகழ்த்துகிறோம். இத்தகைய ஆய்வின்போது நமக்குள்ளும் என்ன நிகழ்கிறது என்பது குறித்த சிந்தனையையும் இதன் உடன் நிகழ்வாக நாம் வைத்துக் கொள்ள வேண்டி இருக்கிறது.

புதுமைப்பித்தனை ஒரு மேதை என்று சொல்லும்போது நமக்குள் நிகழ்வதென்ன? எந்த ஒரு சமூகத்திலும் மேதைகளின் தோற்றத்தை அவர் காலத்து வரலாறு மற்றும் சமூகச் சூழல்களிலிருந்து பிரித்து அறியவும் முடியாது. குறிப்பிட்ட எந்த ஒரு துறையில் அவரது மேதமை வெளிப்படுகிறதோ அந்தத் துறை தொடர்பான முந்திய நெடுங்கால வரலாற்றையும் நாம் விளங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இத்தகைய விவரங்களை முழு அளவில் தொகுத்துக் கொண்டாலும் இவற்றிலிருந்து ஒரு மேதையின் தோற்றத்தை முற்றாக விளக்கி விடுவதும் சாத்தியமில்லை. இத்தகைய ஆய்வில் ஈடுபட்ட பிராய்டு இதில் வெற்றி பெற முடியவில்லை என்பதையும் நாம் இங்கு நினைவு கொள்ள வேண்டும்.

வரலாறு மற்றும் சமூகச் சூழல்களிலிருந்து ஒரு மேதையைப் பிரித்துப் பார்க்க முடியாது என்று சொல்லும் பொழுதே அந்தக் குறிப்பிட்ட வரலாறு மற்றும் சமூகச் சூழல்களிலிருந்து அவர் விடுபட்டவராகவும் விளங்குவதை நம்மால் கவனிக்க முடியும். புறச்சூழல் மனிதனைப் பாதிக்கிறது உண்மைதான் என்றாலும், புறச்சூழலைக் கடந்தும் அதன்மீது தன்னை நிறுவிக் கொள்கிற மனித ஆற்றல் குறித்தும் நாம் கவனிக்கத்தான் வேண்டும். என் கட்டுரைகளில் பலமுறை இடம் பெற்ற ஒரு எடுத்துக்காட்டு இங்கு திரும்பவும் சொல்லுகிறேன். மணலும் சுண்ணாம்பும் ஒரு உயர்ந்த கொதிநிலையில் கண்ணாடியாக மாறுகிறது. கண்ணாடிக்கு மூலப்பொருள் மணலும் சுண்ணாம்பும்தான் என்ற போதிலும் கண்ணாடி என்பது ஒரு மூன்றாவது பொருள். மீண்டும்

கண்ணாடியிலிருந்து மணலையோ சுண்ணாம்பையோ எடுக்க முடியாது. கண்ணாடி ஒரு அற்புதம். எந்த ஒரு உயர்தரக் கலைஞனையும் அல்லது அறிவியல் அறிஞனையும் இப்படித்தான் நம்மால் பார்க்க முடியும்.

படைப்பியக்கம் என்பதை இப்படித்தான் காணமுடியும். புதுமைப்பித்தனுக்குள்ளும் இருந்த மேதமையை உயர்வகையான கலைத்திறனை வேறு எப்படி நம்மால் விளக்கமுடியும். இன்னும் ஒன்றைச் சொல்லலாம். "சுவர்க்க நீக்கம்" என்ற காவியத்தை மில்டன் எப்படி படைத்தார் என்பதை மார்க்ஸ் இப்படி விளக்குகிறார். பட்டுப்புழு பட்டு இழைகளை உற்பத்தி செய்கிறது. இப்படி உற்பத்தி செய்வதன் மூலம் பட்டுப்புழுவிற்குச் சாவு நேருகிறது. எனினும் பட்டு இழைகளை உற்பத்தி செய்யாமல் பட்டுப் புழுவால் இருக்க முடியாது. பட்டு உற்பத்தி என்பது பட்டுபுழுவைப் பொருத்தவரை ஒரு தொழிலாகக்கூட இல்லை. பட்டு உற்பத்தி என்பது அதன் வாழ்வுச் செயல். உற்பத்தியில் ஈடுபடாமல் அதற்கு வாழ்க்கை இல்லை. சாவு நேரும் என்று தெரிவதாக வைத்துக் கொண்டாலும் சாவைப் பொருட்படுத்தாமல் தன் வாழ்வுச் செயலாகிய பட்டு இழைகள் உற்பத்தியில்தான் தன் வாழ்வின் நிறைவைப் பட்டுப்புழு காணும். இப்படித்தான் மில்டனும் தன் உயிரைக் கொடுத்து "சுவர்க்க நீக்கத்தை" படைத்தார். படைக்காமல் அவரால் இருக்கமுடியாது. படைப்பும் அவரும் ஒன்றாகிய நிலையில்தான் படைத்தார்.

இத்தகைய படைப்புக்கு அழிவு இல்லை. இலக்கிய இயக்கம் முதலியவற்றை உள்ளடக்கிய வரலாற்றியக்கத்தை முன் செலுத்துவதற்கு இத்தகைய மனிதர்கள் தேவை. இவர்கள் உயிரைக் கொடுத்து உழைக்கிறவர்கள். புதுமைப்பித்தனையும் இப்படித்தான் சொல்லமுடியும்.

லியார்னோ டாவின்சி என்ற மாபெரும் கலைஞரைக் குறித்து ஒரு அறிஞர் சொல்வதை இங்கு குறிப்பிட வேண்டும். பன்முக ஆற்றல்களின் இணைவில் உச்சங்களைத் தொட்டவர் டாவின்சி. இவர் ஒரு மேதை என்பதை எவரும் ஒப்புக் கொள்ள முடியும். இத்தகைய பேராற்றல் இவருக்கு எப்படி வாய்த்தது என்பது குறித்து அந்த அறிஞர் இப்படி விளக்குகிறார். (இர்விங்ஸ்டோன் என்பவர்தான் அந்த அறிஞர்) The agony and extasy என்பது அவரது நூல். இத்தாலியன் கடற்கரையில் உள்ள துறைமுகம் ஒன்றில் வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து சில நாட்கள் தங்கிச் செல்லும். இந்தத் துறைமுகத்தில் மாலுமிகள் தங்கி ஒய்வு எடுத்துக் கொள்வார்கள். காமக் களியாட்டங்கள் இல்லாமல் இவர்களுக்கு

முடியாது. இதற்காக தன் உடலை விற்றுக் கொள்கிற பெண்கள் இந்தத் துறைமுகத்தில் இருந்தார்கள். இவர்களில் ஒருத்திக்குப் பிறந்தவன்தான் டாவின்சி. டாவின்சியின் தந்தை யார் என்பது உலகத்துக்குத் தெரியாது. ஆண் பெண் இருவரின் மரபணு சங்கிலிகளின் ஓர் அற்புதமான இணக்கத்தின் விளைவுதான் இந்த மேதை என்கிறார் அந்த அறிஞர்.

உழைப்புத்திறன் இல்லாமல் மேதைகள் உருவாவதில்லை. உழைப்புத் திறனையும் மீறிய ஓர் உன்னத வகைப்பட்ட மூளைத்திறன் குறித்து இங்கு நாம் கருத வேண்டும். உழைப்புத்திறன் எல்லோருக்கும் பொது என்று வைத்துக் கொள்ளலாம், எல்லோருக்கும் ஒன்று போல மூளையின் திறன் இல்லை. கருவிலே திரு என்று இதைச் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. மூளைத் திறன் எவ்வளவுதான் உயர்நிலையில் இருந்த போதிலும் அதனைச் சிதறடிக்கும் சமூகச் சூழல் குறித்தும் நாம் காணத் தவறிவிடக் கூடாது.

புறத்தில் உள்ள பன்முகப்பட்ட பல்வேறு போக்குகளைக் கூடியவரை சிந்தாமல் சிதறாமல் உள்வாங்கிக் கொள்கிற திறன் ஒரு சிலருக்குத் தான் சாத்தியம். ஒருமுறை படித்தாலும் அப்படியே நினைவில் வைக்கிற ஒரு சிலரை நாம் பார்க்கிறோம். எவ்வளவு ஆண்டுகள் கழிந்த போதிலும் இடைக்காலத்து நிகழ்ச்சிகள் அவ்வளவும் ஆண்டு மாதம் நாள் என்று நினைவு கொள்கிற மனிதர்களை நாம் பார்க்கிறோம். இவர்களின் உழைப்புத் திறனும் உச்ச அளவில் நடைபெறுவதையும் இங்கு மறக்க முடியாது. இப்படித்தான் புதுமைப்பித்தனும் என்று சொல்லத் தோன்றுகிறது. புறத்திலுள்ள பலவற்றையும் உட்கிரகித்துக் கொள்வதில் புதுமைப்பித்தனின் ஆற்றல் பெரிது. அதைப் போலவே அவருக்குள் நடைபெறும் உள் இயக்கமும் பெரியது என்பதில் அய்யமில்லை. புதுமைப்பித்தனின் அளப்பறிய பல்வேறு திறன்கள் குறித்து பலரும் நிறையவே எழுதி உள்ளனர். இவற்றைத் திரும்ப இங்கு சொல்ல வேண்டியதில்லை.

மேதை என்று புதுமைப்பித்தன் தன்னை அறிந்து கொண்டிருந்தாரா என்றெல்லாம் நமக்குத் தெரியாது. மேதை என்பதனால் ஒருவருக்குத் தலைக்கணம் ஒரு இன்றியமையாத தேவையும் இல்லை. வேடிக்கை விளையாட்டு என்று நண்பர்களோடு அதைப்போலவே, குழந்தைகளோடு பழகவும், கொஞ்சவும் புதுமைப்பித்தனுக்குத் தெரியும். மேதைகள், கர்ப்பகிரகத்திற்குள் அமர்ந்து கொள்ள வேண்டியதில்லை. நான் எவ்வளவு பெரியவன் அல்லது சிறியவன் என்று தனக்குத்தானே பீடம் போட்டுக்

கொள்வதும் தேவை இல்லை. பீடம் போட்டுக் கொள்வதன் மூலமும் அவரது சக்திகள் விரையமும் ஆகும். எளியவர்களாக இருப்பதுதான் மேதைகளுக்கு அழகு. புதுமைப்பித்தன் இப்படித்தான் இருந்தார்.

தானும், தனக்குள்ளும் அன்னியப்படாமல் ஒரு மேதையோ, கலைஞனோ இருக்கவும் முடியாது. புறச்சூழல் தன் வாழ்வுக்கு அனுசரணையாக இல்லை என்ற நிலையிலும், புறச்சூழலைத் தன்னால் வெற்றி கொள்ள முடியவில்லை என்ற நிலையிலும் எந்த ஒரு மனிதனும் தனக்குள் அன்னியப்படுகிறான். தனக்கான ஒரு வாழ்வைத் தேர்ந்து கொள்கிறான். வாழ்க்கை வசதிகளைத் தேடுவதில் இவனுக்கு நாட்டமில்லை. பணம் அதிகாரம் முதலியவற்றைக் குவித்துக் கொள்வதில் வாழ்வின் மேன்மை இல்லை. புறத்தில் என்னதான் சீர்குலைவுகள் ஏற்பட்ட போதிலும் அகத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். வஞ்சகம், சூது, போட்டி, பொறாமை முதலிய உலகியலோடு தனக்கு உறவு தேவை இல்லை. தனக்குள் அன்பையும் அறத்தையும் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும். இயற்கையின் பேரின்பம் தனக்குப் போதும். குழந்தைகளோடு கொஞ்சக் கிடைக்கிற சில வாய்ப்புக்கள் போதும். இசையிலும், ஓவியத்திலும் தன் வாழ்வுக்கான நிறைவைக் கண்டடைய முடியும்.

தனக்குத் தீங்கு செய்தவருக்குத் திரும்ப தீங்கு செய்யும் திறன் எனக்கு இல்லை. என்னால் முடியாது. இப்படி செய்து என்னை நானே இழந்து விடமுடியாது. ஓரிடத்தில் ஒதுங்கி இருந்துதான் இந்த உலகத்தை உள்கிரகித்துக் கொள்ள முடியும். உலகத்தாரின் நோக்கத்தோடு நானும் ஓடி அலைவதன்மூலம் எனக்குள் கலைத்திறனை மேம்படுத்திக் கொள்ள இயலாது. படிக்காமல் என்னால் இருக்க முடியாது. படிப்புக்கும் எல்லை இல்லை. பிரபஞ்சத்தின்கீழ் உள்ள அனைத்தையும் நான் அறிந்து கொள்ள வேண்டும். பிரபஞ்ச இயக்கம் எனக்குள் இயங்குவதை நான் காண்கிறேன் அனுபவிக்கிறேன்.

வாழ்க்கையினுள்ளும், வரலாற்றினுள்ளும் பிரபஞ்ச இயக்கத் தினுள்ளும் இன்னும் அறியப்படாத புதிர்கள் எவ்வளவோ உள்ளன. கண்ணையும், காதையும், மனத்தையும் திறந்து வைத்துக் கொண்டிருந்தால் ஒழிய வாழ்வின் இயக்கம் எனக்குள் முற்றாக வராது. கடவுள் என்று இனம் காணத்தக்க எத்தனையோ கூறுகள் எனக்குள்ளும், வெளியிலும் உள்ளன. புத்தரையும், இயேசுவையும் எனக்குள்ளும் சந்திக்கிறேன்.

பணம், அதிகாரம், வணிகம், சமரசம், பரிசுகள், விருதுகள் என்று நான் அலைந்து கொண்டிருந்தால் வாழ்வின் உன்னதங்கள் சாத்தியமில்லை. அடுத்தவனைச் சிறுமைப்படுத்தும்பொழுது எனக்குள் நான் சிறுத்து விடுகிறேன். பெரியவன் என்று அடுத்தவனுக்கு நான் தலை குனியும்பொழுது நான் சிறுத்து விடுகிறேன். அவன் எனக்குள் பீடம் போட்டுக் கொள்கிறான். அவன் என்னை அடிமைப்படுத்துகிறான். அவனை எந்நேரமும் சூழ்ந்து வரவேண்டும், வழிபட வேண்டும், அவனுக்குக் காணிக்கை தரவேண்டும். எனக்கு இது முடியாது. இப்படிச் செய்யும்பொழுது என்னை நானே இழந்து விடுகிறேன். எனது திறன்களை அவனுக்கு விட்டுக் கொடுத்து அவனுக்கு அடிமையாகிறேன், பக்தனாகிறேன்.

எந்த மனிதனோடும், எந்த உயிரினத்தோடும் சமத்துவம் தான் எனக்கு இனியது. சாதி என்றோ, மதம் என்றோ என்னால் இறுக முடியாது. உங்கள் உலகியலுக்குள் என்னை இழுக்க வேண்டாம். கூழோ, கஞ்சியோ எனக்குப் போதும். வறுமை என்றாலும், நோய்நொடிகள் என்றாலும் என் கனவுகளை நான் விட்டுவிடமாட்டேன். என்னை விடாப்பிடியாக கடைந்து அமுதம் குடிக்கிறேன். நஞ்சும் தான் உற்பத்தியாகிறது. அதையும் நான் அனுபவிக்கிறேன். இது என் விதி. எனக்கு நானே விதித்துக் கொண்ட தண்டனை இது. இதுவே எனக்கு வாழ்வு மற்றும் சுகம். இவன்தான் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தனை ஒரு கலைஞன் என்ற முறையில் மட்டுமே ஆராய்வதும் மதிப்பீடு செய்வதும் தான் இங்கு பெரும் அளவில் நடைபெறுகிறது. புதுமைப்பித்தனுக்குள் இயங்கும் மெய்யியல் குறித்து இங்கு ஆய்வு இல்லை. மெய்யியலுக்கும், கலை இயக்கியத்திற்கும் ஆழமான உறவு இருக்க முடியும் என்பதில் இங்கு பலருக்கும் நம்பிக்கை இல்லை. கலை பற்றித்தான் எனக்கு அக்கறை. மெய்யியல் எனக்குத் தேவை இல்லை என்ற போக்குத்தான் இங்கு அழுத்தமாக இருக்கிறது. புதுமைப்பித்தனும் மெய்யியல் என்று அதிகமாகப் பேசவும் இல்லை. எனினும் புதுமைப்பித்தனிடம் இடம்பெற்ற மெய்யியலுக்கும் அவரது கலை இயக்கியத்திற்கும் உள்ள உறவு குறித்து இங்கு நாம் பார்க்கவேண்டும்.

2. புதுமைப்பித்தன் குறித்து விரிவான ஆய்வு செய்யும் ராஜமார்த்தாண்டன், புதுமைப்பித்தனின் கட்டுரைகள் குறித்து ஒரு தனி இயலில் சிலவற்றைச் சொல்லுகிறார். வாழ்வு என்பதும் வாழ்க்கை

என்பதும் வேறு என்கிறார் புதுமைப்பித்தன். வாழ்வென்பது பிரபஞ்சத்தோடும், இயற்கையோடும் உறவுடையது என்கிறார் புதுமைப்பித்தன். வாழ்க்கை என்பது இந்த மண்ணுலகத்தோடு, சமூகத்தோடு உறவுடையது என்றும் சொல்லுகிறார். வாழ்வின் இயக்கத்தைக் கண்டறிவதில் தான் வாழ்வின் உண்மை அடங்கி இருக்கிறது. புதுமைப்பித்தன் சொல்வதை நாம் இவ்வாறு புரிந்து கொள்ளமுடியும். புத்தரும் இயேசுவும் கண்டவை வாழ்வின் உண்மைகள். உணர்ச்சிகளை உதறிக் கொண்டு அறிவின் தீட்சண்யத்தோடு கண்டவை இவர்கள் சொன்ன உண்மைகள். ஆனால் இவர்கள் கண்ட உண்மைகளின் அடிப்படையில் இவர்கள் மட்டுமல்லாமல் மனிதர் எல்லோரும் வாழ்க்கை நடத்திவிட முடியாது. இவர்களின் இலட்சியங்கள், கொள்கைகள், தர்க்கம் முதலியவை உன்னதமானவை. இதற்கு பெரும் கவர்ச்சி உண்டு. இதனை நாம் இரசிக்க முடியும். இதன் அடிப்படையில் கனவு காண முடியும், கற்பனை செய்ய முடியும். விரிவாக அழகுபட பேசமுடியும். இவற்றை வைத்து வாழ்க்கை நடத்தமுடியாது. வாழ்க்கை தரையில் நடந்தாக வேண்டும். உணவு உற்பத்தி, பொருள் உற்பத்தி என்று செய்தாக வேண்டும். மற்றவர்களோடு உறவென்றோ, பகை என்றோ வைத்துக் கொள்ளாமல் உற்பத்தியில் ஈடுபட முடியாது. பொய்யும், களவும் இல்லாமல் வாழ்க்கை இல்லை. சண்டையும், சச்சரவும் இல்லாமல் நமக்கு வாழ்க்கை இல்லை. ஏற்றம், இறக்கங்கள், சிலசமயம் வெற்றி, சிலசமயம் தோல்வி முதலியவற்றோடுதான் நாம் மனிதர்களாக வாழ்க்கை நடத்துகிறோம். காதல் என்றும் கத்தரிக்காய் என்றும் அலைகிறோம். இடையிடையே கொஞ்சம் இலட்சியங்கள். நம்மை நாமே திருப்திபடுத்திக் கொள்வதற்கு இந்த பிரம்மைகள் இல்லாமல் முடியாது. பிரம்மைகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்கிறார் புதுமைப்பித்தன். இலட்சியங்களில் வாழ்ந்துவிட முடியாது. கொள்கைகள், கோட்பாடுகளை செயல்முறைக்குக் கொண்டு வருவது சாத்தியமில்லை.

பிரிட்டனின் அதிகாரத்தைப் புதுமைப்பித்தன் ஏற்கவில்லை. காந்தியடிகள் போராடுகிறார் என்பது உண்மைதான். ஆனால் காந்தியடிகள் பெயரைச் சொல்லிக் கொண்டே கயவர்களும் செயல்படுகிறார்கள். கிறித்துவின் பெயரைச் சொல்லிக்கொண்டு சாதி என்றும், அதிகாரம் என்றும் அலைகிறார்கள் மதபோதகர்கள். சன்யாசம் வாங்கிக் கொண்டவன் திரும்பவும் குடும்பத்திற்குத் திரும்புகிறான். கடவுள் வந்து மனிதனைக் காப்பாற்றுவதில்லை. கடவுள் என்பது ஒரு பெரிய பிரம்மை.

கடவுள் என்பது ஒரு கவர்ச்சி என்பதைத் தவிர ஒரு உண்மை இல்லை. கடவுளர் இந்த மண்ணுலகில் வந்து மனிதர்களோடு வாழமுடியாது. சீதையை இராமன் தீக்குளிக்கத்தான் சொல்வான். அகலிகைகள் கல்லாகத்தான் வேண்டும். கணவனையும் வைத்துக் கொண்டு காதலனோடும் உறவாடுவதும் தான் வாழ்க்கையாக இருக்கிறது. உபதேசங்கள் பொய்யானவை. கலையின் பேரழகில் தன்னை அறிவுபூர்வமாக ஈடுபடுத்திக் கொள்வது மனிதனுக்குச் சாத்தியமில்லை. அறிவின் தீட்சண்யத்தில் வாழ்க்கை நடத்துவது கடினம். அதற்கு மாறாக பக்திப்பரவசம் என்ற பிரம்மைக்குள் மனிதர்கள் மூழ்கிவிடுகிறார்கள். பிரம்மநாயகம் பிள்ளைக்குத் தன் மனைவி செல்லம்மாள் இறந்தது ஒரு விடுதலை. கணவன் மனைவி இருவருக்கிடையில் ஈருடல் ஓர் உயிர் என்பது உண்மை இல்லை. செல்லம்மாளுக்குக் கணவன் செய்தது துரோகம். செல்லம்மாளைக் கணவன் கட்டிப் போட்டிருக்கிறான். சொந்த ஊருக்குச் சென்று சுதந்திரமாகத் திரிவது அவளுக்குச் சாத்தியமில்லை.

வெள்ளைக் களிமண்ணால் விநாயகனைச் செய்த கலைஞன் இங்கு உயிர் வாழமுடியாது. இங்கு எல்லாமே முரண்பட்டுக் கிடக்கின்றன. பிராமணன் என்று எவனைச் சொல்லமுடியும். இதுதான் வாழ்க்கை. சர்வாதிகாரிகள் தான் இங்கு தொடர்ந்து உற்பத்தி ஆகிறார்கள். அவன்தான் நம்மை ஆட்டிப் படைக்கிறான். இராமனுக்குள்ளும் நீதி இல்லை. தர்மம் என்பதும் பொய்வார்த்தை. உலகத்தை காந்தியோ லெனினோ மாற்றிவிடமுடியாது. ஓர் அதிகாரம் போனால் இன்னொரு அதிகாரம் வந்துவிடுகிறது. நாசகாரக் கும்பல்களுக்கிடையில் வாழ்க்கை நடைபெறுகிறது. வாழ்க்கை என்பது துன்பக் கேணியாக இருக்கிறது. நம்பிக்கைக்கு இடம் இல்லை.

உலகம் சொர்க்க மயமாகிவிடும் என்பது தத்துவவாதியின் பொய்மை. இதைத்தான், இந்த வாழ்க்கையைத்தான் திரும்பத் திரும்ப நாம் சந்திக்கிறோம். இதைச் சொல்வதற்குத்தான் கதைகள் / சிறுகதைகள். சொல்வதில் ஒரு சுகம், ஒரு ஆறுதல். இதுவும் ஒரு பிரம்மைதான். இப்படிச் செல்கிறது புதுமைப்பித்தனின் சிந்தனைகள். புத்தரின் நெறியில் உலகம் நடக்கவில்லை. இயேசு நாதரும் இங்கு ஏமாற்றப்பட்டு இருக்கிறார். வாழ்க்கையின் யதார்த்தம் என்பது இதுதான். எழுத்து முதலியனவும் பிரம்மையின் வெவ்வேறு வடிவங்கள். எழுதாமல் இருக்க முடிவதில்லை. இதை எழுதிப் பார்த்து விடவேண்டும். வியாபாரிகள் எல்லாவற்றையும் விற்கக் கிளம்பி விடுகிறார்கள். இவர்களுக்குத் தம்மையும் விற்க வேண்டி

இருக்கிறது. பெண்கள் கற்பை விற்கிறார்கள். கணவனைப் பேணுவதற்காகத் தம்மை விற்கிறார்கள். பொய்யன் கற்பு கற்பு என்று கதைக்கிறான். இந்து மதத்தின் பெருமைகள் சொல்லுகிறான். நம்பிக்கைகளுக்கு இங்கு ஆதாரம் இல்லை. வெற்று நம்பிக்கைகளைத் தந்து பயனில்லை. யதார்த்தத்தை நாம் ஏற்க வேண்டும். தன்னை நிறுவிக் கொள்வதற்காக ஒருவன் தலைவனாகிறான், அறிஞனாகிறான், கலைஞனும் ஆகிறான். இவன் தருக்கித் திரிகிறான். இவனுக்குள் உண்மை இல்லை. உண்மை இவனுக்குள் சிறுத்துப் போய்விட்டது. உண்மையை இவன் அழித்துக் கொண்டிருக்கிறான். பொய்மைக்கு இவன் முலாம் பூசுகிறான். இவனாலும் வாழ்க்கை நாசமாகிறது. தன்னை விற்கக் கிளம்பியவன் இவன். இவனுக்காக நாம் உழைக்க வேண்டும். இவனை நமக்குள் தங்கவைத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதைத்தான் வாழ்வின் அர்த்தம் என்று இவன் கதைப்பான். எல்லாவற்றையும் அபகரித்துக் கொள்வது இவன் நோக்கம். என்னையும், உங்களையும் அபகரித்துக் கொள்வதற்காகத்தான் கதை என்றும் கலை என்றும் திறனாய்வென்றும் பேசுகிறான். இவன் நமக்கு விடுதலை தரமாட்டான்.

புதுமைப்பித்தனிடம் செயல்படும் ஆழ்ந்த மெய்யியல் என்று இதைச் சொல்லமுடியும். இந்த மெய்யியல் தளத்திலிருந்துதான் புதுமைப்பித்தன் காய்கிறார், கதறுகிறார். இந்த மெய்யியலை ஒத்துக் கொள்கிற மனிதன் வாழ்க்கையில் அழிந்து போக வேண்டியதில்லை. இவனால் நிமிர்ந்து நிற்கமுடியும். காந்தியை மட்டுமல்லாமல் கடவுளையும் இவன் கேள்விக்குட்படுத்த முடியும். தரைக்கு இழுத்து வந்து கடவுளை மண்ணில் புரட்டிப் போடமுடியும். கடவுளைக் கேலிக்குட்படுத்த முடியும். புதுமைப்பித்தன் இதைச் செய்கிறார், சிறப்பாகவே செய்கிறார். தனக்குள்ளிருந்து புதுமைப்பித்தன் ஒரு கனலை எழுப்பிக் கொள்கிறார். கடவுள் முதலியவர்களைக் காய்ந்து எரிப்பதிலும் ஒரு நிம்மதி, ஒரு பரவசம். கலை இந்தப் பரவசத்தைத் தரமுடியும். இந்தப் பரவசத்தோடு, குழந்தைகளோடு கொஞ்ச முடியும். நம்பிக்கை வறண்ட நிலையில் தனக்குள்ளிருந்து ஒரு குளிர்ந்த ஊற்றை உயிர்ப்பித்துக் கொள்ள முடியும். இவனால் அன்பு செய்ய முடியும்.

முரண்பாடுகளுக்கிடையில் ஒரு வெடிப்பு, ஒரு ஊற்று, ஒரு பாய்ச்சல், ஒரு பேரன்பு, பேரமைதி. இந்த உண்மை நீட்சேவுக்குத் தெரியும், மார்க்சுக்குப் புரியும். ஒரு மேதை இப்படித்தான் தனக்குள் உயிர்த்துக் கொள்கிறார். இப்படி வாழ்கிற ஒரு மனிதன் இன்பங்கள் தேடி

அலைவதில்லை, துன்பங்கள் கண்டு அஞ்சுவதில்லை. இவனுக்கு எளிய வாழ்க்கை போதும். அதிகாரத்தோடு இவன் உறவு கொள்ளமாட்டான். இவனுக்குச் சித்தர்களைப் பிடிக்கும், பண்டாரங்களை நேசிப்பான். அபலைகளை இவன் தனக்குள் தாங்குவான். வாழ்க்கையைத் தன் வரம்புகளுக்குள் இவன் முடக்கமாட்டான். எட்டாத தொலைவில் சில ஒளி ஊற்றுக்கள் இருக்கத்தான் செய்யும். வாழ்க்கைக்குள்ளும் புதிர்கள் உண்டு. அறிவின் ஆட்சியில் ஒருவனுக்கு வாழ்க்கை இல்லை. உணர்வுக் கலப்பில்தான் அவனுக்கு வாழ்க்கை. காதல் பொய் என்றாலும் காதலிப்பதில் ஒரு சுகம். கடவுள் பொய் என்றாலும், கடவுளுக்கு வழிபாடு செய்வதில் ஒரு சுகம்.

அறிவின் தளத்தில் வாழமுடியாதபோது உணர்வின் தளத்தில் ஒருவன் ஆடமுடியும், பாட முடியும். வர்க்கப் போராட்டத்தின் வழியே வர்க்கங்களைக் கடந்து செல்லமுடியும் என்பது போல, சாதியப் போராட்டங்கள் வழியே சாதியைக் கடந்து செல்ல முடியும். வர்க்கத்தின் எச்சங்களோ, சாதியின் எச்சங்களோ நம்மைத் தொற்றிக் கொண்டுதான் இருக்கும். ஒரு மேதை அல்லது ஒரு கலைஞன் இவற்றையெல்லாம் கடந்து செல்வதிலேயே குறியாக இருக்கிறான். வர்க்கத்தின் உள்ளோ சாதிக்குள்ளோ முடங்கி விடுபவன் ஒரு கலைஞனாக இருக்கமுடியாது. முரண்பாடுகளுக்கு இடையிலும் அவற்றுக்கிடையிலான மோதலோடு அவற்றின் உள்ளிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயல்பவன் ஒரு கலைஞன், ஒரு மெய்யியலாளன். விடுவித்துக் கொள்ளும் பொழுதே இவனுக்குள் காயங்களும் இருக்கும். சமுதாயத்தின் எல்லைக்குள்தான் இவன் இன்னும் இருக்கிறான். வாழ்க்கை இவனையும் முடக்கி வைத்திருக்கிறது. எனினும் இவன் திமிறிக் கொண்டிருக்கிறான். சமூகச் சூழலிலிருந்து விடுதலை பெறாத நிலையில் அந்தச் சமூகத்தின் பாதிப்புக்கள் அவனுக்குள் இருக்கும். அதற்காக இவனை மட்டுமே குற்றப்படுத்துவது நேர்மையான ஆய்வு முறை ஆகாது.

3. புதுமைப்பித்தனின் வாழ்க்கை நோக்கு / மெய்யியல் பார்வையைப் புரிந்து கொள்ள பாரதியின் வாழ்க்கை நோக்கோடு ஒப்பிடுவதற்கான தேவை இருக்கிறது. தற்காலத் தமிழ் இலக்கியத்தைப் பொருத்தவரை பாரதியும் புதுமைப்பித்தனும் நமைப் பெரிதும் பாதிக்கிறார்கள். பாரதிக்கும் புதுமைப்பித்தனுக்கும் இடையிலான வேறுபாடுகள் குறித்த ஆய்வில் நாம் பெரும்பாலும் அக்கறை செலுத்துவதில்லை. ஆனால் ஆழ்ந்து நோக்கும்பொழுது இருவரும் இரு எதிர் துருவங்கள் என்று புரிகிறது.

இவர்களுக்கு இடையிலான எதிர்நிலைப் பார்வையை வியக்கத்தக்க முறையில் சுந்தர ராமசாமி சுட்டிக் காட்டுகிறார். ஜெயமோகனின் சொற்களில் இந்த எதிர் நிலைகளைக் கீழ்கண்டவாறு கூறமுடியும்.

காவியத்தோடு ஒப்பிடும்பொழுது, காவியத்திற்கு எதிரான திசையில் இயங்குவதை நாவல் என்று ஜெயமோகன் குறிப்பிடுகிறார். காவியத்தில் கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் இடமுண்டு, சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடமுண்டு. காவியத்தின் தலைவன் தன்னிகரற்ற நாயகன். காவியம் பெருமிதம் போன்ற தோற்றத்தோடு இயங்கும். நாவல் இப்படி இல்லை. மனிதனை மையப்படுத்துவதும் இதுவே. மண்ணில் துவழ்கிற மனிதனின் வாழ்க்கை சிக்கல்களைச் சொல்வது நாவல். நாவலின் இறுதி நோக்கம் மனிதனை இன்புறுத்துவது அன்று. பிளவுபட்ட மனிதனைச் சொல்வதன்மூலம் நாவல் வாசகனைக் கலவரத்துக்கு உள்ளாக்குகிறது. நாவலின் மையத்தில் இருப்பவன் பிளவுபட்ட மனிதன். அடையாளத்தை இழந்து விட்டுத் தன்னைத் தேடுகிற மனிதன். இவனுக்குள் கடவுள் இல்லை. நரகத்தில் உழலும் இவனுக்குச் சிலசமயம் மேலுலகத்தின் சில ஒளிக்கதிர்கள் தென்படும். இவ்வாறு காவியத்திற்கு எதிர்நிலையில் இயங்குவது நாவல்.

பாரதி இன்னும் காவிய உலகத்திற்குள் தான் வாழ்கிறான். மண்ணில் தெரிகிற வானத்தைக் கைகளில் வசப்படுத்த முனைகிறார் பாரதி. எத்தனை கோடி இன்பம் வைத்தாய் என்று இறைவனைத் துதிக்கிறார். பத்துப் பனிரெண்டு தென்னை மரங்களோடும் ஒரு பத்தினிப் பெண்ணோடும் நடத்துகிற வாழ்க்கையை வேண்டுகிறார். இவருக்கு நெருக்கமாகக் கண்ணனும், பராசக்தியும் நிற்கிறார்கள். கத்தும் குயில் ஓசையில் தன் மனத்தைப் பறி கொடுக்கிறார் பாரதி. இவருக்குள் அன்பே உருவாகப் பரமன் வாழ்கிறார். காக்கைக் குருவிகள் இயக்கத்தில் கடவுள் ஆட்சியைக் காணுகிறார். பாரத தேவியின் ஒருமுகப்பட்ட தரிசனத்தில் இவர் மயங்குகிறார். பாஞ்சாலி இவருக்குள் பராசக்தியின் வடிவமாக தெரிகிறாள். அறிவைத் தெய்வம் என்கிறார். தொழிலாளர்களின் படைப்புக்களைப் பிரம்மனின் கலை என்கிறார். தேடிச்சோறு நிதம் தின்று வெறும் கதைகள் பேசி திரிகின்ற வேடிக்கை மனிதனாக நான் இருக்க மாட்டேன் என்கிறார். காந்தியோடும் கடவுளோடும் இவர் உரையாடுகிறார்.

காதல் இல்லாமல், அருள் இல்லாமல் இவருக்கு முடியாது. எல்லோரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை என்ற சமத்துவ சமுதாயம்

இவரது பெருங்கனவு. சுருக்கமாகச் சொன்னால் மதத்தின் எல்லைக்குள்ளிருந்து விடுபடாத பாரதியைத்தான் நாம் இங்கு பார்க்கிறோம்.

பாரதியின் மதம் பற்றிய பார்வையில் உள்ள சில வித்தியாசமான கூறுகள் நாம் கவனிக்கத் தவற முடியாது. முன்னைய மதவாதிகளின் பார்வையிலிருந்து நெடுந்தொலைவு விலகிவந்தவர் பாரதி. விண்ணுலகத்தை மண்ணுலகமாக மனிதர்கள் வாழ்வதற்குரிய உலகமாக மாற்ற வேண்டும் என்று விரும்புகிறார். சமத்துவமும், சமதர்மமும் இவர் பெரிதும் வேண்டுபவை. பாரதியின் கிருதயுகம் என்பது சமதர்ம உலகம். நாட்டு விடுதலை இவருக்கு முக்கியம். சமூக விடுதலை இல்லாமல் முடியாது. நந்தனும் இவரைப் பொருத்தவரை பார்ப்பனன். புத்தருக்கும் கண்ணனுக்கும் இடையில் இவருக்கு வேறுபாடு இல்லை. இயேசுவையும் நபியையும் இவரால் நேசிக்கமுடியும். பெண் பராசக்தியின் வடிவம். பாரதியின் அத்வைதம் என்பது வெறும் தியானத்தின் மூலம் அனுபவிக்கும் பரவசமன்று. தியான நிலையில் இருந்து இந்த ஒருமை நிலையைச் சமூகத்திற்குள் பொருளியலுக்குள், வாழ்வியலுக்குள் கொண்டு வரவேண்டும். சாதி உயர்வுக்கு அர்த்தம் இல்லை. அன்னியன் நம்மை ஆள வேண்டியதில்லை.

விடுதலை இல்லாமல் மனிதனுக்கு வாழ்வு இல்லை. வேதங்களினுள் இவர் சமத்துவத்தைத் தேடுகிறார். வரலாற்றுக்குள் அதைச் சாதிக்க வேண்டும் என்கிறார். சாதியில் உயர்வு தாழ்வுகளையும் சடங்குத்தனமான வழிபாடுகளையும் முதன்மைப்படுத்துகிற பார்ப்பனியம் இவருக்கு அறவே பிடிக்காது. உபநிடதங்களில் வெளிப்படுகிற சமத்துவம்தான் இவரது பார்ப்பனியம். இவரது பார்ப்பனியம் ஓர் அழிவுச் சக்தி அல்ல. இது ஓா் ஆக்கச்சக்தி. பாரதியின் படைப்புத் திறனை இத்தகைய பார்ப்பனியத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

இப்பொழுது நாம் தெளிவாகச் சொல்ல முடியும். பாரதியைப் புதுமைப்பித்தனில் காண முடியாது. பாரதியோடு இவர் எதிர் நிலையில்தான் நிற்கிறார். பாரதியை இவர் குறைத்துப் பேசவில்லை. பாரதி மகாகவியா? இல்லையா? என்ற விவாதத்தில் இருந்து இவர் விலகி இருந்தார். பாரதியிடம் பொங்கிப் பெருகிய கவித்துவம் தான் இவரைக் கவா்ந்தது. கடவுள் உண்டா? இல்லையா? என்ற ஆய்வு புதுமைப்பித்தனிடம் இல்லை. புதுமைப்பித்தனிடம் கடவுள் இல்லை. ஆனால் தொடர்ந்து கடவுளை இவர்

அர்த்தப்படுத்துகிறார். மனித எல்லைக்குள் வைத்து அர்த்தப்படுத்துகிறார். கடவுள் இல்லாத உலகில் மனிதன் வாழ்ந்தாக வேண்டும். மண்ணில் தான் மனிதன் புரண்டாக வேண்டும். உடம்போடு தான் வாழ்ந்தாக வேண்டும். கற்பு என்று கதைத்துக் கொண்டிருக்க முடியாது. இராமனுக்குள்ளும் நீதி இல்லை. இராமனுக்குள்ளும் ஒரு இராவணன் இருக்கிறான். இராமாயணம் பாடிய கம்பனை மகாகவி எனக் கொண்டாடுகிறார் புதுமைப்பித்தன். கம்பருக்குள் இவர் காணும் கவித்துவ வீச்சின் வழியேதான் கம்பருடைய காவியத்தை நாம் பார்க்க வேண்டும். கூனியும் கைகேயியும் மட்டுமல்லாமல் சூர்ப்பனகையும் இன்றும் நம்மோடு வாழ்பவர்கள். குகனையும், சுக்ரீவனையும், கும்பகர்ணன் முதலியவர்களையும் இன்றும் நாம் நமக்குள் பார்க்க முடியும். இவர்களுக்குள்ளும் கனவுகள் இருக்கின்றன; பிரம்மைகள் இருக்கின்றன. பிரம்மைகள் இல்லாமல் மனிதனுக்கு வாழ்க்கை இல்லை. இலட்சியங்கள் என்ற அலங்காரங்கள் இல்லாமல் மனிதன் வாழ முடிவதில்லை. அவ்வப்பொழுது மனிதன் குளிர்காய்வதற்கு இலட்சியங்கள் வேண்டும். திருக்குறளை வைத்து வாழ்ந்துவிட முடியாது.

காந்தி கண்ட விடுதலையின் வழியே சுவர்க்கங்கள் இல்லை. துயரங்களுக்குத் தீர்வு இல்லை. பொய்யும் களவும் தீரும் என்று தோன்றவில்லை. மனிதனுக்குள் அருள் இல்லை, அன்பு இல்லை. இது இயந்திர யுகம். மனிதர்கள் இயந்திரம் ஆகிக் கொண்டிருக்கின்றனர். இடையிடையே கிரீச்சிடல்கள் கேட்கத்தான் செய்யும். கொஞ்சம் எண்ணை போட்டுக் கொள்ள வேண்டும். கடவுளோடும் நாம் வாழ்ந்து விடலாம். நம்மைப் போலத்தான் கடவுளும் இருக்கிறார். குழந்தைகளோடு கொஞ்சிப் பேசி விளையாடும் அளவிற்குக் கடவுளிடம் குழந்தைத் தன்மை உண்டு. குழந்தைகளுக்குச் சொல்வதற்குக் கை நிறைய கதைகள் வைத்திருக்கிறார். அவரிடம் நிறைய பிசாசுக் கதைகள் உண்டு.

நவீன உலகத்தின் சிக்கல்கள் பற்றி கடவுளுக்கு எதுவும் தெரியாது. ஒரு சைக்கிளின் இயக்கம் எப்படி என்பதுகூட அவர் அறியாமல் திண்டாடுவார். இப்படி ஒரு உலகைப் படைத்ததற்காக அவரை நாம் நொந்துவிட முடியாது. அவர் மனிதனின் படைப்பு. மனிதன் தன்னோடு விளையாடிக் கொள்ள அவரைப் படைத்திருக்கிறான். காந்தியோ இன்னொருவரோ நம்மைக் காப்பாற்ற முடியாது. இங்கு கதாநாயகன் இல்லை. மனிதனின் ஆன்மா பிளவுபட்டு அழுகிக் கிடக்கிறது. மத போதகர்கள் இந்த மனிதனை ஏமாற்றுகிறார்கள். புரோகிதர்கள்

பொய்யர்கள். நாகரிகம் மனிதனைச் சீரழிவிற்கு உள்ளாக்குகிறது. இந்த மனிதனுக்கு இறுதி இல்லை. இவனுக்குச் சொர்க்கங்கள் வேண்டாம், சோறாவது கிடைக்க வேண்டும்.

வாழ்க்கை பற்றிய விமர்சனம் என்று இப்படித்தான் புதுமைப்பித்தனிடமிருந்து நம்மால் தொகுத்துக் கொள்ள முடியும். இப்படி ஒரு பார்வை பாரதியிடம் இல்லை. நெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் மதத்தைத் தம் கால நிலவரங்களுக்கு ஏற்றபடி ஆழ்ந்த பொருள்படுத்துவது பாரதிக்குப் போதும். பாரதி இந்தப் பார்வையோடு நிமிர்ந்து நிற்க முடியும். செல்லம்மாளைப் பட்டினி போட முடியும். பார்ப்பனர்களின் வசை மொழிகளுக்கு ஆளாக முடியும். கனகலிங்கத்துக்குப் புனித பூணூல் போடமுடியும். எட்டையபுரம் மன்னனிடம் இருந்து விலகிநிற்க முடியும்.

காவல்துறையிடம் மன்னிப்பு கேட்க முடியும். காந்திக்கு வாழ்த்து சொல்ல முடியும். பெருமிதமிக்க கனவுகளில் வாழ்ந்து விடமுடியும். நரகத்தில் உழன்று கொண்டு சொர்க்கத்தைத் தனக்குள் உற்பத்தி செய்து கொள்ளமுடியும். எல்லாத் திசைகளிலும் கண்ணனைக் காணமுடியும். தின்னவரும் புலியிடமும் பரமனைக் காணமுடியும். இயேசுநாதருக்குள் இறைவனைக் காணமுடியும். ஆனால் புதுமைப்பித்தனுக்கு இப்படி பார்க்க முடியாது. பொய்மைகளை, புராணங்களை கிழித்துத் தான் புதுமைப்பித்தனால் பார்க்க முடியும். சொர்க்கங்கள் மேலுலகில் இல்லை. கடவுளின் கருணை மனிதனைக் காப்பாற்ற முடியாது. இன்னும் குழந்தைக்கறி தின்கிறார்கள் சாமியார்கள். தன் கண்களைக் கடவுளிடம் இழந்துவிட்டு கபோதியாய்த் திரிகிறான் கண்ணப்பன். கடவுளை நம்பி இயேசு ஏமாந்து விட்டார். பாரதியும் தான் ஏமாற்றத்திற்கு ஆட்பட்டார்.

இத்தகையதாகத்தான் மனித வாழ்க்கை இருக்கிறது. இந்த வாழ்க்கையை எப்படி சகித்துக் கொள்வது. இதைச் சகித்துக் கொள்வதற்கு பிரம்மைகள் தேவைப்படுகின்றன. கனவுகள் தேவைப்படுகின்றன. மனிதனுக்குள் ஒரு கலைஞன் இருக்கிறான்.

செந்தணல் தன்னைச் சூழ்ந்திருக்கிற நிலையிலும் தாமரைத் தடாகத்தைத் தனக்குள் கற்பனை செய்து கொள்ள முடியும். இந்தக் கலைஞனைத் தனக்குள் உயிர்ப்பித்துக் கொண்டுதான் மனிதனால் வாழமுடியும். கவித்துவம் இல்லாமல் மனிதனுக்கு வாழ்க்கை இல்லை. புற

உலகத்தைத் தனக்கேற்றதாக படைத்துக் கொள்வது மனிதனின் கவித்துவம். நரகத்தில் இருந்து கொண்டு சுவர்க்கங்களைப் படைத்துக் கொள்வது மனிதனின் கவித்துவம். காதல் என்பது ஒரு கவித்துவம், தியாகம் என்பது இன்னொன்று. தேசபக்தி, தெய்வ பக்தி என்பனவும் கவித்துவத்தின் பல்வேறு வடிவங்கள். மனிதன் தொடர்ந்து புதிய உலகங்களைப் படைக்கிறான். உலகம் புதியதாக மாறிக் கொண்டே இருக்கிறது. மனிதனின் படைப்புத் திறன் விரிவானது. ஆற்றல் மிக்கது. அழகியது. கடவுளும்கூட இப்படி மனிதனின் வழியேதான் தன்னைப் படைத்துக் கொள்கிறார். துறவிகளுக்குள் விளங்குவது இந்தக் கவித்துவம். கவித்துவத்தைக் கருணை இன்றி கீறிப் பார்த்தோம் என்றால் உள்ளே தெரிவது கொடுமைகள், குரூரங்கள். இதுதான் வாழ்வின் யதார்த்தம். இந்த யதார்த்தத்தோடு வாழ்க்கை நடத்த முடியாது. உடனே இதை மூடிவிட வேண்டும். அப்புறம் அழகுபடுத்த வேண்டும். சகித்துக் கொள்ளத்தக்கதாக மாற்றிக் கொள்ள வேண்டும். இதைச் செய்பவன் மனிதன். இவனுக்குள் இருக்கும் கலைஞன்தான் இதைச் செய்கிறான். இவன்தான் புதுமைப்பித்தன்.

பாரதியின் மனிதனும், புதுமைப்பித்தனின் மனிதனும் எதிர் துருவங்களில் இயங்குகிறார்கள். பாரதியைக் கீறிப் பார்த்தால் புதுமைப்பித்தனின் மனிதன் வெளிப்படுவான். ஆனால் இருவரும் ஆற்றல் மிக்க கலைஞர்கள். பாரதியின் கலைஞனிடமிருந்து அவனது சமயப் பார்வையை விலக்கிப் பார்க்க முடியாது. புதுமைப்பித்தனிடம் சமயம் இல்லை. கலைஞன் இருக்கிறான். பாரதிக்குத் தேவைப்படுவது ஒரு மாயை என்றால் புதுமைப்பித்தனுக்குத் தேவைப்படுவது இன்னொரு மாயை. மாயைகளைக் களைவது, நம் காலம், நம் கடமை.

கலை என்பதை புதுமைப்பித்தனின் சமயம் என்று கூறுவதைக் கொஞ்சம் விளக்க வேண்டும். மனிதனுக்குள் செயல்படும் படைப்பியக்கம் என்பதை வெறும் அறிவியல் வரையறைகள் அல்லது தர்க்கம் கொண்டும் விளக்குவதும் சாத்தியமில்லை. மனிதனுக்குள் செயல்படும் உள்ளுணர்வு என்பது தர்க்கத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. மற்றும் சமயம் என்பது பிரபஞ்ச இயக்கம் முதலியவற்றை உள்ளடக்கி இயங்குவதைப் போலவே கலையின் இயக்கமும் அறிவுக்கு எட்டாத பலவற்றை உள்ளடக்கிக் கொள்கிறது. உணர்வின்றி மனிதன் வாழமுடியாது. அறிவு அல்லது பகுத்தறிவு வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை.

அகமனத்தின் ஆழத்திற்குள்ளும் மனிதன் செயல்படத்தான் செய்கிறான். குறிப்பிட்ட சில உணர்வுகளின் வழியே மனித வாழ்வுக்கு மட்டுமல்லாமல் பிரபஞ்ச இயக்கத்திற்கும் மனிதன் பொருள் சொல்லுகிறான். பிரபஞ்சம் மனித வாழ்க்கையை அல்லது மனித மேம்பாட்டை இலக்காகக் கொண்டு இயங்கவில்லை என்றாலும் பிரபஞ்ச இயக்கத்தோடு மனிதன் ஒன்றி இயங்குகிற அனுபவத்தை வேண்டுகிறான். அத்வைதம் என்பதும் சமயத்தின் எல்லைக்குள் வரித்துக் கொள்ளப்பட்டது என்றாலும் அனேகமாக எல்லா மனிதரும் இந்த அனுபவத்தைச் சிற்சில சமயங்களிலேனும் பெறத்தான் செய்கின்றனர். இந்த அனுபவத்தைக் கலைஞன் தனக்குள் கூடுதலாக வளர்த்துக் கொள்கிறான். இயற்கை, வெட்டவெளி, தனிமை முதலியவற்றைக் கலைஞன் நாடிச் செல்வதும் இதற்காகத்தான். இசை முதலிய கலையின் இயக்கத்தின்போது இந்த உணர்வைக் கூடுதலாகப் பெறமுடியும்.

சமயம் அல்லது மதம் என்பதை இந்து மதம் என்று மட்டுமே சுருக்கிக் காணவும் முடியாது. தன் சமயத்தைக் கவிஞனின் சமயம் என்று தாகூர் கூறியதையும் இங்கு நினைவு கொள்ளலாம். பன்முகப் பரிமாணங்கள் கொண்ட இந்து மதத்தை ஒற்றை மதவாத அரசியல் என்ற முகத்தோடு உருவாக்க முயலுகிறது இந்துத்துவம். இந்துத்துவமும் இந்து மதம் என்பதும் ஒன்று அல்ல. இந்துத்துவம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிற மதவாத அரசியல். இந்து மதத்தை இந்துத்துவம் பலி கொள்ள நாம் இடம் தரமுடியாது.

இந்து மதத்தினுள் அத்வைதம் மட்டுமல்ல, எத்தனையோ மதங்களும், சிந்தனை முறைகளும் அடங்கி உள்ளன. பெரியார்கூட இந்து மதத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை. கடவுள் இல்லை என்று பேசுவதற்கும் இந்து மதத்தில் இடம் உண்டு. தெய்வத்திற்கு ஆயிரம் பெயர்களும், வழிபாடுகளும், உருவங்களும் வைத்துக் கொள்வதை ஏற்கும் இந்து மதம், சடங்கு, உருவ வழிபாடு முதலியவற்றை மறுப்பதற்கும் இடம் தருகிறது. கூடுதலாகச் சொல்வதென்றால் மதத்தின் எல்லையிலிருந்து முற்றாக விடுபடுவதற்கு இன்னும் நெடுங்காலம் ஆகும். பகுத்தறிவு கொண்டு பக்தியை ஒழித்து விட முடியாது. உருவ வழிபாடும், சடங்குகளும் மத எல்லைக்கு வெளியிலும் நடைபெறக் கூடியவை. அறிவியலின் கருத்தாக்கங்களின் உள்ளும் அறிவியலுக்கு முரண்பட்ட சமய உணர்வும் சித்தாந்தங்களும் செயல்படவே செய்கின்றன.

இப்படி விரிவாகச் சொல்வதன் நோக்கம் புதுமைப்பித்தனுக்குள்ளும் செயல்படுகிற மதத்தின் கூறுகள் என்று இனங்காணத்தக்க சில கூறுகளைக் கொண்டு புதுமைப்பித்தனை நாம் குறைத்துப் பேச வேண்டியதில்லை. சில அப்பாலை உணர்வுகள் புதுமைப்பித்தனுக்குள் இயங்கியதை நாம் புரிந்து கொள்ள இயலும். இந்து மதம் சாதியைப் புனிதப்படுத்தியது என்பது உண்மைதான். ஆனால் சாதி அமைப்புத்தான் இந்து மதம் என்று குறைத்துப் பேசுவதற்கும் இல்லை. இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று சமூகத்தின் ஒரு முக்கிய பகுதியை அடிமைப்படுத்தியது உண்மைதான். இதற்கான பொருளியல் காரணங்களை நாம் ஒதுக்கிவிடவும் முடியாது. சாதி அமைப்பைக் கட்டிக்காப்பதில் திராவிடர்களுக்கும் / தமிழர்களுக்கும் பங்குண்டு.

சாதி வகைப்பட்ட தர்மங்கள் என்பதையும் மீறி மனித தர்மம், இயற்கையின் தர்மம் என்றும் இந்துமதம் பேசத்தான் செய்கிறது. பிராமணர்களைக் கடுமையாக இந்து மதம் சாடவும் செய்கிறது. புதுமைப்பித்தனும் சாதி தர்மத்தைச் சாடாமல் இல்லை. சாதி உணர்வை முற்றாகக் கடந்து இயங்குவதும் இன்றைய நிலையில் நமக்குச் சாத்தியமுமில்லை. களைந்து கொள்ள வேண்டும் என்ற பகுத்தறிவின் ஆட்சியையும் மீறி இயங்குபவர்களாக பகுத்தறிவாளர்களும் உள்ளனர். இதற்காகச் சாதி உணர்வை நாம் மகிமைப்படுத்தவும் முடியாது. நமக்குள்ளும் செயல்படுகிற சாதி உணர்வை இன்னொருவர் கண்டறிந்து குறை சொன்னாலும் சாடினாலும் நாம் வரவேற்கத்தான் வேண்டும். புதுமைப்பித்தனுக்கும் இது பொருந்தும். குறிப்பிட்ட உயர் சாதியினுள்ளும் சிலவகைச் செயல்திறன்களோ கலை உணர்வோ கூடுதலாக இருப்பதற்கும் புதுமைப்பித்தனே சான்றாகிறார்.

4. பாரதியிடமும், புதுமைப்பித்தனிடமும் நாம் கண்ட குறிப்பிட்ட வகை மனிதனைப் போலவே இன்று தலித் என்று சொல்லப்படுகிற மனிதன் குறித்தும் இப்பொழுது பார்க்கலாம். இடைக்காலத்தில் பாட்டாளி என்ற வகைப்பட்ட மனிதனையும், பகுத்தறிவாளன் என்ற மனிதனையும் தற்கால வரலாற்றில் நாம் பார்த்திருக்கிறோம். இப்பொழுது தலித் என்ற மனிதனுக்கு அழுத்தம் தருவதற்கான வரலாற்றுக் காரணிகள் சில உள்ளன. மனித சமூகம் முற்றாக விடுதலை பெறவேண்டும் என்ற நோக்கத்தைப் பாட்டாளிகள் செயல்படுத்தவில்லை. பகுத்தறிவு இயக்கமும் முதலாளியத்திற்கும், அதிகாரத்திற்கும் பலியாகிவிட்டது.

இவ்வகை இயக்கங்களின் தூண்டுதலோடு இப்பொழுது தலித் மக்கள் முன்னணிக்கு வருகிறார்கள். தலித் என்பது தமிழகத்தில் பட்டியல் சாதியினரையே முதன்மையாகக் குறிக்கிறது என்ற போதிலும், இவர்களையும் உள்ளடக்கி ஒடுக்கப்பட்ட மனிதர்கள் குறித்து நாம் இங்கு பேச வேண்டியிருக்கிறது. தலித் மக்களின் விடுதலைக்கான போராட்டங்களை நாம் இன்று ஏற்கத்தான் வேண்டும். இந்தப் போராட்டங்கள் இப்பொழுது கலகத்தின் / கலவரத்தின் வடிவம் பெற்று வருகின்றன. தொடக்க நிலையில் தலித் மக்களின் போராட்டங்கள் கலகங்களாக இருக்கத்தான் செய்யும். இந்தக் கலகங்களைச் சிலர் தொடர்ந்து ஊக்குவிப்பதை நாம் புரிந்து கொள்ளவும் வரவேற்கவும் வேண்டும். தலித்தியம் என்ற கருத்தியல் உருவாக்கம் இப்பொழுது தீவிரப்பட்டு வருகிறது.

அ. மார்க்ஸ் முதலியவர்கள் இவ்வகையில் கடுமையான உழைப்பை மேற்கொண்டு இருக்கிறார்கள். தலித்தியம் என்பதை முன்னிலைப்படுத்தும் நோக்கில் இலக்கிய பீடங்கள் உட்பட எல்லா பீடங்களையும் தகர்க்க முனைந்திருக்கிறார்கள். தீவிரப்படும் இந்த இயக்கம் சிலசமயம் தர்க்க வரையறைகளையும் மீறி பிறரைத் தாக்குவதையும், இகழ்வதையும் கூட சில உத்திகளாகக் கடைப்பிடிக்கிறது. கர்நாடகத்தைப் போலவே நாளடைவில் சில வரையறைக்குள் வரமுடியும். அப்பொழுது மாற்றுக் கருத்து உடையவர்களோடும் சம நிலையிலான உரையாடல் சாத்தியப்படலாம். அதுவரை மாற்றுக் கருத்துடையவர்கள் நிதானமாகத் தான் இருக்க வேண்டும்.

புதுமைப்பித்தனைப் பொருத்தவரை, ஒரு கலைஞன் என்ற வகையில் சாதி ஆதிக்கத்தை ஒப்புக் கொள்பவராகத் தெரியவில்லை. தான் இந்து என்பதன் காரணமாகவே கிறித்துவத்தை அவர் குறைத்துப் பேசியதாகவும் தெரியவில்லை. இன்னொன்றையும் சொல்ல வேண்டும். தலித் மக்களின் சார்பிலான இயக்கங்களோ அல்லது தலித்தியம் என்ற கருத்தியல் உருவாக்கமோ அன்று இல்லை. பிளாட்டோ அடிமைகளின் சுதந்திரம் பற்றி சிந்திக்கவில்லை. இப்படித்தான் ஆண் ஆதிக்கம் குறித்தோ, வேறுவகைப்பட்ட ஆதிக்கங்கள் குறித்தோ வரலாற்றில் நெடுங்காலம் நம்மைப் போலவே மற்றவர்களும் சிந்திக்கவில்லை. வரலாற்றின் இன்றைய கட்டத்தில் எந்த வடிவத்திலும் ஆதிக்கங்கள் வேண்டாம் என்ற இந்த தீவிரமான சிந்தனை இன்று ஏற்பட்டு வருகிறது. கலைஞர்கள் உட்பட அனைவரும் இதற்கு இடம் கொடுத்தாக வேண்டும்.

அதிகாரத்தை களைந்துக் கொள்ள வேண்டும் என்ற தீவிரமான சிந்தனை உடையவர்களும், தமக்குள் சிந்தனை என்ற அதிகாரத்தைச் சேர்த்துக் கொள்வதையும் நாம் பார்க்கிறோம். அதிகாரம் எந்த ஒரு மனிதனையும் சிதைவுபடுத்தவே செய்யும். தீவிரமான விவாதம் சில சமயங்களில் வரையறைகளைக் கடந்து செல்லும்பொழுது மாற்றுக் கருத்துடையவர்களை எதிர்நிலைக்குத் தள்ளவும் செய்யும். இத்தகைய விபத்துக்களும் இன்று நடைபெறுகின்றன. சுந்தர ராமசாமி மட்டுமல்லாமல், புதுமைப்பித்தனும் இத்தகைய தாக்குதல்களுக்கு இலக்காகி இருக்கிறார்கள். தலித்தியம் தன்னளவில் ஒரு முழுமையான தத்துவம் என்று உருப்பெருக்கிக் கொள்கிற நிலையில் மார்க்சியம் உட்பட மாற்று கருத்துடையவர்களைத் தாக்கவும் தகர்க்கவுமே செய்யும்.

இதன் வழியாக தலித்தியம் தன்னளவில் வெற்றி பெறுவதும்கூட சாத்தியப்படாது. புதுமைப்பித்தனை முதன்மைப்படுத்தி இன்று விவாதங்கள் உருவாகி உள்ளன. புதுமைப்பித்தனை வைத்து வியாபாரம் செய்வதும்கூட இப்பொழுது சாத்தியம்தான். தலித்தியம்கூட இப்படி செய்வதன் மூலம்தான் தன்னைப் பரவலாக்கிக் கொள்ளவும் செய்கிறது. பலவற்றை மறைத்து சிலவற்றை முன்னிலைப்படுத்துவதும் வணிக இயலின் விதிமுறைகள். அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற அரசியல் நடைமுறை இன்று முன்னிலைக்கு வந்துவிட்ட நிலையில், அறிவாளிகள் என்று தம்மைக் கருதிக் கொள்பவர்களும் இந்த அரசியலில் முனைப்புடன் இயங்குகிறார்கள். இந்த அதிகார அரசியலுக்குள் நாம் மாட்டிக் கொள்ள விரும்பவில்லை. மற்றபடி தலித்தியம் முன்வைக்கும் விவாதத்தில் உள்ள வளமான கருத்தினங்கள் குறித்து நாம் கவனம் கொள்வது தேவை.

11. 47- க்குப் பின் தமிழ்நாவல்கள் படைப்பும் பார்வையும் - ஒரு சமதளப் பார்வை

1. 1947 –இல் இந்தியா விடுதலை பெற்றது என்பதைக் கேள்விக்குட்படுத்துவதற்கு நிறையக் காரணங்கள் உள்ளன. இது குறித்து இங்கு ஆய்வதற்கு இல்லை. 1947 என்ற ஆண்டை ஒரு எல்லையாக வைத்துக் கொண்டால் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிறோம். அரசியல், பொருளியல், சமூகவியல், கல்வி, மருத்துவம் என்பனவற்றில் சாதனைகள் என்றும் வேதனைகள் என்றும் பேசுவதற்கு நிறையவே இடமுண்டு. கலை, இலக்கியம், கலாச்சாரம் ஆகிய துறைகளிலும் நமது நிலை இத்தகையதுதான்.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழில் வெளிவந்துள்ள நாவல்கள் குறித்து நான் பேசவேண்டும். ஆண்டுக்கு ஒரு நூறு நாவல்கள் என்று வைத்துக் கொண்டாலும் தமிழில் ஐந்தாயிரம் நாவல்களேனும் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளிவந்திருக்கக் கூடும். நூல்களின் பதிவாளர் அலுவலகத்திலிருந்து இப்படி ஒரு பட்டியலை நாம் சேகரிக்க முடியும். ஐயாயிரம் நாவல்கள் குறித்தோ இவற்றிலிருந்து ஐநூறு நாவல்களைத் தெரிவு செய்வதற்கோ இப்பொழுது சாத்தியமில்லை. குறைந்த அளவிற்கு ஐம்பது நாவலாசிரியர்களைத் தெரிவு செய்து கொள்கிறேன். ஒருவர் எழுதிய ஒன்றுக்கு மேற்பட்ட நாவல்களிலிருந்து ஒரு நாவலை மட்டுமே அதன் தனித்தன்மை காரணமாகத் தெரிவு செய்து கொள்வதுதான் இப்பொழுதைக்குச் சாத்தியம்.

இவை பற்றி மதிப்பீடு செய்வதுகூட இப்பொழுது எனக்கு நோக்கமில்லை. இது மக்களாட்சிக் காலம் என்று நம்புகிறோம். ஒவ்வொருவரும் இன்று மதிக்கத்தக்கவர். அவரவர்க்குத் தனிப்பார்வை உண்டு. இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஒரு சமதளப் பார்வை என்ற அணுகுமுறையில் என் கருத்துக்களை முன்வைக்கிறேன். என் பார்வையிலிருந்து இன்னும் பலர் வேறு பார்வைகளோடு முன்வரும் சாத்தியத்தை நான் வரவேற்கிறேன். எனது சமதளப்பார்வை குறித்துச் சில விளக்கங்களைத் தரக் கடமைப்பட்டுள்ளேன்.

2. இது மக்களாட்சிக் காலம் என்று குறிப்பிட்டேன். இங்கு எல்லோருக்கும் சமவாய்ப்புத் தரப்படுகிறது. ஏற்றத்தாழ்வுகளை நாம் ஏற்பதற்கில்லை. ஒவ்வொருவரையும் மனிதர்தான் என்று ஏற்றுக்

கொள்கிறோம். ஒவ்வொருவரும் சமூகத்தோடு ஏதோ சில வகைகளில் உறவு கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்குள்ளும் குறைந்த அளவிற்கேனும் ஒரு கவிஞன் / கலைஞன் இருக்கிறான். இவன்தான் அந்த மனிதனுக்குள்ளிருந்து அவனது வாழ்வை அர்த்தப்படுத்துகிறான். தவிர அழகுபடுத்துகிறான். இவன் கதை கேட்பவன் மற்றும் கதை சொல்பவன். அகம், புறம் ஆகியவற்றைச் சில வடிவங்களில் இணைத்துத் தன்னையும் தன் கதைகளையும் இவன்தான் வடிவமைக்கிறான். இந்த வடிவமைப்பின் இலக்கணம் குறித்தும் இவனுக்குச் சிந்தனை உண்டு.

இவன் தன்னோடும் சமூகத்தோடும் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறான். சமுதாயத்தில், உலக அளவில் செயல்படும் முரண்கள் இவனுக்குள்ளும் உண்டு. இவை பற்றி இவன் சிந்திக்காமல் இருக்க முடியாது. சமூகச் சூழலில் ஏதோ ஒரு சமூகப் பிரிவிற்குள் இவன் இருக்கிறான். சமூக நிறுவனங்களுக்குள் இவன் இருக்கிறான். குடும்பம், கல்வி நிறுவனங்கள், மத நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், அரசியல் கட்சிகள் அல்லது இயக்கங்கள் முதலியனவற்றிற்குள் இவன் இருக்கிறான். இவற்றிலிருந்து இவன் விலகி நிற்க முடியாது. இவை இவனைப் பாதிக்கின்றன, உருவாக்குகின்றன, கட்டமைக்கின்றன, கட்டுப்படுத்துகின்றன.

இவனது கல்வி, கலையுணர்வு, வாழ்க்கை இலட்சியங்கள் முதலிய எல்லாவற்றையும் படைப்பதில் இவற்றின் தாக்கம் உண்டு. சில சந்தர்ப்பங்களிலேனும் இந்த நிறுவனங்களுக்கு இவன் ஊழியனாக, கூலிக்காரனாகச் செயல்பட இவன் விதிக்கப்பட்டுள்ளான். விடுதலை குறித்து இவன் சிந்திப்பவன் என்றாலும் முற்றான விடுதலை இவனுக்கு இப்பொழுதைக்கு இல்லை. இவனுக்குள் ஒரு கலைஞன் இருப்பதைப் போலவே வாசகனும் இருக்கிறான். இவன் எல்லாவற்றையும் தன் வாழ்வியல் அனுபவங்கள் வழியே வாசிக்கிறான், பொருள்படுத்துகிறான். வாழ்க்கை மற்றும் இவன் வாசிக்கும் கதைகளை இவனே புரட்டிப் பார்க்கிறான், அர்த்தப்படுத்துகிறான். இந்த வாசகனுக்குள் ஒரு திறனாய்வாளனும் இருக்கிறான். இவன் எல்லாவற்றையும் மதிப்பிடுகிறான். மதிப்பீடுகளைக் கலைத்துப் போடுகிறான். மீட்டுருவாக்கம் செய்கிறான். இப்படி எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகத்தான் என் சமதளப் பார்வை இருக்கிறது. ஆதிக்கத்திற்கு இடம் தராதது இந்த சமதளப் பார்வை. ஐம்பது ஆண்டு அனுபவங்கள் இந்தப் பார்வையை எனக்குக்

கற்றுக்கொடுத்ததைப் போலவே என்னைப் போன்ற வாசகன் அல்லது திறனாய்வாளனுக்குள்ளும் இந்தப் பார்வை இடம்பெற முடியும்.

3. 125 –ஆண்டு வரலாறு தமிழ்நாவலுக்கு உண்டு. இந்தக் கால அளவில் தமிழ்நாவல்களில் சில / பல உச்சங்கள் உண்டு. நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 50 ஆண்டுகளினுள்ளும் சில உச்சங்களை நாம் காணமுடியும். உச்சங்களில் பார்வையைப் பதித்து இடையிலும் தரையிலும் உள்ள எத்தனையோ அற்புதங்களை நாம் இழந்து விடக்கூடாது. உச்சங்கள் நம் பார்வையை மறைப்பது மக்களாட்சிக் காலத்திற்கு ஒத்ததாகவும் இருக்கமுடியாது. இதைப்போலவே நாவல் என்பது ஒரு நவீன காலக்கலை. நவீனத்துவக் கலை என்ற முறையில் கலைப் பார்வையை மட்டுமே முன்னிறுத்திக் கலைத்துவ நாவல்களில் மட்டுமே நம் கவனத்தைக் குவிக்கமுடியாது.

காவிய மரபிலிருந்து பெரும்பகுதி வேறுபட்டது நாவல். காவியங்களில் கடவுள், மன்னராட்சி முதலியவற்றிற்கு இடமுண்டு. தன்னிகரற்ற தலைவன் காவிய நாயகன். புராணம் என இனம் காணத்தக்க அளவிற்குக் காவியத்தில் அற்புதங்கள் நிகழும். காலம் மாறிவிட்டது. வாழ்வை நிர்ணயிக்கும் சக்திகளாகப் பொருளியலும் அரசியலும் வரலாறும் வந்துவிட்டன. மனித வாழ்வின் எதார்த்தச் சூழலைத்தான் நாவல்கள் தனக்கு உள்ளடக்கமாகவும் எல்லையாகவும் கொண்டுள்ளன. இந்த எல்லைக்குள்ளும் அற்புதங்கள் சிலவேனும் நிகழத்தான் செய்கின்றன. வாழ்வின் எல்லைகளும் அர்த்தங்களும் மாறிவருகின்றன. எதார்த்த வாழ்வியல் நோக்கிலிருந்து படைக்கப்படும் நாவல்கள், காவிய மரபிலிருந்து மாறுபட்டவை மட்டுமல்ல; எதிரானவையாகவும் இருக்கமுடியும்.

தமிழ் நாவல்களில் எதார்த்தவாதம் அழுத்தம் பெற்றதை நாம் ஒப்புக்கொள்ளும் பொழுதே, எதார்த்தவாத நோக்கில் மட்டுமே வாழ்வின் பல்வேறு சிக்கல்களையும் போக்குகளையும் அதிர்வுகளையும் நம்மால் புரிந்து கொள்ள இயலாது. எதார்த்தவாத நோக்கில் மையம் பெறும் கட்சி அரசியல் குறித்தும் நாம் விமர்சனம் செய்வதற்கு இடமிருக்கிறது. காவிய மரபிலிருந்து நம்மால் முற்றாக விடுபட இயலாது என்பதைப்போலவே எதார்த்தவாத மரபை ஒதுக்கிவிட இயலாது.

தமிழில் திறனாய்வாளர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாம், வணிகமுறை எழுத்துக்களை ஒதுக்கியும் கேவலப்படுத்தியும்

வந்திருக்கிறோம். வணிகம் என்பதை சோசலிச காலகட்டத்தினுள்ளும் விலக்கிவிட இயலாது. அன்றியும் வணிகமுறையில் இருந்து கலை என்றும் உச்சங்கள் என்றும் பேசுபவர்களும் தப்ப இயலாது. ஆகவே துப்பறியும் நாவல்கள் மற்றும் வணிக இதழ்களில் இடம்பெறும் தொடர்கதைகள் மற்றும் ரொமான்ஸ் என்று அழைக்கப்படும் புனைவியல் நாவல்கள், பொழுதுபோக்கு நாவல்கள் முதலியவற்றின் மீதும் நாம் கவனம் செலுத்தத்தான் வேண்டும். இவற்றினுள்ளும் இலக்கியத்தரம், வாழ்வியல் நிலவரங்கள், மோசடிகள் முதலியவை இடம்பெறுவதை மறுக்க இயலாது. மக்களின் இரசனைகளை இவ்வகை நாவல்கள் மலினப் படுத்துகின்றன என்ற உண்மையை நாம் மறுக்கவில்லை.

வாசகன் என்பவனுக்குள் ஒரு திறனாய்வாளன் இருக்கிறான் என்று நாம் சொன்னோம். இந்தத் திறனாய்வாளன் எந்த ஒரு நாவல் அல்லது இலக்கியத்தை வாசிக்கும்பொழுதும் தன்னை முற்றாக இழந்துவிட்டு வாசிப்பது இல்லை. இந்தத் திறனாய்வாளன் தான் வாசிக்கும் நாவல்களை ஒரு மறுவாசிப்பிற்கு உட்படுத்திக் கொள்ளவும் செய்கிறான். வாசிப்பின்போதே நாவலில் குறைகள் குணங்கள் உணர்ந்து நாவலைப் புரட்டிப் பார்த்துத் தனக்குள் நிறைவு செய்து கொள்கிறான். திறனாய்வு இல்லாமல் எந்த இலக்கியமும் வாசகனிடம் முற்றுப்பெறுவதில்லை. இத்தகைய திறனாய்வு, வாழ்விற்குள்ளிருந்தே வாழ்வின் முரண்பாடுகளுக்குள்ளிருந்தே வாசகனுக்குள் எழத்தான் செய்கின்றன.

தற்காலத் தமிழ் இலக்கியத்திற்குள் புதுவகையான பார்வைகள் தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கின்றன. நவீனத்துவம், பின் நவீனத்துவம், தலித்தியம், பெண்ணியம் முதலியவை இப்பார்வைகள். வாழ்க்கைக்குள் செயல்படும் ஆதிக்கங்களைக் களைந்து கொண்டால் ஒழிய வாழ்வில் நமக்கு அர்த்தங்கள் இல்லை, அழகுகள் இல்லை, விடுதலை இல்லை. தமிழ்ச் சமூகத்தின் 2000 / 3000 ஆண்டுக்கால வாழ்க்கையை ஒரு தீவிரமான மறு ஆய்விற்கு / மறு வாசிப்பிற்கு உட்படுத்திக் கொள்ள இப்பார்வைகள் நமக்கு வழிதிறந்திருக்கின்றன. உட்புக இடம்தராத முன்னைய இறுக்கமான இலக்கியங்களைத் திறந்துபார்க்கும் வாய்ப்பை இவ்வகைப் பார்வைகள் நமக்கு வழங்கியிருக்கின்றன. இதன் காரணமாக இலக்கியத்தின் எல்லைகள் நமக்குள் விரிவு பெறுகின்றன, ஆழம் பெறுகின்றன. இவ்வகைப் பார்வை நமக்குள் இடம் பெறுவதனால்தான் நாட்டார் கலை

இலக்கியங்கள் இன்று நமக்குள் முன்வந்திருக்கின்றன. தரையில் கால்பதித்துக் காலாற நடந்துசெல்லும் வாய்ப்பை இவ்வகைப் பார்வை நமக்குத் தருகிறது. உண்டு, உறங்கி, அதிகாரம் செய்து வாழ்கின்ற வாழ்க்கையிலிருந்து விடுபட்டு நமக்குள் சிறகுகள் விரித்து வானத்தில் பறக்கும் வாய்ப்பை இவ்வகைப் பார்வைகள் நமக்குத் தருகின்றன.

நவீனத் தமிழ் இலக்கியத்திற்குள், நவீனத் தமிழ் நாவலாக்கம் மற்றும் திறனாய்வு குறித்து இவ்வாறெல்லாம் பேசுவதற்கான வாய்ப்பை நாம் தெரிவு செய்து கொண்ட 50 நாவல்கள் வழியே பெற்றிருக்கிறோம். வரலாறு குறித்த விரிவான பார்வையைத் தமிழ் நாவல்கள் வழியே பெறுகிறோம். யாரையும் நாம் ஒதுக்கிவிட இயலாதென்பதை உணர்ந்து கொண்டோமென்றால் நாம் சமதளப் பார்வைக்குள் இருப்பதைப் புரிந்துகொள்கிறோம் என்பது மட்டுமல்ல; இவ்வகைப் பார்வை நமக்குள் விரிவும் அழகும் தரும் என்பதையும் புரிந்து கொள்ளமுடியும்.

கதையின் கட்டமைப்பிலும் புதிய முறைகளும் உத்திகளும் வளர்ச்சி பெற்றுள்ளன. ஒரு நாவலுக்கு அச்சாணியாக மையத்தில் இழுத்து கட்டப்படுகிற ஒரு வலுவான கதை தேவை என்பது அண்மைக்காலத்தில் கைவிடப்படுகிறது. கதை தேவையில்லை என்றும் முதலும் முடிவும் கதையில் இருக்கவேண்டியதில்லை என்றும் இப்பொழுது கருதுகிறார்கள். ஓர் ஆசிரியரின் பல சிறுகதைகள் கொண்ட ஒரு தொகுப்பினுள்ளும் ஒரு நாவல் இயங்குவதைக் காணமுடியும். நாவலில் ஒரு நாயகன் தேவையில்லை. எல்லாப் பாத்திரங்களும் சமஅளவில் முக்கியத்துவம் உடையவர்களாக அமையமுடியும்.

நாவலுக்கு ஓர் அழுத்தமான மையம் தேவையென்றால் மையத்தில் அதிகாரம் குவிந்துவிடும். கதைக்குள் தலைவன் வந்துவிடுவான். பிற பாத்திரங்கள் அவனது கதைக்கு ஏவலர் ஆகிவிடுவார்கள். இது மட்டுமல்ல; கதை என்பது ஓர் ஆசிரியர் விரும்பிச் செய்யும் கட்டமைப்பு. ஏதோ ஒன்றை மையத்தில் வைத்துக் கதையை கட்டவேண்டும். மையத்தில் ஒரு பெரும் இலட்சியம். இலட்சியத்திற்குள் ஒரு பெரும் தத்துவம். இத்தகைய கட்டமைப்பு வாழ்க்கையைச் சாரமற்றதாய் பன்முகப் பரிமாணங்கள் அற்றதாய் மாற்றிவிடும். வாழ்க்கை அதன் இயல்பில் செல்லவேண்டும்.

இப்படியெல்லாம் புதியமுறைகள், உத்திகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இவற்றின் விரிவை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம். சமதளப்பார்வை

என்ற பார்வைக்குக் கதை சொல்வதில் இத்தகைய புதியமுறைகளும் உத்திகளும் ஏற்புடையவை. உரையாடலியம் என்பது முக்கியமான இன்னொரு புதியமுறை. கல்லும் மண்ணும் கூட தமக்குள் உரையாடலாம். காலம் கடந்தும், இடம் கடந்தும் மனிதர்களும் பிற உயிர்களும் உரையாடலாம். ஒவ்வொன்றும் மனம் திறந்து பேசுவது அல்லது உறவாடுவது உரையாடலியம்.

4. என் சமதளப் பார்வை வழியே நான் தெரிவு செய்து கொண்ட தமிழ் நாவலாசிரியர் மற்றும் அவர்களின் ஒவ்வொருவரின் தனித்தன்மை வெளிப்படும் ஒரு நாவலையும் கொண்ட பட்டியலைக் கீழே தருகிறேன்.

1. க.நா.சு. – பொய்த்தேவு
2. கல்கி – சிவகாமியின் சபதம்
3. சி.சு. செல்லப்பா – சுதந்திர தாகம் – 1997
4. அகிலன் – பாவை விளக்கு
5. நா. பார்த்தசாரதி – குறிஞ்சி மலர்
6. டாக்டர் மு.வ. – நெஞ்சில் ஒரு முள்
7. கோவி. மணிசேகரன் – குற்றாலக் குறிஞ்சி – 1989
8. தி. ஜானகிராமன் – மோகமுள்
9. எம்.வி. வெங்கட்ராம் – காதுகள் – 1992
10. கரிச்சான் குஞ்சு – பசித்த மானுடம்
11. சுந்தரராமசாமி – ஜெ.ஜெ. சில குறிப்புகள் – 1981
12. விந்தன் – பாலும் பாவையும்
13. ஜெயகாந்தன் – ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்
14. பிரபஞ்சன் – வானம் வசப்படும்
15. ரகுநாதன் – பஞ்சும் பசியும் – 1953
16. டி. செல்வராஜ் – தேநீர்
17. சின்னப்பபாரதி – சங்கம் – 1985
18. பொன்னீலன் – புதிய தரிசனங்கள்
19. ராஜம் கிருஷ்ணன் – மண்ணகத்து பூந்தளிர்
20. சு. சமுத்திரம் – வாடாமல்லி – 1994
21. அஸ்வகோஷ் – சிறகுகள் விரித்து
22. இந்திரா பார்த்தசாரதி – இயேசுவின் தோழர்கள் – 1987
23. அசோகமித்திரன் – ஒற்றன்
24. சா. கந்தசாமி – தொலைந்து போனவர்கள்
25. வண்ணநிலவன் – கடல்புறத்தில் – 1991
26. எஸ். சம்பத் – இடைவெளி – 1984

27. சுஜாதா – கனவுத் தொழிற்சாலை
28. பாலகுமாரன் – இரும்புக் குதிரைகள்
29. திலகவதி – சொப்பன பூமியில் – 1988
30. ஜெயந்தன் – ஞானக்கிறுக்கன்
31. மா. அரங்கநாதன் – பறளியாற்று மாந்தர்கள் – 1991
32. காவேரி – ஆத்துக்கு போகணும் – 1986
33. தோப்பில் முகம்மது மீரான் – சாய்வு நாற்காலி – 1995
34. ம.ந. இராமசாமி – நாலாவான் – 1993
35. சிவசங்கரி – பாலங்கள்
36. ஜோதிர்லதாகிரிஜா – மணிக்கொடி – 1995
37. நாஞ்சில் நாடன் – சதுரங்கக் குதிரைகள்
38. சி.ஆர். ரவீந்திரன் – மஞ்சு வெளி
39. தமிழ்நாடன் – சாரா
40. தமிழவன் – ஏற்கெனவே சொல்லப்பட்ட மனிதர்கள்
41. சுப்ரபாரதிமணியன் – மற்றும் சிலர் – 1981
42. சூர்யகாந்தன் – மானாவாரி மனிதர்கள்
43. இறையன்பு – ஆற்றங்கரையோரம்
44. தஞ்சை பிரகாஷ் – கள்ளம் – 1994
45. பாமா – கருக்கு – 1992
46. சாருநிவேதிதா – ஜீரோ டிகிரி – 1998
47. அஸ்வத் – நல்லூர் மனிதர்கள் – 1994
48. கணேசலிங்கன் – தரையும் தாரகையும்
49. கே. டானியல் – பஞ்சமர் – 1994
50. எஸ். பொன்னுத்துரை – சடங்கு – 1971
51. தேவகாந்தன் – விதி – 1993
52. செ. யோகநாதன் – அகதியின் முகம் – 1991
53. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் – தேம்ஸ் நதிக்கரையில்
54. ஜெயமோகன் – விஷ்ணுபுரம்
55. இமையம் – கோவேறு கழுதைகள்
56. சோ. தர்மன் – தூர்வை – 1996
57. சு. வேணுகோபால் – நுண்வெளி கிரணங்கள் – 1997
58. பாவண்ணன் –
59. நீல. பத்மநாபன் – தலைமுறைகள்
60. அ. மாதவன் – கிருஷ்ண பருந்து
61. ஆர். சண்முக சுந்தரம் – நாகம்மாள் – 1987

62. சண்முக சுந்தரம் (காவ்யா) – அந்தி – 1998
63. தங்கர்பச்சான் – ஒன்பது ரூபாய் நோட்டு – 1996
64. கி. ராஜநாராயணன் – கோபல்ல புரத்து மக்கள் – 1990
65. அழகியநாயகி – கவலை
66. ஜி. நாகராஜன் – நாளை மற்றுமொரு நாளே – 1974
67. அண்ணாதுரை –
68. மு. கருணாநிதி – தென்பாண்டிச் சிங்கம் – 1983
69. பாவை. சந்திரன் – நல்லநிலம்
70. ர.சு. நல்லபெருமாள் – கல்லுக்குள் ஈரம்
71. ஹெப்சிபா ஜேசுதாசன் – புத்தம்வீடு – 1964
72. வாஸந்தி – வேர்களைத் தேடி .... – 1993
73. லா.ச. இராமாமிர்தம் – அபிதா
74. கிருத்திகா – நேற்றிருந்தோம் – 1975
75. வடிவேலன் – தொட்டிக்கட்டு வீடு
76. பா. விசாலம் – மெல்லக் கனவாய் – 1994
77. நகுலன் – வாக்கு மூலம் – 1991
78. எஸ். சங்கரநாராயணன் – மானுட சங்கமம் – 1986
79. ப. சிங்காரம் – புயலில் ஒரு தோணி – 1972
80. விட்டல்ராவ் – நதிமூலம் – 1983
81. பெருமாள் முருகன் – ஏறுவெயில் – 1991
82. சிவகாமி – ஆனந்தாயி – 1992
83. வே. சபாநாயகம் – ஒரு நதி – 1993
84. ஆதவன் – காகித மலர்கள் – 1977
85. பூமணி – நைவேத்யம்
86. நாஞ்சில் நாடன் – மிதவை
87. நா. பார்த்தசாரதி – குறிஞ்சி மலர்

குறிப்பு : 50 நாவலாசிரியர்கள் என்று குறிப்பிட்டேன். என் பட்டியலிலேயே 50–க்கும் மேல் இடம் பெறுகிறார்கள். சில முக்கியமான விடுபடல்கள் இந்த பட்டியலில் இருக்கின்றன. சாண்டில்யன், விக்ரமன், வாசவன், ஜெகசிற்பியன், தாமரை மணாளன், எஸ்.ஏ.பி., வல்லிக்கண்ணன் என்ற முறையில் விடுபடல்கள், நண்பர்கள் மன்னிக்க வேண்டும். வரிசைப்படுத்தலில் கோளாறுகள். நானே காலவாரியாக வரிசைப் படுத்தலை மாற்றியமைக்க வேண்டும். ஒருவர்க்கு ஒரு நாவல் என்று குறிப்பிட்டுள்ளேன். இரண்டு, மூன்று, நான்கு என்று கூடச் சிலரைப் பொறுத்தவரை குறிப்பிட வேண்டும். ஆண்டுகளைக் குறிப்பிடுவதில் சில தவறுகள் இருக்கக்கூடும்.

5. 50 நாவல்கள் என்று தொடங்கினோம். பட்டியல் முடிவடைவதாக இல்லை, தொடர்கிறது. 100 நாவல்கள் வரை வரலாம்.

1. ஒவ்வொரு நாவல் குறித்தும் தனித்தனியாக இங்கு பார்ப்பதற்கில்லை. தமிழ்நாவல்களின் வகைகளைத் தொகுத்துத் தனித்தனியாக ஆய்வதற்கும் இங்கு இடமில்லை. ஏற்கனவே இப்படி ஆய்வுகள் வெளிவந்துள்ளன. நாவலில் வகைகள் என, கடந்த 50 ஆண்டுகளுக்குள் நிறையவே வெளிவந்துள்ளன. இவ்வகையில் தமிழ்நாவல்களின் ஆக்கத்தைக் குறை சொல்வதற்கில்லை. மலையாளம் முதலிய வேறு இந்திய மொழிகளில் வெளிவந்துள்ள நாவல் இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க நமக்கு வாய்ப்பில்லை என்றாலும் தமிழ் நாவல்களின் பாரிய பரப்பை வைத்துப் பார்க்கும்பொழுது மோசம் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். சாகித்திய அகாடமிப் பரிசுகள் குறித்து நமக்கு விமர்சனங்கள் உண்டு. ஏற்கனவே இன்னும் பலர் பரிசு பெற்றிருக்க வேண்டும். ஞானபீடப் பரிசுக்குத் தகுதியுடையவர்கள் என்று தமிழ் நாவலாசிரியர்களில் குறைந்தது 5/6 பேர்களையாவது நாம் இனம் காணமுடியும். பரிசு ஏன் கிடைக்கவில்லை என்பது பற்றி இங்கு ஆய்வதற்கில்லை.

2. மேலே நாம் தொகுத்துக்கொண்ட பட்டியலைப் பார்க்கும்பொழுது நாவலின் எல்லாவகைகளும் தமிழில் இடம்பெற்றுள்ளன. வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள், முற்போக்கு நாவல்கள், வட்டார நாவல்கள், உளவியல் நாவல்கள், நாட்டார் வழக்காற்று நாவல்கள், பெண்ணிய நாவல்கள், தலித்திய நாவல்கள், நவீனத்துவ / பின் நவீனத்துவ நாவல்கள் என்ற முறையில் தமிழில் நாவல்கள் வந்துள்ளன. இவை குறித்து இங்கு சுருக்கமாகத் தொகுத்துக் கொள்ளலாம்.

3. ஆங்கிலேயருக்கு எதிரான இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது வரலாற்று நாவல்கள் எழுதினார்கள். கல்கியின் நாவல்களில் தமிழ்த்தேசியம் என்ற உணர்வை இன்று நாம் காணமுடியும். வரலாறு பற்றிய கல்கி முதலியவர்களின் பார்வையிலிருந்து வேறுபட்ட முறையில் வரலாற்றைப் பார்க்க வேண்டிய தேவை நமக்கு ஏற்பட்டது. வர்க்கப் போராட்டம் என்ற முறையில் சமகால வரலாற்றைத் தமிழ்நாவல்களுக்குள் மார்க்சியர் கொண்டு வந்துள்ளனர். அடித்தள மக்களின் பார்வையிலிருந்து வரலாற்றைப் பார்க்கும் தேவையும் நமக்கு இன்று முன்வந்துள்ளது. பிரபஞ்சனையும், ஜெயமோகனையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

சமகால வரலாற்றின் சில முக்கிய நிகழ்வுகள் தமிழ் நாவல்களில் இடம் பெற்றுள்ளன. நெருக்கடிகால நிலவரங்கள் குறித்துப் பொன்னீலன் விரிவாக எழுதினார். புதுச்சேரியில் பிரெஞ்சுக்காரர் ஆட்சி குறித்து பிரபஞ்சன் எழுதியிருக்கிறார். உழவர்களின் போராட்டம், மீனவர்கள், தொழிலாளிகள், நெசவாளிகள் நடத்திய சில போராட்டங்களும் தமிழ்நாவல்களில் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் நடைபெற்ற சமூக மாற்றங்கள் குறைந்த அளவிற்கேனும் தமிழ்நாவல்களில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, தமிழகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்கள், மக்கள் மத்தியில் எதிர்காலம் குறித்து ஏற்படுத்திய நம்பிக்கைகள், இந்தக் கனவுகள் பொய்யாகிய நிலவரங்கள் பற்றியெல்லாம் தமிழ்நாவல்கள் குறிப்பிடுகின்றன. விடுதலைப் போரில் காந்தியம் மேன்மைப்படுத்தப்பட்டது. கம்யூனிஸ்டுகள், தீவிரவாதிகள் என விமர்சனம் செய்யப்பட்டனர். இத்தகைய போக்கு எப்படியோ தமிழ்நாவல்களில் பதிந்துவிட்டது. முற்போக்குவாதிகளின் பார்வையில் இருந்தும் விடுதலைப் போராட்டம் தமிழ்நாவல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

4. தமிழில் வெளிவந்துள்ள சமூகநாவல்கள் என்று சொல்லப்படுவனவற்றுள் சாதி, மதங்கள், சடங்குகள், வழக்காறுகள் என்று தொடங்கி ஏராளமான விவரங்களைத் தமிழ்நாவல்கள் பதிவு செய்திருக்கின்றன. நீல. பத்மநாபன், நாஞ்சில்நாடன், தோப்பில்முகம்மது மீரான் என்று தொடங்கிப் பலரைச் சொல்லவேண்டும். கடைசியாக சு. வேணுகோபால். வட்டார நாவல்கள் என்பனவற்றைச் சமூக நாவல்களில் உள்ளடக்கிப் பேசுவது பொருந்தும். இவ்வகையில் தமிழ்நாவல்கள் அற்புதங்களைச் சாதித்துள்ளன என்று சொல்லலாம். கடைசியாக சண்முகசுந்தரம், அழகியநாயகி ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாட்டின் பல்வேறு வட்டாரங்கள், வாழ்வியல் முறைகள் தமிழ்நாவல்களில் இடம் பெறுகின்றன. தஞ்சை வட்டாரம், கரிசல் நிலம், கொங்கு நாட்டுப்புறம் என்று பலவற்றைச் சொல்லலாம். கடைசியாக பாவண்ணன், தங்கர்பச்சான். தமிழ்நாட்டின் பெரும்பாலான சமூகப்பிரிவுகள் தமிழ்நாவலுக்குள் இடம்பெற்றுள்ளன. உழவர்கள், தொழிலாளிகள், கைவினைஞர்கள், குறிப்பாக நெசவாளிகள், பழங்குடிகள், மீனவர்கள் என்று பலரைச் சொல்லலாம். கலைஞர்கள் தமிழ்நாவல்களில் கூடுதலாகவும் சிறப்பாகவும் இடம் பெற்றுள்ளனர். தலித் மக்கள் தமிழ்நாவலுக்குள் அண்மைக்கால வரவுகள்.

அரசியல் இயக்கங்கள் குறித்தும் தமிழ்நாவல்களில் பார்க்கமுடியும். எனினும் இவை அதிகமில்லை.

இப்படித் தொடங்கி எவ்வளவோ சொல்ல வேண்டும். மனித வாழ்க்கையை, வாழ்க்கைச் சிக்கல்களை, முரண்பாடுகளை, போராட்டங்களை, தீர்வுகளை, தீராத வேதனைகளை விரிவாக சொல்வதற்குரிய நாவல் இலக்கியம், வரலாறு, மற்றும் சமூக பொருளியல் சூழலை உள்வாங்கிக் கொள்ளாமல் மனிதர்களைப் பற்றிப் பேசமுடியாது என்று சொல்லி இங்கு நிறுத்திக் கொள்வோம்.

5. நாவல்களில் இடம்பெறும் சமூகம், வரலாறு, அரசியல், பொருளியல் முதலியவை பற்றிய அனைத்துவகையான விவரிப்புகளும் எந்த நோக்கோடு நாவல்களில் தரப்படுகின்றன. இவை இல்லாமல் வாழ்க்கை இல்லை. வாழ்க்கை என்பதற்கு பெருமளவிற்கு பணமோ, அதிகாரமோ உடமைகளோ தேவையில்லை. வாழ்க்கைக்கு அர்த்தம் இருக்க வேண்டும். இந்த அர்த்தம்தான் வாழ்க்கைக்கு அழகு தருவது மற்றும் ஆற்றல் தருவது. அர்த்தங்களை இழந்துவிட்டு வாழ்வது பயனில்லை. இத்தகைய வாழ்வைவிட, சாவு மேலானது. எத்தகைய வரலாறு மற்றும் சமூகச் சூழலில் வாழ்வின் அர்த்தங்கள் அழிகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன. யார் இந்த அழிவுச் சக்திகள்? இவர்கள் எங்கிருந்து தோன்றினார்கள்? எப்படித் தோன்றினார்கள்? இவர்களை அப்படியே வைத்துக் கொண்டு வாழ்வின் அர்த்தங்கள் என்றும் அழகுகள் என்றும் மேன்மைகள் என்றும் விடுதலை என்றும் பேசமுடியுமா? அடிமைப்பட்ட வாழ்வில் என்ன அர்த்தம் இருக்கமுடியும்?

நம் சமூகத்தில் ஆதிக்கசக்திகள் என்று எவ்வளவோ உள்ளன. இவற்றையெல்லாம் இங்கு வரையறுத்துச் சொல்ல வேண்டியதில்லை. எண்ணிக்கையில் இவர்கள் குறைந்தவர்கள் என்றாலும் பெரும்பாலான மனிதர்களை அடிமைப்படுத்துபவர்கள், சுரண்டுபவர்கள், ஒடுக்குபவர்கள் இவர்கள். குடும்பம் முதலிய எல்லா நிறுவனங்களுக்குள்ளும் இவர்களின் ஆதிக்கக் கைகள் நீண்டுள்ளன. உலகளவில் இவர்கள் செயல்படுகிறார்கள். இங்குள்ளவர்கள் ஒத்துழைக்கிறார்கள். இவர்களின் ஆதிக்கம் எல்லாக் களங்களினுள்ளும் நீண்டுள்ளன. இவர்கள் நமக்குள்ளும் நுழைந்து நம்மை வசப்படுத்தியுள்ளனர். நம்மிடமிருந்து நம் வாழ்க்கையை, வாழ்வின் அர்த்தங்கள், அழகுகள் முதலியவற்றைப் பறித்தவர்கள் இவர்கள்தான். நம்மை வாழ்விப்பதற்காக, நம்மை வளர்ப்பதற்காகத்தான் இவர்கள் செயல்படுவதுபோல நம்மை நம்ப வைத்திருக்கிறார்கள். அறிவியல் என்றும் தொழில் நுட்பங்கள் என்றும்

கல்வி என்றும் மருத்துவம் என்றும் பொழுதுபோக்குகள் என்றும் வாழ்க்கை வசதிகள் என்றும் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கைகள் என்றும் எத்தனையோ வழிகளில் இவர்கள் நமக்குள் நுழைந்து நம்மை வசப்படுத்தியிருக்கிறார்கள். இவர்கள்தான் நமக்கு வரலாறு, பண்பாடு, அரசியல், வாழ்க்கை என்று கற்பிக்கிறார்கள். இவர்களிடம் வசப்பட்டு நம்மைநாமே இழந்து வறியவராகிறோம். மனச்சோர்விற்குள்ளாகிறோம். மனநோயாளிகள் ஆகிறோம். தற்கொலை செய்து கொள்கிறோம், போக்கிரிகளாகிறோம், திருடுகிறோம், பொய் சொல்கிறோம், உடலை விற்கிறோம், தன்மானம் இழக்கிறோம்.

இனியும் முடியாது என்ற நிலையில் நமக்குள்ளும் புறத்திலும் விழித்துப் பார்க்கிறோம். நாம் இப்பொழுது எங்கிருக்கிறோம்? நம்மை நாமே எப்பொழுது தொலைத்தோம்? ஏன் தொலைத்தோம்? யாரிடம் தொலைத்தோம்? நம் வரலாறு என்ன? மரபுகள் என்ன? நம் வேர்கள் என்ன? நம் வாழ்வின் நோக்கம் என்ன? நமக்கு எங்கே விடுதலை? இப்படியெல்லாம் சிந்திக்கிறோம். வழிதேடுகிறோம். நமக்கு வாழ்க்கை வேண்டும். நம்மிடமிருந்து நம் வாழ்க்கையைப் பறித்துக் கொண்டு தம்மை அழகுபடுத்திக் கொண்டவர்களிடம் இருந்து நம் வாழ்க்கையை, வரலாற்றை நாம் மீட்டுக்கொள்ள வேண்டும். உலகம் நமக்கு உரியதாக வேண்டும். இயற்கை நமக்குரியதாக வேண்டும். நமக்கு எளியவாழ்வு போதும். உழைப்பதும் பகிர்ந்துகொள்வதும் தான் உன்னதமான வாழ்க்கை. அடிமைத்தனம் நமக்கு எந்த வகையிலும் வேண்டாம். ஆதிக்கங்கள் வேண்டாம். ஆதிக்கங்களிலிருந்து விடுதலை பெற்றாலொழிய நமக்கான வாழ்க்கையை நம்மால் படைத்துக் கொள்ள இயலாது.

இதற்குத்தான் வாழ்க்கை என்றும், வரலாறு என்றும், சமூகம் என்றும், பொருளியல் என்றும் நாம் பார்வை செலுத்துகிறோம். வாழ்க்கையில் தொலைத்துவிட்ட அர்த்தங்களைத் தேடுவதற்காகவும் திரும்பக் கண்டறிவதற்காகவும் தான் இத்தகைய விரிவான விசாரணையில் ஈடுபடுகிறோம். இந்த விசாரணைக்கு வரையறைகள் இல்லை. எல்லைகள் இல்லை. இந்த விசாரணை அல்லது ஆய்வைத் தமிழ்நாவல்கள் உள்ளடக்கியுள்ளன. வாழ்க்கை பற்றிய பேரளவிலான இந்த ஆய்வைச் செய்வதற்குப் பெரிய நாவல்கள் வேண்டும். மிகச்சிறிய நாவலினுள்ளும் இந்த ஆய்வின் சில கூறுகளையேனும் நாம் காணமுடியும். வாழ்வின் அர்த்தங்களைத் தேடுவதில் எல்லா நாவலாசிரியருக்குள்ளும் வரலாறு தொடங்கி உளவியல் இறுதியாக இந்த

ஆய்வுகள் நடைபெறுவதில்லை. அவரவருக்குள் சில தடைகள், முடக்கங்கள், போதைகள், தன் முனைப்புகள், இவற்றையெல்லாம் கடந்து தமிழ்நாவல்கள் பற்றிய ஆய்வை நாம் முன்னெடுத்து செல்லவேண்டும். சில நாவல்கள் அல்லது சிலவகை நாவல்கள் அல்லது சிலருடைய நாவல்கள் நமக்கு போதுமென்று இருந்துவிட இயலாது. விரிவான தளங்களில் இந்த ஆய்வைச் செய்யவேண்டும்.

6. 'தொலைந்து போனவர்கள்' என்பது சா. கந்தசாமியின் ஒரு நாவல். இளமைக்காலம் தொலைந்துபோய் விட்டது. இளமைக் காலத்து உறவுகள், நண்பர்கள் இனி இல்லை. இளமைக் காலத்து இயற்கை இல்லை. வாழ்க்கை இல்லை. உலகம் இல்லை. பற்றிக் கொள்வதற்கு எதுவுமில்லை இப்பொழுது வாழ்க்கையில்லை. தேடிச் சென்றாலும் கிடைப்பதில்லை. கிடைத்தாலும் தவறிப்போகிறது. இந்த வெறுமையோடுதான் உண்டு, உறங்கி, இடர் செய்து இனி வாழவேண்டும்.

'வேர்களைத் தேடி' என்பது வாஸந்தியின் ஒரு நாவல். மனிதனின் வேர்கள் எங்கிருக்கின்றன. சாதியிலா? மதத்திலா? மனித நேயத்திலா? இயற்கையிலா? என்பதை ஆராய்கிறது இந்த நாவல். தனக்குள் தொலைந்துபோனவன் தன் வேர்களைத் தேடுகிறான்.

இப்படி, தனக்குள் தொலைந்துபோனவர்களில் ஒருவன் சுகுமாரன். பொன்னீலனின் புதிய தரிசனங்களில் இவனைக் காண்கிறோம். இவன் உயர்சாதிக்காரன். தன் சாதியில் இருந்து இவன் விலகி நிற்கிறான். இவன் மனைவி உடமைக்காரி. அவளது அதிகாரத்திலிருந்து இவன் விலகிச் செல்கிறான். உழவனாகி நிலத்தில் உழைக்கிறான். தாழ்ந்த சாதிப் பெண் என்று சொல்லப்படுபவளை நேசிக்கிறான். நிலத்தோடு, இயற்கையோடு, உழைப்போடு இவன் இணைந்திருக்கிறான். சமத்துவம் இவனுக்கு உயிர். இவன் சாதிக்காரர்கள் இவனைக் கட்டி வைக்கிறார்கள். இவனைக் கதறக் கதற அடிக்கிறார்கள். கடைசியில் இவனை விடுவிக்கிறார்கள். இவன் இப்பொழுது பைத்தியமாகி நடுச்சாலையில் நிற்கிறான். சாலையில் செல்லும் பேருந்துகளை நெறிப்படுத்தும் முறையில் கைகாட்டி ஆகிறான். இவனை இப்படிச் செய்தவர்கள் யார்? செய்தவர்கள் இவனது சாதிக்காரர்கள், உடமைக்காரர்கள். இவர்கள் தான் இவனது வேர்களை வெட்டியவர்கள். இவர்களுக்குச் சமத்துவம் உடன்பாடில்லை.

இத்தகைய சுகுமாரன்களை, மனோன்மணிகளைத் தமிழ் நாவல்கள் பலவற்றில் நாம் காண்கிறோம்.

'குழந்தைகள், பெண்கள், ஆண்கள்' என்பது இறுதியாக வெளிவந்த சுந்தர ராமசாமியின் நாவல். பாலு சிறுவன். இவனுக்குள் மனநோய் எப்படி ஏற்பட்டது. இவனது தந்தை எஸ்.ஆர்.எஸ். இவனைக் கண்டிப்போடு, கறாராக வளர்க்க விரும்புகிறார். தன் இயல்போடு இந்தச் சிறுவன் எங்கும் நகரமுடியாது. எஸ்.ஆர்.எஸ்.க்கு இவனிடம் அன்பு இல்லையா? தொழில்முறையில் போட்டி. மரணமடையும்போது தன் தந்தைக்குத் தந்த வாக்குறுதியின்படி தன் இரண்டு சகோதரர்களின் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். தனது தொழிலில் ஒரு புள்ளி அளவிற்குக் கூட இவரால் ஊழல் செய்ய முடியாது. தன் தொழிலுக்குப் பாலுதான் வாரிசு. ஆகவே, அவனைக் கண்டிப்புடன் வளர்க்க வேண்டும். பாலு மனநோயாளியாகிறான். எஸ்.ஆர்.எஸ். தனக்குள் கலங்குகிறார், திகைக்கிறார். தன் வாழ்க்கைப் பாதையை இனி அவரால் மாற்றிக் கொள்வது சாத்தியம் இல்லை. எஸ்.ஆர்.எஸ்.க்கு வெளியில் ஒரு உலகம். போட்டிகள் நிறைந்த உலகம். முதல் உலகப்போர்ச் சூழல்; உள்ளுக்குள் இன்னொரு உலகம். மரபு முறையில் வந்த அறத்திற்கு அழுத்தம் தரும் உலகம்.

இப்படியே பலருடைய நாவல்களைத் திரும்பப் பார்க்கமுடியும். புரட்டிப் பார்க்க முடியும். பொருள்படுத்த முடியும். தன்னைத் தொலைத்து விட்டுத் தன் வேர்களைத் தேடி இயலுமானால் தன்னை மீட்டுக்கொள்ளப் பாடுபடும் மனிதனின் பெருங்கதையைத்தான் தமிழ்நாவல்கள் தமக்குக் கருவாகக் கொண்டுள்ளன.

தோப்பில் முகம்மது மீரான் எழுதிய 'சாய்வு நாற்காலி' குறித்துப் பார்ப்போம். தன் சாய்வு நாற்காலியை விட்டு கீழ் இறங்காதவன் முஸ்தபா கண்ணு. இவனது முன்னோர்களின் பெருமை சொல்லிமுடியாது. நாடாண்டவர் தம் முன்னோர். வீரத்தில் விளைந்தவர்கள் அவர்கள். பெருமைக்குரிய இந்த மரபில் வந்தவன் உழைக்க முடியுமா? இவனுக்கு மனைவி சேவகம் செய்ய வேண்டும். சற்று முறைத்துப் பார்த்தாலும் இவனது பிரம்படியில் சாகவேண்டும். இவன் தனக்குள் நசிந்து நாறிக் கொண்டிருக்கிறான். எல்லாவற்றையும் விற்கிறான். இவனிடத்தில் பொங்கி வழியும் காமத்திற்கு அளவில்லை. காமத்திற்கு இவன் அடிமை. இவனது அழிவைச் சொல்லுகிறது இந்த நாவல். உழைப்பில் தன்னை இவன் உறுதிப்படுத்திக் கொண்டிருக்க முடியும். வாழ்வின் அர்த்தங்களை

இவன் எங்கோ தொலைத்துவிட்டவன், காமத்திற்கு இவன் தன்னை இரையாக்கிக் கொள்கிறான். இந்தக் காமம் ஓர் அழிவுச்சக்தி. என் இனம், என் சாதி, என் முன்னோர், என் பெருமை என்ற ஆணவத்தில் தன்னை அழித்துக் கொள்பவர்களுக்கு இவன் ஒரு குறியீடு.

7. தமிழ் நாவல்களுக்குள் அற்புதம் என்று சொல்லத்தக்க மனிதனை நாம் தொடர்ந்து பார்க்கிறோம். தமிழ் மரபின் ஓர் அழகிய வெளிப்பாடு என்று இந்த மனிதனைச் சொல்லலாம். இவனுக்குள் இருப்பவன் ஒரு சித்தன். பணமோ அதிகாரமோ இவனைத் தீண்ட முடியாது. இவன் அன்பில் நிறைந்திருக்கிறான். வாழ்வியல் ஏற்றத்தாழ்வுகளை இவன் எவ்வளவோ பார்த்தவன். இறுதியாக எல்லாவற்றையும் இவன் விட்டுவிடுகிறான். இவன் புனிதமானவன். இவனுக்கு எளிய வாழ்க்கை போதும். இயற்கைக்கு இவன் நெருக்கமானவன். இவனுக்கு உடமைகள் தேவையில்லை. மின்விசிறி தேவையில்லை. ஏழைகளோடு தோழமை கொள்பவன். இவன் பார்வைபட்டுப் பலர் மனிதராகின்றனர். இரண்டு சதுர அடி நிலம் இருந்தாலும் அதில் ஒரு ரோஜாச்செடி பயிரிட இவன் விரும்புவான். திரும்பவும் சொல்லலாம். இவன் ஒரு சித்தன். இவன் தன்னைக் கண்டுகொண்டவன். மரபின் வேர்களிலிருந்து இவன் விளைந்தவன்.

க.நா.சு.வின் 'பொய்த்தேவு' நாவலில் இவனுக்கு பெயர் சோமு பண்டாரம். க.நா.சு.வின் இன்னொரு நாவல், அவதூதர். இவன் முழு அளவில் ஒரு சித்தன். ஜெயகாந்தனின் 'ஒரு மனிதன், ஒரு வீடு, ஒரு உலகம்' நாவலில் இவனுக்குப் பெயர் ஹென்றி. இன்னொரு நாவலில் கல்யாணி. அசோகமித்திரனின் 'மானசரோவர்' நாவலில் காரைச்சித்தர். சூர்யகாந்தனின் மானாவாரி மனிதர்களில் 90 வயது கிழவர் ஒருவர் வருகிறார். ஆசிரியரே கூறுகிறபடி இவருக்கு வயது 90 அல்ல, 900. தமிழிலக்கிய வரலாற்றில் கணியன் பூங்குன்றன், பக்குடுக்கை நன்கணியார் முதலியவர்களுக்குள் முதலில் தென்பட்டவர் இந்த மனிதர். வள்ளுவர், திருமூலருக்குள்ளும் இவர் தொடர்கிறார். வள்ளலார் வரை எத்தனையோ சித்தர்கள். இன்னும் நமக்குள் தொடர்கிறவர் இந்தச் சித்தர். தமிழ்நாவல்களும் இந்தச் சித்தனைத் தமக்கு இலக்காகக் கொண்டு இயங்குகின்றன. பொன்னீலனின் புதிய தரிசனங்களுக்குள் இவனுக்குப் பெயர் பூரணி. பலரால் வதைக்கப்பட்டுப் பலருக்குத் தன் உடம்பைத் தின்னக் கொடுத்த பிறகும் இறுதியில் உயிர்பெற்று அமுதசுரபி ஏந்திவரும் மணிமேகலை போல நம்முள்வந்து நிற்கிறாள் இந்தப் பூரணி.

இன்னும் 2 நாவல்களைப் பார்க்கலாம். ஜெயமோகனின் 'ரப்பர்' நாவலில் ஒரு ஆதிவாசி இடம் பெறுகிறார். இவருக்கு வயது சொல்லமுடியாது. காட்டிலிருந்து வருகிற இவருக்குள் காடு மணக்கிறது. இயல்பாகக் கருணையில் பொங்கி வழிகிறார் இவர். இந்த நாவலின் இறுதியில் வருகிறான் வேலப்பன். நாயர்கள் ஒருபுறம், நாடார்கள் இன்னொருபுறம். ஒருவரை மற்றவர் வீழ்த்த எத்தனையோ அக்கிரமங்கள் அநியாயங்கள் செய்தவர்கள். இவர்களுக்கிடையில் அகப்பட்டு பலர், குறிப்பாகப் பெண்கள் நாசமானார்கள். மிஞ்சியிருப்பது ஒரு சுடுகாடு. இவர்களின் மரபில் வந்தவன்தான் வேலப்பன். இவர்களின் வாழ்க்கை, ஆரவாரங்கள், பெருமைகள், சிறுமைகள் எல்லாவற்றையும் ஒரு கணம் தனக்குள் எடையிட்டு பார்த்துவிட்டுக் கேலிச்சிரிப்பை உதிர்க்கிறான். இதுவும் ஒரு வாழ்வா? இப்படி வாழ்ந்திருக்க வேண்டாம். அழிந்திருக்கவும் வேண்டாம் என்பது இவன் கேலிச்சிரிப்பிற்குப் பொருள். இவனுக்குள் இருப்பவன் ஒரு பின் நவீனத்துவவாதி. இவனுக்குள் ஒரு சித்தனையும் நாம் காணலாம்.

அரசியலில் மையம் கொண்டுள்ள மார்க்சியனுக்குள் ஒரு சித்தன் இருக்கமுடியுமா? இருக்கமுடியும் என்பதை பொன்னீலனின் புதிய தரிசனங்களில் மீண்டும் காண்கிறோம். நாவலின் இறுதியில் ராகவன் தடுமாறுகிறான். பின்னர் தன் வழியே செல்கிறான். கட்சி அதிகாரம் இவனுக்கு உடன்பாடில்லை. இவனின் சோசலிசக் கனவு பொய்யாகிவிட்டது. இன்னும் நெடுந்தொலைவு செல்லவேண்டும். நாவலுக்குள் இன்னொருவர் கோலப்பன். இவருக்கு எளிய குடிசை போதும். சைக்கிள் போதும். யார் தன்னைத் தேடி வந்தாலும் அவர்களோடு ஓடி உதவி செய்பவர் இவர்.

ஜெயமோகனின் விஷ்ணுபுரம் குறித்து இங்கு சொல்லவேண்டும். அதிகாரத்தைக் கைப்பற்றி தன் ஆளுகையைச் செறிவுபடுத்துபவர் எவராக இருந்தாலும், இப்படி தொடர்ந்து தன்னைப் பலப்படுத்திக் கொண்டு, ஏராளமான மனிதர்கள் மீது தன்னை ஏற்றிவைத்து, அவர்களை மேலும்மேலும் சுரண்டி தனக்குள் கொழுத்து, ஏராளமான மனிதர்களைத் தனக்கு எதிரியாக்கிக் கொள்ளும் பேரதிகாரம் எதுவாக இருந்தாலும், இறுதியில் தன் கனத்தால் தானே சிதைந்து அழியும். இத்தகைய வரலாற்று உண்மையைத் தனக்குள் கொண்டிருக்கிறது இந்த நாவல். இத்தகைய பேரதிகாரத்தை உருவாக்கி நிலைநிறுத்திய பிராமணனும் அழிந்தான். பவுத்தனும் அழிந்தான். இப்படிப் பலரது அழிவுக்குப் பிறகும்

அழிவுறாமல் நிற்பவர் ஆதி காலமக்கள். இயற்கையோடு இயைந்தவர். கண்ணகியை வழிபடும் முன்னோர் மரபினர். இவர்களுக்குத் தான் அழிவில்லை. இவர்களால் உலகம் மீண்டும் தழைக்கும்.

8. 50 ஆண்டுகளுக்குட்பட்ட பலவகைப்பட்ட தமிழ்நாவலினுள் குறைந்த அளவிற்கேனும் ஒவ்வொரு நாவலினுள்ளும் இப்படி ஒரு மனிதனைப் பார்க்கமுடியுமா? என்ற கேள்வியோடு நாம் தேட முடியும். உடமைச் சமூகம் மனிதனைச் சிதைக்கிறது. திரிபுபடுத்துகிறது. வளரவிடாமல் குள்ளமாக்குகிறது என்று சொன்னதை இங்கு நினைவுகொள்வோம். தன் சொந்த ஊரில் வாழ இயலாமல் இவனை வெளித்தேசங்களுக்குத் துரத்தி இறுதிவரை இவனுக்குத் திருமணம் இல்லாமல், வாழ்க்கையில் பாதுகாப்பு இல்லாமல் இந்த உடமைச் சமூகம் அவனைத் துயருக்குள்ளாக்குவதை நாஞ்சில் நாடனின் சதுரங்கக் குதிரையில் பார்க்கிறோம். கும்பகோணத்தைச் சுற்றி உள்ள ஊர்களில் வாழும் நிலப்பிரபுக்கள், தங்களின் உடல் பசியைத் தீர்த்துக் கொள்ளும் முறையில் கணேசன் என்ற அழகிய இளைஞனைப் படுக்கை அறையில் வைத்து பயன்படுத்திக் கொள்கிறார்கள். இறுதியில் இவன் குஷ்டரோகி ஆகிறான். இவன் கதையை 'பசித்த மானுடத்தில்' கரிச்சான் குஞ்சு சொல்லுகிறார். மனிதர்களுக்கு மரியாதை இல்லாத இந்த உடமைச் சமூகம், அலியாய் மாறிவிட்ட ஒருவனுக்கு என்ன மரியாதை செய்யும் என்பதை வாடாமல்லியில் சமுத்திரம் சொல்லுகிறார்.

உடமைச் சமூகத்திற்கு இன்பம் தேவை, கூலி அடிமைகள் தேவை, இன்பத்திற்காகப் பெண்களை இந்தச் சமூகம் அடிமை கொள்கிறது. கூலி அடிமைகளை உற்பத்தி செய்யும் இந்தச் சமூகம்தான் தீண்டத்தகாதவர்கள், பஞ்சமர்கள் என்று ஒரு சமூகப்பிரிவைத் தோற்றுவிக்கிறது. உண்பதற்கு குறைந்த உணவையும், உடுத்துவதற்கு குறைந்த ஆடை, இருப்பதற்கு ஒரு குடிசை இவற்றை மட்டுமே அவர்களுக்குத் தந்து அவர்களின் தன்மானம் முதலியவற்றைச் சுரண்டுகிறது. அவர்கள் தம்மை மனிதர்களாக உணர இயலாதபடி தடுக்கிறது. அண்மைக்காலத்தில்தான் இவர்கள் தன்னுணர்வு பெற்று வருகிறார்கள். இம்முறையில் தான் தலித்தியம் மற்றும் பெண்ணியம் என்ற நோக்கில் நாவல்கள் எழுதப்படுகின்றன. கணவன் தனக்குக் கட்டித் தருகிற வீடு. ஒரு பெண்ணுக்குரிய வீடாகுமா? இளமையில் சுதந்திரத்தோடு வளர்ந்த அந்த இளமைக் காலத்து வீட்டிற்குத்தான் திரும்ப முடியுமா? இத்தகைய கேள்வியோடு இயங்குகிறது காவேரியின் 'ஆத்துக்குப் போகணும்' என்ற நாவல்.

எந்த ஒரு நாவலையும், அதனுள் இயங்கும் மனிதர்களை அவர்கள் வாழும் வரலாறு மற்றும் பொருளியல் சூழலில் வைத்து பார்க்கவேண்டியதன் தேவையை மேலும் வற்புறுத்தவேண்டியதில்லை. அன்றியும் நாவல்வாசிப்பு என்பது அந்த நாவல் குறித்த திறனாய்வையும் உள்ளடக்கியதாகத்தான் இன்று நாம் கருதுகிறோம். ஒரு நாவலை, இன்னொரு நாவலோடு உரசிப் பார்க்கவும் முடியும். உரையாடலியம் என்று இன்று வளர்ச்சி பெற்றுள்ள திறனாய்வுக் கோட்பாட்டை இங்கு நினைவு கொள்வோம்.

47–இல் பெற்றதாகச் சொல்லப்படும் விடுதலை மிக விரைவில் பொய்யாய், கனவாய் மாறியது. காந்தியடிகளுக்கு இந்த தேசத்தில் இடமில்லை. நேருவின் சோசலிசக் கனவுகளுக்கும் இடமில்லை. வளர்ச்சி பெற்றது ஓர் பிற்போக்கான முதலாளியம். அதிகாரிகள் மக்களை மதிக்கவில்லை. எங்கும் ஊழல் பரவியது. மக்கள் திகைத்தார்கள். நா.பா.வின் பூரணி இங்கு வாழ்வதற்கு இடமில்லை. அரவிந்தன் அலைந்தான். அகிலனின் தணிகாசலம் தடுமாறினான். இவர்களோடு இன்று நாம் உரையாட முடியும். இவர்களுக்குள் இருக்கிற முதலாளியக் கனவுகளைக் களையமுடியும்.

எந்த ஒரு இலக்கியத்தையும் நம் சமகாலத்தில் கொண்டுவந்து வாசிக்கும் வாய்ப்பு இப்பொழுது அதிகரித்துள்ளது. கோவலன், கண்ணகி முதலியவர்களையும் நம் காலத்திற்குள் வைத்து வாசிக்கும்பொழுதுதான், இராமனுக்குள்ளும் ஒரு இராவணன் உண்டு என்றும் சூர்ப்பநகைக்குள் ஒரு சீதை உண்டென்றும் வாசிக்கமுடியும். வரலாற்றுக் காலத்திற்குள் வந்துவிட்ட மனிதனுக்குள்ளும் வரலாற்றிற்கு முற்பட்ட ஆதிமனிதன் இருக்கத்தான் செய்கிறான். இவனுக்கு இயற்கை முக்கியம், உழைப்பு பகிர்வும் முக்கியம். அதிகாரமும் பணமும் இவனைத் தீண்டமுடியாது. இவனுக்குள் சமத்துவம் / சமதருமம் இயல்பாய் இயங்குகிறது. இவனை நமக்குள் எழுப்பிக் கொள்ளத்தான் இலக்கிய வாசிப்பில் ஈடுபடுகிறோம். வள்ளுவருக்குள்ளும் இளங்கோவுக்குள்ளும் இயங்குகிற இவனைத் தமிழ் நாவல்களுக்குள் வயப்படுத்தி விடுகிறோம்.

ம.ந. ராமசாமி எழுதிய 'நாலாவான்' என்ற ஒரு நாவல். இடைக்காலத்தில் வாழ்ந்த ஒரு தலைவனைக் குறித்த கற்பனையான நாவல் இது. இந்த மனிதன் ஔவை கண்ட மனிதன். இவன் ஒரு சூத்திரன். நாலாம் வருணத்தவன். இவனைப் பிற வருணத்தாரோடு

உரசிப் பார்த்து ஔவையார் சொல்லுகிறார். "பார்ப்பனன் அரசனாக இருந்தால் கோல் சாயும். சத்ரியன் அரசனாக இருந்தால் கடுமையான போர்கள் எழும், வணிகன் அரசனாக இருந்தால் குடிமக்கள் அழிவர். நாலாம் வருணத்தவன்தான் நல்ல அமைச்சனாவான், நாம் செல்லும் வழிக்குத் துணையாவான். இவன் ஆளுகின்ற அரசுதான் உண்மையான அரசாக இருக்கும். தமிழில் நாவல் இலக்கியம் என்பது நெடுங்கால வரலாற்றின் வழியேவந்த மாபெரும் தமிழிலக்கியத்தின் தொடர்ச்சிதான் என்பதில் ஐயமில்லை.

9. பிற்சேர்க்கை :

நாம் தமிழிலக்கிய மாணவர்கள். தமிழ் இலக்கிய வரலாறு என்பது மிக விரிவானது. இலக்கிய வகைகள் என்ற முறையில் தமிழிலக்கியம் வளம் நிறைந்தது. இலக்கியம் என்று பேசும்பொழுது தமிழிலக்கியவாதிகள் கவிதைக்கு, செய்யுளுக்கு முதன்மை தருவதை வெகுவாகப் பார்க்கிறோம். சங்க இலக்கியம் மட்டுமல்லாமல் தமிழில் உள்ள காப்பியங்கள் / காவியங்கள் தமிழ்க் கல்வியாளர்களின் நெஞ்சைக் கவர்கின்றன. இவ்வகை இலக்கியங்களின் வழியே தமிழ் வாழ்வின் மேன்மையை நாம் பெரிதும் விரும்பிக் கற்கிறோம். கம்பராமாயணம், பெரியபுராணம் முதலியவற்றை நாம் கொண்டாடுகிறோம். தற்கால இலக்கியத்திற்கு வரும்போது தமிழ்க்கல்வியாளர்கள் தடுமாறுகிறார்கள். பாரதியைச் சற்று காலம் கடந்துதான் தமிழ்க் கல்வியாளர்கள் ஏற்றனர். புதுக்கவிதை முறையும் பெரும் தயக்கத்துடன்தான் ஏற்கப்படுகிறது.

நாவல் இலக்கியத்தைப் பொருத்தவரை தமிழ்க் கல்வியாளர்கள் தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியில் வைத்துக் காண்பதில்லை. செய்யுள் வடிவில் அமைந்த காவியத்திற்கு நிகரான சிறப்புடையது என்று தமிழ்நாவலை யாரேனும் சொன்னால் தமிழ்க் கல்வியாளர்களால் இக்கூற்றைச் செரித்துக் கொள்ள இயலாது. தமிழர்களின் மேன்மையான பண்பாட்டுக் கூறுகளைப் புதியதாக வந்துள்ள நாவல் இலக்கியம், நாசமாக்குகிறது என்று இவர்கள் ஆத்திரம் கொள்வார்கள். மரபுமுறையில் யாப்பு என்ற கட்டுப்பாட்டிற்குள் அடங்கி, எழுதப்பட்டது தமிழ் இலக்கியம். சிரமம் எதுவும் இல்லாமல் உரைநடையில் தாறுமாறாகக் கற்பனையை ஓடவிட்டு எழுதப்படும் நாவலை எப்படி காவியத்திற்கு நிகராக்க முடியும் என்றும் இவர்கள் கேட்கக்கூடும். சிலப்பதிகாரத்தையோ கம்பராமாயணத்தையோ நுண் உணர்வோடு கற்கும் தமிழ்க் கல்வியாளர், நாவல்களும் இப்படிக் கற்கத் தகுந்தவை என்று

நம்புவதில்லை. பாடத்திட்டத்தில் இடம்பெறும் தமிழ்நாவலின் தரம், நாவல் கற்பிக்கும் முறை, தமிழ்நாவல்கள் குறித்துச் செய்யப்படும் ஆய்வுகள் முதலியவற்றையும் முன்னிறுத்திப் பார்க்கும் பொழுது தமிழ்க் கல்வியாளர்கள், தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியில் வைத்து தமிழ் நாவல்களைக் கற்பதில்லை, மதிப்பதில்லை என்றுதான் நாம் கருதவேண்டியிருக்கிறது.

இதுகுறித்து இங்கு விரிவாக ஆய்வதற்கு இடமில்லை. எனினும் சிலவற்றை இங்கு சுருக்கமாகச் சொல்லலாம். தமிழ் இலக்கியம் குறித்த நுட்பமான ஆய்வைத் தமிழில் ஆழமாகத் தொடங்கிவைத்தவர் தொல்காப்பியர். வாழ்வை அகம் என்றும் புறம் என்றும் பகுத்ததோடு அகத்திற்கும் புறத்திற்கும் உரிய திணைக்கோட்பாட்டைத் தொல்காப்பியர் வகுத்தார். படைப்பிலக்கியத்தின் இயக்கம் பற்றி அவர் விரிவாகப் பேசினார். முதல், கரு, உரி என்று தொடங்கி எண்ணற்ற கலைச்சொற்களின் வழியே இலக்கியத்தின் இயக்கத்தை அவர் விரித்துரைத்தார். இத்தகைய இலக்கிய ஆய்வு தொல்காப்பியரோடு நின்றுவிட்டது. உரை ஆசிரியர்களும் பிற இலக்கணக்காரர்களும் தொல்காப்பியர் வகுத்த எல்லைகளைக் கடந்து செல்லவில்லை.

சிலப்பதிகாரம், திருக்குறள் என்று தொடங்கி தமிழிலக்கியத்தின் சாதனைகள் என்று நாம் எவ்வளவோ சொல்லமுடியும். இப்படித் தொடர்ந்து வந்த இலக்கிய இயக்கத்தை விளக்கும்முறையில் கொள்கைகளையோ கோட்பாடுகளையோ நம்மவர் வகுக்கவில்லை. வடமொழியிலிருந்து கொஞ்சம் எடுத்துக் கொண்டோம். ஆங்கில மொழியோடு நம்மவர்க்கு உறவு ஏற்பட்டபொழுது ஆங்கிலத்திலிருந்து நகல் எடுத்தோம். சமையல் கலையில் தேர்ந்த அறிவுடைய ஒருவருக்குச் சமையல்கலையின் இலக்கணம் தெரியாததுபோலத்தான் நம்நிலை வருந்தத்தக்கதாக இருந்தது. கோட்பாட்டு ஆய்வில் நாம் ஈடுபடவில்லை.

தொல்காப்பியர் வகுத்துரைத்த திணைக்கோட்பாட்டை வளர்த்தெடுத்து கேரளாவில் உள்ள பேராசிரியர் ஐயப்பப் பணிக்கர், தாமஸ்ஹார்டியின் ஆங்கில நாவல்களை ஆராய்கிறார். அகம் என்பதும் புறம் என்பதும் தனித்தனி இயக்கம் கொண்டவையாக இல்லை. இரண்டும் ஒன்றினுள் மற்றது ஊடுருவக்கூடியவை. இவ்வகையில் தொல்காப்பியர் கூறும் திணைமயக்கத்திற்கு அழுத்தம் கொடுத்து நாம் பார்த்திருக்க வேண்டும். உரிப்பொருள் என்பதனுள் திருக்குறள் முதலிய நூல்களில் இடம்பெறும் அறத்தையும் பக்தி இலக்கியங்களில் இடம்பெறும்

பக்தியையும் காப்பியங்களின் கருப்பொருள்களையும் கண்டறிந்திருக்க வேண்டும். நம்காலத்தில் நாட்டுப்பற்று முதலியனவும் இலக்கியத்தின் உரிப்பொருளாக ஏற்கத்தக்கவை.

முதற்பொருளாகிய நிலம் எத்தனையோ மாறுதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது. தொழில் முதலியவற்றை உள்ளடக்கிய கருப்பொருள்களில் நேர்ந்துள்ள மாற்றங்கள் அளவிடற்கரியவை. கலாச்சார மோதல்கள் மற்றும் ஊடுருவல்கள் இம்முறையில் இலக்கியத்தின் உரிப்பொருள்கள். இப்படியெல்லாம் தமிழிலக்கியம் குறித்த ஆய்வுகள் வரலாறு, பொருளியல், அரசியல் முதலியவற்றை உள்ளடக்கி வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்தகைய நெறியில் நம் கல்வியாளர்கள் இயங்கியிருப்பார்கள் என்றால் 100 ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்குள் வந்து நிலைபெற்றுவிட்ட நாவல் இலக்கியத்தையும் தமிழ் இலக்கியத்தின் தொடர்ச்சியில் வைத்துப் பார்த்திருப்போம்.

நவீன காலத்தை நமக்குள் செறித்துக்கொள்ள நாவல் இலக்கிய ஆய்வு நமக்குப் பயன்படும். இன்றைய வரலாற்றுச் சூழல் சிக்கலானது என்பது மட்டுமல்ல. தமிழ் மக்களாகிய நமக்கு நிறைய நெருக்கடிகளை முன்வைக்கிறது. இவற்றைச் சரியான முறையில் எதிர்கொண்டால் ஒழிய நமக்கு எதிர்காலம் இல்லையென்ற நிலை தோன்றியுள்ளது. ஆகவே இன்றைய உலகளவிலான வரலாற்றுச் சூழலில் நம்மைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமானால் நம்மை நாமே துருவித் தோண்டி ஆராயவேண்டும். இத்தகைய ஆய்வுக்கு நாவல் இலக்கியக் கல்வி நமக்குப் பெரிதும் பயன்படும். தொல்காப்பியரை நமக்குள் மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் ஆய்ந்து கற்போமென்றால் நாவலிலக்கியம் நமக்கு மிக நெருக்கமான இலக்கியம் ஆகும். நாவல் என்ற இலக்கியத்தினுள் கதை மட்டுமன்று. கவிதை இயங்குகிறது. நாவலுக்குள் வாழ்க்கை இயக்கம் கொள்கிறது. வாழ்க்கை என்ற இயக்கத்தினுள் வரலாறு தெரிகிறது. சமூகம் தெரிகிறது. பொருளியல் என்றும் அரசியல் என்றும் மானுடவியல் என்றும் உளவியல் என்றும் நாம் எவ்வளவோ கலைபற்றிப் பேசுகிறோம். மனித வாழ்விற்குள் இவற்றின் இயக்கம் குறித்து நாவல்கள் பேசுகின்றன. நாவல்கள் கற்பதென்பது மனிதனைக் கற்பது. நம்மை நாமே கற்றுக் கொள்வது.

குறிப்பு : உலகத் தமிழ் ஆய்வு நிறுவனக் கருத்தரங்கில் முன் வைக்கப்பட்ட கட்டுரை.

12. இருபத்தொன்றைத் தமிழ்க்கவிதை எப்படி எதிர்கொள்ளும்?

1. இருபது நூற்றாண்டுகளுக்கு மேல் பலவகைப் பரிமாணங்களோடு வளர்ச்சி பெற்ற தமிழ்க் கவிதையை, இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து நாம் சுவைக்கிறோம், புரிந்து கொள்கிறோம், பாராட்டுகிறோம், மதிப்பீடு செய்கிறோம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் தமிழியம் என்றும், பகுத்தறிவு என்றும், சமதர்மம் என்றும் நாம் பெற்றிருக்கும் பார்வைகளின் வழியே முந்திய நூற்றாண்டுகளின் கவிதையை நாம் படிக்கிறோம். பக்தி இலக்கியமும், புராண இலக்கியங்களும், பிரபந்தம் என்று சொல்லப்படும் பலவகை இலக்கியங்களும் நமக்கு எப்படியோ உவப்பாக இல்லை. யமகம், திரிபு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகளையும் நம்மால் சுவைக்க முடியவில்லை. எதுகை, மோனை, சீர், தளை, யாப்பு என்ற முறையில் எழுதப்பட்ட கவிதைகள்கூட நமக்குள் கேள்விகளை எழுப்பின. புதுக்கவிதை என்ற முறைக்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம்.

கவிதை குறித்து இப்பொழுது கூடுதலாக அறிந்திருக்கிறோம். கவித்துவம் பற்றி இப்பொழுது பேசுகிறோம். கவிதை இல்லாமல் மனிதன் இல்லை. ஒற்றைப் பரிமாணத்தில் மட்டும் கவிதைகள் வெளிப்படுவதில்லை. மனிதனின் ஆக்கத்திறன்களில் ஒன்று கவிதை.

கண், காது, நுரையீரல், இதயம் போலவே கவிதையும் மனிதனுக்கு ஓர் உறுப்பு. காலந்தோறும் கவிதைக்குரிய இலக்கணம் மாறுபட்டு வந்திருக்கிறது. பகுத்தறிவு என்ற பார்வையை முன்நிறுத்தினால் தமிழ் நெடுங்கவிதையில் சில அற்புதங்கள் வெளிப்படும் என்பது உண்மைதான். ஆனால் அதேசமயம் தமிழ்க் கவிதையில் ஒரு பெரும் பகுதியை நாம் இழக்க நேரும். மனிதன் என்ற கருத்தாக்கத்தை முதன்மைப்படுத்தி புராணங்கள் முதலியவற்றையும் இன்று நம்மால் வாசிக்கமுடியும், புரிந்து கொள்ள முடியும். யமகம், திரிபு முதலியவற்றையும் ஒதுக்க வேண்டியதில்லை. பக்தி ஒரு பேருணர்வு. எல்லாக் காலங்களிலும் என்ன என்னவோ வடிவங்களில் பக்தி என்ற பேருணர்வு மனிதனுக்குள் செயல்பட்டுள்ளது? கடவுள், பல்வகைப் பிறப்பு, மேலுலகம், கீழுலகம், பாவ, புண்ணியங்கள் முதலியனவும் வரலாற்றுச் சூழலில் மனிதனுடைய படைப்புக்கள். எந்தச் சூழலில் இவ்வகைக் கருத்தாக்கங்கள் முன்னுக்கு வந்தன என்று இன்று ஆராய முடியும். இன்றைய சமகால உணர்வுகள் தேவைகள் முதலியவற்றை முன்நிறுத்தி பழங்கவிதைகள் கற்பது தவறில்லை. இப்படிக் கற்கும்பொழுது நம்

உணர்வுக்கு ஒத்துவராத கருத்துக்கள், செய்யுட்கள், கலை முதலியவற்றை மனித வரலாற்றிலிருந்து ஒதுக்கி வைப்பதற்கான நியாயங்கள் இல்லை. நிதானமாகத்தான் இவற்றை எல்லாம் பார்க்க வேண்டி இருக்கிறது. நமது அவசரத் தேவைகள் எல்லாவற்றுக்குமான அளவுகோள்களாக இருக்க முடியாது.

2. நாட்டார் வழக்காற்றியல், தலித்தியம், பெண்ணியம், சூழலியம், நவீனத்துவம், பின்–நவீனத்துவம் என்றெல்லாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் நமக்குள் புதிய பார்வைகள் எழுந்துள்ளன. இவை எல்லாம் காலத்தின் தேவைகள் என்பதில் ஐயமில்லை. கவிதைக்குள்ளும் இவ்வகைப் பார்வைகள் பேசப்படுகின்றன. நெடுங்காலத் தமிழ்க் கவிதைக்குள்ளிருந்து இப்புதுவகைப் பார்வைகளின் வழியே சிலவற்றைப் பாராட்டுகிறோம். சிலவற்றை ஒதுக்கவும் செய்கிறோம். ஓர் அரசியல்வாதிக்கு இவ்வகை ஒதுக்கல்கள் தேவையாக இருக்கலாம். ஓர் இலக்கிய மாணவனுக்கு இவ்வகைப் போக்குத் தேவை இல்லை. இப்படிச் சொல்வதனால் நமக்குச் சமகால உணர்வு தேவை இல்லை என்பது பொருள் அல்ல. சமகால உணர்வின் இன்றியமையாத தேவையை இங்கு நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

நாம் வாழும் உலகம் மிகச் சிக்கலான உலகம். பல திசைகளிலிருந்தும் நம்மை ஊடுருவி நம்மைப் பிளக்கிற உலகம். இப்படிப் பிளவுபட்ட நிலையில் நமக்கான தளம் எது என்றுகூட நம்மால் தீர்மானிக்க முடியவில்லை. முன்னைய உலகம் நம்மைக் கைவிட்டுப் போகிறது. முன்னைய உலகம் சார்ந்த எல்லாமே இன்று கேள்விக்குரியனவாக மாறிவிட்டன. இருபத்தோராம் நூற்றாண்டுக்குள் நாம் நுழைந்திருக்கிறோம்.

உலகமயமாதல், சந்தைப் பொருளாதாரம் என்றெல்லாம் இப்பொழுது பேசுகிறோம். உயிரித் தொழில் நுட்பங்கள் உயிரினங்களை மட்டுமல்லாமல் மனிதனையும் இனி என்னவோ செய்யமுடியும். கணிணி, இணையம் முதலியவை தொலைதூர உலகங்களையும் நம் கண்முன் ஒரு புள்ளியில் கொண்டுவரும். உலகமயம் என்ற முறையில் இனி மூலதனத்திற்குத்தான் உலகம் சொந்தம். நாடுகளுக்கு இடையில் எல்லைக் கோடுகளுக்கு இனி அர்த்தம் இல்லை. எந்த ஒரு நாட்டின் இறையாண்மையும் தன்னளவில் முழுமையான இறையாண்மையாகவும் இருக்க முடியாது.

உலகளவில் நடைபெறும் தொழில் பெருக்கம், வர்த்தகம், நவீன அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுகள் முதலியவற்றில் ஏழை நாடுகள் பெருத்த

முதலாளிய நாடுகளோடு போட்டிபோடுவது எந்த வகையிலும் சாத்தியமில்லை. கணிதம், கணினி முதலிய கலைகளில் தேர்ந்த இளைஞர்களை தொழில் துறையில் மேம்பட்ட நாடுகள் ஈர்த்துக் கொள்கின்றன. அந்த நாடுகள் மேலும் மேலும் வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. நம்மை அறியாமல் நாமும் ஒத்துழைக்கிறோம். பொருளியல் முதலியவற்றில் இதுவரை வளர்ச்சி பெற்ற நாடுகளின் ஆதிக்கம் இனியும் அதிகரிக்கும் இந்தக் கடுமையான போட்டிச் சூழலில் தாக்குப் பிடிக்க முடியுமென்று நாம் கனவுகள் காண முடியாது.

தமிழுக்கு இன்று கடுமையான நெருக்கடி நேர்ந்துள்ளது. தமிழ் மக்களுக்கு இன்று நேர்ந்துள்ள நெருக்கடிகளில் ஒரு கூறுதான் தமிழுக்கு நேர்ந்துள்ள நெருக்கடி. இந்த நெருக்கடி தீவிரப்படுவதற்கான காரணங்கள் நிறையவே உள்ளன. அந்நியர்களுக்கு நாம் அடிமைப்படுவது இப்பொழுது அதிகரித்திருக்கிறது. நம்மவர்களும் நம்மை அடிமைப்படுத்துவதில் முந்துகின்றனர். இந்தியாவில் கூட்டாட்சிக்கு இடம் இல்லை. மைய அரசே எல்லாவற்றையும் நிர்ணயம் செய்கிறது. மைய அரசைத் தட்டிக் கேட்கும் மன உறுதியை நாம் இழந்துவிட்டோம். நம் தலைவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். நமக்கு எதிர்காலம் உண்டு என்று கூசாமல் பொய் சொல்லுகிறார்கள். இந்தப் பொய்யை நம்பாதவர்களும் அவர்களோடு சேர்ந்து கொள்வதில் தம்மை வாழ்வித்துக் கொள்ள முடியுமென்று நம்புகிறார்கள். இந்தச் சூழல்பற்றி இன்னும் விரிவாகச் சொல்வதற்கில்லை.

3. இந்த இருபத்தியோராம் நூற்றாண்டுச் சூழலில் வைத்து தமிழ் பற்றி, தமிழ் இலக்கியம் பற்றி, தமிழ் வரலாறு பற்றி, தமிழ் மெய்யியல் பற்றி, தமிழ்க் கவிதை பற்றி நாம் பேச வேண்டி இருக்கிறது. கவிதைகள் இல்லாமல் நமக்கு முடியாது. இலக்கியம் இல்லாமல் முடியாது. சமூகப் பார்வை, சமதர்மப் பார்வை என்றெல்லாம் இல்லாமல் முடியாது. தமிழ் இல்லாமல் நமக்கு வாழ்வு இல்லை. தமிழைப் போலவே தமிழ் வரலாறு, தமிழ்க் கவிதை முதலியவற்றையும் நமக்குள் காப்பாற்றி வைக்க வேண்டும்.

கவிதை இல்லாமல் மனிதனுக்கு வாழ்வில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன என்று கொஞ்சம் ஆராய்வோம். மனிதனின் எந்தப் பண்பிலிருந்து, எந்தத் தளத்திலிருந்து, எந்தப் பார்வையிலிருந்து, எந்த மூலத்திலிருந்து கவிதை பிறக்கிறது என்று ஆராய்வோம். மனிதனுக்குள் வானமும், பூமியும் கலந்திருக்கின்றன என்பதைக் காட்டிலும் கரைந்திருக்கின்றன என்று சொல்வது பொருந்தும். உயிர்களோடு மனிதன் நெருக்கமான உறவு கொண்டுள்ளான். நீரோடும், நிலத்தோடும்,

காடுகளோடும், மலைகளோடும், கடல்களோடும் மனிதன் உறவு கொண்டுள்ளான். மனிதர்களோடு, சமூகத்தோடு அப்புறம் வரலாற்றோடு மனிதன் உறவு கொண்டுள்ளான். கதிரவனும், நிலவும் இல்லாமல் மனிதன் இல்லை. மழையும், வெய்யிலும், காற்றும், கனலும் இல்லாமல் மனிதன் இல்லை. பறவைகளோடு சேர்ந்து பாடுகிறான். தனக்குள் பறக்கிறான். குழந்தைகள் இல்லாமல் இவனுக்கு முடியாது.

தன்னைத்தானே கடந்து செல்பவன் மனிதன். இன்னும் இவனுக்குள் ஆதிமனிதன் இருக்கிறான். உழைப்பும், பகிர்வும் இவனது உயிர்க் குணங்கள். போட்டி, பொறாமை, வம்பு, வழக்குகள் இவனைக் கூறுபடுத்துகின்றன. போர்கள் இவனை அழிக்கின்றன. அடிமைத்தனம் என்றும் இவனுக்கு உவப்பாக இல்லை. உலகிற்கு அழகு தருபவன் இவன். வாழ்வுக்கும், வரலாற்றுக்கும் அர்த்தம் சொல்பவன் இவன். கற்பனைகள், இலட்சியங்கள் இல்லாமல் வாழ்ந்ததில்லை. உலகைத் தொடர்ந்து புதியதாகப் படைக்கிறான். ஆதிக்கத்தை இவன் ஒப்புக் கொண்டதில்லை.

வரலாறு இவனுக்குள் வாழ்கிறது. பேரண்டம் தழுவிய உயிரியக்கத்தின் ஒரு கூறு இவன். அண்டத்தோடு இவன் சிலசமயம் கரைந்து விடுகிறான். காலங்கள் இவனுக்குள் கரைந்து விடுகின்றன. காலமற்றதை இவன் தனக்குள் உணர்கிறான். உள்ளொளி என்றும், தரிசனங்கள் என்றும் இவன் பேசுகிறான். பேருணர்வு, பேரறம் என்றெல்லாம் இவன் பேசமுடியும். இவன்தான் காவியங்கள் படைத்தான். மதங்களைப் படைத்தவனும் இவன். பிறகு எல்லாவற்றையும் இவனே கலைத்துப் போடவும் செய்கிறான். இயக்கத்தில் இவன் இருக்கிறான். ஆதிக்கங்களோடு அடிமைப்பட்ட நிலையில் இவன் புழுங்குகிறான். எப்பொழுதும் இவன் இப்படியே இருந்ததில்லை. பிறகு தனக்குள் வெடித்துக் கிளம்புகிறான். உலகத்தை மாற்றுகிறான். இயற்கையைத் தழுவிக் கொள்கிறான். இவனுக்கு அன்பு இல்லாமல் முடியாது; அருள் இல்லாமல் முடியாது; அறம் இல்லாமல் முடியாது. தன்னை இழக்கவும் இவனுக்குத் தெரியும். இதன்மூலமே தன்னை இவன் பெறுவதையும் செய்கிறான்.

4. இப்பொழுது கவிதை பற்றிப் பேசலாம். இருபதாம் நூற்றாண்டுச் சூழலில் பொருளியல் முதலிய ஆதிக்கங்களுக்கு இவன் வசப்பட்டு அழிந்து போகமுடியாது. தமிழன் தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஆற்றல்களைத் தமிழ்க் கவிதைகளுக்குள்ளிருந்தும் பெறமுடியும். சங்க இலக்கியம் இவனுக்குள் என்றைக்கும் சாகமுடியாது. வள்ளுவரின் அறம்,

இளங்கோவின் புரட்சி மணிமேகலையின் தவம் முதலியவற்றை இவன் எதற்காகவும் விட்டுத்தர முடியாது.

அன்பும், சிவமும் ஒன்று எனக் கண்டவன் இவன். சாதி மதங்கள் கடந்த சித்தர்களை இவன் தனக்குள் தாங்கி இருக்கிறான். இவனுக்குள் படைப்பியக்கம் பெருமளவில் செயல்பட்டிருக்கிறது. பாரதி கூறியதுபோல வள்ளுவரையும், இளங்கோவையும் கம்பனையும் தனக்குள் கொண்டிருக்கும் இவன் அமரத்துவம் வாய்ந்தவன். இறைவனைச் சாடவும், நேசிக்கவும் கற்றவன் இவன். எளிய வாழ்க்கை இவனுக்குப் போதும். எத்தகைய சக்திகள் உலகத்தை அழித்தாலும் உலகை வாழ்விக்கும் மகத்துவம் தெரிந்தவன் இவன். இவன்தான் தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம். சமத்துவம் இல்லாமல், சமதர்மம் இல்லாமல் இவனுக்குள் இயக்கம் இல்லை. கவிதை என்பது சொற்களில் இல்லை; வரிகளில் இல்லை, யாப்பில் இல்லை, கதை சொல்வதில் இல்லை. இவற்றை எல்லாம் உள்ளடக்கி அப்புறம் இவற்றையும் கடந்த கவித்துவத்திலிருந்து பொங்குவது கவிதை. அந்தக் கவித்துவம் என்பது இந்த மனிதனின் படைப்பியக்கம். எல்லாவற்றையும் புதியதாக அழகுபடுத்துவது, அர்த்தப்படுத்துவது, படைப்பது இந்தக் கவித்துவம். ஒரு விஞ்ஞானிக்குள் இயங்குவது இந்தக் கவித்துவம். ஒரு தச்சனுக்குள்ளும் கவித்துவம் உண்டு. கோலமிடும் பெண்ணுக்குள் இருப்பதும் இந்தக் கவித்துவம், குழந்தைக்குள்ளும் கவித்துவம் உண்டு. இது அழியாது. அதை அழியவிடக் கூடாது. கவிஞன் தனக்குள் செயல்படும் கவித்துவத்தின் மூலம் இதைக் கண்டுகொள்ள முடியும். உயிரியக்கம் இந்தக் கவித்துவம். பேரண்டத்தை நிறைத்திருப்பது இந்தக் கவித்துவம். கடவுள் என்று இதைக் குறைத்துப் பேசுகிறது மதம்.

புராணங்கள் என்னதான் பொய்க்கதைகள் சொன்னாலும் இந்த உயிரியக்கத்தை மறைத்துவிட முடியாது. இந்தக் கவித்துவம் என்ற பேரியக்கம் தமிழுக்குள் நிறைந்து வழிகிறது. தமிழ் அறிந்தவன் / தமிழாய்ந்தவன் பேறுபெற்றவன். தமிழின் பேரியக்கம் பன்முகப் பரிமாணங்கள் உடையது. இந்தப் பேரியக்கத்தைச் சாதி முதலிய குறுகிய எல்லைகளில் முடக்கிவிட முடியாது. பெண்ணுக்கு நீதி வழங்குவது இந்தப் பேரியக்கம். இது எப்பொழுதும் தன்னை நவீனப்படுத்திக் கொள்ளும்.

நாட்டார் குடிசைகளில், வயல் வெளிகளில் கைவினைஞர்களின் கைகளில் நடமிடுவது இந்தப் பேரியக்கம். காலந்தோறும் இந்தப் பேரியக்கத்தை தம் நலன்களுக்காக வகை, வகையான ஆதிக்கங்கள் முடக்கிவைத்தன. ஆதிக்கங்கள் இன்றும் அழியவில்லை, பெருகவும் செய்கின்றன. வள்ளுவர், இளங்கோ வழியில் வந்தவன் இந்த

ஆதிக்கங்களுக்குச் சேவை செய்யமுடியாது. வள்ளுவரை நெஞ்சில் குடிவைக்க வேண்டும். கைகளில் இளங்கோவை ஏந்த வேண்டும். இத்தகைய உரத்தினைத் தமிழ்க் கவிதை நமக்குத் தரும். இந்த உரத்தைக் காண்பதற்காகத்தான் நாம் கவிதைகள் கற்கிறோம், புரிந்து கொள்கிறோம். வள்ளுவரும், இளங்கோவும் நமக்குள் வாழ்கிறார்கள். பாரதியும், பாரதிதாசனும் நமக்குள் வாழ்கிறார்கள். இவர்களைத் தான் நாம் மீண்டும், மீண்டும் நமக்குள் புதுப்பித்துக் கொள்கிறோம். புதுமைப்பித்தனின் ஒரு கூறு புதுக்கவிதை, இன்னொரு கூறு திறனாய்வு, இன்னுமொரு கூறு உலகைப் புதுப்பித்தல்.

5. அண்மைக் காலத்தில் தமிழில் பேரலையாக வளர்ந்துவரும் நவீன கவிதைகள் குறித்து இங்கு சுருக்கமாகச் சொல்ல வேண்டும். உலகம் நொறுங்கிவிட்டது. மனிதன் தனக்குள் பல துண்டுகளாகச் சிதைந்து விட்டான். இவனுக்குள் பல நான்கள், பல குரல்கள் செயல்படுகின்றன. இவன் தன்னை இழந்து விட்டான். வாழ்வுக்கு அர்த்தம் இல்லை. வாழ்க்கையை மீண்டும் ஒரு முழுமை என்ற முறையில் திரட்டிக் கொள்ள முடியாது. எந்த ஒரு தத்துவமும் இவனுக்கு இனி வழிகாட்ட முடியாது. தற்கொலைகள் கூட தவறில்லை; வாழ்க்கையில் சீர்மை இல்லை. ஒழுங்கு இல்லை. அறம் இல்லை இப்படிப் பேசுபவர்கள் இவற்றை வைத்துத் தமக்கான ஆதிக்கத்தைக் கட்டமைத்தார்கள். கலகங்கள் மட்டுமே இனி சாத்தியம் மற்றும் தேவை. பேய்த்தன்மை உடையது இந்த உலகம். பதற்றத்தோடு தான் நாம் வாழ வேண்டி இருக்கிறது. மரபு நம்மைக் காப்பாற்ற முடியாது. வரலாறு துண்டு துண்டாகத்தான் சிதறிக் கிடக்கிறது. நெடுங்காலத்தை உள்ளடக்கி வாழ்வென்றும், வரலாறென்றும், வளர்ச்சி என்றும் பேசுவதில் அர்த்தமில்லை. புள்ளிகளில்தான் நாம் வாழ்கிறோம். வாழ்வென்பதற்கு வரையறை சொல்வதும்கூட ஒரு வகையில் ஆதிக்கம் ஆகிவிடும். இனி எல்லாவற்றையும் உடைத்துப் பார்க்க வேண்டும். பின்னங்களில் கிடக்கிறது வாழ்க்கை.

நவீன கவிதையின் ஆற்றல் மிக்க குரல் இப்படித்தான் கவிதைகளில் வெளிப்படுகிறது. கதைகள், நாவல்கள், திறனாய்வுகளிலும் இக்குரல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. இந்தக் குரலின் வீரியத்தை நாம் ஒப்புக் கொள்ள முடியும். உலகளவில் பெருகிவரும் ஆதிக்கங்கள் நமக்குள்ளும் புகுந்து நம்மைச் சிதைக்கவே செய்கின்றன. நம்மிடமிருந்து தேசத்தை, நிலங்களை, இயற்கையை, கல்வியை, பண்பாட்டை, தொழில் திறன்களைப் பறித்துக் கொள்வதன் மூலம் ஆதிக்கங்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன. இப்போக்கின் விளைவுதான் நமக்குள்ளான தகர்வுகள், மரபு நாசங்கள். தகர்வுகளுக்கு உட்பட்ட மனிதன் துடிக்கிறான்,

துயரப்படுகிறான். பசிக்கொடுமையால் அவதிப்படுகிறவனுக்கு வானம் தெரியாது. சாதி முதலிய சகதிக்குள் அமிழ்த்தப்பட்டவனுக்குக் கடவுள் இல்லை, அறம் இல்லை. இந்த மனிதனை – இவன் மனிதனாகவும் இல்லை என்று நாம் புரிந்து கொள்ளவும் முடியும். ஆதிக்கங்களுக்கு உலகத்தை விட்டுத்தர முடியாது. ஆதிக்கவாதியும் தனக்குள் அழிந்து கொண்டுதான் இருக்கிறான். எதுவும் என் கையில் இல்லை என்று கூறி நம்மை நாமே இழந்து விடமுடியாது. இந்த பூமி நமக்குச் சொந்தம். பல்லாயிரம் ஆண்டுகளாக நாகரிகங்களைப் படைத்தவர்கள் நாம். இயற்கை இன்னும் மிச்சமிருக்கிறது. மரபு நமக்குள் வாழத்தான் செய்கிறது. இழந்த உலகத்தை நம்மால் கைப்பற்ற முடியும்.

நாம் நமக்குள் நம்பிக்கை அற்றுப் போக வேண்டியதில்லை. சிதைவுகளிலிருந்தும், நம்மைத் திரட்டிக் கொள்ள முடியும். வள்ளுவர், இளங்கோ, பாரதி முதலியவர்களை நாம் இழந்துவிடவில்லை. மலர்கள் இன்னும் அழகாகத்தான் இருக்கின்றன. பட்டாம் பூச்சிகள் இன்னும் பறக்கின்றன. தரை இன்னும் நமக்குத் தட்டுப்படுகிறது. அவலம் நம்மை ஆட்கொள்ள வேண்டியதில்லை.

நவீனக் கவிதையின் வெளிப்பாடுகளை நாம் மறுக்க வேண்டியதில்லை. மொழியை இந்தக் கவிஞர்கள் புதுப்பிக்கிறார்கள். இவர்கள் கவிதைகளில் நுட்பங்கள் கூடியிருக்கின்றன. தமிழ்க் கவிதையில் இவர்களது சாதனை அற்புதமானவை. இவர்கள் இளைஞர்கள். இவர்கள் பழமையை, வரலாற்றை, வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கிறார்கள். வாழ்வுக்கான அர்த்தங்களை இவர்களும்தான் தேடுகிறார்கள். தகர்க்கப்பட்ட நிலையில் வாழ்வின் அர்த்தங்கள் உடனடியாகக் கைகளுக்குக் கிட்டுவதில்லை. இன்னும் ஆழத்தில் இவர்கள் தேடமுடியும். விளிம்புகளில், எதிர்நிலைகளில் இருந்தும் வாழ்க்கையை இவர்கள் பார்க்கிறார்கள். வாழ்க்கையைப் பற்றி இதுவும் ஒரு புதிய கோணம், நாமும் கற்றுக் கொள்ள முடியும். மறு ஆய்வு என்பது வரலாற்றின் சில முக்கிய கட்டங்களில் தேவைப்படத்தான் செய்கிறது. அப்படி ஒரு கட்டத்தில் இன்று நாம் வாழ்கிறோம். மீண்டும், வரலாறென்றும், மரபென்றும், கவிதைகள் என்றும் பேசுகிறோம்.

6. தமிழுக்கு மட்டும்தான் இந்த மரபு சொந்தம் என்று நாம் கருதுவதற்கில்லை. இந்த மரபு மனித மரபு. உலகில் எந்த மொழி பேசுபவனும் இந்த மரபுக்குள் தான் இருக்கிறான். இது ஆதிக்கவாதியின் மரபு அல்ல. இது உழைப்பவனின் மரபு. வரலாற்றை வாழ்விக்க காலந்தோறும் செத்தவனின் மரபு. வரலாற்றுக்கு இவன் தான் உரம் சேர்த்துள்ளான். எந்த ஒரு மொழியினுள்ளும் இந்த வரலாற்றைக்

காணமுடியும், கண்டடைய முடியும். மனிதனுக்குள் செயல்படும் இந்தப் பேரியக்கத்தைக் கண்டுகொண்டவர்கள் பெருங்கவிஞர்கள், மெய்யியலாளர்கள். 21–ஆம் நூற்றாண்டு, நமக்கு ஒரு பெரும் சவாலை முன் நிறுத்துகிறது. மனிதனின் வரலாற்றைத் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. மனிதர்களுக்கு இயற்கை தேவையா? இல்லையா? மனிதனுக்கு வரலாறு தேவையா இல்லையா? மனித வாழ்வுக்கு அர்த்தம் உண்டா இல்லையா? என்பதை எல்லாம் தீர்மானிப்பது இந்த நூற்றாண்டு. இந்த மாபெரும் போராட்டத்தில் நாம் இணைந்திருக்கிறோம்.

நம்மை அழிக்கும் சக்திகள் நமக்குள்ளும், வெளியிலும் ஊடுருவி இருக்கின்றன. இவர்களை நாம் இனம் கண்டு கொள்ளமுடியும். பணம்தான் வாழ்வு, அதிகாரம் தான் வாழ்வு என்று அலைபவர்கள் இன்று தமிழுக்கு மட்டுமல்ல, மனித வாழ்வுக்கு எதிரிகள், இயற்கையின் எதிரிகள். இவர்களோடு நாம் சமரசம் செய்து கொள்ள முடியாது. இவர்கள் தமக்குள் மனிதப் பண்பை இழந்தவர்கள், அறத்தை இழந்தவர்கள், இவர்கள் அரக்கர்கள்.

இவர்கள் எத்தனையோ வடிவங்களில் செயல்படுகிறார்கள். அரசியலில், நிறுவனங்களில் இறுக்கமாக அமர்ந்திருப்பவர்கள் இவர்கள். நம் சமூகத்தின் வறுமை, கல்லாமை தொடங்கி எல்லாவகை நோய்களுக்கும் இவர்கள்தான் மூலங்கள். இவர்களுக்குள் கவிதை இல்லை, இசை இல்லை, கலைகள் இல்லை. இவர்கள் தம்மைத் தாமே அழித்துக் கொண்டவர்கள். மனிதனை இவர்கள் தமக்குள் புதைத்துக் கொண்டவர்கள். மதங்கள் இவர்களுக்குள் புதைக்கப் பட்டிருக்கும் மனிதனை உயிர்ப்பிக்க முடியாது. இவர்கள் இராவணர்கள். இவர்கள் எதையும் தமக்காக அபகரித்துக் கொள்வார்கள். கம்பனோ, வள்ளுவனோ இவர்களுக்குச் சேவகம் செய்யமுடியாது.

திரும்பவும் சொல்லலாம். நமக்குள் கவிதை இருக்கிறது. கவிதை இயக்கம் இருக்கிறது. இது தமிழுக்கு மட்டும் சொந்தமில்லை. எந்த மொழிக்கும் இது சொந்தம். மனிதனுக்கு இது சொந்தம். மனிதனை இந்த இயக்கம் தான் வாழ்விக்கிறது, உயிர்ப்பிக்கிறது. இந்த உயிரியக்கத்தின் தூண்டுதலில் நாம் படைப்பது கவிதை. இந்தக் கவிதை நாம் வாழும் மட்டும் நமக்குள் தழைப்பது அமரத்துவம்.

குறிப்பு : சாகித்திய அகாடமியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் 2001 மார்ச்சு இறுதியில் சென்னையில் நடத்திய மலையாளம் – தமிழ்க் கவிதைக் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

13. தமிழ் இலக்கியம் - மறு வாசிப்பின் தேவை

1. திண்டுக்கல்லில் 22–9–2001 அன்று நடைபெற்ற தமிழ் ஆய்வு மையத்தின் முதற் கருத்தரங்கில் தமிழ் இலக்கியம் குறித்த பல்வகைப் பார்வைகள் முன்வைக்கப்பட்டன. பேராசிரியர் மா.ப. குருசாமி தலைமை ஏற்றார். தமிழ் இலக்கியம் பற்றிய மார்க்சியப் பார்வையை முன்வைத்த முனைவர் ஆனந்தகுமார் மார்க்சியத்திற்கு அனுசரணையான பலக்கூறுகள், தமிழ் இலக்கியத்தில் உள்ளன என்றார். தொல்காப்பியத்தில் காணப்படும் பொருள் முதல்வாதக்கூறுகள் பற்றியும், சங்க இலக்கியத்தில் இனக்குழுச்சார்பு பற்றியும் குறிப்பிட்டார். சித்தர் இலக்கியம் மார்க்சியத்திற்கு அனுசரணையானது என்றார்.

பகுத்தறிவுப் பார்வையில் தமிழ் இலக்கியம் குறித்து ஆய்வுரை நிகழ்த்திய திரு. தமிழ்ப் பெரியசாமி, அறிவும் உணர்வும் ஒன்றை மற்றது விஞ்சாத அளவில் உள்ளது பகுத்தறிவுப் பார்வை என்று விளக்கம் தந்தார். இந்த வரையறையிலிருந்து அவரே விலகி பெரியாரின் பகுத்தறிவுப் பார்வையில் திருக்குறள் மற்றும் சித்தர் இலக்கியம் குறித்து எடுத்துரைத்தார். தலித் பார்வையில் இருந்து பார்க்கும்பொழுது கவிஞர் இன்குலாப் முதலிய ஒருசிலரின் தற்கால படைப்புக்கள் மட்டுமே தலித் பார்வை கொண்டவை என்று திரு. சேவியர் விவாதித்தார்.

தலித் இலக்கியத்தைத் தலித்துகள் மட்டுமே எழுதமுடியும் என்பதை மறுத்த திரு. சேவியர், நடுத்தர வர்க்க வாழ்க்கையை மேற்கொண்டுள்ள தலித் பார்ப்பனர்கள் தலித் இலக்கியம் படைக்க முடியாது என்றார். தன் நாடகங்களில் பெண்களைப் பற்றி அற்புதமான சித்தரிப்பை சேக்ஸ்பியர் தந்ததைப்போல, தலித் மக்களை ஆழமாகப் புரிந்து கொண்டவர்கள் தலித் இலக்கியம் படைக்க முடியும் என்றார்.

முனைவர் சரோஜினி புதியவன் தொல்காப்பியம் தொடங்கி இன்று வரையிலான தமிழ் இலக்கியத்தைப் பெண்ணியப் பார்வையில் ஆராய்ந்தார். தமிழ் இலக்கியம் முழுவதிலும் ஆணியப் பார்வைதான் அழுத்தமாகப் பதிந்து உள்ளது என்பதை தக்க சான்றுகளோடு விவரித்தார்.

நிறைவுரை நான் நிகழ்த்த வேண்டும். எனக்குள் நிறையக் கேள்விகள். மார்க்சிய நோக்கில் பார்க்கும்பொழுது, இன்றும் தமிழ் இலக்கியத்தில் இருந்து நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய கூறுகள் பல இருக்கின்றன என்பது

உண்மையானால், தலித் மற்றும் பெண்ணியப் பார்வையிலிருந்து இன்று நாம் எடுத்துக் கொள்ளக்கூடிய கூறுகள் அறவே இல்லை என்றாகிறது. தலித்தியப் பார்வையும் பெண்ணியப் பார்வையும அநேகமாக நெருங்கி வருகின்றன. இவர்கள் பார்வையிலிருந்து பார்க்கும்பொழுது தொல்காப்பியத்தில் இடம் பெற்ற பொருள்முதல்வாதம் மற்றும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்ற இனக்குழுக் கூறுகள் ஆகியவை மக்களை ஒடுக்கும் கூறுகள் என்றே பொருள்படுத்துவதும் சாத்தியமாகிறது. அன்றியும், மார்க்சியத்தையேகூட தலித் மற்றும் பெண்ணியச் சார்புடையவர் விமர்சனம் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

அண்மைக் காலத்தில் தலித் மற்றும் பெண்ணியப் பார்வையை மார்க்சியர் உள்வாங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். இத்தகைய உள்வாங்கல் மார்க்சியத்திற்குள் என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்பது பற்றியும் மார்க்சியர் சிந்திக்க வேண்டும். மேலும் ஒன்று, தலித் மற்றும் பெண்ணியப் பார்வையிலிருந்து பார்க்கும்பொழுது பழந்தமிழ் இலக்கியத்தில் இன்று மிஞ்சக்கூடியவை பெரும்பாலும் இல்லை என்ற நிலையில் பழந்தமிழ் இலக்கியத்தை நாம் என்ன செய்வது என்ற கேள்வி நமக்குள் எழுகிறது. இடைநேரத்தில் சரோஜினி புதியவன் அவர்களை இது குறித்துக் கேட்டேன். பழைய இலக்கியங்களை ஒதுக்கிவிட்டு, புதிய இலக்கியங்களைப் படைத்துக் கொள்ளமுடியும் என்று அவர் கூறினார் உண்மைதான்.

நம் கால வாழ்வுக்கு ஒத்தமுறையில் புதிய இலக்கியங்களைப் படைத்துக் கொள்வது தேவைதான். இலக்கியத்தைக் காட்டிலும் வாழ்வு பெரியது. வாழ்க்கைதான் இலக்கியத்தின் கருவாக அமைய முடியும். இலக்கியம் இல்லாமல் முடியாது என்ற காரணத்திற்காகப் பழைய இலக்கியங்களைக் கொண்டாட வேண்டியது இல்லை. வாழ்க்கை, வரலாறு, தேசம், சமூக மாற்றம் முதலியவை தான் இன்று நமக்கு முக்கியம். இவற்றோடு தான் இலக்கியமும். இலக்கியம் தேவை என்பதற்காக வாழ்வு முதலியவற்றை ஒதுக்கவும் இயலாது.

2. நான் தொடர்ந்து சிந்திக்கிறேன். சரோஜினி புதியவன் அவர்கள் கூறியபடி இலக்கியத்தை இன்று மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும். இலக்கியத்தை மட்டுமல்லாமல் இன்று எல்லாவற்றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் நமக்கு நேர்ந்துள்ளது. வாழ்க்கை, வரலாறு, மெய்யியல் என்று தொடங்கி எல்லாவற்றையும் மறுவாசிப்புக்கு

உட்படுத்தத்தான் வேண்டும். ஆதிக்கம் எந்த வகையிலும் நமக்கு வேண்டாம். சாதி ஆதிக்கம், ஆண் ஆதிக்கம் மட்டுமல்லாமல் முதலாளிகளின் ஆதிக்கம், அரசு ஆதிக்கம், நிறுவனங்களின் ஆதிக்கம், அந்நியர்களின் ஆதிக்கம், ஆங்கிலத்தின் ஆதிக்கம் என்று எதுவும் நமக்கு இன்று தேவை இல்லை.

ஆதிக்கங்கள் இன்று உச்ச அளவில் நம்மைத் தாக்குகின்றன. இன்று நாம் அவற்றுக்கு இடம் கொடுப்போம் என்றால், நமக்கு எதிர்காலம் என்று, வரலாறு என்று எதுவுமே இருக்க முடியாது. ஆதிக்கங்களோடு ஒத்துழைக்கும் சக்திகள் இன்று பரவலாகி வருகின்றன. அரசு முதலிய நிறுவனங்கள் மட்டுமல்லாமல் எந்த ஒரு நிர்வாகமும் ஆதிக்கத்தை உச்ச அளவில் செய்கின்றன. நம் வாழ்வை இவை முற்றாகப் பறிக்கின்றன. சமத்துவமும், சமதர்மமும் இல்லாமல் இனி நமக்கு வாழ்வு இல்லை. ஆதிக்கங்களை இனியும் நமக்குள் அனுமதிக்க முடியாது. இப்பொழுதேனும் நமக்குள் திரண்டு ஆதிக்கங்களை எதிர்த்தாக வேண்டும். தயங்குவதற்குக் காரணம் இல்லை. இந்த நோக்கில் மார்க்சியம்கூட மறுவாசிப்புக்கு உரியது என்பதில் ஐயமில்லை. மார்க்சியக் கட்சிகள் ஆதிக்கங்களோடு ஒத்துழைக்கின்றன. கட்சிகளுக்குள்ளும் ஆதிக்கம் செயல்படுகிறது. பகுத்தறிவு என்ற பார்வையினுள்ளும் ஆதிக்கம் செயல்பட முடியும்.

ஆணாதிக்கம், சாதியாதிக்கம் என்றெல்லாம் சொல்லும்பொழுது நாம் சற்று ஆழமாகப் பார்க்க வேண்டும். ஏற்றத்தாழ்வான சமூகச் சூழலில்தான் ஆதிக்கங்கள் செயல்படுகின்றன.

ஆண்கள் வழியே வெளிப்படுவதாகத் தெரியும் ஆதிக்கம் ஆழ்ந்து பார்க்கும்பொழுது, பொருளியல் ஆதிக்கம் என்றே அறியமுடியும். அரசு அதிகாரத்தில், இராணுவத்தில், காவல் துறைகளில், தொழிற்சாலைகளில் ஆயுதங்களோடு, ஆற்றல்மிக்க கருவிகளோடு ஆண்கள் செயல்படுகின்றனர். மக்களின்மீது இவர்கள் அமர்ந்துள்ளார்கள். மக்களை வேலை வாங்க வேண்டும், ஒடுக்க வேண்டும், உபரிமதிப்பைத் திரட்ட வேண்டும். இதற்கேற்றவாறு தான் கல்வி முதலியவற்றை மக்களுக்குத் தரவேண்டும். இதற்காகத்தான் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள், பார்ப்பனர் முதலிய உயர்சாதியினர் இங்குதான் செயல்படுகின்றனர். இவர்கள்மூலம் தான் ஆதிக்கம் மக்கள்மீது பெண்கள், தலித்துகள்மீது செலுத்தப்படுகிறது.

ஏற்றத்தாழ்வானச் சூழலை மாற்ற முடியுமென்றால் ஆதிக்கங்களைக் குறைக்க / ஒழிக்கமுடியும். அன்றியும் ஆதிக்கங்களை உள்வாங்கிக்

கொண்ட நிலையில் கலாச்சாரம் என்ற வகையில் பலருக்குள் பதிவுபெற்றுள்ள ஆதிக்க உணர்வு குறித்தும் இங்கு நாம் பார்க்க முடியும். ஏற்றத்தாழ்வான சமூகச் சூழலில் அரசு முதலிய நிறுவனங்களில் இடம்பெறும் பெண்களும் ஆதிக்க உணர்வோடு செயல்பட முடியும். குடும்பச் சூழலிலும் இந்தப் போக்கு இருக்கத்தான் செய்யும்.

ஆதிக்கங்கள் இல்லாத வரலாற்றுச் சூழல் ஏதேனும் இருக்க முடியுமா என்றும் நாம் சிந்திக்க வேண்டும். ஆதிக்கங்கள் எந்தக் களத்தில் செயல்பட்டாலும், எதிர்ப்புக்கள், கலவரங்கள். முதலியவற்றை அவை இயல்பாகவே தோற்றுவிக்கின்றன என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஆதிக்கங்கள் எப்பொழுதுமே, மக்கள் மனத்தில் மட்டுமல்லாமல் ஆதிக்கம் செய்பவருக்குள்ளும் திரிபுகள், சாய்வுகள் மற்றும் வக்கிரங்களை ஏற்படுத்துகின்றன. வரலாறு, மெய்யியல், கலை இலக்கியங்கள், கல்வி, மருத்துவம் முதலிய எல்லாக களங்களிலும் இவை திரிபுகளை ஏற்படுத்துகின்றன. இலக்கியமும் இதற்கு விதிவிலக்காக இருக்க முடியாது. இது வரையிலான வரலாற்றை நம்மால் ஒதுக்கிப் பார்க்கவும் முடியாது. வரலாற்றின் வழியே நாம் வளர்ந்தும் வந்திருக்கிறோம். திரிபுகளோடு தான் என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளமுடியும்.

3. மறுவாசிப்பு என்ற தொடரை இன்று நாம் புதியதாகப் பயன்படுத்துகிறோம் என்றாலும், இந்தச் செயல்பாடு நமக்குள் என்றும் எல்லாக் காலத்திலும் இருந்திருக்கிறது. மறுபார்வை, பின்நோக்கிப் பார்த்தல் என்ற வகையிலும், எல்லாவற்றையும் புதிய அனுபவங்களுக்கு ஒத்த முறையில் நாம் பொருள்படுத்தத்தான் செய்கிறோம். சங்க இலக்கியத்தை மறுவாசிப்புச் செய்தவர் தொல்காப்பியர். உரையாசிரியர்கள் இடைக்காலத்தில் செய்தவையும் மறுவாசிப்பு. இன்றுவரை திருக்குறளுக்குப் பலவகைகளில் பொருள் சொல்கிறோம். சிலப்பதிகாரத்தை எத்தனையோ வகைகளில் பொருள்படுத்தி இருக்கிறோம். சிலப்பதிகாரத்தையும், மணிமேகலையையும் பாரதிதாசன் மறுவாசிப்புக்கு உட்படுத்தினார்.

தமிழகச் சூழலில் இடம்பெற்ற மார்க்சியம், தமிழ் இலக்கியம், வரலாறு, சமூகம், மெய்யியல் முதலியவற்றை மறுவாசிப்புக்கு உட்படுத்தியது. பெரியாரியம் திருக்குறளைத் தவிர பெரும்பாலானத் தமிழ் இலக்கியத்தை மறுக்கவும் செய்தது. யதார்த்தவாதம், நவீனத்துவம், புனைவியல், பின்–நவீனத்துவம் என்றும், தமிழ் இலக்கியத்தை நாம் இன்று வாசிக்கிறோம். இந்த வகையில்தான், தலித்தியம் முதலியனவும் இன்று வந்து சேர்ந்துள்ளன.

இலக்கியத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் பழைய இலக்கியங்களை மாறிவிட்ட இன்றையச் சூழலில் அந்த இலக்கியங்களை நமக்கு நெருக்கமாகக் கொண்டு வருகிறோம். இலக்கியங்கள் காலத்தால் அழியாத சில கூறுகளைக் கொண்டுள்ளன என்பதை நாம் மறுப்பதற்கும் இல்லை. மறுவாசிப்பென்ற முறையில் இலக்கியத்திற்குள் இயங்கும் நிகழ்காலத்தன்மையை, அதாவது நிகழ்வியத்தை நாம் கண்டறிகிறோம். இன்றும் நமக்குள் ஆதிமனிதன் இருக்கத்தான் செய்கிறான். ஆழ்வார்களும், நாயன்மார்களும் நமக்குள் இல்லாமல் இல்லை. கோவலனை நமக்குள் காண முடியும். உதயகுமரனும் நமக்குள் இருக்கிறான். மாதவியைத் தவம் நோக்கி விரட்டியவர்களில் நாமும் இருக்கிறோம்.

தவம் என்பது கூட வாழ்வின் ஒரு உயர்நிலை. கண்ணகி மதுரையை எரிப்பதற்கான நியாயத்தை நாம் இன்றும் ஏற்கிறோம். பாரியின் அவலத்தை நமக்குள் நாம் உணர்வதில்லையா? இப்படி எல்லாம் உணர்வதற்கான சமூகச் சூழல் இன்றும் இருக்கத்தான் செய்கிறது.

மார்க்சியம் தமிழுக்கு அறிமுகமானபொழுது, கல்லூரிகளில் தமிழ்த்துறை சார்ந்த "பெரியவர்கள்" அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்ளவில்லை. வர்க்கப் போராட்டம் என்பது இவர்களுக்கு உடன்பாடில்லை. சங்க இலக்கியம் குறித்து மார்க்சியர் செய்த விமர்சனங்கள், சங்க காலத்தைப் பொற்காலம் என்று கருதிய இவர்களுக்குப் பிடிக்கவில்லை. மெல்ல மெல்லத்தான் நிலவரங்கள் மாறின. பெரியாரும் பகுத்தறிவுப் பார்வை என்ற முறையில் தமிழ் இலக்கியத்தைச் சாடினார். பெரியாரின் நாத்திகவாதம் சமய உணர்வுடைய பலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் பெரியாரின் பார்வைக்குத் தமிழ்த் துறையின் ஒரு பகுதியினர் வசப்படத்தான் செய்தனர். இன்று எல்லாவற்றையும் மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டும் என்ற முறையில் சமயம் குறித்த பெரியாரின் பார்வையையும் நாம் மறுவாசிப்புக்கு உட்படுத்தலாம். மனிதன் தன் வரலாற்றுச் சூழலில் தோற்றுவித்த சமயம், கடவுள், ஆன்மா முதலிய கருத்தினங்களை இன்று மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம், தமிழ் இலக்கியத்திற்குள் இடம்பெற்ற பக்தி இயக்கத்தை நாம் கூடியவரை சரியான கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ளமுடியும்.

ஐந்திணை ஒழுக்கத்திற்கு அடியவர்களும், வினைவலரும் உரியவர் இல்லை என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்தார் என்றபோதிலும், சங்க இலக்கியத்திற்குள் இப்படி ஒதுக்கப்பட்டவர்களின் காதல் உணர்வுகளையும்

நாம் காணமுடியும். கலித்தொகைப் பாடல்கள் நல்ல சான்றுகள். கைக்கிளையும், பெருந்திணையும் எந்தத் தலைவனுடைய / எந்த மனிதனுடைய வாழ்வினுள்ளும் இயங்கும் சில கூறுகள். இவற்றை தொல்காப்பியரும் ஒப்புக் கொள்ளத்தான் செய்தார். இப்படித் தொடங்கி சங்க இலக்கியத்தினுள் ஓரத்திற்கு ஒதுக்கப்பட்ட வாழ்வியல் கூறுகளை நாம் மேலுக்குக் கொண்டுவரமுடியும். தலைவிக்கு முன்னர் எத்தனையோ சந்தர்ப்பங்களில் தலைவனும், எளியவனாகி இருப்பதைச் சங்கப்பாடல்கள் பதிவு செய்துள்ளன.

வரலாற்றுக் காலம் முழுவதும், மனிதர்களுக்குள் செயல்பட்டச் சில மாயைகள் குறித்து மார்க்ஸ் கூறியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். இவற்றை வரலாற்று மாயைகள் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். ஆணாதிக்கம் என்பதும், சாதி உணர்வென்பதும் இத்தகைய மாயைகள். இவற்றை மாயைகள் என்று அறிந்து கொள்வதற்கு எத்தனையோ வரலாற்றனுபவங்களை நாம் கடந்து வரவேண்டி இருக்கிறது. ஏற்றத்தாழ்வான சமூக நிலவரங்கள்தான், இத்தகைய மாயைகளை நமக்குள் தோற்றுவிக்கின்றன. கடவுள் ஆன்மா முதலியனவும் இப்படிச் சில மாயைகள். தனிஉடமை, அரசு, இராணுவம், போர், போட்டி முதலியன இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று பலர் கருதுவதும் மாயை அன்றி வேறு என்ன?

குறிப்பிட்ட பொருளியல் சூழலுக்கு வசப்பட்டவன் தன்னை முதலாளி என்று கருதுவதையும், மாயை என்றே மார்க்ஸ் கருதினார். வரலாற்றுச் சூழல் மனிதர்களைப் பற்றிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளாமல் தொல்காப்பியர் தொடங்கி இலக்கியவாதிகள் பலரை ஆணாதிக்கவாதிகள், உயர்சாதி மனப்பான்மை உடையவர் என்றெல்லாம் குற்றம்சாட்டுவதற்கு முன்னர் நாம் சிந்திக்கத்தான் வேண்டும். இன்றும் ஆதிக்கம் இல்லாமல் நம் வரலாறு இயங்குவதில்லை. ஆதிக்கங்கள் நமக்குள்ளும் செயல்படுகின்றன. நாம் கவனமாகத்தான் இருக்க வேண்டும்.

இலக்கியங்களை இன்று மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம், நமக்குள் ஆரோக்கியமான மனநிலையைப் பெறுகிறோம். முன்னைய இலக்கியங்களில் ஒதுக்கப்பட்டவர்களை, ஒடுக்கப்பட்டவர்களை இன்று முன்னுக்குக் கொண்டு வருகிறோம். இராமகாதையில், இராமனுக்கு எந்நேரமும் பணிவிடை செய்பவன் இலக்குவன். இராமன் சீதையைக் காட்டுக்கு அழைத்து வந்தான். ஆனால் இலக்குவன் தன் மனைவி ஊர்மிளையை அழைத்துக் கொண்டு வரவில்லை. பதினான்கு ஆண்டுகள்

அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும். இந்தக் கதையைக் குமாரன் ஆசான் மலையாள மொழியில் கவிதையாக வடித்தார். ஒருவகையில் ஊர்மிளைக்கு நம் காலத்திலாவது உயிர் கிடைத்திருக்கிறது.

அகலிகைக்குச் சாப விமோசனம் தேவை என்ற உணர்வோடு இன்றும் நாம் கவிதை எழுதுகிறோம். என்னதான் கம்பர் முயன்றாலும் வாலியைக் குற்றப்படுத்த முடியவில்லை. கம்பர் கைகேயிக்கு மட்டுமல்லாமல், கூனிக்கும்தான் விடுதலை தந்திருக்கிறார். இப்படி எல்லாம் பழைய இலக்கியங்களைத் தலைகீழாக புரட்டிப் போடுவதன்மூலம், அவற்றை நமக்கான இலக்கியங்களாக மாற்றிக் கொள்ளவும் முடியும். சேரன் செங்குட்டுவனின் வடநாட்டு வெற்றி வரலாற்று நிகழ்வு இல்லை. கனக விசையர் தலையில் அவன் கல் ஏற்றியது நமக்கு உடன்பாடில்லை. பாண்டிய நெடுஞ்செழியனை மதுராபதி தெய்வம் நியாயப்படுத்துவதை நாம் ஏற்பதற்கில்லை.

சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டதன் விளைவையே மாதவிக்குள்ளும், மணிமேகலைக்குள்ளும் நாம் காண்கிறோம். மணிமேகலையைத் தண்டிக்கும் முறையில் கோப்பெருந்தேவியின் செயல்களை நாம் மதிக்கவில்லை. மேலுலகம், மறுபிறப்பு முதலிய கருத்தாக்கங்களை அவற்றின் உள்ளடக்கத்தோடு இன்று புரிந்து கொள்கிறோம். ஏழைகளுக்கு நீதி கிடைக்காது என்ற உண்மையைக் கோவலனும் அறிந்திருக்கமுடியும். தேவந்தி கதையைக்கூட இன்று முன்னுக்குக் கொண்டுவர முடியும். நந்தனாரைத் தண்டித்தவரை இன்று நாம் காய்கிறோம். நந்தனாருக்கு நம்மால் உயிர்ப்பு அளிக்க முடியும்.

இராவணனைப் புலவர் குழந்தை காவிய நாயகன் ஆக்கினார். சிலப்பதிகாரக் காவியத்தின் அடியில், நாட்டார் கதைகளும், பாடல்களும் இயங்குவதை இன்று புரிந்து கொள்கிறோம். இத்தகைய நாட்டார் பாடல்கள் இல்லாமல் திருவாசகம் உருவாகவில்லை. இல்வாழ்க்கை மறுக்கப்பட்ட பெண்கள் என்ற வகையில் மாதவி, மணிமேகலை ஆகியவர்கள் மட்டுமல்லாமல், காரைக்கால் அம்மையார், திலகவதி, ஆண்டாள் முதலியவர்களையும், அப்புறம் வளையாபதி, குண்டலகேசி ஆகியவர்களையும் நாம் காண்கிறோம். மறுவாசிப்பு என்ற முறையில் இவர்களுக்கு எப்படி வாழ்வுரிமை தரப்போகிறோம். மறுவாசிப்பு என்ற செயலை ஆற்றலோடும், அழுத்தத்தோடும் செய்வது பற்றி, நாம் இன்னும் ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

கூடவே ஒரு எச்சரிக்கை. வரலாற்றை புரட்டிப் போடுவதன் மூலம், இராஜராஜன் கட்டிய பெரிய கோயில், கரிகாற்சோழன் கட்டியதாகச் சொல்லப்படும் கல்லணை என்று தொடங்கி இந்தக் கலைச் செல்வங்களை, அற்புதங்களை நம்மால் இழக்க / இகழ முடியாது. உலக அளவிலும் மனித ஆற்றலின் விளைவாக உருவாகிய எத்தனையோ அற்புதங்கள். இவை குறித்து நமக்கு இன்று எத்தகைய பார்வை தேவை.

காலங்கள்தோறும் ஒடுக்கப்பட்ட மக்களின் உழைப்பு இல்லாமல் இந்த மாபெரும் படைப்புக்கள் உருவாகவில்லை. இந்த மாபெரும் படைப்புக்களை உருவாக்கிய கலைஞர்கள், மக்களிடமிருந்தும், மரபுகளிலிருந்தும் ஆற்றல் பெற்றவர்கள். அரசு அதிகாரத்திற்கு ஒட்டக்கூத்தரால் ஒத்துழைக்க முடியும். ஆனால் கம்பரால், இளங்கோவால் ஒத்துழைக்க முடியாது. கம்பர் காவியத்தில் இலக்குவனும், குகனும், அனுமனும், கும்பகர்ணனும் தலைவர்கள் இல்லை என்பது உண்மைதான். இவர்களை வைத்துத்தான் இராமனும், இராவணனும் தலைவர்கள் ஆகமுடியும். இலக்குவன் முதலியவர்களுக்குள்ளும், சில கூறுகளில் வெளிப்பட்ட ஆற்றலை எப்படி விளங்கிக் கொள்வது. கூட்டு உழைப்பு இல்லாமல் வரலாற்றில் இயக்கம் இல்லை. எதிர் எதிர் வர்க்கங்கள் வழியேயும் வரலாறு இயங்குகிறது. ஆதிக்கம் மனிதனை அழிக்கவும் தான் செய்கிறது. மறுவாசிப்பு இல்லாமல் நமக்கும் வாழ்வு இல்லை.

4. மறுவாசிப்பென்பது ஓர் அரசியல் செயல்பாடு என்ற கோணத்திலிருந்தும் இந்தச் சிக்கலைப் பார்க்கலாம். நாம் எத்தகைய சமூகச் சூழலில் இருக்கிறோம், நமக்கு எத்தகைய சமூகம் தேவை என்ற நோக்கிலிருந்து பார்ப்பது இந்த அரசியல் செயல்பாடு. முதலாளியச் சமூகச் சூழலில்தான் நாம் தற்பொழுது இருக்கிறோம். இதன் நெருக்கடிகள் நம்மைக் கடுமையாக இன்று பாதிக்கின்றன. இயற்கை முதலிய நாசங்கள் இதனால் தான் நேர்ந்துள்ளன. மையத்தில் ஆதிக்கம் இல்லாமல் முதலாளியம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இயலாது. அதிகாரத்தில் பங்கீடு என்ற கோரிக்கையை தலித் மக்கள் மட்டுமல்லாமல், பெண்ணுரிமை இயக்கத்தினரும் இன்று கோருகிறார்கள். இட ஒதுக்கீடு என்பதன்மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கு என்பது இவர்கள் கோரிக்கை. அதாவது முதலாளியச் சமூகத்தில் உற்பத்தியாகும் அதிகாரத்தை எங்களுக்கும் பகிர்ந்து கொடு என்ற கோரிக்கை மூலம், முதலாளியச் சமூகத்தில் தமக்கான வாய்ப்புக்களைப் பெறமுடியும் என்பது இவர்கள் நம்பிக்கை. இதன்மூலம் சில நன்மைகளைப்

பெறமுடியும் என்பதும் உண்மைதான். எனினும், முதலாளியம் காரணமாக தொடர்ந்து பெருகிவரும் நெருக்கடிகளில் இருந்து இன்று எவரும் தப்பமுடியாது. முதலாளியச் சமூகச்சூழலை உடனடியாக கடந்து செல்ல இயலாது என்பதும் உண்மைதான். இதற்காக தலித் மக்களும், பெண்களும் போராடுவதும் தேவைதான்.

சமதர்மம் என்ற இலக்கு இன்று எல்லோருக்கும் தேவைப்படுகிறது. இந்த இலக்கை முன்வைத்துச் செயல்பட்டால் மட்டுமே முதலாளியச் சூழலையும் கடந்து செல்வது பற்றி நம்மால் சிந்திக்க முடியும். மார்க்சியமும் முதலாளியத்திற்கு இடம் கொடுத்துத் தன் புரட்சிகர உணர்வை இழந்துவிட்டதையும், நாம் ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். சாதி எதிர்ப்பு, மத எதிர்ப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு என்ற செயல்பாடுகளோடு தன்னை முடக்கிக் கொள்ளுகிற பகுத்தறிவுப் பார்வையும் முதலாளிய எல்லையைக் கடந்து செல்வதற்குப் பயன்படாது. இக்காரணத்தாலும் சமதர்மம் குறித்த உறுதியான பார்வை அனைத்து இயக்கங்களுக்கும் இன்று இன்றியமையாது தேவைப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தினுள் காலங்காலமாகச் செயல்பட்டு வரும் ஒப்புரவு என்ற பார்வைக்கு இன்று நாம் அழுத்தம் தந்து தமிழ் இலக்கியத்னைத மறுவாசிப்புச் செய்யமுடியும். வள்ளுவரிடத்தில் காணப்படும் ஒப்புரவைக் கணியன் பூங்குன்றனார் நக்கீரர் முதலியவர்களிடத்திலும் நாம் காணமுடியும். சாதி, மதம், கோயில், சடங்கு முதலியவற்றை முற்றாக மறுக்கிற சித்தர் இலக்கியம் சமதர்மத்திற்கு நெருக்கமானதென்று நாம் மதிப்பிடமுடியும். தமிழ் இலக்கியத்தினுள் சாதி உணர்வு, ஆணாதிக்க உணர்வு, அரசதிகாரத்தைப் போற்றும் உணர்வு, தனி உடைமை உணர்வு முதலியவை அங்கங்கே இருப்பது உண்மை என்றாலும், இவற்றை மறுப்பதாகிய ஒப்புரவு என்ற உணர்வு தமிழ் இலக்கியத்தினுள் இயங்கத்தான் செய்கிறது. விமர்சனம் இல்லாமல் நாம் எதையும் இன்று ஏற்பதற்கில்லை. தமிழ் இலக்கியத்தையும் விமர்சன உணர்வோடு மறுவாசிப்புக்கு உட்படுத்துகிறோம். பகுத்தறிவுப் பார்வை என்பது அறிவோடும், உணர்வோடும் செயல்பட இயலும். மனிதனிடத்திலிருந்து அற உணர்வையும், கலை உணர்வையும் பிரிப்பதற்கில்லை. மனித வாழ்க்கை பற்றிய அழகியல் உணர்வோடுதான் இலக்கியம் இயங்குகிறது. அற உணர்வு இல்லாமல், அழகியல் உணர்வும் இயங்குவதில்லை. வாழ்வின் எந்த மட்டத்திலும் அற உணர்வோடும், அழகியல் உணர்வோடும் நாம் வாழ்கிறோம், வாழ விரும்புகிறோம்.

இதன் காரணமாக மறுவாசிப்பு என்பதன் மூலம், இவற்றோடு இயங்கும் இலக்கிய உணர்வை நமக்குள்ளிருந்து வெளியேற்ற வேண்டியதில்லை. எத்தனையோ வரலாற்றுச் சூழலை நாம் கடந்து வந்திருக்கிறோம். நாம் ஆதிக்கம் செய்திருக்கிறோம. அடிமையாக இருந்திருக்கிறோம். போராடி இருக்கிறோம். பொருளில், இன்பத்தில் மயங்கி இருந்திருக்கிறோம். இயற்கையையும், உயிர்களையும் நேசித்திருக்கிறோம். வானத்தையும், மண்ணையும் மதித்திருக்கிறோம். உழைப்பிலும் பகிர்விலும் மகிழ்ந்திருக்கிறோம். அகதியாய் அலைந்திருக்கிறோம். பக்தியில் பரவசப் பட்டிருக்கிறோம். தெய்வங்களைத் தோற்றுவித்ததோடு, தெய்வங்களுக்கு எதிராக கேள்விகள் எழுப்பி இருக்கிறோம். வரலாற்றில் நெடும்பயணம் மேற்கொண்டு இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம். இது ஒரு மாபெரும் மனித நாடகம்.

திரும்பத் திரும்ப இந்த நாடகத்தினுள் நாம் சென்று வருகிறோம். நமக்கு அலுப்பு ஏற்படுவதில்லை. இந்த நாடகத்தை மீண்டும் மீண்டும் நமக்குள் அரங்கேற்றிக் கொள்வதன்மூலம் நமக்குள் விரிவு பெறுகிறோம். வாழ்வின் எல்லைகள் நமக்கு வசப்படுகின்றன. நமக்கான உலகத்தை நம்மால் படைத்துக் கொள்ள முடியும். வள்ளுவரும், இளங்கோவும் நமக்குள் இன்றும் வாழ்கின்றனர். சங்க இலக்கியத்திலிருந்து நாம் இன்றும் விலகிவிடவில்லை. சிலம்பும், மணிமேகலையும் இன்றும் நம் சமூகத்தில் இயங்குகின்றன. சித்தர்களை விட்டு நாம் விலகவில்லை.

மறுவாசிப்பு என்பதை இப்படி ஆழத்தோடு நம்மால் விரித்துக் காணமுடியும். விமர்சனப் பார்வையை நாம் எந்த இடத்திலும் இழக்கவேண்டியதில்லை. மார்க்சியமும், பகுத்தறிவும், தலித்தியமும், பெண்ணியமும் தமக்குள் முரண்படுவதும் தேவையில்லை. இவை தமக்குள் நெருங்கி இருப்பதோடு ஒன்றுக்குள் ஒன்று ஊடாடவும் செய்கின்றன. பாரதி கூறியபடி தமிழ் நம்மை அமரராக்கும் என்பதில் ஐயமில்லை.

●

14. இருபது நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை - இருபதாம் நூற்றாண்டுப் பார்வை

1. *தமிழ்க் கவிதை - தற்காலப் பார்வை*

1. இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட வரலாறு உடையது தமிழ்க் கவிதை. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், ஆகிய இலக்கியங்கள் முதன்மை பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்திற்குக் கிடைத்த முதன்மை மணிமேகலைக்கு வாய்க்கவில்லை. பெருங்கதையும் சிந்தாமணியும் தீவிரமாகப் பயிலப்படவில்லை. தமிழ் இலக்கிய மாணவர்கள் பக்தி இலக்கியத்தின் பால் மனத்தைச் செலுத்தவில்லை. கம்பராமாயணம் கடுமையான திறனாய்வுக்குள்ளாகித் தன் காவிய மேன்மையை வெளிப்படுத்துவதில் சில பத்தாண்டு காலத்திற்கு மேல் போராடிக் கொண்டிருக்கிறது. பெரியபுராணம் இலக்கியம் என்ற வகையில் சற்று முன் நகர்ந்துவிட்டது. அதன் புராணக் கூறுகள் நம்மை வசப்படுத்த இயலவில்லை. பிரபந்த வகைகளில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகியவை முன்னுக்கு வந்துள்ளன. இரண்டொரு கலம்பகங்கள் கற்கப்படுகின்றன.

இவை சில குறிப்புக்கள் மட்டும். சில இலக்கியங்கள் ஏன் முன்னுக்கு வந்தன, சில இலக்கியங்கள் ஏன் புறக்கணிக்கப்பட்டன என்றெல்லாம் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ் இலக்கியக் கல்வியில் இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் கூடுதலாக ஈடுபட்டவர்கள் சைவர்கள். சிலப்பதிகாரத்தை இவர்களாலும் புறக்கணிக்க முடியவில்லை; சிலம்பின் இலக்கியத் தகுதி ஆற்றல் மிக்கது. மணிமேகலை பவுத்த காவியம்; பெருங்கதையும் சிந்தாமணியும் சமண இலக்கியங்கள், கம்பர் காவியம் வைணவ சார்புடையது. இந்தக் காரணத்தைக் காட்டிலும் இன்னும் சில ஆழமான காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

2. பிற நூற்றாண்டுகளைக் காட்டிலும் 20–ஆம் நூற்றாண்டின் தனித்தன்மை குறித்து நாம் இப்பொழுது பார்க்க வேண்டும். அநேகமாக 20–ஆம் நூற்றாண்டில்தான் நாம் மனிதரானோம் என்று சொல்வது சிலருக்கு அதிர்ச்சி தருவதாயினும் இந்தக் கூற்றின் உண்மை குறித்து நாம் பார்க்க வேண்டும். இந்த நூற்றாண்டில் தான் நம்மைப் பொறுத்தவரை சமயங்களைக் கேள்விக்குள்ளாக்கி இயன்றவரை அதன் தாக்கத்தை நம்மிலிருந்து உதிர்த்துக் கொண்டோம்.

மனித வாழ்வின் முதன்மை நோக்கம் இறைவன் அல்லது பிறப்பு அறுத்தல் என்பதை நாம் கேள்விக்குள்ளாக்கினோம். மன்னராட்சி இனி

வேண்டாம் என்பதில் உறுதிப்பட்டோம். உலகியல் வாழ்வைத் திருத்தமுறச் செய்து கொள்ள வேண்டும் என்று கருதினோம். மேற்கிலிருந்து வந்த முதலாளியத்தின் சுதந்திரம், சமத்துவம், ஜனநாயகம் முதலிய கருத்துக்கள் நம்மை மனிதராக்குவதில் பேருதவியாய் இருந்தன. ஆங்கில ஆதிக்கத்திலிருந்து நம் தேசத்தை மட்டுமல்லாமல், நம்மையும் மீட்டுக்கொள்ள வேண்டும். நமக்கும் மேன்மையான நாகரிகம் உண்டு. நாமும் நம் தேசத்தை ஆண்டிருக்கிறோம். நம்மைப் பிணிக்கும் தளைகளிலிருந்து நம்மை நாமே மீட்டுக் கொள்ள வேண்டும். சுயசிந்தனை நமக்கு வேண்டும்; பகுத்தறிவுப் பார்வை வேண்டும். வரலாறு, சமூகம் என்ற சூழலில் வைத்துத்தான் சமயம் முதலியவற்றை நாம் பார்க்க முடியும். இவற்றோடு ஆரிய நாகரிகத்திற்கும் திராவிட நாகரிகத்திற்கும் இடையிலான மோதலில் நம்மை நாமே திராவிடர் என்றும் பிறகு தமிழர் என்றும் உணர்ந்தோம். சங்க இலக்கியங்களைக் கண்டறிந்தோம். திருக்குறளின் அறச் சிறப்பை உணர்ந்தோம். நீதிக்கான போராட்டம் நம்மைக் கவர்ந்தது.

20–ஆம் நூற்றாண்டு வரலாற்றுச் சூழலில் இப்படித்தான் தமிழோடு, தமிழ் இலக்கியத்தோடு, தமிழ்ப் பண்பாடு முதலியவற்றோடு நம் சார்பைக் கண்டு கொண்டோம். ஆரியத்திற்கு எதிரான திராவிடச் சார்பைக் கண்டறிந்தபோது அதன் முக்கியக் கூறாகிய சைவ சமயத்தோடு நாம் உறவு கொண்டோம். தமிழும் சைவமும் இணைவு கொண்டிருந்தன. தமிழ்ச் சமூகத்தை மாற்றியமைப்பதாகிய போராட்டத்தில் சில கூறுகளிலேனும் சைவர்கள் முன் வந்தனர். இவர்களை எல்லாம் ஒரு புள்ளியில் இணைக்கும் அரிய மனிதர்களாகச் சிலர் இருந்தனர். இவர்களில் ஒருவர் பெரியார். தமிழ் இலக்கியம் குறித்துப் பெரியாரின் திறனாய்வுகள் தமிழ் இலக்கியக் கல்வியில் சில போக்குகளைத் தீர்மானித்தன. இவை பற்றி எல்லாம் இன்று மறு ஆய்வு நமக்குத் தேவைப்படுகிறது.

3. வரலாறு மற்றும் இலக்கிய ஆய்வுக்கான ஒரு பொது விதியை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். நிகழ்காலம் மற்றும் எதிர்காலத் தேவைகள்தான் பழங்கால வரலாறு மற்றும் இலக்கியப் பார்வையைத் தீர்மானிக்கின்றன. இன்று நமக்கு சாதி மதங்கள் தேவையில்லை. நமக்குத் தேவையான பொதுப் போக்கு சமயச்சார்பின்மை என்று வைத்துக் கொண்டால் சங்க இலக்கியம், திருக்குறள் முதலியவற்றை நாம் ஏன் ஆற்றல் மிக்க இலக்கிய மரபு என வரித்துக் கொண்டோம் என்பது புரிகிறது. சிலப்பதிகாரம் சமயங்களுக்கிடையில் நல்லுறவைப் பேணுகிறது. பிற இலக்கியங்கள் இப்படி இல்லை.

20–ஆம் நூற்றாண்டில் பெருகிவந்த நகர நாகரிகம், வணிக வளர்ச்சி முதலியவற்றையும் கேள்விக்குட்படுத்தாமல் நாம் ஏற்றுக் கொண்டிருந்தோம். இதன் காரணமாகச் சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்கள் முன் வைக்கும் நகர நாகரிகம் முதலியவற்றைப் போற்றினோம். தமிழர் ஆட்சியை மீண்டும் தலையெடுக்கச் செய்ய வேண்டும் என்ற அரசியல் உணர்வுக்கும் நாம் இடம் கொடுத்திருந்தோம். இதன் காரணமாக மூவேந்தர்களைப் போற்றினோம். இந்தியாவுக்குள் நாம் தென் பகுதியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்வதை நாம் மறுக்கவில்லை. எனினும், தமிழ்த்தேசத்திற்குள் வரலாற்றுக்காலம் முழுவதும் நடைபெற்ற ஊடுருவல், படையெடுப்புக்கள் நமக்கு உடன்பாடில்லை. ஆகவே, சேரன் செங்குட்டுவன் முதலியவர்களின் வட நாட்டுப் படையெடுப்புக்களை நாம் பாராட்டினோம். மொகஞ்சதாரோ ஹரப்பா தமிழர் நாகரீகம் எனப் போற்றினோம். கடல் கடந்து பல நாடுகளுக்குச் சென்றோம். உலக நாகரீகங்களில் தொன்மையானது நம் நாகரிகம். இவ்வாறெல்லாம் பெருமித உணர்வோடு நிகழ் காலத் தேவைகளை உள்வாங்கிக் கொண்டு நாம் தமிழ் இலக்கியம் படித்தோம். காஷ்மீரத்திலிருந்து சைவம் வரவில்லை என்றோம். பக்தி இலக்கியம் தமிழகத்திலிருந்துதான் வடக்கே சென்றது என்றோம். இந்திய வரலாற்றில் தமிழனின் வரலாறு மதிக்கப்படவில்லை என்றோம்.

இவ்வாறெல்லாம் சில உணர்வுகள் நமக்குள் மேலோங்கி இருந்தன. இந்தியாவிற்குள் விடுதலைக்கான காங்கிரஸ் இயக்கம் முதலியவை நடத்திய போராட்டங்கள் வழியே தொடர்ந்து நமக்கான இடம், வாய்ப்பு முதலியவை மறுக்கப்படுகின்றன என்ற உணர்வு நமக்குள் ஏற்பட்டிருந்தது. ஆரிய நாகரிகத்திற்குள் நம்மை அகப்படுத்தும் சக்திகள் தொடர்ந்து பல நூற்றாண்டுகளாகச் செயல்பட்டன. நமக்கு இது உடன்பாடில்லை. ஆரிய நாகரிகம் மனிதர்களுக்கான வாழ்வியலை ஓரத்தில் ஒதுக்கிவிட்டுத் தெய்வம், வேள்வி முதலியவற்றை முன்னிலைப்படுத்தியது. திராவிட நாகரிகத்தில் மனிதச் சார்பு கூடுதலாக இருந்தது. விடுதலைக்கான போராட்டத்தில் தமிழர்களின் பங்கு மதிக்கப்படவில்லை. மார்க்ஸ்முல்லர் முதற்கொண்டு அன்னிபெசன்ட் வரை ஆரிய நாகரிகத்தை மேன்மைப் படுத்தினர். நம்மீது நடைபெற்ற படையெடுப்புகளை எல்லாம் நாம் திரும்ப ஆய்வுக்குட்படுத்தினோம். நம்மை நாமே இழந்துவிட முடியாது. நம்மை அடிமைப்படுத்த எதிரிகள் முனைந்து செயல்படுகிறார்கள். நமக்கு மறுமலர்ச்சி தேவை. நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இத்தகைய உணர்வுகள் வழியேயும் தமிழ் இலக்கியத்தை நாம் நேயத்தோடு கற்றோம்.

ஜி.யு. போப், வீரமாமுனிவர், கால்டுவெல் முதலியவர்களும்

மேற்கிலிருந்து வந்தவர்கள்தான். இவர்கள் தமிழையும் தமிழ் இலக்கியத்தையும் மதித்ததன் மூலம் நம்மை நாமே மதிக்கவும், திரட்டிக் கொள்ளவும் தொடங்கினோம். இத்தகைய போக்கில் ஏற்பட்ட பிறழ்வு என ஒன்றை இங்குச் சுட்ட முடியும். ஆரியத்திற்கு எதிரான பார்வை என்பதில் இங்கு தீவிரம் கொண்டபோது காங்கிரஸ் வேண்டாம், காந்தி வேண்டாம், சாதி வேண்டாம் என்பதோடு, சமயங்களும் வேண்டாம் என்ற நிலைக்கு நாம் சென்றோம். பகுத்தறிவுப் பார்வைக்கு அழுத்தம் கொடுத்தோம். இதன் காரணமாகவும் தமிழ் இலக்கியத்தில் ஒரு பாதியளவு என்றிருந்த சமய இலக்கியத்தை நாம் ஒதுக்கினோம். வரலாறு இப்படித்தான் நமக்குள் தேவைகளோடும் திரிபுகளோடும் செயல்பட்டது.

4. இலக்கியம் குறித்து நம் பார்வை எது என்று தீர்மானிக்கும்பொழுதுதான் வரலாற்றுச் சூழல் முதலியவை குறித்து நாம் கவனம் செலுத்துகிறோம். 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில்தான் நாம் மனிதரானோம் என்று குறிப்பிட்டோம். விலங்குகள் முதலிய பிற உயிர்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காண்பதில் ஒரு முக்கியமான கூறு, தன்னுணர்வுடையவன் மனிதனென்பதாகும். விலங்கிலிருந்து பிரிந்தவன் மனிதனென்றாலும், மனிதனின் தனித்தன்மை முதலியவற்றைச் சமூகம் மற்றும் வரலாற்றுச் சூழலில் காண முடியும். நான் யார்? என்ற கேள்வியில் தொடங்கி, இறுதியில் தன்னை பிரம்மம் என்றோ, வேறு வகையாகவோ உணர்வதைக் குறித்துச் சமயங்கள் பேசுவது நமக்கு உடன்பாடில்லை. இயற்கையோடு உறவுடையவன் மனிதன். சமூகம் என்ற சூழல் இல்லாமல் மனிதனுக்குள் இயக்கம் இல்லை. மண்ணோடும் உயிர்களோடும் உறவுடையவன் மனிதன். உழைப்பும் பகிர்வும் மனிதனின் இன்றியமையாத பண்புகள்.

விலங்குகளுக்குத் தன்னுணர்வு இல்லை. நாய்க்குத் தன்னுணர்வு இருந்திருக்குமானால் அது நாயாக, விலங்காக இருந்திருக்க முடியாது. மனிதனுக்கு மட்டுமே அறம், கலை உணர்வு உண்டு; வரலாறு உண்டு. தன் தேவைகளுக்கு ஒத்தவாறு உலகத்தை மாற்றியமைப்பவன் மனிதன். கருவிகள், கருத்துக்களைப் படைத்துக் கொள்கிறபொழுதே, மனிதன் தன்னையும் படைக்கிறான். பிரபஞ்ச அளவிலான உயிரியக்கம் மனிதனுக்குள்ளும் செயல்படுகிறது. இயற்கையின் கருணை இவனுக்குள்ளும் விளைந்திருக்கிறது. அறம் என்ற நியதி இல்லாமல் சமூகச் சூழலில் இவன் மனிதனாகி இருக்க முடியாது. இவன்தான் வானத்தையும், பூமியையும் அளப்பவனாகவும் இருக்கிறான். எல்லாவற்றினுள்ளும் மனிதன் தன்னைக் காண்கிறான் / வளர்த்துக் கொள்கிறான்.

வரலாற்றுச் சூழலில் இவன்தான் கடவுளைக் கண்டுபிடித்தான். தவம் செய்தான்; துறவு மேற்கொண்டான்; புலன் இன்பங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவும் முயன்றான். இப்படி இவனுக்கு நேர்ந்தவை பல்லாயிரம் அனுபவங்கள். வரலாற்றுச் சூழலில் பொருளுக்குள், ஆதிக்கத்திற்குள், கருத்தியல்களுக்குள் தன்னை இழந்தவனும் இவன்தான். இழந்த தன்னைப் பிறகு போராடி மீட்டுக் கொள்பவனும் இவன்தான். சாதி, மதம், சடங்குகள் முதலியவற்றின் உறவு இல்லாமல் இவன் வாழ்ந்ததில்லை. இவற்றுக்குள் இவன் முடங்கினான் என்றால் அவன் மனிதனும் இல்லை. மனிதனான வரலாறு மிகவும் விரிவானது மற்றும் ஆழமானது என்பதில் அய்யமில்லை. தன்னை உணர்ந்தவன் மனிதன் என்று சொல்லும்பொழுது பிரபஞ்சத்தோடும் வரலாற்றோடும் சமூகத்தோடும் உழைப்போடும் பிறவகை உயிரினங்களோடும் இவன் இடையறாத உறவு கொண்டிருப்பதைக் குறிப்பிடுகிறோம்.

தன்னை உணர்ந்த இந்த மனிதன் எல்லாவற்றோடும் சமத்துவ உறவு கொள்கின்றான். சுரண்டலும் ஒடுக்குமுறையும் இவனுக்கு உடன்பாடில்லை. எல்லாவற்றோடும் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்பவன் இவன். இவனுக்குள் இயல்பாக செயல்படும் உணர்வு சமதர்மம். கடவுள் என்ற உணர்வுக்குள், ஆன்மீகம் என்பதனுள் சமதர்மத்தின் இழைகள் படர்ந்துள்ளன. தன்னைத் தனியன் என்று உணர்வது தன்னுணர்வாக இருக்க முடியாது. தன்னை மனிதன் என்று உணரும் உணர்வுதான் தன்னுணர்வு. சமதர்மத்தினுள்தான் தழைக்கமுடியும் என்றுணர்வது தன்னுணர்வு. கடவுள், மதம் முதலியவற்றினுள்ளிருந்தும் தன்னைக் கண்டறிந்து மீட்டுக் கொள்வது தன்னுணர்வு. ஆதிக்கங்களுக்கும் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் இடம் தருவதன்மூலம் தன்னை அழித்துக்கொள்கிறோம் என்றுணர்வது தன்னுணர்வு. உயிர்களோடும், பிரபஞ்சத்தோடும் இயற்கையோடும் சமத்துவம் காணும் உறவில்தான் தன்னுணர்வு விரிவடையும். எல்லோருக்கும் எல்லாம் என்பதுதான் இந்தத் தன்னுணர்வு.

5. வரலாற்றின் வழியே மனிதன் தன்னுணர்வு / சமதர்ம உணர்வு பெறுவது குறித்த பார்வை மெய்யியல் பார்வை. தமிழ் இலக்கியத்தினுள் இந்த மெய்யியல் பார்வை செழித்திருக்கிறது. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில்தான் சமதர்மம் என்பதன் தேவையை நாம் முற்றாக உணர்ந்திருக்கிறோம். பகுத்தறிவுப் பார்வை சமயத்தை மறுக்கிறது. ஆனால், சமயங்களின்வழியே இயங்கும் மெய்யியலைப் புரிந்து கொள்வதற்குப் பகுத்தறிவுப் பார்வை உதவியாக இல்லை. நாகரிகம்,

வணிக வளர்ச்சி முதலியவை வரலாற்றில் தேவைதான் என்ற போதிலும் இவற்றில் அமிழ்ந்து இருந்தோம் என்றால் மனித வளர்ச்சி இல்லை. சமயங்களினுள்ளும் மனிதன் இருப்பை, இயக்கத்தை நாம் காண முடியும்.

இலக்கியம் என்பதேகூட மனிதனுக்கு அலங்காரமாக இருக்க முடியாது. மனிதனின் படைப்பு என்ற முறையில் இலக்கியத்தினுள்ளும் மனிதனின் இயக்கத்தை நாம் காண வேண்டும். மனித அறம் என்பது சமதர்மத்திலிருந்துதான் ஊற்றெடுக்கிறது. மனித நேயத்திற்கு ஆதாரம் சமதர்மம். ஆகவே, இலக்கியத்தின் கருப்பொருள் என்பது மனித நேயம் / சமதர்மம். தன் வாழ்வியல் அனுபவங்களைக் கதைகள் மற்றும் இலக்கியங்களின் வழியே திரட்டிக் கொள்பவன் மனிதன். இவனுக்குள் இயல்பாகவே ஒரு கலைஞன் இருக்கிறான். கலை அல்லது இலக்கியம் என்பது மனிதனின் அகத்துறுப்புக்கள்.

அற உணர்வு சமூகத்தில் பிறழும்பொழுது அதை நிலை நிறுத்துவதற்காகத் தன் உயிரையும் தருகிறான் மனிதன். வறுமையின் கொடுமையோ, ஆதிக்கங்களோ இவனுக்கு உடன்பாடாக இருக்க முடியாது. மனிதனின் ஆக்கத்திற்குத் தெய்வங்கள் ஓடிவந்து உதவ வேண்டும். விதி என்னதான் வலிமையுடையதென்றாலும் அதை வெல்ல வல்லவன் மனிதன். புற உலகத்தைத் தன் சாயலில், தன் வண்ணங்களில் படைப்பவன் மனிதன். தெய்வங்களை இவன்தான் படைத்தவனென்பதால், தெய்வங்களினுள்ளும் இவன் தன்னைத்தான் விட்டு வைத்திருக்கிறான். இவன் போற்றும் அன்புதான் இவனுக்கு மந்திரம். அன்புதான் இவனுக்குத் தெய்வம்.

இவ்வளவையும் தமிழ் இலக்கியத்தினுள் காண்கிறோம். இத்தகைய பார்வை நமக்குள் விரிவு கொள்ளுமானால் சிலப்பதிகாரத்தைப் போலவே மணிமேகலையையும் நாம் அக்கறையோடு பயில முடியும். பக்தி இலக்கியங்களைக் கண்டு நமக்குள் சுருங்க வேண்டியதில்லை. கம்பராமாயணம் வரலாற்றுக் காலத்தில் மனிதன் நடத்திய போராட்டங்களைத்தான் சொல்கிறது. அன்றும் இன்றும் ஆதிக்கம் செய்பவர்கள் இராவணர்கள். இவர்களை நாம் ஏற்க முடியாது. எல்லோருமாக இணைந்து போராடினால் மட்டுமே இவர்களை ஒழிக்க முடியும். அரசனாக இராமன் இருந்திருந்தால் இன்னொரு இராவணனாகத் தான் அவன் நம்மை ஆதிக்கம் செய்திருப்பான். அரச பதவியைத் துறக்கும்பொழுதுதான் இவன் மனிதனாகிறான். வேடர்களோடும் குரங்கினத்தோடும் இவன் உறவு கொண்டு ஆற்றல் பெற்று இராவணனை வெல்கிறான். இராவணர்களை ஒழிக்கும் போராட்டத்திற்கும் தெய்வம் வர

வேண்டும். இப்படி எல்லாம் கம்பர் காவியத்தை நாம் பொருள்படுத்த முடியும்.

20–ஆம் நூற்றாண்டில் மனிதனைக் குறித்த மெய்யியல் பார்வையைப் பெறுவதன்மூலம் தமிழ் இலக்கியங்களைக் கூடுதலான நேயத்தோடு நம்மால் கற்க முடியும். புராணங்களினுள்ளும் மனித இயக்கத்தை நாம் காணமுடியும் என்றாலும், புராணங்கள் எல்லாவற்றையும் மனிதத் தரத்திலிருந்து உச்ச அளவிற்கு மிகைப்படுத்துகின்றன அல்லது திரிக்கின்றன. மனிதனை உள்ளே காண முடியாத அளவிற்கு இயற்கை கடந்த நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. திரிக்கப்பட்ட அல்லது மிகைப்படுத்தப்பட்ட வடிவங்களில் இங்கும் மனிதர்களைத்தான் காண்கிறோம். புராணங்கள் குறித்து நம் பார்வை இன்னும் அழுத்தம் பெறவில்லை. யதார்த்தம் என்ற இலக்கிய வடிவத்திலேயே நம் கவனம் பதிந்திருப்பதால், புராணங்களுக்குள் நுழைந்து அங்கும் மனித யதார்த்தம் எவ்வாறெல்லாம் திரிபுபட்டுள்ளது என்பதை நாம் இன்னும் காண முடியாதவர்களாக இருக்கிறோம். சிற்றிலக்கியங்களினுள்ளும் நம் கவனம் பதியவில்லை.

20–ஆம் நூற்றாண்டு சூழலில்தான் இலக்கியம் கற்பது என்றால் என்ன என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம். சூழலிருந்து நம்மை வேறுபடுத்திக் கொண்டு இலக்கியம் கற்க முடியாது. இலக்கியம் என்பது கதைகளாகவோ கற்பனைகளாகவே இருக்க முடியாது. இவற்றினுள்ளும் மனிதனைத்தான் நாம் காண்கிறோம். இவனும் வரலாற்று வரையறைகளோடு, தனக்குள்ளும் புறத்தும் போராடிக்கொண்டிருக்கும் மனிதன் கடவுளைப் பற்றிய கதைகளினுள்ளும் மனிதனையே நாம் இனம் காண முடியும். இலக்கியம் இல்லாமல் மனிதன் இல்லை. கவிதைகள் இல்லாமல் மனிதன் இல்லை. எல்லா மனிதருள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான். கலை என்பது ஓர் அலங்காரமல்ல; மனிதனுக்குள் செயல்படும் ஓர் ஆற்றல், வரலாற்றின் வழியே வந்துள்ள ஆற்றல்; அற உணர்வென்பதும் இத்தகையது. சமதர்மம் என்ற உள்ளடக்கத்தைக் கொண்டது அறம். கவிதை என்பதன் உள்ளடக்கம் கவித்துவம். இந்த உள்ளியக்கம் இல்லாமல் மனிதர்கள் இல்லை. மனிதனுக்குள் பல களங்களிலும் செயல்படும் கவித்துவத்தின் ஒரு கூறுதான் கவிதை. 20–ஆம் நூற்றாண்டின் இயக்கத்தில்தான் மனிதனைக் குறித்த இத்தகைய பார்வைகளைப் பெறுகிறோம். இத்தகைய பார்வையோடு 2000 ஆண்டு தமிழ்க்கவிதையை நமக்குள் வாசிக்கிறோம்; வரித்துக் கொள்கிறோம்.

7. 20–ஆம் நூற்றாண்டின் இறுதியில் கவிதை குறித்த சிந்தனைகள்

பெருமளவில் மாறியுள்ளன. கவிதை என்பதனுள் கவித்துவம் முக்கியமானது. கவித்துவம் என்பது படைப்புத் திறன்; வாழ்வியலின் எல்லாக் களங்களினுள்ளும் செயல்படுவது இந்தக் கவித்துவம் / படைப்புத் திறன். வாழ்வுக்கு அர்த்தம் தேவை; அழகு தேவை. குறுகிய நோக்கியலான வாழ்வில் சுதந்திரம் இல்லை; விடுதலை இல்லை. வாழ்வின் களங்கள் எவ்வளவு விரிவு பெறுமோ அந்தளவுக்கு வாழ்வில் ஆற்றல்கள் பெருகும். வாழ்வு அர்த்தமும் அழகும் உடையதாகும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இந்தக் கவித்துவம் செயல்படுகிறது. பழைய இலக்கியங்களைத் தன் காலத்திற்குக் கொண்டு வந்து இவன் வாசிக்கிறான். தன் வாழ்வியல் அனுபவங்களின் வழியே இலக்கியத்தை வாசிக்கிறான்; பொருள்படுத்துகிறான். இவன் விடுதலையை விரும்புகிறவன். வாழ்வின் அர்த்தங்கள் எங்கு கிடைத்தாலும் இவன் பற்றிக் கொள்வான். நிகழ்காலத்திற்குள் அதைப் பதியம் வைத்துச் செயல்படுத்துவான். இவனுக்குள் வானம் வந்து போகும். இவன் தனக்குள் எல்லையற்றவன். இவனுக்குள் காலம் இல்லை. அதாவது, காலத்திற்கு இவன் கட்டுப்படுவதில்லை.

எல்லாவற்றையும் நிகழ்காலத்திற்குள் கொண்டு வந்து இவன் வாசிக்கிறான் என்ற முறையில் இவன் நாயன்மார்களோடும் ஆழ்வாளர்களோடும் உறவுகொள்கிறான். இவனுக்குள் வள்ளுவரும் இளங்கோவும் வந்து போகின்றனர். இவன் ஏதாவது சில கணங்களில் தனக்குள் கோவலனைக் காண்கின்றான். இவனுக்குள் உதயகுமரன் வருகிறான். இப்படியே இலக்கிய நாயகர்களைத் தனக்குள் கண்டு, அவர்களோடு உறவாடி, தன்னைப் பற்றியும் உணர்வு கொள்கிறான். கண்ணகியோடும் மாதவியோடும் இவனுக்கு உறவு இருக்கக் கூடும். இவனுக்குள் நெடுஞ்செழியனும் பொற்கொல்லனும் கூட இருக்கக் கூடும். இவனுக்குள் இலக்குவனோ பரதனோ இருக்கலாம். இவனுக்குள் இராமனும் இராவணனும் போரிடுகிறார்கள். சீதை இவனுக்கு வேண்டும்; சூர்ப்பநகை கூட தேவைப்படலாம்.

இப்படி எல்லாம் இலக்கியத்தையும் தனக்குள் கொண்டு வந்து, அந்த இலக்கியத்தின்வழி தன்னையே இவன் வாசித்துக் கொள்கிறான். உதயகுமரன் தன் கயமைத்தனத்தோடு சாக வேண்டாமே. மணிமேகலையைப் பிரிந்த நிலையில் இவன் தனக்குள் கலங்கித், தடுமாறி, சிக்கலுக்குள்ளாகிப், பிறகு தனக்குள் சிதைந்து, அப்புறம் தனக்குள் எரிந்துப் பிறகு தனக்குள் உருமாற்றம் அடைந்திருக்கலாம். மணிமேகலையிடம் மன்னிப்பு வேண்டி செல்லும்பொழுது இவன்

கொல்லப்படலாம். இவனைப் போலவே கோவலனும் நமக்குள் உருமாற்றம் அடையலாம். இலக்கியத்திற்குள் இப்படி எல்லாம் இயங்க முடியும். தமிழ் இலக்கிய பரப்பு இத்துணை விரிவானது.

பெரிய புராணத்திற்குள் உலவும்பொழுது நமக்குள் பூசலாரை, கண்ணப்பனை எதிர்கொள்ள முடியும். தன் கிராமத்துத் தெய்வங்கள் போதாமல், அண்டங்களை எல்லாம் ஆளுகின்ற சிவபெருமானை நந்தன் தேடிச் செல்வது தனக்குள் தானே தீ மூட்டுக் கொள்வதாகலாம். உண்மையில் தமிழ் இலக்கிய வாசிப்பின்மூலம் நம்மை நாமே புடம் போட்டுக் கொள்ள முடியும். இரசனை என்ற அளவில் இலக்கியத்தைச் சுவைப்பது என்பது ஒரு தொடக்க நிலை; இறுதிவரை இதிலேயே தங்கிவிட முடியாது. இரசனை என்பதன் தொடர்ச்சியான இயக்கத்தின்போது பல்வேறு தளங்களுக்குள் நாம் செல்லவேண்டும். இலக்கியத்தின் இறுதித் தளம் என்பது மெய்யியல் தளம். இடையில் சில சமயம் அரசியல் என்ற தளத்தினுள் நாம் அகப்பட்டுக் கொள்ள நேரிடலாம், அதனால் தவறு இல்லை; கடந்து செல்ல வேண்டும்.

இப்படி ஒரு சாதனை நமக்குள் சாத்தியப்படும் என்றால் இனி இலக்கிய வாசிப்பென்ற தளத்திற்குள் வேற்றுமொழி இலக்கியங்களையும் கொண்டு வந்து வாசிக்கலாம். கிரேக்க இலக்கியம் என்று தொடங்கி பலவற்றை வாசிக்கலாம். வரலாற்றின் பல்வேறு சூழல்களில் மனிதன் எப்படி எல்லாம் வாழ்ந்திருக்கிறான் என்று அறிந்து கொள்ளலாம். நமக்குள் மேக்பத் – ஐக் காணலாம்; ஹேம்லட்டையும் காணலாம். இவர்களை நமக்குள் சந்திக்கமுடியும். இன்னும் இப்படியே பயணம் தொடரலாம். இந்தப் பயணத்தின்போது உலக மனிதன் நமக்குள் வருகிறான். இவனைச் சந்திப்பதில் நமக்குச் சிரமம் இல்லை. வள்ளுவரோடும் இளங்கோவோடும் கம்பரோடும் பழகியிருக்கிறோம். கணியன் பூங்குன்றன், நக்கீரன் முதலியவர்கள் நமக்குள் இருக்கின்றனர். புத்தர், ஏசு, முதலியவர்களையும் நம் பயணத்தின்போது சந்தித்திருக்கிறோம். இலக்கியம் என்பது இந்த அளவுக்கு நமக்குள் விரிவுபெற வேண்டும். தமிழ் இலக்கியம் இந்த விரிவை நமக்குத் தரும்.

8. 20–ஆம் நூற்றாண்டின் ஒரு கட்டத்தில் புதுக்கவிதை தமிழுக்கு வந்தது. புதுக்கவிதை தமிழில் நிலைபெற சில பத்தாண்டுகள் ஆயின. புதுக்கவிதை தமிழில் நிலைபெற்றதையடுத்துக், கவிதை குறித்து நம் சிந்தனைகள் பெரும் மாறுதலுக்கு உள்ளாயின. கவிதைக்கு எதுகை மோனை முக்கியமில்லை; ஓசை நயம் குறைந்த அளவுக்கே இருந்தால் போதும். உவமை, உருவகம் என்பனகூட கவிதைக்கு இன்றியமையாத

உறுப்புக்கள் அல்ல. கவிதைக்குப் படிமம் தேவை. காட்சிப்படுத்துவதற்கான உத்தி படிமம். தீவிரமான இயக்கத்தின்போது ஓர் இலக்கியமே கூட படிமம் ஆகிவிடலாம். மொழி என்பது இப்படிக் குறியீடுகளின் தொகுப்பு / படிமங்களின் தொகுப்பு. படிமங்கள் இல்லாமல் நமக்குச் சிந்தனை இல்லை. மொழிக்குள் நாம் இருக்கிறோம். மொழி நம்மைக் கட்டமைக்கிறது. மொழியின் வடிவத்திலிருந்து கலாச்சாரமும் வரலாறும் நம்மைக் கட்டமைக்கின்றன.

தமிழ் வரலாறு நமக்குள் வேரோடி கிளைவிட்டிருக்கிறது. தமிழுக்குள் நாம் இருக்கிறோம்; எனக்குள் இருந்து எனது மொழியைத் தேசத்தைப் பிரிக்க முடியாது. எந்த அளவுக்கு இந்த மொழிக்குள் நான் ஆழ்ந்து போகிறேனோ அந்த அளவுக்கு வரலாறு என்னைப் பற்றிக் கொள்கிறது. இங்குள்ள இயற்கை, ஆறுகள், பயிர்கள், உழவர்கள் மற்றும் கைவினைஞர்கள் எனக்குள் உறவாடுகிறார்கள். இந்த உழவர்களின் அறம்தான் வள்ளுவர் தொகுத்த அறம். இந்த மண்ணில் வாழ்ந்த மக்கள்தான் என்னை வழிநடத்துகின்றனர். சங்ககாலமும் இடைக்காலமும் எனக்குள் இன்னும் இருக்கின்றன.

புதுக்கவிதைக்காரர்கள் கவிதைக்கு இலக்கணம் கண்டறிய முயன்று தொடக்கத்தில் மரபை மறுத்தார்கள். ஆழ்ந்து செல்லும்பொழுது மரபுக்குள் நாம் இருப்பதைக் கண்டறிகிறோம். கண்ணகி ஒரு படிமம். இப்படி மாதவி, மணிமேகலை முதலியவர்களும் படிமங்கள். இவர்கள் இன்று வரை நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள். சுந்தரர், நாவுக்கரசர் ஆகியவர்களும் இப்படித்தான் நம்மோடு வாழ்கிறார்கள். நம் ஆற்றலுக்கொத்த முறையில் கவிதைக்குள் இப்படிப் பயணம் செய்யலாம்.

கவிதை பற்றிய இந்த புதியவகைப் புரிதலோடு தொல்காப்பியரிடம் நாம் செல்கிறோம். தொல்காப்பியரது கவிதை குறித்த இலக்கணம் தனக்குள் விரிந்து நமக்கு இடம் தருகிறது. வாழ்வுக்கான இலட்சியங்கள், பயணங்கள் முதலியவற்றைக் குறிப்பிட்ட வரலாறு மற்றும் பொருளியல் சூழலிலிருந்துதான் நாம் பெறுகிறோம். வாழ்வுக்கு ஆதாரமான அர்த்தங்களில்தான் நாம் வேர் பிடித்து வளர்கிறோம். ஆதாரமான இந்த அர்த்தங்களில் சிலவற்றை இங்குக் குறிப்பிடலாம். அன்பும் அறமும் காதலும் பெருமிதமும் பக்தியும் மனித வாழ்வுக்கு வேர்களாகவும் விழுதுகளாகவும் அமைகின்றன. இவைதான் இலக்கியத்தின் உரிப்பொருள்கள்.

இவற்றுக்கான சூழல் என்பது ஒன்று வரலாறு இரண்டு பொருளியல். நிலம், பொழுது ஆகியவற்றை வரலாற்றுச் சூழலுக்குள்

அடக்கலாம். கருப்பொருள் என்பனவற்றைப் பொருளியல் என்பனவற்றுள் அடக்கலாம். அகத்திணைக்கு மட்டுமே உரிப்பொருள் என்பது இல்லை. புறத்திணைகளுள்ளும் உரிப்பொருள் உண்டு. இவையும் காலத்திலும் களத்திலும் இயங்குபவை. வள்ளுவருக்கு அறம் என்பது உரிப்பொருள். இந்த அறத்தின் இயக்கத்திற்கான காலமும் களமும் திருக்குறளில் சொல்லப்படவில்லையென்றாலும் திருக்குறளிலிருந்தே கண்டறிய முடியும். பக்தி என்பதன் இயக்கத்திற்கும் இப்படிக் காலமும் களமும் இல்லாமல் முடியாது. சிலசமயம் சூழலையும் மாற்றுவதற்கான அகத்தின் எழுச்சியை நாம் மறுக்க வேண்டியதில்லை. அகம் தனித்தியங்குவதில்லை. நம் காலத்திற்குரிய உரிப்பொருள்கள் என்பதனுள் விடுதலை முதலியன அடங்கும்.

தொல்காப்பியரின் கவிதைக்காண இலக்கணத்தை இப்படி இங்கு நாம் விரிவுபடுத்திக் கொள்ள இயலும். 20–ஆம் நூற்றாண்டில் மனித வாழ்வை மேடுபடுத்துவதற்குரிய உரிப்பொருள் எது என்று நாமே நிர்ணயித்துக் கொள்ள முடியும். கவிதை சொற்களில் அடங்குவதில்லை. இறுதியில், கவிதை என்பதன் ஊற்றுதான் கவித்துவம். முரண்பாடுகளுக்கு இடையில் வாழ்வின் அர்த்தம் தேடி நம்மை நாமே தோண்டும்பொழுது நமக்குள் பொங்கி வழிவது இந்தக் கவித்துவம். இந்தக் கவித்துவம் வழியே வள்ளுவரும் இளங்கோவும் நமக்குள் வழி திறக்கிறார்கள். இப்படி எல்லாம் இன்று தமிழ்க் கவிதையைப் பொருள்படுத்துகிறோம். இடைக்காலத்தில் மூடப்பட்ட தொல்காப்பியரை 20–ஆம் நூற்றாண்டில் இப்படித் திறக்கிறோம்.

2. தமிழில் கவிதை இலக்கணம்

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒன்றுக்கு பின் இன்னொன்றென மாறி எத்தனையோ இலக்கிய வகைகள் தோன்றியுள்ளன. உள்ளடக்கம் என்ற முறையில் இலக்கிய வகை ஒவ்வொன்றையும் நாம் சரியாக இனம் காண முடியும். சங்க இலக்கியத்தில் அகமும் புறமும் ஆளுகை செலுத்தின. அடுத்து வருவது அற இலக்கியம். அதனை அடுத்து காப்பியங்கள். அதன் பிறகு பக்தி இலக்கியம். அதன் பிறகு சிற்றிலக்கியங்கள் எனச் சொல்லப்படும் புதிய வகை இலக்கியங்கள்.

இலக்கிய வகைகளின் பின்புலத்தில் காலமும் களமும் என்ற வகையில் வரலாற்றுப் போக்குகள் இருந்துள்ளன. சங்க இலக்கியத்தில் கூறப்படும், களவு மணமோ, கற்பு மணமோ மற்றும் போர் வகைகளோ

வள்ளுவர் காலத்தில் அல்லது இளங்கோவின் காலத்தில் இல்லாமல் இல்லை; என்றாலும், வள்ளுவர் காலத்தில் அறச் சிக்கல்கள் மேலுக்கு வந்தன. இல்லறத்தினுள்ளும் துறவறத்தினுள்ளும் சில வகையான சிக்கல்கள் அரசியலிலும், பொருளியலிலும் அதைப் போலவே குடியியலிலும் சில வகைச் சிக்கல்கள். இவைதான் சிந்தனையாளர்களின் மனங்களில் முன்னுக்கு வந்தன. இதற்கான காலச் சூழல் என்று ஒன்று இருந்திருக்க வேண்டும்.

அடுத்து வந்த காப்பியங்களில் வாழ்க்கையைக் கூடிய வரை முழுமையாகப் பார்க்கும் பார்வை மேலோங்கியது. வினை, விதி, தெய்வம் ஆகியவற்றின் நெறியில் வாழ்க்கை புரிந்து கொள்ளப்பட்டது. இக உலகளவில் வாழ்க்கை அடங்குவதாக அவர்களுக்குத் தெரியவில்லை. வினைகளுக்கு ஏற்றவாறு பிறப்புக்கள் தொடர்கின்றன. பிற உயிர்களாகப் பிறந்து இறுதியில்தான் மனிதனாகப் பிறக்க முடியும். இடையில் வரும் தெய்வம் மனித வாழ்வைத் தீர்மானிக்கிற வினைப் பயனைக் குறைக்க முடியுமா என்றெல்லாம் கேள்விகள் எழுந்தன. பிறப்பு அற வேண்டுமென்பது பெரும் நோக்காயிற்று. வாழ்க்கையின் நோக்கென்பது இறைவனை நோக்கித் திரும்பியது. பக்தி இலக்கியங்கள் எழுந்தன. காப்பிய நோக்கும் பக்தி நோக்கும் இணைந்த பெரும் படைப்பு கம்பரது காவியம். தமிழ் இலக்கியத்தின் உச்சங்களில் ஒன்று எனக் கம்பர் காவியத்தைச் சொல்ல முடியும்.

சமூகத்தில் பெருகிவந்த ஆதிக்கங்களை ஒழித்தாக வேண்டும். ஒழிப்பதற்கான மனித முயற்சி போதுமானதாக இல்லை. தெய்வமே மனிதனாகப் பிறப்பெடுத்து வந்தால்தான், அவனும் அரச பதவி துறந்து, வேடர் முதலியவர்களோடு உறவு கொண்டு அப்புறம் தான் இராவணனை வெல்ல முடியும். கம்பர் காவியத்திற்குப் பிறகு தமிழிலக்கியத்தில் பேரிலக்கியங்கள் இல்லை. பிறகு சிற்றிலக்கியங்கள். இத்தகைய போக்குக்கும் காலம், களம் எனக் காரணங்கள் இருக்க வேண்டும்.

2. இலக்கிய வகைகள் இவ்வாறு காலச் சூழலுக்கேற்றவாறு மாறி வந்தன எனினும், வரலாற்றுச் சூழலோடு வைத்து இலக்கியத்திற்கான இலக்கணம் தமிழில் சொல்லப்படவில்லை. கால மாற்றம் குறித்த உணர்வோ புதிய இலக்கியத்திற்கான சிந்தனையோ இல்லாமல் புதிய இலக்கியங்கள் படைத்துவிட முடியாது. தொல்காப்பியர் தமிழ்க் கவிதைக்கு இலக்கணம் வகுத்தார் என்பது உண்மைதான். இவருக்குப் பிறகும் இலக்கண நூல்கள் அவ்வப்பொழுது தோன்றின. தொல்காப்பியரிடமும் இலக்கியம் குறித்துக் கூடியவரை ஒருங்கிணைந்த பார்வை இருந்தது.

கவிதையில் இடம்பெறும் கூறுகள் பலவற்றைத் தொல்காப்பியர் தொகுத்துரைத்தார் ; இலக்கிய வகைகள் குறித்தும் தொகுத்திருக்கிறார். தொல்காப்பியருக்குப் பிறகு அகத்திணை இலக்கணமும் புறத்திணை இலக்கணமும் வேறு வேறாயின. தொல்காப்பியரிடமும் இவற்றிற்கிடையிலான ஒருங்கிணைப்பு சரியாக இல்லை; அணி இலக்கணம் தனியே பிரிந்தது; யாப்பிலக்கணமும் பிரிந்தது; மெய்ப்பாட்டியல் தனித்து வளர்க்கப்படவில்லை; தனித் தனியே எழுந்த இலக்கண நூல்கள் கவிதை அல்லது இலக்கணம் குறித்துப் பிரித்துத்தான் ஆராய்ந்தன. இந்த ஆய்வு தனித் தனி உறுப்புக்கள் பற்றிய ஆய்வாக அமைந்தனவே ஒழிய இலக்கியத்தின் முழுமை பற்றிய ஆய்வு இவற்றுக்குள் இடம் பெறவில்லை.

புதிய, புதிய இலக்கியங்களைப் படைத்த புலவர்கள் தம் கவிதைக்கான இலக்கணத்தை அங்கங்கே சில தொடர்கள், சில வரிகளில் குறிப்பிட்டுள்ளனர். இவற்றிலிருந்து முழுமையைத் தொகுக்க முடியாது. இன்று திரும்ப நாம் இவற்றினுள் நுழைந்து ஆய்வு செய்ய இயலுமானால் காவியத்திற்கு என்ன இலக்கணம்; பக்தி இலக்கியத்தினுள் செயல்பட்ட இலக்கணம் என்ன என்றெல்லாம் கண்டடைய முடியும். இத்தகைய ஆய்வுகளும் அண்மைக்காலத்தில் தமிழில் உள்ளன. இவை போதுமா என்றெல்லாம் தொடர்ந்து நாம் கேள்விகள் எழுப்பி ஆய்வைத் தொடர வேண்டும்.

3. இலக்கியத்தின் உள்ளடக்கம் மட்டுமல்லாமல், உருவத்தையும் அந்த இலக்கியம் தோன்றிய வரலாறு மற்றும் பொருளியல் சூழலோடும் தொடர்புபடுத்தித்தான் ஆராய வேண்டும். இடையில் ஒன்றை நாம் குறிப்பிட வேண்டும். எந்த இலக்கியமும் அது தோன்றிய வரலாற்றுச் சூழலுக்கு எதிர்வினை புரியக் கூடியது என்ற முறையில் வரலாற்றுச் சூழலையும் குறைந்தளவுக்கேனும் கடந்து செல்வதாக இருக்க முடியும். மற்றபடி வரலாற்றுச் சூழலில் வைத்து இலக்கியத்தை ஆய்வதற்கு இது தடையாக இருக்க முடியாது.

கவிதை அல்லது இலக்கியத்திற்குரிய கருப்பொருள் என்று இன்று நாம் குறிப்பிடுவதைத் தொல்காப்பியர் உரிப்பொருள் என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் குறிப்பிடும் கருப்பொருள் என்பதனுள் நிலத்திலும் காலத்திலும் தோன்றிய கடவுளர் முதல், மக்கள், மரங்கள், உயிரினங்கள், மனிதர் மேற்கொள்ளும் தொழில், மனிதனின் கலை முயற்சி முதலியன அடங்கும். இந்தக் கருப்பொருள்கள் நிலத்திலும் காலத்திலும் தோன்றுபவை. தொல்காப்பியர் வகுப்பின்படி உரிப்பொருள் என்பதனை நிலம், பொழுது மற்றும் கருப்பொருள் என்ற பின்புலத்திலிருந்து பார்க்க

வேண்டும். காலம், நிலம் என்பதை இன்று நாம் வரலாற்றுச் சூழல் என்று குறிப்பிடலாம். கருப்பொருள் முதலியவற்றைப் பொருளியல் சூழல் என்று குறிப்பிடலாம். தொல்காப்பியர் குறிப்பிட்ட திணை மயக்கம் என்பது காலம்தோறும் பெருகி வந்துள்ளது.

தொல்காப்பியர் வகுத்த இலக்கியம் குறித்த இலக்கணம் என்பதனுள் இன்னும் பல அடங்கும். இவை குறித்த ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இங்கு நாம் கவனிக்க வேண்டியது தொல்காப்பியருக்குப் பிறகு அவரது நெறியில் இலக்கிய ஆய்வுகள் தொடரவில்லை. நிலத்திலும் காலத்திலும் எத்தனை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கருப்பொருள்கள் என்பனவற்றுள் சேர்க்க வேண்டியவை எவ்வளவோ; நாடுகளுக்கு இடையில் எத்தனையோ ஊடாட்டங்கள்; நாகரீகப் பெருக்கங்கள்; தனி உடமை அரசு ஆதிக்கத்திலும் வளர்ச்சிகள். இவை அனைத்துமே மனித வாழ்வைக் கடுமையாகப் பாதிக்கின்றன. இவை தரும் நெருக்கடிகளுக்கு இடையில் தன் வாழ்வுக்கான அர்த்தங்கள் தேடி லட்சியங்களை முன் வைத்து மனிதன் தன்னை நிறுவிக் கொள்ள வேண்டும். தனக்கான வாழ்வு மற்றும் உலகத்தைப் படைத்துக் கொள்ள வேண்டும். இம் முறையில் மனித வாழ்வில் அர்த்தங்களும் இலட்சியங்களும் கூடி வருகின்றன. இவைதான் வாழ்வின் உரிப்பொருள்கள். தொல்காப்பியர் வகுத்தபடி அகத்திணையையும் புறத்திணையையும் பிரித்துப் பார்க்க முடியாது. திணை மயக்கங்களைப் போலவே வாழ்வில் எத்தனையோ ஊடுருவல்கள், வாழ்வின் மையங்கள் வேறுபடுகின்றன.

4. சங்க காலத்தில் இருந்த மையம் பிறகு வேறுபடுகிறது. வள்ளுவர் காலத்தில் அறம்; இளங்கோவுக்கு ஊழ்வினை; மணிமேகலையில் இன்னொன்று. பிறகு வாழ்வின் மையம் கடவுள் / பக்தி. இன்று வாழ்வுக்கு எது மையம். சிலருக்கு அரசியல், சிலருக்கு மொழி இன்னும் பலருக்கு வெவ்வேறு. இவற்றை ஆழமாகப் பார்க்கவும் வேண்டும். விடுதலைதான் இன்று வாழ்வின் மையம்; சமதர்மம் என்பதுவும் வாழ்வின் மையம்.

தொல்காப்பியர் நிலமும் பொழுதுமாகிய முதற்பொருள், நிலத்திலும் காலத்திலும் தோன்றுகிற கருப்பொருள் ஆகியவற்றின் பின்புலத்தில் அகத்திணைக்கான உரிப்பொருளை வகுத்தார். புறத்திணை குறித்தும் இவ்வாறு பிறர் செய்திருக்க வேண்டும். இப்படித் தொடர்ந்து இருப்பார்கள் என்றால் வள்ளுவர் காலத்தில் அற உணர்வு மேலோங்குவதற்கான முதற்பொருள் – அதாவது வரலாற்றுச் சூழல், கருப்பொருள் – அதாவது

பொருளியல் சூழல் என்பது குறித்து ஆராய்ந்திருக்க முடியும். குறட்பாக்களில் இவற்றைத் தொகுத்துப் பார்ப்பதற்கான விவரங்கள் இருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் உரிப்பொருள் எது / எவை என்று தீர்மானித்துக் கொண்ட பிறகு இவற்றின் எழுச்சிக்கான வரலாறு மற்றும் பொருளியல் சூழலுக்கான விவரங்கள் எவையென்பதைச் சிலப்பதிகாரத்திலிருந்தே தொகுக்க முடியும்; சிலம்புக்கு வெளியிலும் செல்ல வேண்டியிருக்கும். சமணம், பவுத்தம் ஆகிய சமயங்களிலிருந்தும் விவரங்களைத் தொகுக்கலாம். பக்தி இலக்கியம் முதலியவற்றையும் இப்படித்தான் ஆராயவேண்டும்.

தொல்காப்பியருக்குப் பின் வந்த இலக்கணக்காரர்கள் புதிய வகை இலக்கியத்தின் வடிவங்கள் குறித்துத் தொகுத்தார்கள். உள்ளடக்கம் குறித்து அவர்கள் சொன்னது குறைவு. இவர்களைப் பொருத்தவரை கவிதை என்பதை அணி வகை, யாப்பின் இயக்கத்தினின்றும் கண்டார்கள் என்று சொல்லலாம். சரியாகச் சொல்வதென்றால் இலக்கியம் என்பது இவர்களைப் பொருத்தவரை இறைவனை / வீட்டை அடையும் ஒரு முயற்சி. இலக்கியம் என்பது வாழ்க்கை குறித்த ஆய்வன்று; வரலாறு மற்றும் பொருளியல் சூழலிருந்து கடந்து செல்வதாகிய மனித விடுதலை என்பதன்று இலக்கியத்தின் நோக்கம். இவர்களுக்கு வரலாறு என்ற உணர்வு இல்லை; பொருளியல் என்ற உணர்வும் இல்லை என்று சொல்வதில் தவறில்லை. உலகு மற்றும் வாழ்க்கை குறித்து நாம் இன்று தொகுத்துக் கொள்கிற வரையறைகள் அவர்களிடம் பெரும்பாலும் இல்லை. நமதுலகிலிருந்து வேறுபட்டது அவர்கள் உலகம். அந்த உலகில் அவர்கள் நிம்மதியாகவோ போராட்டத்துடனோ வாழ்ந்தார்கள். அவர்களைப் புரிந்து கொள்வதுதான் இன்று நம் தேவை.

தொல்காப்பியரது இலக்கியம் குறித்த ஆய்வை, முதற்பொருள், கருப்பொருள் முதலியவற்றுக்கு அவர் அழுத்தம் கொடுத்துச் செய்த ஆய்வை இந்த 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில்தான் நம்மால் புரிந்து கொண்டு தொடர முடிந்திருக்கிறது. வரலாறு, பொருளியல், சமூகம் என்ற உணர்வுகள் இந்த நூற்றாண்டில்தான் நமக்கு ஏற்பட்டுள்ளன. இலக்கியம் என்பதைச் சமயம் முதலியவற்றின் ஊடாட்டங்களில் இருந்து பிரித்துப் பார்க்கும் பார்வையும் இந்த நூற்றாண்டில்தான் நமக்கு ஏற்பட்டுள்ளது.

5. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் வரலாறு, பொருளியல் மட்டுமல்லாமல், சமூகவியல் ஆய்வுகள் மேலோங்கி வருகின்றன. மானுடவியல் என்றும் உளவியல் என்றும் விரிவான ஆய்வுகள் தொடர்கின்றன. இவை தவிர அறிவியலில், இயற்பியல் தொடங்கி,

வானவியல், பிரபஞ்சவியல் வரை எத்தனையோ ஆய்வுகள். உயிரியல் முதலிய ஆய்வுகள் இன்று மிகுந்த நுட்பங்களோடு நடைபெறுகிறது. இதுநாள்வரை மனித வாழ்வின் வரையறைகள் என்று கருதப்பட்டவை அனைத்து கேள்விக்கு உள்ளாகின்றன. மெய்யியல் ஆய்வுகள் தொடர்கின்றன. இருத்தலியல் தொடங்கி பின் – நவீனத்துவம் வரை எத்தனையோ விரிவுகளும் விளக்கங்களும்.

இவ்வகை ஆய்வுகளின் ஊடாட்டங்களினோடுதான் இலக்கியம் பற்றி இன்று பேசமுடியும். பழந்தமிழ் இலக்கியங்களையும் இவற்றின் ஊடாட்டத்தோடு இன்றும் கற்கமுடியும். இன்றைய உலகச் சூழலில் தமிழைத், தமிழ் இலக்கியத்தை நிலைநிறுத்த வேண்டுமானால் இவ் வகை ஆய்வுகளின் ஊடாட்டங்களோடுதான் செய் முடியும். வள்ளுவரின் உளவியல், சங்க இலக்கியத்தில் உளவியல் என்றெல்லாம் மேற்போக்கான முறையில் ஆய்வுகள் செய்வதில் நாம் பெருமைப்பட்டுக் கொள்ள முடியாது. தமிழ் இலக்கிய ஆய்வில் புதிய அணுகுமுறைகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழ் இலக்கியம் இடம் தருகிறது என்பதோடு, ஈடு கொடுக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

இயற்கையோடு மட்டுமல்லாமல் பிரபஞ்சத்தோடும் மனிதன் கொண்டுள்ள உறவு இலக்கியத்தில் ஒரு முக்கியக் கூறு. அறவியல் என்று இல்லாமல் இலக்கியம் இயங்க முடியாது. இலக்கியம் என்பதன் இலக்கண வரையறைகளில் இன்னும் எவ்வளவோ அடங்கும்.

6. மேலும் சில

இலக்கியம் குறித்த ஆய்வில் உருவம், உள்ளடக்கம் என்று பேசுவதைக் காட்டிலும், அகவடிவம், புறவடிவம் என்று வரையறை செய்வதில் கூடுதலான பயன் உண்டு. கதை, அதைப்போல நாடகமுறை என்பது புறவடிவம். ஓசை முதலியனவும் புற வடிவத்தில் சேரும். எதுகை, மோனை, யாப்பு என்பன புறவடிவம். காவியம், புராணம் என்பனவும் புறவடிவம். கவிதையின் உள்ளியக்கம் அகவடிவம் என்று சொல்லலாம். முரணியக்கம் இதில் முதன்மையானது. நான், நீ என்ற எதிர்நிலைகள் இதன் ஒரு கூறு. முரணியக்கத்தின் முழுமையான வடிவமாக இதனையே கருத முடியாது. உவமை, உருவகம் என்பன வடிவம், என்பதன் முதற்கூறுகள். இறைச்சி, உள்ளுறை என்பனவும் படிமக்கூறுகள். புறவடிவத்தைக் கடந்து அகத்தினுள் செல்ல வேண்டும். அறம் என்பது கவிதையின் ஒரு முக்கிய உறுப்பு.

அகம், புறம் என்று தொல்காப்பியர் பேசினார். பின்னர் வந்தவர் அறம், பொருள் இன்பம் என்றும், மேலும் வீடு என்றும் பேசினர். அகமும் புறமும் ஒன்றினுள் மற்றது ஊடாடக் கூடியவை. கவிதை குறித்துப் பேசும்பொழுது நோக்கு நிலை அல்லது பார்வை என்பது முக்கியம். எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்க்கிற பார்வைதான் கவிதைக்கான முழுப்பார்வையாக இருக்க முடியும். கவிதை காலத்திற்கொத்தவாறு வாசிப்பவனின் தனி அனுபவத்திற்கு ஒத்ததாக பொருள் தரும். வாசிப்பவனுக்குள்தான் கவிதை நிறைவடைகிறது. வாசிப்பவனுக்கு உள்ளிருக்கும் கவிஞனை / கலைஞனைத் தூண்டுவதில் கவிதை நிறைவு பெறுகிறது. இவ்வாறெல்லாம் கவிதைக்கு என இலக்கணம் கூறலாம். எந்த இலக்கணத்தையும் கடந்து செல்வது கவிதை இயக்கத்தின் முக்கிய குணம்.

3. *தமிழில் புதுக்கவிதை*

1. 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் தமிழ் இலக்கியம் குறித்து ஆய்வுகளும் மதிப்பீடுகளும் தொடர்ந்து வருகின்றன. குறிப்பாகக் கவிதை குறித்தும் பல்வேறு சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன. 1930 –களில் தோன்றிய புதுக்கவிதை 1960 –களுக்குப் பிறகு ஒரு தீவிர இயக்கமாக மாறியது. கவிதை குறித்த சிந்தனைகள் முன் எப்பொழுதும் இல்லாத அளவிற்குத் தீவிரப்பட்டன. தமிழில் மரபுக்கவிதை என்றும், புதுக்கவிதை என்றும் வேறுபாடுகள் எழுந்தன. மரபுக் கவிதை செத்துவிட்டது என்ற குரலும் எழுந்தது. மரபுக்கவிதையோடு புதுக்கவிதையாளர்கள் அறவே தொடர்பு அற்றவராகவும் இருந்தனர். மேற்கிலிருந்து வந்த புதுக்கவிதையை இவர்கள் தழுவிக் கொண்டதோடு மட்டுமல்லாமல், இது மட்டுமே கவிதை என்றும் உரத்துப் பேசினர். தொடர்ந்து விவாதங்கள் எழுந்தன. 1970–களில் புதுக்கவிதை இயக்கம் நிலை பெற்று விட்டது. இன்று பார்க்கும்பொழுது புதுக்கவிதை இயக்கம் கவிதையென்றால் என்ன என்பது குறித்து நமக்குள் ஏற்படுத்திய கிளர்ச்சி தமிழ்க்கவிதைக்கு நன்மையாய் முடிந்திருக்கிறது என்று சொல்ல முடியும்.

2. கவிதை என்றால் என்ன என்பதற்குப் புதுக்கவிதையாளர்கள் தந்த சில வரையறைகளை இங்குத் தொகுத்துக் கொள்ளலாம். கவிதை என்பது மனத்தின் குரல். சத்தம் போட்டுக் கவிதையைப் படிக்க வேண்டியதில்லை. மேடையில் முழங்க வேண்டியதில்லை. அடங்கிய குரலில் ஒலிப்பது கவிதை. குறைந்த அளவு ஓசை இதற்குப் போதும்; எதுகை, மோனை தேவையில்லை; மரபு முறையிலான யாப்பு வடிவங்கள் அவசியமில்லை.

யமகம், திரிபு என்று செய்வது கவிதையாக இருக்க முடியாது. கவிதை பேச்சு மொழியில் அமையலாம். கவிதை என்று சொல்லி உவமைகளையோ உருவகங்களையோ அடுக்க வேண்டாம். கவிதை வரலாற்றையோ சமூகத்தையோ ஏதாவது கொள்கைகளையோ எடுத்துப் பிரச்சாரம் செய்ய வேண்டாம். கவிதை தனி மனிதனின் குரல். கவிதைக்குப் பொருள் சொல்ல வேண்டாம். ஒரு குறிப்பிட்ட பொருளில் கவிதையை அடைக்க வேண்டாம். வாசகனிடம் கவிதையை விட்டு விடுங்கள். கவிதையை அவனே பொருள்படுத்திக் கொள்ளட்டும். குறிப்பிட்ட பொருள் என்பதுகூட கவிதையின் இயக்கத்தைக் குறைப்பதுதான். ஒன்றைப் பல முறை அழுத்திச் சொல்ல வேண்டாம். குறைந்த சொற்களில் இயங்குவது கவிதை.

சொற்களைக் கொண்டு கவிதை செய்கிறோம் என்பதனால் சொற்களில் கவிதை அடைபடுவதில்லை. சொற்களைக் கடந்து இயங்குவது கவிதை. கவிதையில் காட்சி முக்கியம். காட்சிப்படுத்தல் என்பது படிமங்கள் வழியே நடைபெறுகிறது. கவிதையின் அடர்த்தியை தனக்குள் கொண்டது படிமம். கவிதையின் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டு இயங்குவது படிமம். அடி மனத்திலிருந்து ஓர் கண நேரத்தில் வெடிப்பது படிமம். படிமம்தான் கவிதையை நவீனப்படுத்துகிறது. அறிவும் உணர்வும் படிமத்தில் குவிகின்றன. உணர்ச்சிகரமானது கவிதை என்பது உண்மையல்ல.

இவ்வாறெல்லாம் கவிதைக்கு இவர்கள் இலக்கணம் கூறினர். இது புதுக்கவிதை என்றனர். இந்த அடிப்படையில் மரபுக் கவிதையை இவர்கள் ஒதுக்கினர். மரபுக்கவிதைகள் நீதி சொல்கின்றன; ஒன்றை அழகுபடுத்துகின்றன. அரசியலுக்கு இந்தக் கவிதைகள் பயன்படுகின்றன. இன்னும் பலவற்றைச் சொல்லி கவிதையை இவர்கள் புறக்கணித்தனர். கவிதை குறைந்த சொற்களைக் கொண்டு எதுகை, மோனை இவைகளுக்குக் கட்டுப்படாமல் இருக்க வேண்டும் என்ற முறையில் இவர்கள் சங்கக் கவிதைகளைக் குறைந்தளவுக்கேனும் ஏற்றுக் கொண்டனர்.

இவர்களின் பார்வையில் தனி நிலை செய்யுட்கள் மட்டுமே கவிதையாக முடியும். லிரிக்ஸ் (Lyrics) என்று சொல்லப்படும் தனி மனித சார்போடு கூடியவை கவிதையாகலாம். திருக்குறள் நீதி சொல்வதால் கவிதை இல்லை. கம்பர் காவியத்தில் அங்கங்கே சில கவிதைகள் உண்டு. கதை சொல்வது கவிதை ஆகாது. இம் முறையில் நெடுங்காலத் தமிழ்க் கவிதையோடு இவர்களுக்கு உறவு இல்லை. காரைக்கால் அம்மையார் பாடல்களைக் க.நா.சு. வால் கவிதை என்று ஒப்புக் கொள்ள முடிந்தது.

காரணம் அவை மனத்தின் குரல்கள். தமிழ்க்கவிதை மரபிலிருந்து தங்களை வெட்டிக் கொண்ட இவர்கள் கவிதைக்குள் சமயத்தைக் கொண்டு வரவில்லை. எனினும், சமய உணர்வுகளிலிருந்து இவர்கள் முற்றாக விலகவும் இல்லை. இவர்களின் மனக்குரல் எனபது நைந்த குரலாக இருந்தது. மன அவலங்களைக் கவிதைகளில் இவர்கள் வெளிப்படுத்தினார்கள். சங்க இலக்கியத்தின் உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றை இவர்கள் மதித்தனர். காரணம் இவை படிமங்களுக்கு நிகராக இருந்தன.

நாளடைவில் இவர்களில் சிலர் நீண்ட கவிதைகளை எழுதினார்கள். பழைய புராணக் கவிதைகளை நவீன காலக் குரலோடு மறு வார்ப்பு செய்தார்கள். ந. பிச்சமூர்த்தி அவர்களின் உயிர்மகள், காட்டுவாத்து முதலியவை நீண்ட கவிதைகளுக்கு உதாரணங்கள். டி.எஸ். எலியட்டைப் போல பழங் கவிதைக் கூறுகளை அங்கங்கே இணைத்துக் கொண்டு நிகழ் காலச் சிக்கல்களை வைத்து நீண்ட கவிதை எழுதினர். சி. மணியின் கவிதைகள் இவ் வகைப்பட்டவை. நிகழ் காலச் சிக்கல்கள் இவர்கள் கவிதைகளுக்குள் இடம் பெற்றன. நகர வாழ்க்கை ஒரு பெரிய சிக்கல். மனிதன் தனக்குள் இரண்டாகிவிட்டான். உலகத்தோடு இவனால் ஒட்ட முடியவில்லை. தனக்குள் தேடினால் கொஞ்சம் கலை உணர்வு, கொஞ்சம் இயற்கை மட்டும் கிடைக்கிறது. இன்னும் ஆழ்ந்து போனால் இருப்பது சூனியம்.

மரபு முறையில் கவிதை செய்தவர்கள் இன்னும் கடவுளை வைத்துக் கொண்டார்கள்; இயற்கை மிச்சமிருக்கிறது. குழந்தை, தமிழ்த்தாய் பற்றியெல்லாம் இவர்களால் பாட முடியும். இவைகளை ஏற்க மேடைகள் இருக்கின்றன. இவர்களுக்குள் நிகழ் காலம் சிக்கலாய் வெடிக்கவில்லை. தமக்குள் வந்து விட்ட மனச் சிதைவுகளுக்கு இவர்கள் இடம் கொடுக்கவில்லை. தம் மனத்தை இவர்கள் திறந்து பார்த்துக் கொள்ளவில்லை.

நெடுங்காலத் தமிழ்க் கவிதையை மரபுக் கவிதை என்று இவர்கள் பெயர் சொல்லி ஒதுக்கியபொழுது தமிழ் இலக்கியத்தினுள் ஆற்றலோடு தொடர்ந்து வருகிற தமிழ் மரபை இவர்கள் புறக்கணித்தார்கள். தமிழைத் தாய் என்றோ தெய்வம் என்றோ கொண்டாடுவதில் இவர்களுக்கு உடன்பாடில்லை. தமிழ் அரசியலுக்கு இவர்கள் எதிராக இருந்தார்கள். திராவிட இயக்கம் மட்டுமல்லாமல் மார்க்சிய இயக்கமும் இவர்களுக்கு உடன்பாடில்லை. முதலாளியத்தை இவர்கள் கேள்விக்குட்படுத்தவில்லை. நகரத்தில் இவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இருந்தன.

தங்கள் வாழ்க்கைக்கான பொருளியல் ஆதாரங்கள் பற்றி இவர்களுக்குச் சிந்தனை இல்லை. இவர்கள் நடுத்தர மக்கள். இவர்களுக்கு உழைக்கும் மக்களோடு உறவில்லை. இவர்கள் கவிதைகளினுள்ளும் அற உணர்வுகள் இடம் பெற்றன. அறவுணர்ச்சியை இவர்கள் ஒதுக்கவில்லை. மரபுக் கவிதைக்குள் தொடர்கிற அற உணர்வை இவர்கள் பொருட்படுத்தவில்லை. தமிழ் மரபின் ஆற்றல் இவர்களுக்குள் இல்லை.

3. இப்படியே இவர்கள் தொடர்ந்து இருந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. வானம்பாடி இயக்கத்தினர் இவர்களிடமிருந்து கவிதைகளைக் கற்றுக் கொண்டார்கள் என்பது உண்மைதான். வானம்பாடி இயக்கத்திற்கும் இவர்களுக்கும் விவாதங்கள் நடைபெற்றன. கவிதை என்று சொல்லி இவர்கள் எந்தளவுக்கு தங்களைத் தாங்களே குறுக்கிக் கொள்ள முடியும். வாழ்வின் பெரும் பரப்பை, அதன் வீச்சுக்களை இவர்கள் ஒதுக்கிவிடவா முடியும். இவர்களுக்குள் சமூக உணர்வு அறவே இல்லாமல் போய்விட முடியுமா. புறஉலகின் பாதிப்பிலிருந்து இவர்கள் எந்தளவுக்குத் தமக்குள் சுருங்கிவிட முடியும்.

இவர்களுக்குள்ளிருந்தும் தரிசனம் என்ற குரல் ஒலித்தது. இவர்களில் பலருக்கு ஜே.கே.வின் பார்வை உடன்பாடாக இருந்தது. பிரபஞ்சத்தோடு இவர்கள் ஒன்றிவிட முற்பட்டார்கள். இவர்களுக்குள்ளிருந்தே விடுதலைக் குரல் ஒலித்தது. பொருள் அதிகாரம் முதலியவற்றுக்கு வசப்பட்ட வாழ்க்கையிலிருந்து இவர்களும் விடுபடத் துடித்தார்கள். இவர்களுள் சிலரை – பிரமிள், ஆத்மாநாம், ஆனந்த் சு.ரா. முதலியவர்களை – இப்படித்தான் நாம் இனம் காண்கிறோம். இவர்களில் பலருக்குள் தனி மனிதக் குரலே மேலோங்கி ஒலிக்கிறது. இவர்கள் எப்படியோ மார்க்சியத்தை வெறுப்பவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் தம் மனத்திற்குள்ளேயே சுற்றி வருகிறார்கள். சில சமயம் அன்பு என்று பேசுவார்கள். உடம்பிலிருந்து, உலகவியலிலிருந்து தம்மை முற்றாக விடுவித்துக் கொள்வதாகிய உள்ளுணர்விலிருந்து இவர்கள் இன்னும் கவிதை எழுதுகிறார்கள். பிரபஞ்சத்தை முற்றாக ஒதுக்கிவிட்டுக்கூட இவர்கள் உள்மனப் பயணம் செய்வதாகவும் காட்டிக் கொள்கிறார்கள். வரலாறு, சமூகம், மெய்யியல் ஆகியவற்றின் தடங்களை இவர்கள் தமக்குள்ளிலிருந்து வெளியேற்றிக் கொள்ளவும் முனைந்திருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு இவர்களால் என்ன கவிதை செய்ய முடியும்.

4. புதுக்கவிதைக்காரர்களிடமிருந்து கவிதை குறித்த சில இலக்கணங்களைச் சேகரித்துக் கொண்டு நெடுங்காலத் தமிழ்க் கவிதை

நோக்கி இப்பொழுது திரும்பலாம். கவிதை இல்லாமல் நம்மால் வாழ முடியாது. மலர்களைப் போல கவிதையும் மனிதனுக்குள் இயல்பாய் மலர்கிறது. கவிதைக்குள் தரிசனங்கள் செயல்படுகின்றன. பாரதிக்குள் மட்டுமல்லாமல் பாரதிதாசனுக்குள்ளும் தரிசனங்கள் உண்டு. பாரதிதாசனைப் பொருத்தவரை தமிழ்தான் இவருக்கு எல்லாமும். வானம், பூமி, வாழ்க்கை, அன்பு, அறம், வீரம், பெண்மை என்று எல்லாமே இவருக்குத் தமிழ்தான். தரிசனங்களைச் சேகரிப்பது என்றால் வள்ளுவருக்குள்ளும் இளங்கோவுக்குள்ளும் நிறையவே தரிசனங்கள் உள்ளன. வாழ்க்கையின் முழுப் பரப்பும் ஒரு கணத்தில் ஒளியோடு சில உச்சங்களைத் தொடுகின்றன. அந்த உச்சங்களிலிருந்து வாழ்வின் முழுப்பரப்பும் நமக்கு வசப்படுகிறது. கணியன் பூங்குன்றனுக்குள் இப்படி ஒரு தரிசனம். "தென்னவன் தீது இலன் நான் அவன் தன் மகள்" என்று கண்ணகிக்குள் எழுந்தது ஒரு தரிசனம். இங்கெல்லாம் பழமை அழிந்து புதுமை பொலிகிறது. "அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம் செறிதோறும் சேயிழை மாட்டு" என்று வள்ளுவர் கண்டது தரிசனம் அல்லாது வேறு என்ன. ஒரு கணத்தில் ஒரு பேரொளி. பலவும் இங்கு ஒரு புள்ளியில் இணைகின்றன. இத்தகைய தரிசனங்களைத் தமிழ் இலக்கியப் பரப்பில் நாம் நிறையவே காண முடியும்.

ஓர் கணத்தில் நிகழும் தரிசனங்களை மட்டும் சொல்வதாகக் கவிதை இருக்க முடியாது. பாய்ச்சல் என்பது நினைத்தவுடன் நேர்ந்து விடுவதில்லை. பயிற்சி இல்லாமல் பாய்ச்சல் இல்லை. தரையில் நெடுந்தொலைவு ஓடித்தான் பாய்ச்சலை நிகழ்த்த முடியும். கவிதைக்கும் இந்த விதி பொருந்துகிறது.

தொடர்ந்து எழுதிக்கொண்டே செல்லும்பொழுது நமக்குள் செறிவு கூடக் கூட அப்புறம் அந்தக் கணம் வருகிறது, பாய்ச்சல் நிகழ்கிறது. வைரம் உடனே கிடைத்து விடுவதில்லை. மலர்கள் தேவை என்றால் இலைகளும் கிளைகளும் வேரும் மண்ணும் வெளியும் இல்லாமல் கிடைக்காது. வாழ்வியல் அனுபவங்களிலிருந்து கவிதையை மட்டும் தனியே பிழிந்துவிட முடியாது. கல்லும், மண்ணும் சேர்ந்ததுதான் வாழ்க்கை. நூற்றுக்கு நூறு தூய்மையான காற்று வேண்டும் என்றால் அது கிடைக்காது. தூய காற்று உன்னை எரித்து விடும்.

புதுக்கவிதைக்காரர்கள் தந்த படிமம் என்ற கருத்தியல் வழியே இப்பொழுது பழங் கவிதைக்குள் செல்லலாம்.

5. கவிதை என்பதைக் காட்சிப்படுத்த வேண்டும். புலன்களுக்கு அகப்படும் வகைகளில் காட்சிகளைக் கொண்டு கவிதை செய்ய வேண்டும்.

படிமங்கள் தாமே பேசும். படிமங்கள்வழியே என்னவெல்லாம் பெறுகிறோம் என்பதை இடையில் புகுந்து ஒருவர் சொல்ல வேண்டியதில்லை. "இளைதாக முள் மரம் கொல்க" என்பது ஒரு படிமம். "நிலம் புலந்து ஊடிவிடும்" என்பது இன்னொரு படிமம். "உள்ளூரில் பழுத்த மரம்" இன்னொரு படிமம். "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்பதும் ஒரு படிமம். இப்படியே ஏராளமான படிமங்களைத் தமிழ்க் கவிதையிலிருந்து தொகுத்துக் கொள்ளலாம். "தொட்டனைத்தூறும் மணற்கேணி என்று சொன்னவர் கற்றனைத்தூறும் அறிவு என்று கருத்தை எடுத்துச் சொல்லும்பொழுது படிமம் உவமையாய்க் குறைந்து விடுகிறது. உவமையைத் தனியே பிரித்துப் படிமமாக்கினால் அது பல பொருள் உணர்த்தும். இப்படியே தமிழ்க் கவிதையின்மீது நாம் புதுப் பார்வை செலுத்த முடியும்.

6. கவிதையிலிருந்து வரலாறு சமூகம் முதலியவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாது என்று கூறினோம். இயற்கையை மட்டுமல்லாமல், அறம், மெய்யியல் முதலியவற்றையும் பிரித்துப் பார்க்க முடியாது. கடவுள் என்பதுகூட ஒரு உச்சநிலை / உயர்தளம். அதிலிருந்தும் மனித வாழ்க்கையைப் பார்க்கிறோம். எல்லா மனித வாழ்வினுள்ளும் மேலும் பல உச்சங்கள் இருக்கின்றன. தன்னை இழப்பது ஒரு உச்சம். காதலில் மட்டுமல்லாமல், கொடையிலும் அருளிலும் தன்னைக் கரைத்துக் கொள்வது சில உச்சங்கள். இப்படி நெடுங்காலத் தமிழ்க் கவிதையைச் சில உச்சங்களில் குவித்துக் காணமுடியும். இப்படித்தான் தமிழ்மரபை இன்றும் நாம் செரித்துக் கொள்கிறோம். தற்காலத் தமிழ்க் கவிதைக்குள்ளும் தமிழ்மரபு உயிராக, ஆற்றலாக, பேரழகாக விளங்க முடியும். புதுக்கவிதைக்காரர்கள் தமிழ்மரபென்பதை இப்படிப் புரிந்து கொள்ளவில்லை. தனிமனிதர்களாக ஒதுங்கிவிட்ட அவர்கள் தங்களுக்குள் இருந்தே கவிதையைக் கண்டெடுத்தார்கள். சமூகம், வரலாறு முதலியவற்றை ஒதுக்கிய நிலையில் ஆற்றல் மிகுந்த கவிதை இவர்களுக்குள் எப்படிக் கிடைக்கும். தமிழ் மரபு பாரதியினிடம் இந்திய மரபோடு முரண்படாமல் இணைந்திருந்தது. பாரதிக்குள் செயல்பட்ட பேராற்றலை இப்படித்தான் புரிந்து கொள்ளமுடியும். புதுக்கவிதைக்காரர்கள் பாரதியைப் போற்றினார்கள். ஆனால், பாரதியிடம் செயல்பட்ட மரபின் வளத்தை இவர்கள் வாங்கிக் கொள்ளவில்லை. தமிழ்மரபை இவர்கள் உள்வாங்கிக் கொண்டிருப்பார்கள் என்றால் திராவிட இயக்கத்தை மட்டுமல்லாமல், மார்க்சிய இயக்கத்தையும் சரியான பார்வையில் புரிந்து கொண்டிருக்க முடியும். வரலாறு, மெய்யியல் முதலியவற்றிலிருந்து கவிதையைப் பிரித்துப் பார்த்ததன்மூலம், இவர்கள் தமிழ்க் கவிதைக்குச் செய்திருக்கிற நன்மையை நாம் மறுத்துவிடக்கூடாது. கவிதை என்பதன் தனித்தன்மையைக் காண்பதும் தேவைதான்.

4. தமிழுக்குள் பின்-நவீனத்துவம்

1. புதுக்கவிதை இயக்கம் முன் வைத்த கொள்கையை நவீனத்துவம் என்று நம்மால் இனம் காண முடியும். படிமம், தரிசனம் ஆகியவை இப் போக்கின் முதன்மைக் கூறுகளாக இருந்தன. நவீனத்துவம் என்ற போக்குக்கு எண்பதுகள் முதற்கொண்டு தமிழுக்குள் வந்த இன்னொரு இயக்கம் பின்–நவீனத்துவம். மொழியின் உள்ளியக்கத்திலிருந்து வெளிப்பட்ட இந்தப் போக்கு குறிப்பான், குறிப்பீடு, குறி என்று புதிய சில கலைச்சொற்களைத் தமிழுக்குத் தந்ததோடன்றி, இலக்கியத்திற்கு மட்டுமல்லாமல், வாழ்க்கை, வரலாறு, மெய்யியல் முதலிய பல்வகைக் கருத்தோட்டங்களையும் கட்டுடைத்தல் என்ற முறையில் தீவிரமான ஆய்வுக்குட்படுத்தியது.

இலக்கியம் முதலியவற்றினுள் முன்னர் நிலவிய மையங்களைத் தகர்த்தது; சாரம், முழுமை ஆகிய கருத்துக்களை வெளியேற்றியது. நவீனத்துவத்தினுள் மையம் என்பது ஆற்றலோடு செயல்பட்டது. இந்த மையம் என்பது ஒரு வகையான கட்டமைப்பு. இதற்குள் ஆதிக்கம் செயல்படுகிறது. இந்த ஆதிக்கம் சாதி ஆதிக்கமாகவோ மத ஆதிக்கமாகவோ வர்க்க ஆதிக்கமாகவோகூட இருக்கக் கூடும். ஆதிக்கம் எந்த வகையில் செயல்பட்டாலும் பிறர் மீது ஒடுக்குமுறையைத் திணிக்கும். இந்த ஆதிக்கத்தைப் புரட்டிப் போடவேண்டும். மரபுமுறையில் நிலவி வருகிற அறம், அழகியல், ஒழுக்கம், உண்மை முதலியவை தமக்குள் ஆதிக்கத்தைக் கொண்டுள்ளவை. ஆதிக்கத்தை முற்றாகக் களைந்து விடுவதன்மூலமே மனித சுதந்திரம் நமக்கு வாய்க்கும்.

பின்–நவீனத்துவம் முன் வைக்கிற முக்கியமான கூறுகளில் ஒன்று பிரதி. இளங்கோவின் சிலப்பதிகாரம் அவருடைய பிரதி. இதே சிலம்பின் கதை இன்னொருவர் எழுதும்போது அது அவருடைய பிரதி. நான் வாசிக்கும்பொழுது அது என்னுடைய பிரதி. மூலப்பிரதி என்று எதுவும் இல்லை. காலத்திற்கேற்ற படி சிலப்பதிகாரக் கதை வெவ்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. நாட்டார் கலை ஆக்கத்தில் கோவிலன் கதை என்பது அவர்களது பிரதி. இதைப் போலவே 20–ஆம் நூற்றாண்டில் சிலப்பதிகாரம் திரும்பத், திரும்ப புதிய வடிவங்களைப் பெற்றுள்ளது. ஆய்வாளர்கள் என்பவர்களும் தங்களுக்குரிய பிரதியைத்தான் எடுத்துக் கொள்கிறார்கள். வாசிப்பவனுக்குள்ளும் ஒரு கலைஞன் இருக்கிறான். தான் சேகரித்துக் கொண்ட வாழ்வியல் அனுபவங்களின் வழியேதான் அவன் எந்த இலக்கியத்தையும் வாசிக்க முடியும். இப்படியேதான் வரலாறு, மெய்யியல் முதலியவற்றையும் பிரதி என்ற வகையில் வாசகன் பொருள்படுத்துகிறான்.

2. இலக்கியங்களைப் பொருள்படுத்தும் வகையில் தமிழ் இலக்கணக் காரர்கள் பொருள்கோள் என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். சிலம்பின் கதை சாத்தனார் கையில் சற்று வேறு வடிவம் எடுக்கிறது. வால்மீகி இராமாயணத்திலிருந்து தமிழ்ச் சூழலுக்கு ஒத்தமுறையில் கம்பர் எத்தனையோ மாற்றங்களைச் செய்திருக்கிறார். வள்ளுவர் அறம் தொகுத்தது போலவே நாலடியார் முதலிய நூல்களும் தன் தேவைக்கு ஒத்தபடி அறங்களைத் தொகுத்துள்ளன. புறத்திணை இலக்கணம் என்று தொல்காப்பியர் கூறுவது சிலப்பதிகாரத்தில் வேறுபட்டிருக்கிறது. முதல், கரு, உரி என்ற மூன்றனுள் உரிப்பொருளுக்கு முதன்மையா முதல், கரு என்பனவற்றுக்கு முதன்மையா என்ற முறையில் கருத்து வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. இவற்றையெல்லாம் வாசிப்பு / பிரதி என்ற முறையில் தமிழ் இலக்கணக்காரர்கள் பொருள்கோள் என்று கொள்ளவில்லை. ஒரு வேளை இவை கருத்து வேறுபாடுகள் என்று கருதப்பட்டிருக்கலாம். அதே சமயம் எது மூலம் அல்லது உண்மை என்றெல்லாம் தமிழ் வாசகர்கள் தமக்குள் சிக்கலை எழுப்பிக் கொண்டு இருந்திருப்பார்கள். இளங்கோ சிலம்பின் மூலக் கருத்துக்கள் என்று எதை / எவற்றைக் கருதினார். வள்ளுவர் கூறும் உண்மைப் பொருள் எது என்று தொடங்கி எத்தனையோ ஆய்வுகள் 20-ஆம் நூற்றாண்டிலும் இன்றுவரை தொடர்கின்றன. இத்தகைய ஆய்வு முறையைப் பின்-நவீனத்துவம் மறுப்பது மட்டுமல்ல, கேலியும் செய்கிறது. இலக்கியத் தரம் என்பதைப் பின்-நவீனத்துவம் மறுக்கிறது. விளம்பரம் என்பதும்கூட ஒரு வகையில் இலக்கியம்தான் என்று கூறுகிறது. "கவிதை இருக்கிறது, கவிஞன் இறந்துவிட்டான்" என்பது பின்-நவீனத்துவம் முன்வைக்கும் ஒரு முக்கியமான கூற்று. கவிதை என்பது உற்பத்தி; படைப்பு அன்று என்கிறது பின்-நவீனத்துவம். சைவம் தொடங்கி மார்க்சியம் உள்பட எந்தத் தத்துவமும் முழுமையானது அன்று என்கிறது பின்-நவீனத்துவம். பின்நவீனத்துவ நோக்கில் நெடுங்காலத் தமிழ்க் கவிதையை ஆய்வது நமக்குப் பெரும் பயன் தரும்.

3. தமிழ் இலக்கியத்தினுள் காலந்தோறும் நிலவிவந்துள்ள சாதிய முறை தமிழ் இலக்கியத்தைப் பாதித்த முக்கியமான கூறு. இந்தச் சாதிய முறைக்குள் தங்கியிருப்பது பார்ப்பனியம். மன்னர்களுக்குள் தெய்வத் தன்மையைக் கண்டது பார்ப்பனியம். சங்க இலக்கியத்தைச் சான்றோர் / உயர்ந்தோர் இலக்கியம் என்று குறிப்பிடும்பொழுது இதற்குள் நிலவும் ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். தலை மக்களது காதலைச் சங்க இலக்கியம் போற்றியது. அடியவர் முதலியவர்களின் காதலை மதிக்கவில்லை. வள்ளுவர் குறிப்பிடும் அறம் உயர்ந்தோர்க்குரிய அறம். உயர்ந்தோர் தம் பொருளியல் கட்டமைப்புக்கு உழைக்கும் மக்களை

அடிமைப்படுத்தி வைத்தனர். பிறப்பில் எல்லோரும் சமம்தான். ஆனால், தொழில் முறையில் வேற்றுமைகளும் ஏற்றத் தாழ்வுகளும் ஏற்பட்டு விடுகின்றன. பார்ப்பானுக்கு அவனது ஒழுக்கம் / வேத நெறி முக்கியம். இவர்கள் அறவோராக இருந்ததில்லை. இவர்களை அந்தணர் என்று வள்ளுவர் போற்றுகிறார். இவ் வகையில் வள்ளுவரின் அறம் சமுதாயத்தில் உயர்ந்தவர்களுக்கு உழைக்கும் மக்களை அடிமைப் படுத்துகிறது. இப்படி வள்ளுவருக்குள் பார்ப்பனியம் செயல்படுகிறது.

இவ்வாறெல்லாம் பின்–நவீனத்துவ போக்கினர் பலவற்றைச் சொல்ல முடியும். பெரியபுராணம் இவர்கள் பார்வையில் சாதிய வகையில் உழைக்கும் மக்களை ஒடுக்கும் புராணம். தமிழ் இலக்கியம் தொடக்கம் முதலே பெண்களை ஆண்களுக்கு நிகரானவர் எனக் கருதவில்லை. பெண்ணுக்குக் கற்பை விதித்ததன்மூலம் பெண்களை அடிமைப் படுத்தினார்கள். பெண் இன்ப நுகர்ச்சிக்கு உரியவள். வள்ளுவர் பெண்ணைப் போற்றவில்லை. இராமன் சீதையைத் தீக்குளிக்க வைத்தான். இப்படி எல்லாம் பின்–நவீனத்துவவாதிகள் விவாதிக்கிறார்கள். இவ் வகையில் பின்–நவீனத்துவத்தின் குரல் தலித்தியம் என்றும் பெண்ணியம் என்றும் பேசுபவர்களுக்கு அணுசரணையாக இருக்கிறது. ஒரு தலித் தமிழ் இலக்கியத்தை மாசு மருவற்ற இலக்கியம் எனப் போற்ற முடியாது. அதே போல, மரபு நெறிப்பட்ட ஒரு பெண் தமிழ் இலக்கியத்தை எந்த அளவுக்கு போற்ற முடியுமோ அந்த அளவுக்கு, விடுதலை வேண்டுகிற பெண் தமிழ் இலக்கியத்தைக் குறைத்துத்தான் பேச முடியும். இவர்களிடம் தமிழ் இலக்கியம் மரியாதை பெறுவதில்லை. இத்தகைய போக்கிலிருந்து தமிழ் இலக்கியத்தைக் காப்பாற்றுவது எந்தளவுக்குச் சாத்தியம் என்பது புலப்படவில்லை. பிளேட்டோ அடிமைகளை மனிதர்களாகவே கருதவில்லை என்று கூறுகின்றனர். உடைமை முறை என்பது நீதியானது என்ற கருத்து இந்த நூற்றாண்டில்தான் கேள்விக்குரியதாக மாறியிருக்கிறது. இன்றும்கூட அரசு இல்லாமல் முடியாது என்ற கருத்துத்தான் நிலவுகிறது. ஆண் ஆதிக்கம், சாதி ஆதிக்கம் முதலிய கருத்துக்களும் அன்று உணரப்படவில்லை. இதற்காக அவர்களை நாம் நிந்திக்கமுடியாது. புதிய நோக்கில் தமிழ் இலக்கியத்தைப் புரட்டிப் பார்ப்பது நமக்கு இன்னும் கூடுதலான விடுதலையை நல்கும்.

4. தமிழ் இலக்கியத்தினுள் ஆதிக்கக்குரல் மேம்பட்டதாக இருந்தபோதிலும், இதற்கு எதிரான குரலையும் தொடக்க காலம் முதலே தமிழ் இலக்கியத்தினுள் இனம் காண முடியும். அகத்திணை இலக்கியங்களில் நாம் காணும் தலைவி தேவைப்படும்பொழுதெல்லாம் தலைவனுக்கெதிராகத் தன் நிலைப்பாட்டை வற்புறுத்தாமல் இல்லை.

தலைமக்களுக்கு உரிய அன்பின் ஐந்திணை என்ற இலக்கணம், கலித்தொகையில் போற்றப்படவில்லை. மூவேந்தர்களைப் போற்றுவதாகிய புறநானூற்றுப் பாடல்களில் வேளிர்களோடு சிறுகுடித் தலைவர்களும் பாராட்டப்படுகின்றனர். சிறியோரை இகழ்தலும் இலமே என்று கணியன் பாடி உள்ளதை நாம் கருத்தில் கொள்ளமுடியும்.

வள்ளுவருக்குள் சமத்துவம் என்பதன் குரல் ஓங்கி ஒலிக்கத்தான் செய்கிறது. மேல் இருப்பதானாலேயே ஒருவர் மேலவர் ஆகமுடியாது. கீழ் இருப்பதனாலேயே ஒருவர் கீழவர் ஆக இருக்கவும் முடியாது. இப்படிச் சொல்கிறார் வள்ளுவர். கண்ணகி மன்னனையும் கடவுளரையும் கேள்விக்குட்படுத்தினாள். கணவனின் குற்றத்தையும் எடுத்துரைத்தாள். மணிமேகலையின் தவப்பெருமையைச் சாத்தனார் பாடினார். இப்படி எல்லாம் தமிழ் இலக்கியத்தை வாசிப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது. தமிழ்ச் சமூகத்தின் மரபுக்குள் இயங்கிவருகிற ஆற்றலை நாம் இகழ வேண்டியதில்லை. இடைவிடாமல் பார்ப்பனியம் என்று சொல்லித் தமிழ் இலக்கிய மரபைக் கறைப்படுத்த வேண்டியதில்லை. மதத்தினுள்ளும் மறைந்து கிடக்கிற விடுதலைக் குரலை நாம் உயிர்ப்பிக்க முடியும்.

5. *மார்க்சியப் பார்வையில் தமிழ் இலக்கியம்*

1. 20-ஆம் நூற்றாண்டுச் சூழலில் தமிழ் இலக்கிய ஆய்வில் ஈடுபட்ட இயக்கங்கள் என்பனவற்றில் திராவிட இயக்கத்தை முதன்மையாகச் சொல்லலாம். புலமையாளர்கள் ஏற்கனவே தமிழின் தொன்மை, மேன்மை முதலியவற்றை நிறுவியிருந்தனர். இந்த ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழர் நலன்களை முன்னிலைப்படுத்தும் முறையில் திராவிட இயக்கம் செயல்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை. தமிழ் இலக்கியத்தை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சென்றதில் இவர்களின் பங்கு குறிப்பிடத் தகுந்தது. கிரேக்க நாகரிகம் முதலியவற்றோடு தமிழர் கொண்டிருந்த உறவுகளை இவர்கள் எடுத்துரைத்தனர். சேரன் செங்குட்டுவன் முதலியவர்களின் படையெடுப்புக்களைச் சிறப்பித்துப் பேசினர்.

தங்களுக்கும் ஒரு தனி நாகரிகம் இருந்தது என்பதை எடுத்துரைத்தனர். மக்களுக்குத் தமிழ் உணர்வை ஏற்படுத்தியதில் இவர்களின் பங்களிப்பைக் குறைத்துச் சொல்ல முடியாது. தமிழனுக்குச் சாதி இல்லை, மதம் இல்லை என்றெல்லாம் இவர்கள் அழுத்திச் சொல்லியதன்மூலம், தமிழனுக்குச் சாதி வேண்டாம், மதம் வேண்டாம்

என்று கற்பித்தனர். உலகியல் வாழ்வுக்கு மனித நேயத்திற்கும் அழுத்தம் தந்தனர். தமிழ்ச் சமூகம் தன்னை ஆரியத்திற்கு எதிராகத் திரட்டிக் கொள்வதில் இவர்கள் பணிபோற்றத்தக்கது. திராவிட இயக்கத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் இலக்கிய ஆய்வில், மார்க்சியர் தங்கள் முத்திரையைப் பதித்தனர்.

2. 20–ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கிய ஆய்வுகளுக்குள் மார்க்சியம் நுழைந்ததன் விளைவுகள் என்று பலவற்றைச் சொல்ல முடியும். தமிழ் கல்வியாளர் மத்தியில் அது வரை நடைபெற்று வந்த கால ஆராய்ச்சிகள் வரலாறு என்ற முறையில் கூடியவரை மார்க்சிய வரையறைகளோடு இயங்கின. வர்க்கப் போராட்டம், நிலமானிய சமூகம், முதலாளியச் சமூகம், புராதன பொதுவுடமைச் சமூகம் என்ற கருத்தியல் தமிழ் இலக்கிய ஆய்வுக்குள் நுழைந்தன. வர்க்கப் போராட்டம்தான் சமூக இயக்கத்தை ஊக்குவிக்கிறது என்ற கருத்து முன்னுக்கு வந்தது. வரலாறு என்பது குறித்த உணர்வு தமிழ் இலக்கியவாதிகள் மத்தியில் பரவலாயிற்று.

மார்க்சியம் முன் வைத்த வரையறைகள் என்பவை துல்லியமாக அமையவில்லை என்பதையும் இங்கு உடனடியாக நாம் சொல்ல வேண்டும். திராவிட இயக்க அரசியலோடு இவர்கள் முரண்பட்டு நின்றதன் பயனாகவும் இவர்களின் வரையறைகளில் குறைகள் ஏற்பட்டன. சோவியத் ஒன்றியத்தில் முன்னுக்கு வந்த மார்க்சியத்தின் குறை எனவும் இந்தப் போக்கைச் சுட்டிக் காட்ட முடியும். தமிழன் தொன்மை, மேன்மை முதலியவற்றை இவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. புலமையாளர்கள் தமிழ் இலக்கியத்தின் காலத்தை முன்னுக்குத்தள்ள, இவர்கள் பின்னுக்குத் தள்ளினர். சங்ககாலத்தைப் பொற்காலம் என போற்றியவர்களை இவர்கள் மறுத்தனர். வள்ளுவர், இளங்கோ முதலியவர்களை வணிக வர்க்கத்தினர் என்றனர். இந்திய தேசியத்தை போற்றிய இவர்களால் தமிழ் மக்களின் தமிழ்த்தேசிய இனக் கோரிக்கையை ஏற்க முடியவில்லை. இலக்கியத்திற்குள் இவர்கள் வர்க்கம், வரலாறு ஆகியவற்றைக் கண்டனர் என்றாலும், அதன் இலக்கிய ஆய்வைத் தம் சமகால அரசியலின் தேவைக்கு இவர்கள் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் முன் வைத்த யதார்த்த வாதம் என்ற கருத்து நாளடைவில் கேள்விக்குள்ளாயிற்று. தமிழ்ச் சமூகத்தில் வர்க்கப் பிரிவுகள் துல்லியமாக இல்லை. தொழிலாளர் இயக்கம் தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டதன்மூலம் உழவர்களுக்கு அனுசரணையாக இல்லை. சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் தகர்ந்த நிலையில் தொழிலாளர் இயக்கமும் சோர்வுக்குள்ளாயிற்று. இப்பொழுதுதான் தமிழ்ச் சமயங்கள் குறித்த ஆய்வுக்குள் நுழைகின்றனர்.

3. ஆதிச் சமூகம் என்பது முதற்கொண்டே பிறகு உருவான ஒப்புரவு முதலிய கருத்தியல்கள் சமதர்மம் என்ற உள்ளடக்கத்தைப் பெற்றிருந்தன. வள்ளுவருக்குள்ளும் இளங்கோவுக்குள்ளும் இத்தகைய சமதர்ம உணர்வு இயங்குகிறது. கம்பருக்குள்ளும் இதைக் காண முடியும். சமயங்களி னுள்ளும் கடவுள் என்ற கருத்தாக்கத்தினுள் இத்தகைய ஊடாட்டத்தைக் காண முடியும். மார்க்சியருக்கு இத்தகைய பார்வை உவப்பாக இல்லை.

கைலாசபதி அவர்கள் சங்க காலத்திற்குள் வீர யுகம் என்பதைக் கண்டார். சங்க காலத்திற்கு முன் நிலவியது வீர யுகம் என்ற கருத்தை மார்க்சியர் அல்லாத சில ஆய்வாளர்கள் நிறுவினர். இது மட்டுமல்ல வீர யுகம் குறித்த வர்க்க ஆய்வு கைலாசபதி அவர்களிடம் இல்லை. தனி உடமை, அரசு ஆகியவற்றோடு தொடங்கிய வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் நிலவிய ஆதிப் பொதுமைச் சமூகத்தின் ஆற்றல்மிக்கப் பண்பாடுகள் மற்றும் தன் சமூக அமைப்பைக் காப்பதற்காக உயிருக்குத் துணிந்து போராடிய வீரர்களின் காலம்தான் வீர யுகம். சங்க இலக்கியத்தினுள் பாரி முதலிய கடைஎழு வள்ளல்களின் சாவு முதலிய நிகழ்வுகளில் இத்தகைய சில கூறுகளை நாம் காண்கிறோம். இந்தக் கூறுகள்தான் வள்ளுவர் முதலியவர்களுக்குள்ளும் தொடர்கின்றன. இதன் இன்னொரு எழுச்சியைத்தான் சித்தர் பாடல்கள் சுட்டுகின்றன. இத்தகைய ஆய்வுகள் கட்சி மார்க்சியர்களுக்கு வெறுப்பைத் தந்தன.

எனினும், தமிழ் இலக்கிய ஆய்வை மக்கள்மயப்படுத்தியதில் மார்க்சியரின் பங்களிப்பு முதன்மையானது என்பதில் அய்யமில்லை. கம்பர், வள்ளுவர், இளங்கோ, பாரதியார் முதலியவர்களை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவந்ததில் ஜீவா அவர்களின் பங்களிப்பை நாம் என்றும் மறக்க இயலாது. அதைப் போலவே நாட்டார் கலை இலக்கியங்களை மக்களின் கலை இலக்கியங்கள் என இனம் கண்டுரைத்த பேரா. வானமாமலை அவர்களையும் நாம் மறக்கமுடியாது. மார்க்சிய ஆய்வு தமிழ் இலக்கியத்தின் வளத்தை மேம்படுத்தியது என்பதிலும் அய்யமில்லை. தமிழ் இலக்கியத்தில் தமிழ் பண்பாட்டின் மேன்மை, தமிழ் வரலாற்றின் தொன்மை என்றெல்லாம் பேசி பெருமித உணர்வை வளர்த்து இறுதியில் அதை ஆணவமாகவும், அறியாமையாகவும் மாற்றிய தமிழ்க் கல்வியாளர்களின் போக்குக்கு மார்க்சியர் எதிரிடையாகச் செயல்பட்டனர். உலகத்தோடு தமிழர்களை ஒன்ற வைக்க முனைந்தனர். சமதர்மம் என்ற நோக்கை தமிழ்மக்கள் மத்தியில் ஊன்ற முற்பட்டனர். மார்க்சியத்தின் துணை இல்லாமல் தமிழ் இலக்கியத்தின் ஆய்வை முன்எடுத்துச் செல்ல இயலாது என்று இவர்கள் நிறுவி உள்ளனர். தமிழ் இலக்கிய ஆய்வு

இவர்களின் நெஞ்சில் அன்பையும் அருளையும் கூடுதலாக ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால், இவர்கள் தம் நெஞ்சைத் தமிழ் இலக்கியத்திற்குத் திறந்து கொடுக்கவில்லை. ஆகவே, இவர்கள் தமிழ் இலக்கியத்தை நேயத்தோடு அணுக முடியவில்லை. தமிழ் இலக்கிய ஆய்வால் மார்க்சியமும் செழுமை பெறும் என்பதை இவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை.

4. தமிழ் இலக்கிய ஆய்வை இவர்கள் புதிய தடங்களில் செலுத்தினர். சங்ககாலம் பொற்காலம் அன்று என்று இவர்கள் கூறியபோது, சங்ககாலத்திலும், அடுத்துவந்த காலங்களிலும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிய கொடிய வறுமை மற்றும் போர்க் கொடுமைகளை எடுத்துரைத்தனர். மன்னர் ஆட்சியை இவர்களால் பெருமைப்படுத்த முடியாது; படையெடுப்புக்களைப் போற்ற முடியாது. தமிழ் இனம் மட்டும்தான் உலகின் தலைசிறந்த இனம் என்று சொல்வதில் உள்ள தற்பெருமையை இவர்களால் ஒப்புக் கொள்ள முடிவதில்லை. இவ்வாறு எல்லாம் இவர்கள் எடுத்துரைத்ததில் திராவிட இயக்க அரசியல் மறுப்பு இருந்தது என்பதில் அய்யமில்லை. அதேசமயம் எந்த ஒரு சமுதாயத்திலும் வறுமைக்கு இடம் இருக்க முடியாது. போர்களும் படையெடுப்புக்களும் தேவை இல்லை.

உலகளவிலான வரலாற்றுப் போக்கிலிருந்து தமிழர் தனித்துச் செல்ல முடியாது. இப்படி எல்லாம் இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்லியதன்மூலம் தமிழ் மக்களின் சமூக உணர்வு, வரலாற்று உணர்வு முதலியவற்றை மேம்படுத்தவும் செய்தனர். கம்பர் தன் காவியம் எழுதிய கால வரலாற்றுச் சூழலை முன்நிறுத்தி முத்தையா அவர்கள் ஓர் உண்மையைச் சுட்டிக் காட்டினார். சோழர்களின் இலங்கை மீதான படையெடுப்பை நியாயப்படுத்தும் போக்கு இராவணன் மீதான இராமன் படையெடுப்பில் உறுதிப்படுகிறது என்றார் முத்தையா.

இதைப்போலவே, சிலப்பதிகாரத்தில் சொல்லப்படும் சேரன் செங்குட்டுவனின் வட நாட்டுப்படை எடுப்புக்கு வரலாற்றில் ஆதாரமில்லை என்பதை மெய்ப்பித்தார். வஞ்சிக்காண்டம் இளங்கோ அடிகள் எழுதியது அல்ல என்றார். கம்பர் காவியம் பற்றிய ஆய்வு தமிழ் உணர்வாளர்களுக்கு உவப்பு அளித்திருக்க முடியும். ஆனால், தங்கள் உவப்பை வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்ள இயலவில்லை. அதேசமயம் சிலப்பதிகாரம் பற்றிய முத்தையாவின் ஆய்வு தமிழ் உணர்வாளர்களைப் புண்படுத்தியிருக்கக் கூடும்.

6. தமிழ் இலக்கியத்தில் பாரதி

1. 20–ஆம் நூற்றாண்டில் தமிழில் பாரதி என்ற பெரும் கவிஞனைக் காண்கிறோம். பாரதியின் எழுச்சி நமக்குப் பெரும் வியப்பாக இருக்கிறது. பாரதி ஒரு சகாப்தம் என்று சொல்லும் அளவுக்கு இன்றளவும் கவிதை என்ற முறையில் அல்லாமல், சமூகஉணர்வு முதலிய பலதளங்களிலும் நம்மைப் பாதிப்பவனாக இருக்கிறார். பாரதி எங்கிருந்து தமிழ்க் கவிதை கற்றார் என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு விடை தேடுகிறோம்.

எட்டயபுரத்தில் அரசவைக் கவிஞர்களோடு தன் தந்தையார் வழியாக பாரதிக்கு உறவு இருந்தது. அரசவைக் கவிஞர்கள் யமகம், திரிபு, அந்தாதி என்ற முறையில் கவிதை எழுதக் கூடியவர்கள். இவர்களிடமிருந்து பாரதி நாளடைவில் விலகி இருந்தார். பாரதிக்கு முன்னர் வாழ்ந்த வள்ளலார், கோபாலகிருஷ்ண பாரதியார் ஆகியவர்களின்வழியே கவிதையோடு பாரதி தமிழ்க்கவிதையோடு உறவு கொண்டார். வள்ளலாரும் கோபாலகிருஷ்ண பாரதியாரும் இருபதாம் நூற்றாண்டின் உணர்வுக்கு நெருக்கமாக வந்தவர்கள். உ.வே.சா. முதலிய பெரும் புலவர்களைப் பாரதி அறிந்திருந்தார். உ.வே.சா.வின் மூலம் தமிழின் எழுச்சியை பாரதி கொண்டாடினார். சங்க இலக்கியம் குறித்துப் பாரதிக்குத் தெரியாது அல்லது சங்க இலக்கியம் குறித்து உயர்ந்த எண்ணம் இல்லை. வள்ளுவரோடும் இளங்கோவோடும் கம்பனோடும் பாரதி கொண்ட உறவு அற்புதமானது. தமிழின் அமரத்துவத்திற்கு இவர்கள் ஆதாரம் என்ற பாரதியின் கருத்து தமிழ்க் கவிதையை மட்டுமல்லாமல் தமிழ் அறத்தின் ஆழத்தையும் பாரதி புரிந்து கொண்டிருந்தார் என்பதைப் புலப்படுத்துகிறது.

பாரதி சமஸ்கிருதம், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளோடும் உறவு கொண்டிருந்தார். இராமாயணம், மகாபாரதம் முதலிய பேரிலக்கியங்கள் பாரதியைப் பாதித்திருந்தன. விடுதலை இயக்கத்தின் வழியே பாரதி இந்தியாவைத் தன் தேசமாக வரித்துக் கொண்டார். இந்தியாவை அன்னை எனக் கொண்டாடினார். முப்பத்து முக்கோடி முகமுடையவளென்றும் எல்லா மொழிகளும் இவள் நாவில் தவழ்ந்தன என்றும் பாரதி கண்டறிந்தார். தேசியம், விடுதலை என்ற பேருணர்வுகளைத் தமிழ்க் கவிதைக்குள் முதல் முறையாகக் கொண்டு வந்தவர் பாரதி. பெண்ணுரிமை போன்ற பேருணர்வையும் பாரதி தனக்குள் வரித்துக் கொண்டார். உலகளவில் விரிந்த பார்வை உடையவர் பாரதி. இரஷ்யாவின் விடுதலையைப் பாரதி பாராட்டினார்; சமதர்ம உணர்வைத் தமிழுக்கு உரிமையாக்கினார்.

பிரெஞ்சுப் புரட்சி தோற்றுவித்த சுதந்திரம் முதலிய உணர்வுகளைப் பாரதி தனக்குள் வரித்துக்கொண்டார். ஷெல்லியிடமிருந்து பாரதி புரட்சி உணர்வையும் கவிதையையும் பற்றிக் கொண்டார். அறிவே தெய்வம் என்ற பகுத்தறிவுக்கும் பாரதி உரியவர். அனைத்து மதங்களுக்கு இடையிலும் சமத்துவம் அறிந்தவர். பாரதியின்மூலம் வெளிப்பட்ட கவிதை என்ற பேருணர்வுக்கு ஆழ்வார் பாடல்களிலிருந்தும் ஆதாரம் காணலாம். பாஞ்சாலியின் கதையை விடுதலைக்குரிய கதையாக பாரதி மாற்றினார்.

2. பாரதியின்மூலம் வெளிப்பட்ட பேருணர்வுகளும் கவிதைகளும் தமிழ்க் கவிதையின் நெடுங்கால வரலாற்றில் அது வரை இல்லாதவை. வள்ளுவர் முதலியவர்களை வேறெந்த புலவர் மற்றும் அறிஞரைக் காட்டிலும் சரியாக இனம் காணும் ஆற்றல் பாரதிக்கிருந்தது. கண்ணன் பாட்டின்மூலம் உலகத்தோடும், மனிதர்களோடும் நாம் கொள்ளும் உறவுகளைத்தான் பாரதி பாடினார். குயில் பாட்டு பன்முகப் பொருள்களைத் தனக்குள் கொண்டது. இயற்கையின் மீது பாரதி கொண்ட நேயம் அளப்பரியது. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து முதலிய மரபுவழி வந்த சந்தங்களுக்குப் பாரதி சொந்தக்காரர். எங்கிருந்து பாரதி கவிதை கற்றார் என்று தொடர்ந்து தேடும்பொழுது, மக்களிடம் இருந்தும் இயற்கையிடமிருந்தும் விடுதலை இயக்கத்திலிருந்தும் என்று பலவற்றைச் சொல்ல முடியும். பெண்களிடமிருந்து, குழந்தைகளிடமிருந்து, காந்தியிடமிருந்து, வ.உ.சி.யிடமிருந்து கவிதை கற்றார். இவர்களின் வழியில் வெளிப்படும் உணர்வுகள், பேருணர்வுகள் கவிதைக்குரியவை; கவித்துவ வீச்சுடையவை. பாரதியின் பார்வைபடாதது உலகில் எதுவும் இல்லை என்று சொல்ல முடியும். எல்லோருடைய நெஞ்சினுள்ளும் பாரதி இயங்கினார். அங்கிருந்தெல்லாம் கவிதைகளைப் பாரதி கற்றார். இப்படித்தான் பாரதி உருவானார். தமிழ் வரலாற்றில் பாரதி ஒரு தனிப் பெரும் சாதனையாளர்.

3. பாரதியின் சமகாலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் பாரதியைப் புரிந்து கொள்ளாததில் வியப்பில்லை. கவிதை என்பது அதன் இயக்கத்தில் மக்களோடு தொடர்புடையது; தேசத்தோடு தொடர்புடையது; வாழும் காலத்தோடு தொடர்புடையது. இவற்றோடு கொள்ளும் உறவிலிருந்துதான் நாம் கவிதை கற்றுக் கொள்கிறோம். மக்களின் வாழ்வுக்குள் கவிதை உண்டு. அவர்களின் போராட்டங்களில் கவிதை உண்டு. உயிரினங்களோடு மக்கள் கொள்ளும் உறவில் கவிதைக்கு இடமுண்டு. அவர்கள் மத்தியில் புழங்கும் பழமொழிகளில் கவிதையின் செறிவை நாம் காண முடியும். உள்ளுறை என்றும் இறைச்சி என்றும் உயர் மட்டத்தில் வைத்து நாம் இனம் காணுகிற கவிதை இயக்கத்தை மக்களிடம் காண

முடியும். மக்கள் மத்தியில் இராமர்களும் சீதைகளும் வாழ்கின்றனர். இராவணர்களின் கொடுமைக்கு எதிராக இவர்களும் போராடுகின்றனர். காதல் இல்லாத உயிர் குலம் எங்குண்டு. கருணை உள்ள மனிதர்களை நாம் அங்கங்கே காணுகிறோம். மக்கள் உழைக்கிறார்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். இங்கிருந்தெல்லாம்தான் நாம் கவிதை கற்கிறோம். மக்களுக்கு விடுதலை வேண்டும். மக்களுக்குள்ளும் தெய்வங்கள் உண்டு. தெய்வங்களையும் மக்கள் தம்மைப் போலவே கருதி வழிபடுகிறார்கள். இவர்களின் இயற்கை நேசம் பெரியது. மக்களோடு பழகி இத்தகைய உணர்வுகளுக்கெல்லாம் வசப்பட்ட நிலையில்தான் தமிழ் இலக்கியத்தையும் நேயத்தோடு புரிந்து கொள்கிறோம். தேசம் என்பதும், வரலாறு என்பதும் தொடர்ந்து கற்கும்போது எல்லாவற்றையும் கூடுதலாகப் புரிந்து கொள்கிறோம். இப்படித்தான் நாம் திறனாய்வுகளும் செய்கிறோம்.

பாரதியின் சம காலத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுக்கு இடைக் காலத்து இலக்கியத்தோடு இருந்த அளவுக்கு உறவுகள் மக்களோடு இல்லை; தேசத்தோடு இல்லை என்று நாம் சொல்ல முடியும். நாளடைவில் விடுதலை உணர்வு முதலியவற்றைப் பெற்றவர்கள்தான் பாரதியைப் புரிந்து கொண்டார்கள்; பாராட்டினார்கள். வையாபுரிப்பிள்ளை முதலியவர்களை இந்த வகையில் குறிப்பிடலாம். சமூக உணர்வில் செறிந்திருந்ததன் காரணமாகத்தான் பாரதி வள்ளுவர் முதலியவர்களை இனம் கண்டுகொண்டார். பாரதியைப் பார்ப்பனர் என்று ஒதுக்கிவிட இயலாது. பார்ப்பனியத்தினுள்ளும் வலது சாரி மற்றும் இடது சாரி என்ற இரு வகைப் போக்குகள் உள்ளன. புரோகிதம், பூணூல், சாதி என்பனவற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்பவர்கள் வலது சாரிகள். எல்லாமே பிரமத்தின் வடிவங்கள்; இவற்றிற்கிடையில் ஏற்றத் தாழ்வுக்கு இடம் இல்லை; சாதி உயர்வு சொல்வதற்கு அர்த்தம் இல்லை; எல்லா மக்களும் சமம் என்ற முறையில் சமத்துவத்தில்தான் பிரம்மம் தங்கியிருக்கும். இது இடது சாரிப் போக்கு. பாரதிக்குள் இயங்கிய பார்ப்பனியத்தை இப்படித்தான் பொருள்படுத்த முடியும். தமிழ்ச்சாதியின் மேன்மை குறித்துப் பாரதி கொண்ட ஈடுபாட்டுக்கு அளவு சொல்ல முடியாது. தமிழ்த் தேசியம் என்ற பேருணர்வுக்கும் பாரதியிடத்தில் இடம் உண்டு. தமிழச் சாதியின் அமரத்துவத்தை வள்ளுவர் முதலியவர்களைப் போல பாரதியும் வெளிப்படுத்தினார். தமிழின் பெருங் கவிஞர்கள் வரிசையில் பாரதி இயல்பாகவே இணைகிறார்.

4. இன்று நமக்குள் இருக்கிற தமிழ் உணர்வுக்கும் சமூக உணர்வுக்கும் இலக்கிய உணர்வுக்கும் உடனடியான மூலம் / ஆதி யார் என்று தேடினால், பாரதிதாசனோடு பாரதியாரைச் சொல்ல முடியும். பாரதியாரின் மூலம்தான்

முதல் முறையாக நாம் உலகத்தோடு, உலகக் கவிதையோடு சமதர்மத்தோடு உறவு கொள்கிறோம். பாரதியின் மூலம்தான் சமதர்மம் என்ற பேருணர்வை நாம் முதல்முறையாகப் பெற்றுக் கொள்கிறோம். தமிழ்ச்சாதியின் அமரத்துவம் என்ற அற்புதம் குறித்துப் பாரதிக்கு இருந்த பேருணர்வு இன்றும்கூட நமக்கு வாய்க்கவில்லை என்று சொல்ல முடியும். வள்ளுவரையும் இளங்கோவையும் கம்பரையும் தோற்றுவித்தது இந்தத் தமிழ் மண்; தமிழ் வரலாறு. வள்ளுவரின் அறஉணர்வும் இளங்கோவின் புரட்சிகர உணர்வும் இந்த மண்ணிலிருந்து விளைந்தவை.

கம்பர் கண்ட தெய்வம் மனிதனுக்குள்ளிருந்து, தமிழ் மண்ணிலிருந்து விளைந்த தெய்வம். இந்த மாபெரும் கவிஞர்களுக்குள் விளைந்தது தமிழ் அறம், பொதுமை அறம். இப்படித்தான் பாரதி தமிழனைக் கண்டார்; தமிழ்ச்சாதியைக் கண்டுபிடித்தார்.

பாரதிவழியாகத்தான் இந்தியா என்ற பெரும் தேசம் நமக்குள் வந்தது. நாம் இந்தியர் என்ற உணர்வு நமக்குள் விரிந்தது. பாரதிக்குள் தங்கியிருந்த பார்ப்பனியம் என்றதன் இடதுசாரிப் போக்கை நாம் கண்டோம். இந்தியாவின் தத்துவம், பண்பாடு, சமயங்கள் என்பனவற்றுள்ளும் இடது சாரிப் போக்கு உண்டு. இதிலிருந்து விவேகானந்தர் முதலியவர்கள் தோன்றினர். இந்த உணர்வு தமிழ் உணர்வோடு பாரதிக்குள் ஆழமாகச் செறிவு பெற்றது. அறிவு ஒன்றே தெய்வம் என்றெல்லாம், இந்த உணர்வோடுதான் பாரதி பேசினார். கிருதயுகம் என்றார்; பெண் விடுதலை என்றார். பாரதிக்குள் ஒரு சித்தர் இருந்தார். இவர் தமிழ்ச்சித்தர். மதங்களுக்குள் சமரசம் கண்டவர் இந்தச் சித்தர். இந்தியப் பின்னணியில் நெடுங்காலத் தமிழ்க் கவிதையின் இன்னொரு விளைச்சல் பாரதி.

5. பாரதியைப் பற்றிச் சொன்னவுடன் உடனடியாகப் பாரதிதாசன் குறித்தும் சொல்ல வேண்டும். விடுதலை உணர்வைப் பாரதியிடமிருந்து பாரதிதாசன் பெற்றார் என்பதில் அய்யமில்லை. வலது சாரித் தனமான பார்ப்பனியத்தைக் கடுமையாகச் சாடியவர் பாரதியார். பாரதியார் சாதி அமைப்பையும் சாடியவர். இந்த உணர்வுகளையெல்லாம் பாரதிதாசன் தனக்குள் செரித்துக் கொண்டார். தமிழ்க் கவிதையும் பாரதியார் வழியாகப் பாரதிதாசனுக்குள் புது எழுச்சி கொண்டது. தமிழ்க் கவிதையில், தமிழ் ஆய்வில் தோய்ந்தவர் பாரதிதாசன். சங்க இலக்கியம், தொல்காப்பியம் என்று ஆழமாகக் கற்றவர் பாரதிதாசன். மரபு முறையில் வந்த தமிழ் அறிவில் பாரதிதாசன் தேர்ந்தவர். பாரதியிடம் இத்துணை அளவுக்கு மரபுத் தமிழ் இடம் பெறவில்லை என்றே சொல்லலாம். சாதி

மற்றும் பார்ப்பனிய எதிர்ப்பில் பாரதியைக் காட்டிலும் கூடுதலான ஆவேசம் பாரதிதாசனிடம் இருந்ததில் வியப்பில்லை.

பெரியாரின் பகுத்தறிவுக்குப் பாரதிதாசன் வசப்பட்டார். எனினும், தமிழ் இலக்கிய ஆய்வின்வழியே தான் பெற்ற உரத்தை, வளத்தைப் பாரதிதாசன் விட்டுக் கொடுக்கவில்லை. மதுரையைக் கண்ணகி எரித்த திறத்தைப் பாடும் பொழுது, பகுத்தறிவுப் பார்வையில் தான் பாடினார். ஆனால், வஞ்சியில் இடம் பெற்ற கண்ணகியின் சிலையைச் சிற்பி வடிக்கும்பொழுது கண்ணகி தெய்வத் திறத்தில் கசிந்து உருகினார் பாரதிதாசன். மணிமேகலையின் தவநெறியைப் பாரதிதாசனால் போற்றமுடிந்தது. குமரகுருபரிடமிருந்து அவரது செழுந்தமிழை வசப்படுத்திக் கொண்டவர் பாரதிதாசன். கம்பர் காவியத்தை எரித்ததில் பாரதிதாசனுக்கு உடன்பாடில்லை. தமிழ் இலக்கியங்கள் வழியே ஒரு பேருணர்வாய் இடம் பெற்றிருந்த கடவுளைப் பாரதிதாசன் முற்றாக மறுக்கவில்லை. அதேசமயம் கடவுளை வைத்து வணிகம் செய்ததை, வணிகம் செய்த பார்ப்பனியத்தைப் பாரதிதாசன் கடுமையாகச் சாடினார்.

பாரதிதாசனைப் பொருத்தவரைத் தமிழே அவருக்கு எல்லாமுமாக இருந்தது. தமிழ் என்பதற்கு ஆயிரம் பொருள் கண்டவர் பாரதிதாசன். தமிழ் என்றால் அகம்; தமிழ் என்றால் புறம்; தமிழ் என்றால் காதல் மற்றும் வீரம்; தமிழ் என்றால் அறம் மற்றும் தவம்; தமிழ் என்றால் பெண்மை மற்றும் ஆண்மை; தமிழ் என்றால் அழகு மற்றும் கலை; இம்முறையில் தமிழ் அவருக்குத் தாய் மட்டுமல்ல தெய்வமும். இந்தளவுக்குத் தமிழைக் கொண்டாடியவர்களில் முதல்வர் என்று பாரதிதாசனைச் சொல்ல முடியும். பகுத்தறிவுப் பார்வையில் இப்படி எல்லாம் தமிழைக் கொண்டாடுவதற்கு இல்லை. இந்த உணர்வைப் பாரதிதாசன் எங்கிருந்து பெற்றார் என்று நாம் வியப்படைகிறோம்.

சங்க இலக்கியத்தைக் கொண்டாடினார் பாரதிதாசன். மூவேந்தர்களைக் கொண்டாடினார். இப்படி எவ்வளவோ சொல்ல முடியும். பாரதிதாசன் படைப்புக்களில் பெண் பெற்ற முதன்மையை விவரிப்பதற்குச் சொற்களில்லை. பெண்ணின் அறிவாற்றலையும் மற உணர்வையும் கொண்டாடியவர் பாரதிதாசன். கண்ணகியின் மறுப்பிறப்புக்கள் பாரதிதாசனின் பெண்கள். பாரதிதாசன் படைத்த காவியங்களின் இறுதியில் தவறாமல் புரட்சி ஒன்றைப் பாடுவார் பாரதிதாசன். இனி எல்லாமே மக்களுக்குரியவை என்று போர் முழக்கம் செய்தார்.

பொது உடமைக்காரர்கள் பாரதிதாசனைக் குறைத்துப் பேசியபொழுது, எனக்கு நிகரான புரட்சிக்காரன் யார் என்று எதிர்க்கேள்வி

கேட்டார் பாரதிதாசன். வள்ளுவருக்குப் புதுப்பொருள் கண்டார். நெடுங்காலத் தமிழ்க் கவிதை பாரதிதாசன்வழியே புத்துயிர் பெற்று நமக்கு வந்து சேர்ந்தது என்று சொல்வதில் தவறில்லை. தமிழ்க் கவிதைக்குள் பகுத்தறிவு உண்டா, புரட்சி உண்டா என்று இனிக் கேட்பதில் பொருள் இல்லை. தமிழ்க் கவிதைக்குள் இடம்பெற்றுள்ள அறம் ஒரு முனையில் பகுத்தறிவாக, இன்னொரு முனையில் புரட்சியாக விளைச்சல் பெற முடியும்.

7. தமிழில் நாட்டார் இலக்கியம்

1. நாட்டார் கலை இலக்கியங்கள் முதலியவை 20–ஆம் நூற்றாண்டின் இடையில்தான் ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் அறிஞர்களால் மக்களின் கலை இலக்கியங்கள் என மதிக்கப்பட்டன என்பது ஒரு முக்கியமான உண்மை. இதன் காரணமாக நமக்கு வந்து சேர்ந்துள்ள தமிழ் இலக்கியத்தின் பரப்பு திடீரென பெருமளவு விரிவடைந்துள்ளது. தமிழ் மக்கள் மத்தியில் வழங்கும் பழமொழிகள் பல்லாயிரம் எனத் தொகுக்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் கவித்துவ வீச்சோடு விளங்கக் கூடியவை; வாழ்வியல் அனுபவச் செறிவு கொண்டவை; ஒவ்வொன்றும் பன்முகப் பொருள்படுபவை. தமிழ் மக்கள் மத்தியில் நெடுங்காலமாக நிலவுகிற கதைகளும் கதைப்பாடலும் தொடர்ந்து தொகுக்கப்படுகின்றன. இவை தவிர, எத்தனையோ வகைக் கூத்துக்கள் முதலியனவும் தொகுக்கப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாக நாட்டுப்புற மருத்துவம், ஒவ்வொரு சமூகப் பிரிவின் வாழ்வியல், கோவில்கள், திருவிழாக்கள். சாதி மற்றும் வாழ்வியல் சடங்குகள் என்றெல்லாம் ஏராளமாகத் தொகுக்கப்படுகின்றன. தொடர்ந்து இவை ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அனைத்துலக அளவிலான ஆய்வு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

2. தமிழ் இலக்கியத்தின் பரப்பு விரிவடைந்தது என்பது மட்டுமல்ல. உயர்ந்தோர்க்குத்தான் உரியது இலக்கியம் என்ற கருத்து இதனால் கடுமையாக அடிபட்டுப் போயிற்று என்று சொல்லலாம். கல்வி அறிந்தவர்தான், கலை இலக்கியப் படைப்புக்களைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை பொய்யாய், பழங் கதையாய்ப் போயிற்று. வாழ்வியலோடு எல்லா மனிதர்களும் தொடர்பு கொண்டிருக்கின்றனர். வாழ்வியலின் இயக்கத்தையும் அழகையும் ஒவ்வொருவரும் தமக்குள் சேகரித்துக் கொள்கின்றனர் என்ற முறையில் இவர்களுக்குள் இயல்பாகவே கதைகளும் கவிதைகளும் எழுகின்றன.

பேரிலக்கியங்கள் என்று சொல்லப்படும் இலக்கியங்களுக்கு இவர்களின் கதைகள் அடித்தளமாக இருந்திருக்கின்றன. இலக்கியம் என்பது யதார்த்தத்தோடு இயங்குகிறது என்பது மட்டுமல்ல, யதார்த்தத்தின் ஆதாரத்தில் எழும் உணர்ச்சிகரமான கற்பனைகளை உள்ளடக்கியதாகத் தான் இலக்கியம் இயங்குகிறது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். நாட்டார்களுக்குத் தெய்வங்கள் வேண்டும். இவர்களைப் போன்றவர்களே இவர்களது தெய்வங்களும். நம் சமூகத்தில் தாய்மைக்குப் பெரிதும் மரியாதை உண்டு. இவர்களும் தாய்த் தெய்வங்களைப் பெரிதும் போற்றுகின்றனர். எத்தனையோ வீரச் செயல்கள், சாகசங்கள் செய்தவர்கள் அவர்கள் இறந்த பிறகு இவர்களால் தெய்வங்களாக வழிபடப்படுகின்றனர். வகை, வகையான இசைக்கருவிகளோடு இவர்கள் பாடுகின்றனர், ஆடுகின்றனர். ஆழ்ந்து பார்க்கும்பொழுது நம் எல்லோருக்குள்ளும் இந்த கிராமத்து மனிதர்கள் – ஆதிமனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றனர் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்கிறோம். நாட்டார் கலைகள் என்பன ஒரு சமூகத்தின் கூட்டு இயக்கம். தனி மனிதர்கள் சமூகத்தில் கரைந்து விடுகின்றனர். விழாக்கள், ஆட்டங்கள், பாடல்கள் ஆகியவற்றின் உச்ச நிலையில் பல நூறு உடல்கள் ஓர் உயிரியக்கத்தில் இயங்குவதை அறிய முடியும்.

3. தமிழ் இலக்கியத்தை இம் முறையில் ஒரு புதிய புரிதலோடு நாம் வாசிக்க முடியும். சிலப்பதிகாரத்தில் நாட்டார் கலைகளைக் காண்கிறோம். திருவாசகம் முதலிய இலக்கியங்களில் நாட்டார் கலைகளின் வீச்சைக் காண்கிறோம். இயற்கையோடு இணைந்து உழைத்தும் பகிர்ந்தும் வாழுகிற உழவர்களின் நெஞ்சில் நிலவுகிற அறம்தான் வள்ளுவரிடம் பேரறமாக வெளிப்பட்டுள்ளது. இலக்கியம் என்பது உயர்ந்தோருக்கு மட்டும்தான் உரியது என்று பொய்யைக் களைந்து கொள்வதன்மூலம் நாம் மனிதராகிறோம். உழைக்கும் மக்களோடு இணைகிறோம். மனித நேயத்தை, சமதர்மத்தைக் கூடுதலாக உணர்கிறோம்; கலை உணர்வில் நாம் கரைகிறோம்.

8. *சேக்கிழார் புராணம்*

1. சேக்கிழாரின் பெரிய புராணம் குறித்து இங்கு சிலவற்றைச் சொல்லலாம். சுந்தரர் கதையை மையப்படுத்தி பெரிய புராணத்தை ஒரு காவியம் என்று சிலர் உரிமை கொண்டாடுகின்றனர். காவியத்தின் மையம் சுந்தரர் கதை என்றால் பிறகு எல்லாக் கதைகளும் இந்த மையத்தோடு ஏதோ ஒரு வகையில் இணைகிற முறையில் கிளைக்கதைகளாக இருக்க வேண்டும். இப்படி இல்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள

முடியும். வேறு எந்த வகையில் பெரியபுராணம் காவியம் ஆகும் என்றும் நாம் சிந்திக்க வேண்டும்.

புராணம் என்று சேக்கிழாரின் நூல் பெயரிடப்பட்டது என்றாலும், இந்த நூலின் இலக்கியத் தன்மையை நாம் பெரிதும் பாராட்ட முடியும். இலக்கியம் என்று சொல்வதற்கு ஏற்ற முறையில் புராணக் கூறுகள் அமுங்கி மனித வாழ்வின் மேன்மைகள் சில கதைகளில் தூக்கலாக அமைந்துள்ளன. இக் கதையில் இடம் பெறும் புராணக் கூறுகள் நம்மிடம் கற்பனைகளாகத் தோற்றம் கொள்கின்றன. இந்தக் கதைகள் எழுதப்பட்டு பல நூற்றாண்டுகள் கழிந்த போதிலும் சில கதைகளுக்குள் நம் நவீன காலப் போக்கையும் இனம் காண முடியும்.

மெய்ப்பொருள் நாயனார் பற்றிய கதை நம் காலத்திற்கும் உரிய கதை. பூசலாரைப் போலத்தான் நமக்குள்ளும் செயல்படுவதற்கு சாத்தியம் இல்லையென்று தெரிந்த நிலையிலும் இலட்சியங்களைக் கோவில்களாக்கி அங்கும் இறைவர்களைக் குடி வைத்து நாம் கொண்டாடுகிறோம். சாக்கிய நாயனாரை நாம் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். மனுநீதிச் சோழன் பற்றிய கதை, மனு தர்மச் சாத்திரத்தின் போக்குக்கு எதிரிடையாக எழுதப்பட்ட அசலான தமிழ்க் கதை; தமிழ் நெறி சொல்லும் கதை.

இவ் வகைக் கதைகளின் உச்சம் என்று கண்ணப்ப நாயனார் பற்றிய கதையை நாம் கொண்டாட முடியும். ஆகம வழிபட்ட சடங்கு முறைகள் சிவ கோசரியாருக்குப் போதும். கண்ணப்பனைப் பொறுத்தவரை முரட்டு பக்தன். கடவுளுக்குத் தன்னைப் போலவே பசிக்கும்; ஆகவே தான் படைக்கும் உணவை அவர் உண்ண வேண்டும். தனக்குப் பிடித்தது எதுவாயினும் அது சிவனுக்கும் தான் பிடித்ததாக இருக்க வேண்டும். சிவனுக்கு ஊறு நேர்ந்தால் எதையும் இவன் செய்வான். இப்படிச் செல்கிறது இந்தக் கதை. இந்தக் கதை ஓர் அருமையான குறியீடு / படிமம். சட்டம், விதிமுறை, சடங்கு, ஒழுக்க நெறி என்று இருப்பவர்கள் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில் மனித நீதி, இயற்கை நீதி, எந்த விலை கொடுத்தும் இதைச் சாதிக்க வேண்டும் என்று அலைபவர்கள் இன்னொரு புறம்.

பெரிய புராணத்தில் இன்னும் சில கதைகளை இப்படி நாம் கண்டறிய முடியும். எரிபத்த நாயனார் கதை சற்றே இடறினாலும், நம்மால் பொருள் உணர்ந்து இரசிக்க முடியும். மகனை அரிந்த கதை, மனைவியின் மூக்கை, தலை முடியை அரிந்த கதை, சிவனடியார்க்குத் தன் மனைவியை விட்டுக் கொடுத்த கதை ; இரத்தம் வடிய முழங்கையைத் தேய்த்த கதை இவை எல்லாம் நம் இலக்கிய / வாழ்வியல் உணர்வுகளோடு பொருந்துவதில்லை. சிவனடியார்க்கு எதையும் வழங்கலாம் என்ற நீதி

சைவ சமய உணர்வுக்குப் பொருந்திய நீதி. சிவனடியாரும் சிவனும் ஒன்று. இந்த உணர்வு நமக்கு இன்று இல்லை. பொய்த் துறவிகள் நம் காலத்தில் மட்டுமல்லாமல் சேக்கிழார் காலத்திலும்தான் இருந்திருக்கின்றனர்.

திருநாளைப்போவார் கதையை இன்று நாம் கடுமையான திறனாய்வுக்குட்படுத்துகிறோம். அந்தணர் செய்த சதி என்கிறோம். வரலாற்றில் இப்படி எவ்வளவோ நேர்ந்துள்ளன என்பதை நாம் மறுக்கவில்லை. இந்தக் கதைக்குள் நாம் புதிய பொருள் காண முடியும்.

திருநாளைப்போவாரை நந்தன் என்ற பெயரால் நாம் இன்று அழைக்கிறோம். நந்தன் தன் உள்ளூரோடு அடங்கியவனாக இல்லை வெளியிலும் சென்று வருகிறான்; உலகம் பெரியது என்று கண்டு கொள்கிறான். உள்ளூரில் உள்ள தெய்வங்கள் உள்ளூரில் இருந்து ஆள்கின்றன. உலகளவில் இவற்றிற்கு ஆட்சி இல்லை. சூரியனையும், சந்திரனையும் இவை இயக்குவதில்லை. பருவ மாற்றங்களை இவை செயல்படுத்துவதில்லை. இவற்றை எல்லாம் இயக்க ஒரு பெரும் தெய்வம் வேண்டும். அந்தணர் சொல்லும் பெரிய தெய்வத்தை தேடிக் கண்டடைந்து சரணடைய வேண்டும். இவன் சிவபெருமான். இவனைக் காண்பதற்காகத்தான் நந்தன் சிதம்பரத்திற்குச் செல்கிறான். இப்படிக் கதையை மேலும் தொடர முடியும். அந்தணர் மூடர்கள். கோயிலுக்குள் நந்தன் நுழைந்தால் கோயில் தீட்டுப்படும் என்று கருதுகிற அளவுக்கு மூடர்கள். இவர்களுக்குத் தெய்வம் தெரியாது. சாதியை மட்டும் இறுக்கமாக பிடித்துக் கொண்டிருக்கும் மூடர்கள் இவர்கள்.

மேலும் ஒரு வகையில் கதைக்குப் பொருள் சொல்லலாம். பெரும் தெய்வத்தைத் தனக்குள் கண்டுணர்ந்து அதன் பேரொளியில் தன்னைக் கரைத்துக் கொள்கிறான் நந்தன் என்றும் கதை சொல்ல முடியும். இப்படி எல்லாம் கதை சொல்ல இருக்கும் வாய்ப்புக்களைச் சேக்கிழார் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நந்தன் சோதியில் கலந்தது சேக்கிழாருக்குக் கூட அற்புதம் என்று பட்டிருக்க வேண்டும். கதை என்பது அதே வடிவில் இலக்கியம் ஆவதில்லை. கதை நம் வாழ்வியலுக்குள் வந்து விரிந்த தளங்களில் பொருள்பட வேண்டும். அப்பொழுது தான் கதை என்பது இலக்கியம் ஆகும். வெறும் கதைகளாகத் தங்கி விட்டவை புராணங்களாகலாம்; இலக்கியம் ஆக முடியாது. எலும்பைப் பெண்ணாக உருவாக்கிய கதை, முதலை உண்ட பாலகனை மீட்ட கதை, கல்லில் கட்டி கடலில் பாய்ச்சியபோதும் உயிரோடு மிதந்த கதை முதலியவை இத்தகையவை. இந்தக் கதைகளையும் ஏதே ஒரு வகையில் புரட்டிப் போட்டு வேறு பொருள் சொல்வதையும் நாம் மறுப்பதற்கில்லை. நமக்குத் தேவை இலக்கியம்; வாழ்வின் ஆழ்ந்த பொருளை உள்வாங்கிக் கொள்கிற இலக்கியம்.

சுந்தரர் கதை பல வகைகளில் ஓர் அற்புதமான கதை. சுந்தரர் திருமணத்தின்போது அந்தணர் வடிவில் சிவபெருமான் வந்து கலவரம் செய்து சுந்தரரை ஆட்கொள்கிறார். ஓர் அற்புதமான நாடகம் இந்தக் கதை. சுந்தரருக்கு இரண்டு மனைவிகள்; இருவரும் வெவ்வேறு சாதியினர். ஒருத்தி பார்ப்பனப் பெண்; இன்னொருத்தி மதிக்கப்படாத ஒரு சாதி. சுந்தரரை மனைவி கோபித்துக் கொள்கிறாள். கிழவர் வேடத்தில் வந்த சிவபெருமான் தூது செல்கிறார். கடவுள் மனிதனுக்குத் தோழனாகிறார். இப்படி ஒரு கதையை நாம் வேறு எங்கும் காண முடியாது ; இது இன்னொரு நாடகம். மேலும் ஒரு நாடகம் சிவபெருமானைத் தூதுவனாக செயல்படுத்துவதைப் பொறாத ஒரு பக்தர் (ஏயர் கோன் கலிக்காமநாயனார்) சுந்தரர் தம்மை பார்க்க வருவதை விரும்பாது தற்கொலை செய்து கொள்கிறார். இப்படியும் ஒரு வினோதமான கதை. இங்கெல்லாம் புராணக் கூறுகள் கதைக்குள் இயல்பாக வந்திருக்கின்றன. இலக்கிய உணர்வுக்குள் இடறத்தான் செய்கின்றன. எனினும், சேக்கிழாரின் சிந்தனை வளத்தை நாம் இரசிக்கிறோம்.

எந்தக் காலத்திலோ எந்த வடிவிலோ எங்கெங்கோ நடைபெற்ற நிகழ்ச்சிகள் / கதைகள் முதலியவற்றைத் தன் காலத்திற்குள் கொண்டு வருகிறோம். தனது சைவ சமய உணர்வு என்ற பக்தி உணர்வில் அந்தக் கதைகளை ஊறவைத்து எல்லாவற்றையும் சைவம் மற்றும் சிவபெருமானின் மேன்மைக்கான கதைகளாகப் படைத்தவர் சேக்கிழார். பக்தி உணர்வு மனிதனின் ஒரு பேருணர்வு. பக்தி இலக்கியத்தின் கருப்பொருள் / உரிப்பொருள் இந்தப் பேருணர்வு. தமிழ்ச் சமூகம் இந்தப் பேருணர்வில் நெடுங்காலம் திளைத்திருக்கிறது. யாரோ புனைந்த புராணங்களுக்குள் புகுந்து பொருள்படுத்த வழி தெரியாமல் தமிழ்ச் சமூகம் தன் கண்களைத் தானே குத்திக் குருடாக்கியிருக்கிறது. புராணங்கள் குறித்த ஆய்வு இன்றும் இல்லை. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்கள் இதில் ஈடுபடவில்லை. சமயவாதிகள் இத்தகைய ஆய்வை எதிர்ப்பார்கள் என்பது காரணமாக இருக்கலாம்.

9. தமிழில் கவிதை - பருந்துப் பார்வை

1. கவிதைகள் இல்லாமல் மனிதன் வாழ முடியாது. எதிர்காலத்தில் சிக்கல்கள் மேலும் மேலும் அதிகரிக்கிற சூழலில் கவிதைகளின் தேவை அதிகமாக உணரப்படும். மனித நேயத்தையும் அழகு உணர்வையும் அற உணர்வையும் தனக்குள் பாதுகாத்து வைத்திருப்பது கவிதை. திரைப்படங்களில் இடம்பெறும் கவிதைகளைத் திரும்பத் திரும்ப ஓயாமல் நம் மக்கள் கேட்க விரும்புவது இதன் காரணமாகத்தான். கதைகள் இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்பது போலவே, கவிதைகள்

இல்லாமலும் வாழ முடியாது. கடவுளும்கூட ஒரு பெரும் கவிதைதான். சமயங்களுக்குள் கவிதைகள் இயங்குகின்றன. விளையாட்டுக்கள், திருவிழாக்கள், குழந்தைகள், நீர், நிலம், மழை, வானம் முதலிய எல்லாமும் மனிதருக்குள் கவிதைகளை உற்பத்தி செய்கின்றன.

தமிழ் கற்பவன் கவிதை எழுதுவதிலிருந்து தப்ப முடியாது. தமிழில் இந்தளவுக்குக் கவித்துவம் இயங்குகிறது. தமிழை ஆழமாகக் கற்பதன்மூலம் தான் கவித்துவத்தின் வீச்சுக்களை ஒருவர் தனக்குள் பெற முடியும். பக்தி இலக்கியங்கள் கடவுள் என்ற கருத்தாக்கத்தினுள் வானம் முதலிய அனைத்தையும் அடக்கியுள்ளன. வானமாகவும் மண்ணாகவும் காற்றாகவும் நெருப்பாகவும் இருப்பவன் இறைவன். மாசில்லாத வீணையின் இசையாகவும் மாலைநேரத்து மதியமாகவும் தென்றலாகவும் இளவேனிலாகவும் பொய்கையாகவும் இருப்பவன் இறைவன். கோடையில் இளைப்பாற்றிக் கொள்ளும் மரமாகவும் நிழலாகவும் இனிய நீராகவும் இப்படியெல்லாம் இருப்பவன் இறைவன். இறைவனுக்குள் எல்லா இன்பங்களும் அடக்கம், துயரங்களும்கூட அடக்கம்; மனிதன் பெற்ற வாழ்வியலின் விரிந்த, உயர்ந்த பார்வை என்ற தளமாக இருப்பவன் இறைவன். இறைவனென்பது ஓர் உயர்ந்த தளம். அங்கிருந்து மனிதன் எல்லாவற்றையும் பார்க்கிறான்; மதிப்பிடுகிறான்; கதிரவன் நிலவு முதலிய அனைத்தும் மனித வாழ்வினுள் எத்தனையோ வடிவங்களில் செறிவு பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் தான் மனிதனைப் படைக்கின்றன; காப்பாற்றுகின்றன இவற்றுக்கு அழிவில்லை; மனிதனுக்கும் அழிவில்லை.

"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று பாரதி பாடியதை இப்படித்தான் நம்மால் புரிந்து கொள்ள முடியும். கடவுள் என்பது ஒரு மாபெரும் கருத்தாக்கம். பேராற்றலின் வடிவம், பேரழகின் வடிவம், பேரறத்தின் வடிவம். எதிர் காலத்தில் கவிதைதான் மனிதனுக்குச் சமயமாக இருக்கும் என்றார் மேத்யூ ஆர்னால்டு. தாகூரும் தன் சமயம் கவிஞனின் சமயமென்றார். தாகூருக்குள் இயங்கியது கவித்துவத்தோடு கூடிய அத்வைதம். அத்வைதம் கவிஞனின் மெய்யியல். இதைச் சமயமாக மாற்றும்பொழுது மனிதனுக்குள் இயங்கும் கவித்துவத்தின் தரம் தாழ்கிறது. சிவபெருமான் என்ற படைப்பு மனித வாழ்வின் பன்முகப் பரிமாணங்களோடு இயங்குகிற பெரும் படைப்பு. இதைப் போலவே கண்ணன், முருகன், காளி என்று தொடங்கிப் பல்வேறு கடவுளர்களின் படிமங்களை நமக்குள் கவிதையாய்க் கரைத்துக் கொள்ள முடியும். தனக்குள் கவிதையைத் திரட்டும் மனிதனுக்கு இவ்வாறு உள்ள சாத்தியங்கள் அளவிடற்கரியவை. மனித வாழ்வின் தளத்தினுள் இப்படி

எவ்வளவோ ஊடாட்டங்களுக்கு இடமுண்டு. காதல் என்றும் பக்தி என்றும் நேயமென்றும் அழகென்றும் இவற்றைக் குறிப்பிடலாம். பலருக்குள் பெரியார் அல்லது காந்தியடிகள் எத்தனையோ பேரழகுடன் திகழ்வது இப்படித்தான். இங்கெல்லாம் மனிதரின் கவித்துவம் என்பதைத்தான் நாம் காண்கிறோம்.

2. 2000–ஆம் ஆண்டு தமிழ் இலக்கியத்தில் கவிதைகள் என்று திரட்டும்பொழுது நமக்கு முதலில் கிடைப்பது புறநானூற்றுக் கவிதைகள்தான். புறநானூறு தமிழில் ஒரு பேரிலக்கியம். மனித வாழ்வின் எல்லாப் பரிமாணங்களையும் புறநானூற்றில் நாம் காண முடியும். புறநானூற்றுக்கு நிகரான பேரிலக்கியம் தமிழில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு மனித வாழ்வின் பேரெழுச்சியைப் புறநானூறு தனக்குள் கொண்டுள்ளது. அகத்திணை இலக்கியத்தைப் போல் கவிதைகளைக் கண்டு, இலக்கணம் கூறிய தொல்காப்பியர் புறநானூறு என்ற புறத்திணை இலக்கியத்தில் இருந்து கவிதைகளைக் காண்பதற்கு வழி சொல்லவில்லை. புறநானூற்றினுள் உரையாசிரியர் இலக்கணத்தைக் கண்டார்களே ஒழிய, கவிதையை – மனிதனுக்குள் இயங்கும் கவித்துவத்தைக் காணவில்லை. இது குறித்து விளக்குவதற்குப் புறநானூற்றிலிருந்து நூறு கவிதைகளையாவது திரட்டி ஒவ்வொன்றும் எவ்வாறு கவிதையின் இயக்கத்தைத் தனக்குள் கொண்டுள்ளது என்று ஆராய வேண்டும்.

புறநானூற்றில் நானூறு பாடல்களில் குறைந்தளவுக்கு இரு நூறாவது கவிதைகளாய்த் தேர்ச்சி பெறும். பிற சங்க இலக்கியங்களில் இந்த விகிதத்தில் கவிதைகள் நமக்குக் கிடைப்பதில்லை. கபிலர், பரணர், பெருங்கடுங்கோ, அவ்வையார், நக்கீரர் என்று இன்னும் பல அற்புதமான கவிஞர்களை நாம் சங்க இலக்கியங்களில் காண முடியும். குறுந்தொகையில் கிடைக்கிற கவிதைகளின் அளவுக்கு நற்றிணை முதலியவற்றில் கிடைக்கும் எனத் தோன்றவில்லை. ஒரே வகையான பாடல்கள் ஏராளமாக உள்ளன. குறும்பாடல்களில் கவிதையின் வீச்சு அதிகம். நெடும்பாடல்களுக்கு வரும்பொழுது கவிதைகள் அதிகளவில் செய்தி மற்றும் விவரத் தொகுப்புக்களாக அமைந்துவிடுகின்றன. பத்துப்பாட்டில், நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு என்பனவற்றில் உள்ள அளவுக்குக் கவித்துவ வீச்சைப் பிற பாடல்களில் காண முடிவதில்லை. ஒவ்வொரு பாட்டினுள்ளும் கவிதையின் தனித்தொகுப்புக்களை விவரத் தொகுப்பிலிருந்து வேறுபடுத்தி எடுக்க வேண்டும். பதிற்றுப்பத்தைக் காட்டிலும் பரிபாடலில் கவித்துவம் அதிகம். கவிதை என்பதன் நீரோட்டத்தைக் கலித்தொகையில் கூடுதலாகப்

பார்க்கிறோம். நிதானமாக எல்லாவற்றையும் அசை போட்டு எழுதியதைப் போல கலித்தொகை அமைகிறது. கலித்தொகையில் இசையின் கூறு மிகுதி. இதன் காரணமாகவும் கவிதை இங்கு செழித்துள்ளது.

இப்படியே நாம் ஆராய்ந்தால் எந்த ஒரு இலக்கியத்தினுள்ளும் கவித்துவம் பேரெழுச்சி கொண்டிருக்கிற சில / பல அற்புதமான இடங்களைக் காண முடியும். பெரும் அளவில் திரண்ட சோக உணர்வு வெடிக்கும்பொழுது இளங்கோவடிகளுக்குள் கவிதை பொங்கி வழிவதை நாம் காணலாம். இங்கெல்லாம் கவிதை இசையாய் எழுச்சி பெறுகிறது.

இலக்கியத்தினுள் கவிதையைத் தேடுவதற்கான முறையியல் என இப்படி ஒன்றை நம்மால் திரட்டிக் கொள்ள முடியும். கதைகள் மற்றும் விவரங்களை எடுத்துரைக்கும் பகுதிகளில் கவித்துவ எழுச்சி குறைவாகத்தான் இருக்கும். இங்கெல்லாம் இடையிடையே உவமைகள் மற்றும் நல்ல தொடர்கள் முதலியவைகள் இடம் பெற்றுக் கவிதைகளாய்த் தன்னைக் காட்டிக் கொள்ளும். கவித்துவம் உச்சம்பெறும்பொழுது இயல்பாகவே அது நாடகத்தன்மை பெறுவதையும் நாம் காண்கிறோம். "என்னை முன் நில்லன்மின்" என்று வள்ளுவர் கூறும்பொழுது கவிதைபெறும் நாடகத்தன்மையை நாம் காண்கிறோம். சிலப்பதிகாரத்தின் நாடக இயல் ஆற்றலோடு இயங்குகிறது.

இப்படியெல்லாம் தமிழில் கவிதைகளைத் தேடிக் கொண்டே செல்லும்பொழுது கம்பர் காவியத்திற்கு வருகிறோம். கம்பரின் கவித்துவம் பெரிதென்பதை நாம் அனைவரும் ஏற்கிறோம். புராண இயல்பை மீறி பேரிலக்கியமாக கம்பர் காவியம் திகழ்கிறது. இந்த இலக்கியத்தினுள் கவித்துவம் அங்கங்கே வெடித்துத் தெறிக்கிற இடங்களென எவ்வளவோ உள்ளன.

கம்பர் சிலவற்றைப் பத்து / பதினைந்து பாடல்களில் சொல்லிக் கொண்டே செல்லும்பொழுது இதுவரை அவருக்குள் நடைபெற்ற இயக்கம் திடீரென ஒரு பாய்ச்சலாக ஒரு கவிதையில் வெடிக்கும். கம்பராமாயணம் கடந்த 40, 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பல இலக்கிய சொற்பொழிவாளர்களால் ஆழமாகப் பயிலப்படுகிறது. கம்பர் விழாக்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. பேரா. சத்தியசீலன் போன்ற ஆற்றல் மிகுந்த சொற்பொழிவாளர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர். கம்பருக்குள் இயங்கும் இலக்கியம், அறம் முதலிய எல்லாவற்றையும் பேரறிவாற்றலுடன் இவர்கள் திரட்டி உள்ளனர். கம்பர் காவியத்திற்கு இவர்கள் தந்த பெருமிதத்தைத் தமிழில் இன்னொரு இலக்கியம் இதுவரை பெறவில்லை

என்றே சொல்லிவிடலாம். சிலப்பதிகாரமோ, திருக்குறளோ இத்தகைய பெருமிதத்தைப் பெற்றிருக்க வேண்டும். இனியேனும் பெறுமா என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

4.. தமிழ் இலக்கியத்தில் இதுவரை பார்க்காத ஓர் இலக்கியப் போக்கென்பதைப் பற்றி இங்கு பேசலாம். ஒரு வகையில் இது ஒரு மாறுபட்ட இலக்கியப் போக்கு, கற்பனையின் வீச்சு இந்த இலக்கியப் போக்கில் அதிகம். முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப் பரணி, நள வெண்பா என்ற இலக்கியங்களை இவ் வகையில் இங்குக் குறிப்பிடலாம். இங்கெல்லாம் தமிழ்க்கவிதையின் வளத்தைக் காண்கிறோம். வகை வகையான கற்பனைகள். சில சமயம் தரை நமக்குத் தட்டுப்படுவதில்லை என்று சொல்லுமளவுக்குக் கவிதை நமக்குள் சிறகு முளைத்துப் பறக்கிறது. கவிதை இங்கு நமக்கு மயக்கம் தருகிறது. இவ் வகை இலக்கியப் போக்கு தமிழில் ஒரு பெரும் சாதனை.

இதே தோரணையில் பிரபந்த இலக்கியங்களுக்குள் நாம் செல்ல முடியும். உலா, கோவை, கலம்பகம், பிள்ளைத்தமிழ் என்று எத்தனையோ வகைப் புதிய இலக்கியங்கள். பள்ளு, குறவஞ்சி என்பனவும் இவ் வகைப் புதிய இலக்கியங்கள். தூது என்பதுவும் ஒரு புதிய இலக்கியப் போக்கு. பரணி என்பது இவற்றுள் அடங்கும். இவ் வகை இலக்கியங்களினுள்ளும் வரலாறு, சமூகம் என்பனவற்றின் இயக்கம் குறைந்தளவுக்கேனும் காண முடியும் என்றாலும், இலக்கியத்தின் உள்ளடக்கம் என இவை இங்கெல்லாம் இடம் பெறுவதில்லை. அனேகமாக இடைக் காலத்துத் தமிழ்ப் புலவர்கள் கற்பனை உணர்வில் வார்க்கப்பட்ட இந்த வகை இலக்கியங்களைத்தான் இலக்கியம் எனக் கருதியிருக்கக் கூடும். இவ் வகை இலக்கியங்களில் எண்ணற்ற புதிய வடிவங்களைக் காண்கிறோம். யமகம், திரிபு, அந்தாதி என்றெல்லாம் புதிய வடிவங்கள் இலக்கியத்தினுள் இடம் பெறுகின்றன. 20–ஆம் நூற்றாண்டில் பாரதி இலக்கியம் மேலோங்கும்வரை இவ் வகைப் புலமை இலக்கியத்திற்குச் செல்வாக்கு இருக்கத்தான் செய்தது. தமிழ்ச் செய்யுளின் இலக்கணத்தை இவர்கள் துல்லியத்தோடு வளப்படுத்தினர் என்பதில் அய்யமில்லை. இன்றும்கூட இவ் வகை இலக்கியத்தோடு நாம் சிற்சில சமயங்களிலேனும் உறவு கொள்ளத்தான் செய்கிறோம்.

இயல்பான வாழ்விலிருந்து ஒரு விருந்தில் / ஒரு பயணத்தில் மகிழ்வதைப் போல இவ்வகை இலக்கியம் நம்மை ஈர்க்கத்தான் செய்கிறது. இத்தகைய உணர்வுகளை நாம் இழந்துவிட வேண்டியதில்லை. இன்றைய சூழலில் இவற்றில் நம்மால் ஆழ்ந்துவிட முடியாது என்பது உண்மைதான். ஒரு பெரும் வியப்பு என்னவென்றால் இவ் வகை இலக்கியத்தை இன்னும்

தன் தலையில் தாங்கி, நெஞ்சில் நிறைத்துக் கொண்டு, இதுதான் இலக்கியம் என்று பேசுபவர்கள் இன்றும் உள்ளனர். அனேகமாக அசலான வாழ்க்கை உடையவர்களுக்கு இவற்றோடு உறவு குறைவென்று சொல்ல முடியும்.

5. இடைக் காலத்தில் இன்னொரு வகையான இலக்கியப் போக்கு. இதன் கவர்ச்சியிலிருந்து இன்றும் நம்மால் தப்பவே இயலாது. அவ்வையார், காளமேகம், இரட்டைப்புலவர்கள் என்று எத்தனையோ கவிஞர்கள். இவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தனிக் கவிதைகள் பாடியிருக்கின்றனர். தனிப் பாடல்கள் என்ற முறையில் இவர்களின் கவிதைத் திரட்டுக்கள் வெளி வந்துள்ளன. தமிழின் சொத்துக்கள் என இவற்றை நாம் தயக்கமில்லாமல் சொல்ல முடியும். பெரும்பாலும் வெண்பா வடிவத்தை அற்புதமாக இவர்கள் பயன்படுத்தி உள்ளனர். வறுமை இவர்கள் பாடல்களில் ஒரு வகை அழகோடு திகழ்கிறது. கடவுளர்களை இவர்கள் நையாண்டி செய்துள்ளனர். வள்ளல்களைப் பாராட்டுவதைப் போலவே குறைசொல்லியும் பாடியிருக்கின்றனர். அனேகமாக இவர்கள் நம் கால உணர்வுகளுக்கு நெருக்கமாக வருகின்றனர்.

6. தமிழில் இன்னொரு வகை இலக்கியம் குறித்து இங்கு சொல்ல வேண்டும். திருக்குறள், நாலடியார், சங்க காலத்தை அடுத்துத் தோன்றிய அற இலக்கியங்கள், பக்தி இலக்கியம் தமிழுக்கு வழங்கியிருக்கிற தனித் தன்மையைப் போல அற இலக்கியம் என்ற போக்கு தமிழ் இலக்கியத்திற்குத் தனி வளம் சேர்த்திருக்கிறது. ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, அறநெறிச் சாரம் என்று தொடங்கி அற இலக்கியத்தில் ஒரு புதுப் போக்காக இவை விளங்குகின்றன.

ஒரு வரியில் ஒரு குறுங்கவிதை அல்லது இரண்டு வரிகளில் ஒரு கவிதை. நான்கு வரி வெண்பா என்ற வடிவில் இயற்கையிலிருந்து ஒன்றிரண்டு காட்சிகள் அல்லது நிகழ்ச்சிகள். இயற்கை இங்கெல்லாம் மனிதர்களுக்குள் அற உணர்வைத் தூண்டுகிறது. இளம் வயதில் தமிழ் கற்கவும் இக் கவிதைகள் பயன்படுத்தப்பட்டன. மரபு முறையில் வாழ்ந்த தமிழ்ச் சமுதாயத்தில் அறத்தின் விளைச்சலாக இக் கவிதைகள் இருக்கின்றன. அறத்தின் கூறுகள் இன்று மாறி விட்டன என்பதில் அய்யமில்லை. மாறி வரும் அறத்தைப் பாடுவதற்கு ஆத்திச்சூடி என்பதன் வடிவத்தைப் பாரதியார் முதல் எத்தனையோ கவிஞர்கள் இன்றுவரை சிறப்பாகப் பயன்படுத்துகின்றனர். ஆத்திச்சூடிக்குத்தான் இந்த மரியாதை கிடைத்துள்ளது. ஒரு வரியில் – இரண்டு சீர்களில் ஒரு கருத்துரை என்ற முறையில் இக் கவிதை வடிவம் இயங்குகிறது.

10. தமிழ் இலக்கியத்தில் அறம்

1. கவிதை அல்லது இலக்கியம் என்று பேசும்பொழுது முதலில் நம் நெஞ்சில் தோன்றுவது சுவையுணர்வுதான். சுவை உணர்வு நம் நெஞ்சில் நெகிழ்வு ஏற்படுத்துகிறது. நெகிழ்வின்மூலம்தான் மேற்கொண்டும் கவிதைக்குள் பயணம் செய்கிறோம். சுவை உணர்வோடு நாம் நின்று விடுவதில்லை. கவிதையை அர்த்தப்படுத்தும் இடத்திற்குச் செல்கிறோம். அர்த்தப்படுத்தும்பொழுதுதான் கவிதை நமக்குள் ஒன்றுகிறது. வேறுபடுவதும் இங்கு நிகழ முடியும். அர்த்தப்படுத்தல் என்பது தனி மனிதன் என்ற அளவில் மட்டும் இயங்குவதில்லை. நம் அரசியல் உணர்வு, சமூக உணர்வு ஆகியவற்றோடு கவிதை இங்கு இணைகிறது அல்லது முரண்படுகிறது. இந்தத் தளத்தோடும் நாம் நிற்பதில்லை. கவிஞனுக்குள் வெளிப்பட்ட உணர்வு என்பது அவனோடு மட்டும் உறவு கொண்டதாக இல்லை. சமூகத்தோடு உறவு கொண்டது என்ற முறையில் கவிஞனின் தனி உணர்வு என்பதிலிருந்து விலகி சமூக முரண்பாடுகளுக்கிடையில் கவிஞனுக்குள் வெளிப்படும் உணர்வு என்று புரிந்து கொள்கிறோம். இங்கு வரலாற்றை / வரலாற்றுச் சூழலை நாம் தொடுகிறோம். கவிஞன் மட்டுமல்லாமல் நாமும் இந்த வரலாற்றுச் சூழலுக்குள் தான் இருக்கிறோம். வரலாறு நம்மைக் கட்டமைக்கிறது என்ற உண்மையை இங்கு புரிந்து கொள்கிறோம். வரலாற்றுச் சூழல் என்பதனுள் இறங்கியவுடன் நம் சம கால வரலாற்றுச் சூழலைக் கடந்தும் நமக்குள் இயங்குகிறோம். மனிதர்கள் இப்படி வரலாற்றுச் சூழலுக்குள் அகப்பட்டுக் கொண்டு திணறுகிறார்கள் என்பது மட்டுமல்ல, வரலாற்றுச் சூழலுக்கு எதிர்வினை புரிகிறார்கள்.

சிலர் கவிதையை வாசிக்கும்பொழுது அர்த்தப்படுத்தல் என்ற தளத்தினுள் விரிவாகப் பயணம் செய்வதில்லை; சுவை உணர்வோடு நின்று விடுகிறார்கள். தம் மனத்திற்கொத்த கவிதை என்றால் தொடர்ந்து வாசிக்கிறார்கள். இல்லையென்றால் இன்னொரு மென்மையான, மலிவான, எளிய சுவையுணர்வு கவிதையைத் தேடிச் செல்கிறார்கள். இவர்களிடம் இருக்கும் சுவையுணர்வை முன்வைத்துப் பார்க்கும்போது. இவர்கள் வாழ்வின் எல்லை விரிவானதாகவோ, ஆழமுடையதாகவோ இருக்க முடியாது. இவர்களைத்தான் ரசிகர்கள் அல்லது சுவைஞர்கள் என்று நாம் கூறுகிறோம். இவர்களின் அரசியல் முதலியனவெல்லாம் கேள்விக்குரியதாகத்தான் இருக்கமுடியும். இவர்களிடம் நாம் நின்று பயனில்லை.

கவிதைக்குள் சுவையுணர்வைத் தொடர்ந்து, கவிதைக்குள்

இயங்கும் அரசியல் அல்லது சமூக உணர்வில் மட்டும் நாம் நின்று விட முடியாது. இப்படியும் வாசகர்கள் இருக்கிறார்கள். தமக்கு விருப்பமான அரசியல், கவிதையில் இடம்பெற வேண்டும்; தான் சார்ந்திருக்கிற திராவிட இயக்கத்திற்கோ தான் சார்ந்திருக்கிற கட்சி சார்ந்த மார்க்சியத்திற்கோ ஒத்ததாக இருந்தால்மட்டுமே கவிதையைத் தொடர்ந்து படிப்பார்கள். இல்லை என்றால் இவர்களும் வேறு கவிதையை நாடிச் செல்வார்கள். தமிழைப் பாராட்டுவது, காதலுணர்வைச் சொல்வது என்ற முறையில் கவிதைகள் இருந்தால் மட்டுமே தொடர்ந்து வாசிக்கும் இரசிகர்களையும் இங்கு சேர்த்துச் சொல்லலாம்.

கவிதையில் இடம்பெறும் அரசியல் அல்லது சமூக உணர்வோடு நமக்கு முரண்பாடு இருந்தபொழுதிலும், இந்தக் கவிஞனையோ அல்லது கவிதைக்குள் இடம்பெறும் உணர்வையோ புரிந்து கொள்ளும் முறையில் வாசிப்பைத் தொடரும்பொழுதுதான் வரலாற்றுக்குள் போய்ச் சேருகிறோம். முரண்பாடுகளுக்கிடையில் கவிஞன் மட்டுமல்ல நாமும்தான் இருக்கிறோம். நாமும்தான் தவறான, அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்கிறோம். நமக்குள்ளும் சாதி உணர்வு இருக்கத்தான் செய்கிறது. ஆணாதிக்க உணர்விலிருந்து நாமும்தான் விடுபடவில்லை. சமூகத்தின் ஏதாவது ஒரு பிரிவுக்குள் நாமும் இருக்கிறோம். நம் சாதி அல்லது சமூகப் பிரிவு நமக்குள் சில வறையறைகளை ஏற்படுத்தி இருக்கின்றன. அவ்வப்பொழுது இவற்றை நமககுள் இடறலாக உணர்கிறோம். நம் வாழ்வின் எல்லைகளுக்குள் நாம் குறுகி இருந்துவிட முடியாது. நம்மை நாமே விரிவு செய்து கொள்ள வேண்டும். சுய விமர்சன உணர்வு நமக்குத் தேவை. இப்பொழுது நமக்குள் எழுவது அற உணர்வு. வெறும் சுவை உணர்வில் நாம் மூழ்கிவிடும்பொழுது நம்மை நாமே ஒரு வகையில் அழித்துக் கொள்கிறோம். எனக்கு மட்டும் இந்த இன்பம் என்பது சரியான நிலைப்பாடு இல்லை. எல்லோருக்கும் தேவை இந்த இன்பம். எனக்கு மட்டும் இது கூடுதலாகக் கிடைத்திருப்பது எப்படி. யாருடைய இன்பத்தை நான் பறித்துக் கொண்டேன். நான் இந்த இன்பத்தை நுகரவேண்டும் என்றால் இந்த இன்பத்தை இழந்தவர்கள் யார். இப்படி எல்லாம் சிந்திக்கிறோம். எந்த வர்க்கப் பிரிவில் நாம் இருக்கிறோம் என்பதையும் புரிந்து கொள்கிறோம். இத்தகைய உணர்வுகள் நமக்கு ஒவ்வொரு நாளும் ஏற்படக் கூடியவை. இலக்கியம் வாசிக்கும்பொழுதும் இத்தகைய உணர்வுகள் நமக்குள் ஏற்படுகின்றன. இவற்றை எத்தனை காலத்திற்குத் தட்டிக் கழிக்க முடியும். இப்படி எல்லாவற்றையும் ஒரு மறு ஆய்வுக்குட்படுத்திக் கொள்கிறோம். இங்குதான் அற உணர்வு நமக்குள் தலை தூக்குகிறது.

வர்க்கத்திற்கு ஓர் அறம் என்பது ஓரளவுக்கே உண்மை என்றாலும்

இதைக் கடந்து நமக்குள் இயங்குகிறோம். எல்லோர்க்கும் உரியது சமத்துவ வாழ்வு என்று சிந்திக்கிறோம். நமக்குள் ஆதிக்கம் தேவை இல்லை; தனிஉடமை தேவையில்லை; சாதி உணர்வு தேவை இல்லை. இந்த அறம் என்பது சமதர்மம். ஆதிக்க உணர்வில் மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான். அவனுக்குள் இயங்குவது பிளவுபட்ட மனம். அவனுக்குள் நிம்மதி இல்லை; நிம்மதி இல்லாத நிலையில்தான் போதை முதலிய உணர்வுகளில் தன்னை ஆழ்த்திக் கொள்கிறான். பிளவுண்ட மனத்தோடு கூடிய மனிதன்தான் அதிகாரம், பதவி, பணம் என்று அலைகிறான். இவன் தன்னைக் கெடுத்துக் கொள்வதோடு சமூகத்தையும் கெடுக்கிறான். இவனுக்குள் அன்பு இல்லை. உலகத்தோடு, இயற்கையோடு, பிரபஞ்சத்தோடு இவனுக்கு உறவில்லை. இவனுக்குள் பரவசமில்லை.

இதைத்தான் மெய்யியல் தளம் என்று கூறுகிறோம். இலக்கியத்தின் வழியே நாம் செய்யும் பயணம் இங்குதான் நிறைவுறுகிறது. இலக்கியம் மனிதனுக்கு விடுதலை தர வேண்டும். விடுதலை உணர்வை மனிதனுக்குள் தூண்ட வேண்டும். மனிதனுக்குள் விடுதலை / பரவசம் தேவை. சுவை உணர்வில் திளைப்பவருக்கு இந்த விடுதலை உணர்வு இருக்க முடியாது. இலக்கியம் குறித்த மதிப்பீடு என்பதை மெய்யியல் தளத்திலிருந்துதான் சரி வரச் செய்ய முடியும். தமிழில் கவிதை / இலக்கியம் பற்றி சிந்திக்கும்பொழுது இவ்வளவும் சொல்ல வேண்டியிருக்கிறது.

2. தமிழ் இலக்கிய வரலாறு குறித்துத் தமிழண்ணல் சில விளக்கங்களைத் தருகிறார். "ரெனி வெல்லக்" எழுதிய இலக்கிய ஆய்வு நூலிலிருந்து தான் பெற்ற விளக்கங்களைத் தமிழண்ணல் தருகிறார். இலக்கிய வரலாறு என்பது ஒன்றையடுத்து இன்னொரு இலக்கிய வகை எனத் தொடர்கின்ற வரலாறாக இருக்க முடியாதென்கிறார். இலக்கிய ஆசிரியர்களின் / புலவர்களின் வரலாறாக இருக்க முடியாது என்கிறார். ஒவ்வொரு இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் குறித்த விவரத் தொகுப்பாகவும் இருக்க முடியாது. கால அடிப்படையில் இலக்கிய வரலாற்றைத் தொகுத்துச் சொல்வதாகவும் இருக்க முடியாது. இலக்கிய வரலாறு எழுதுவதற்கு இவையெல்லாம் ஆதாரங்கள் மட்டுமே. இவற்றையே இலக்கிய வரலாறு என்று நாம் சொல்ல முடியாது என்கிறார் தமிழண்ணல்.

குறிப்பிட்ட கால அரசியல், சமுதாயவியலோடு இலக்கியம் தொடர்புடையதாகத்தான் இருக்கிறது. இலக்கிய வகைகளிலும் தொடர்ந்து

மாற்றங்கள் நிகழ்கின்றன. தமிழ் இலக்கியமும் இப்படி எத்தனையோ மாற்றங்களைக் கண்டு வந்துள்ளது. ஒப்பியல் நோக்கில் இலக்கியம் குறித்து ஆய்பவர்கள் இலக்கியத் தன்மை (Litereriness) என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார்கள். இந்த இலக்கியத் தன்மையின் வரலாறு சொல்வதாகத்தான் இலக்கிய வரலாறு இருக்கமுடியும் என்கிறார் தமிழண்ணல். தமிழ் இலக்கியப் பரப்பில் சங்க காலம் தொடங்கி அனேகமாக நம் காலம் வரையிலும் தொடர்ந்து வருவதாகிய இலக்கியத் தன்மை என்பதன் சில கூறுகளைக் குறிப்பிட முடியும். சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அகத்திணை என்ற கூறு பக்தி இலக்கியங்களிலும் இடம் பெறுகிறது. பிரபந்தங்களிலும் இடம் பெறுகிறது. மேலும் ஒன்றைச் சொல்வதென்றால் சாதி, மதச்சார்பின்மை என்ற ஒன்றைக் குறிப்பிடலாம். மத வெறி என்பது தமிழ் இலக்கியத்தில் பெரும்பாலும் போற்றப்படவில்லை. கம்பர் சொல்லும் கடவுள் மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்று என்ற இறைமை. சித்தர்கள் கருத்தும் இத்தகையது. தமிழ் இலக்கியத்தினுள் நாம் காணக்கூடிய இலக்கியத் தன்மை என இப்படிச் சிலவற்றைக் கூற முடியும்.

மதச் சார்பின்மை என்ற ஒன்றனுள், மதங்கள் கடந்து மனிதனுக்குள் இயங்கும் இறைமை என்பதனுள்கூட மதச்சார்பை நாம் காண முடியும். மதத்திலிருந்து விலகி இறைமை என்பதைப் பிரபஞ்சம், இயற்கை, மனிதன் ஆகியவற்றின் உள்ளியக்கமாக நம்மால் காண முடியும் என்றால், இத்தகைய பேருணர்வை இலக்கியத் தன்மை என நாம் இனம் காண முடியும். அகத்திணை இலக்கியத்தில் மனிதக் காதலைக் காண்கிறோம். பக்தி இலக்கியத்தினுள் இடம் பெறுவது தெய்வக் காதல். இங்கு தலைவன் என்பது இறைவன்; தலைவி என்பது உயிர். ஆணும் தன்னை பெண்ணாகப் பாவித்துக் கொண்டு இறைவனிடம் தான் கொள்ளும் காதலைப் பக்தி இலக்கியம் வெளிப்படுத்துகிறது. ஆண்டாள் பெண் எனினும், ஆண் உறவைத் துறந்து இறைவனிடத்தில் தான் பெண்ணாகவே இருந்து தன் காதலை வெளிப்படுத்துகிறாள். தூது, உலா முதலிய இலக்கியங்களில் இடம்பெறும் காதல் குறித்து நாம் விரிவாக சொல்ல வேண்டியதில்லை. கூளப்பநாயக்கன் காதலில் இடம்பெறுவது காதல் அன்று; காமம். இங்கெல்லாம் காதல் பொதுவயப்படுத்தப் பட்டதென்று கூறுவதற்கில்லை. ஆகவே, தமிழ் இலக்கியம் முழுவதையும் இப்படிச் சில மையங்களில் ஒருமைப்படுத்துவது குறித்து நாம் இன்னும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

3. கவிதைக்கு இலக்கணம் சொல்வோர் கவிதை ஒரு சிறப்பு மொழி என்று கூறுகின்றனர்; உணர்வின் உச்சங்களைக் கொண்ட மொழி என்றும்

கூறுகின்றனர். சாதாரணமான பேச்சு வழக்கிலிருந்து எழுத்து மொழி வேறுபடுகிறது; எழுத்து மொழியிலிருந்து கவிதைமொழி வேறுபடுகிறது என்பது உண்மைதான். கவிதையில் இடம்பெறும் சொற்கள் அல்லது தொடர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களை உணர்த்துவனவாகவும் இருக்கின்றன. மிகச் சிறந்த கவிஞன் என்பவன் அவன் எழுதும் மொழியை மேம்படுத்துகிறான் என்பதும் உண்மைதான். ஒரு பெரும் கவிஞன் தோன்றிய பிறகு அவனுக்கு முன்னரும் பின்னரும் எழுதப்பட்ட / எழுதப்படும் இலக்கியம் என்பது புதிய பொருளில் வாசிக்கப்படுகிறது என்பதையும் இங்கு சேர்த்துச் சொல்லலாம்.

பேச்சு மொழி அல்லது எழுத்து மொழியினுள்ளும் கவிதைக் கூறுகள் இருப்பதை நாம் மறுக்க வேண்டியதில்லை. உணர்வு வயப்பட்ட நிலையில் பேசும்பொழுது அந்தச் சொற்களும் ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தத் தளங்களைக் கொண்டனவாக இருக்கின்றன. நேரிடையாக ஒருவரது குறையைச் சுட்டுவதற்குப் பதிலாக, மறைமுகமாகச் சுட்டிச் செல்லும் முறை பேச்சு வழக்கிலும் இருக்கத்தான் செய்கிறது. சங்க இலக்கியத்தினுள் இடம்பெறும் உள்ளுறை என்பது இத்தகைய "மறைமொழி" தான். உரைநடையிலும் உணர்ச்சிக் கூறுகள் நிறையவே இருக்கின்றன. மேடைப் பேச்சில் எத்தனையோ அணிநயங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கவிதையில் சொற்கள் குறைவாக பயன்படுத்தப்படுகின்றன. உரைநடையில் விரிவாகச் சொல்வதைக் கவிதை சில வரிகளில் வெளிப்படுத்த முடியும். இம் முறையில் கவிதை தனக்கென்று ஒரு தனி மொழியைப் படைத்துக் கொள்கிறது. பேச்சு மொழியில் தற்காலக் கவிதைகளை எழுதவேண்டுமென்று சொல்பவர்களும் பேச்சுமொழியில் இருந்துகூட, கவிதை தனக்கான மொழியைப் படைத்துக் கொள்கிறது என்பதை மறுக்கமாட்டார்கள்.

கவிதை பற்றிய இலக்கணம் இப்படிச் சொற்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதோடு நின்று விடுவதில்லை. கவிதையைத் தரிசனம் என்று சொல்கிறோம். இத்தகைய தரிசனங்களை வெளிப்படுத்தும் பொழுதுதான் கவிதையின் மொழியானது உணர்ச்சி மற்றும் அறிவின் உச்சத்தில் இயங்குகிறது; நடை இறுக்கமாகிறது. உணர்வின் உச்சம் கவிதையில் ஏறும்பொழுது இத்தகைய கவிதையிலிருந்து செறிவான சில வரிகளைமட்டும் பிரித்தெடுத்து இதுதான் கவிதை அல்லது கவிதை மொழி என்று சுட்டுவது அறிவுடமை ஆகாது. ஒரு செடியிலிருந்து மலரை மட்டும் பிரித்தெடுத்து, மலரை மட்டும் இரசித்து செடியின் இலை கிளை, வேர் முதலியவற்றை ஒதுக்குவது சரியில்லை. வேர் மட்டுமல்லாமல், மண்ணும், நீரும், காற்றும், கதிரவனும்

இல்லாமல் செடியில்லை. எந்த ஒரு கவிதையையும் வாழ்வியலிலிருந்து கவிதையை முற்றிலுமாக பிரிப்பதும் சாத்தியமில்லை. வேர்களும் மண்ணும் காற்றும் சொல்லும் கவிதைகளை நாம் கேட்க முடியும் எந்த ஒரு மனிதனுக்குள்ளும் கவிதை உண்டு. அவனது பேச்சுக்களில் கவிதைக் கீற்றுக்கள் அங்கங்கே வெளிப்படும். டால்ஸ்டாய் உரைநடையில்தான் எழுதினார்; உரைநடையில் எழுதிய பெருங்கவிஞர் அவர். மார்க்சும் ஒரு பெருங்கவிஞர். இப்படிச் சொல்லும்பொழுது கவிதைக்குள் இயங்கும் மெய்யியல் வரையிலான பல தளங்களையும் நமக்குள் வைத்து பேசுகிறோம்.

தமிழ்க் கவிதை குறித்து நாம் பேசி வந்தோம். இலக்கிய வரலாறு என்பது இலக்கியத்தின் வரலாறாக இருக்க வேண்டும் என்றோம். இலக்கியத் தன்மையின் வரலாறாக இருக்க வேண்டும் என்றோம். இப்பொழுது அதுகுறித்து மேலும் காண்போம்.

4. தமிழ் இலக்கிய வரலாற்றில், பல்வேறு போக்குகளை நாம் இனம் காண்கிறோம். இப்படி இனம் காண்பதன் அடிப்படையில் சங்க இலககியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், பிரபந்த இலக்கியம் என்று பல்வேறு இலக்கிய வகைகளை நாம் காண்கிறோம். தமிழ் இலக்கியத்தை ஒருமுகப்படுத்தி பார்க்கும் முறையில் தமிழ் இலக்கியத்தின் இலக்கியத் தன்மை குறித்து நாம் ஆராய்வது பொருந்தும். ஒப்பியல் இலக்கியம் என்ற புதிய வகை வாசிப்பு முறையிலிருந்து இந்த உண்மையை நாம் பெறுகிறோம். தமிழண்ணல் ஒருவகையில் தமிழின் இலக்கியத் தன்மையை நிர்ணயம் செய்கிறார். தி.சு. நடராசன் அவர்களும் இப்படி ஒரு முயற்சியைச் செய்திருக்கிறார். இன்னும் ஒரு முயற்சியை நாம் செய்ய முடியும்.

சங்க இலக்கியத்தின் ஒரு பகுதியாகிய அகத்திணையானது காதலைப் பற்றிச் சொல்கிறது. தமிழ் இலக்கியம் முழுவதும் காதல் பற்றிய கவிதைகளை ஏராளமாகக் காண முடியும். காதலையும் பக்தியையும் ஒன்றெனக் காண முடியாது. காப்பியம் தன் இயக்கத்தில் காதலைக் காட்டிலும் மனிதனின் பெருமித உணர்வுகளில் மையம் கொண்டுள்ளது. சங்க இலக்கியத்தின் புறத்திணைகளில் மனிதனின் மாண்புகளைக் காண்கிறோம். பக்தி அல்லது புராண இலக்கியங்களில் கடவுளோடும் மனிதன் கொண்ட உறவைக் காண்கிறோம். பிரபந்த இலக்கியத்தில் இதுவரை சொல்லப்பட்ட பல்வேறு உணர்வுகளின் தனித் தனி இயக்கங்களைக் காண்கிறோம். நம் காலத்து இலக்கியங்கள் மனித விடுதலை குறித்து அக்கறை கொண்டுள்ளன.

இவ்வாறு தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பன்முகப் போக்குகளை ஒருமுகப்படுத்திக் காண்பது சாத்தியம்தானா. அதாவது மையத்தில் இருக்கும் கருப்பொருள் தன் இயக்கத்தின்போது பன்முக வடிவங்களைப் பெறுகிறது என்று கொண்டால், தமிழ் இலக்கியத்தை ஒருமுகப்படுத்திப் பார்க்க முடியுமா என்பது நம் கேள்வி. இப்படிப் பார்க்கும் முறையில் இங்கு ஒரு முயற்சி செய்யப்படுகிறது.

சங்க இலக்கியத்தினுள் மனிதர் குறித்த மெய்யியல் பார்வைக்கு அதிக இடம் இருப்பதாகத் தெரியவில்லை. தலைவியோடு இருக்கும்பொழுது தலைவனுக்குள் மெய்யியல் பார்வைக்கு இடம் இல்லை. உறவினர் முதலியவர்கள் வறுமையால் துன்புறுவதைப் பார்க்க முடியாமல் தன் அன்பான தலைவியைப் பிரிந்து, பொருள் தேடும் முறையில் தன் நாடு கடந்து செல்லும் தலைவனுக்குள் ஒரு பேருணர்வு இயங்குகிறது என்பதில் அய்யமில்லை; இடையில் உள்ளது பாலைநிலம். கள்வர்கள் அங்கு வாழ்கின்றனர். இவற்றையெல்லாம் பொருள்படுத்தாமல் தலைவன் சென்று திரும்ப வேண்டும். இவனுக்குள் உரம் செறிவு பெறும் என்பதில் அய்யமில்லை. திரும்பித் தேரில் வருகிறான் ஒருதலைவன். மழைக் காலம் வண்டுகள் மலர்களில் தேனுண்கின்றன. இவற்றுக்கு இடையூறு செய்யாமல், தன் தேரில் கட்டியுள்ள மணியின் நாவைக் கயிற்றால் கட்டி ஓசை எழுப்பாதவாறு தேரில் மெல்ல வருகிறான் தலைவன். இப்படி ஒரு அழகிய கவிதை. உயிர்களின்மீது இவன் கொண்ட அன்பை இந்தக் கவிதை சொல்கிறது. விரைந்து சென்று தலைவியைக் காண்பதைக்கூட தலைவன் சற்றுத் தள்ளிப் போடுகிறான் என்று கூட இங்கு கூறலாம்.

சங்க இலக்கியத்தினில் அகத்திணை பாடல்களைச் சற்று நிதானமாக ஊடுருவிப் பார்க்க முடியுமானால், தலைவன் மற்றும் தலைவிக்குள் இயங்கும் அற உணர்வைத் திரட்ட முடியும். பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாகத் தலைவன் தலைவியை உடன்போக்கு மேற்கொள்ளும்பொழுது செவிலித் தாய்க்கு அறிவர் கூறும் அறமும் இங்குக் குறிப்பிடத் தகுந்தது. கடலில் முத்து பிறந்தாலும் தன்னை அணிபவர்க்கே முத்துக்கள் உரியவை என்ற முறையில் அறம் உரைக்கிறார் அறிவர். அன்பை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டாம் என்பது இவர்கள் கருத்துரை. அன்பு தழைக்க வேண்டும். அப்பொழுதுதான் அறம் பெருகும்.

சங்கத் தமிழ்ச்சான்றோர்கள் அகத்திணைப் பாடல்களில் அன்பையும் அறத்தையும் வற்புறுத்தினர். புறத்திணைப் பாடல்களிலும் இவர்கள் இவ்வாறு தான் இயங்குகின்றனர். "செல்வத்துப் பயன் ஈதல்

என்கிறார் நக்கீரர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிறார் கணியன் பூங்குன்றன். எத்திசை செல்லினும் சோறு கிட்டும் என்கிறார் அவ்வையார். முல்லைக்குத் தேர் ஈந்தான் பாரி. மக்கள் தம்மை எதிர்த்து வந்தபொழுது வடக்கிருந்து உயிர் துறந்தான் சோழன். தன்மானம் காத்து உயிர் துறந்தவன் சேரலாதன்.

இத்தகைய மனிதர்களுக்குள் எத்தகைய அறம் செயல்பட்டது. இப்படி இவர்கள் இயங்கியிருக்க முடியுமானால், இவர்களிடம் வெளிப்படுவது எத்தனை பெரிய பேராண்மை மற்றும் பெருமிதம். இவர்களுக்குள் மெய்யியலின் இயக்கம் இல்லாமல் இப்படிச் செய்திருக்க இயலுமா?

சங்க காலத்திலும், அடுத்துவந்த காலத்திலும் மனிதனுக்குள் சிக்கல் பெருகுகிறது. குடும்பப் பெண்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். பரத்தையரைத் தேடி கணவன் போய்விடுகிறான். குடும்பத்தின் செல்வங்களைத் தலைவன் இறைக்கிறான். பரத்தையர்களுக்கு மரியாதை இல்லை. அவர்களுக்குள்ளும் குமுறல் இருக்கத்தான் செய்யும். கோவலன் இறந்த நிலையில் மாதவி தன் தலையை மழித்துக் கொள்கிறாள்; புத்த மடத்தில் சேருகிறாள். அழகிய பெண்ணை இளவரசன் கடத்திச் செல்ல முடியும். நண்பன் அவனுக்கு உதவி செய்வான். பெண் உடன்படவில்லையென்றால் அரசியும் தலையிடுவாள். பாண்டியனுக்குச் சிலம்புகள் வேண்டும். பொற்கொல்லன் அவனை ஏமாற்றுவான். கோவலனை அவன் கொல்வான்.

வள்ளுவர் குறளில் என்ன காண்கிறோம். பொய்த் தவவேடம் கொண்டு துறவிகள் கள்வர்களாகச் செயல்படுகின்றனர். பொருள் திரட்டுவதற்கு எத்தகைய நெறியையும் மேற்கொள்ளலாம். வழிப்பறிக் கள்வன் போல அரசனும் வரி வசூலிக்கிறான். மேல் இருப்பவர்கள் மேன்மைக் குணம் உடையவர்களாக இல்லை. பிறப்பினால் அனைவரும் ஒன்று என்று வள்ளுவர் ஏன் சொல்ல வேண்டும். பிறக்கும்பொழுதே வேறுபாடு வந்துவிட்டதன் காரணமாகத்தான் இப்படிச் சொல்கிறார். பிறரது மனைவியரைக் காமுறுகின்றனர் அங்கங்கே சில ஆண்கள். சூதாட்டக் களங்கள் செழித்திருக்கின்றன. முயற்சிக்குத் தகுந்த ஊதியம் இல்லை.

இப்படி எல்லாம் சமூகத்தில் சிக்கல்கள், நெருக்கடிகள் தோன்றி வெடித்து வருகின்றன. உலகத்தைக் காக்க அதியமான் இல்லை, குமணன் இல்லை. மன்னர்களுக்கு இடையில் கடும் போர்கள். நகரங்கள் எரியூட்டப்படுகின்றன. குளங்கள் அழிக்கப்படுகின்றன. இவையெல்லாம்

ஏன் நிகழ்கின்றன எனத் தெரியவில்லை. இவை பற்றி இந்தச் சூழலில் பேசலாம். பல பிறப்புக்கள் பற்றி இங்கு பேச முடியும். ஆன்மா என்றும் தவம் என்றும் இங்கு பேசலாம். வேள்விகள் செய்தால் அரசனுக்கு வெற்றி கிட்டும் என்றும் இங்கு பேச வாய்ப்புண்டு. இப்படித்தான் தமிழ் சமுதாயத்திற்குள் சமணர்களும் பௌத்தர்களும் வந்து சேர்கின்றனர். அறவண அடிகள் இங்கு தேவைப்படுகிறார். கவுந்தியடிகள் துணைக்கு வருகிறார். மாடல மறையோன் வேள்வி செய்ய வேண்டுகிறான். பாண்டியனை ஆதரித்து மதுராபதித் தெய்வம் பேசுகிறது. விருட்சிகன் கேலி செய்யப்படுகிறான். பழங்குடிகளாகிய நாகர்களுக்குத் தத்துவம் கற்பிக்கிறான் சாதுவன். ஒருவன் ஒருத்தி என்று வள்ளுவர் பேசுகிறார். அநீதியான அரசுகள் ஒழியட்டும் என்கிறார் இளங்கோவடிகள். உதயகுமரன் கொல்லப்பட வேண்டும் என்கிறார் சாத்தனார்.

சமுதாயத்தில் மீண்டும் அறம் நிலைபெற வேண்டும்; அன்பு தழைக்க வேண்டும். மனிதனின் வாழ்வெல்லைகள் விரிந்துவிட்டன. பிற எல்லைகளும் விரிந்து வருகின்றன. அரசியலும், பொருளியலும் சிக்கலாகின்றன. இங்கெல்லாம் அறம் எது என்று தேட வேண்டும். பிறவி என்ற கோட்பாடு இல்லாமல் வாழ்க்கையை விளக்க வேண்டியிருக்கிறது. தமிழ்ச் சமூகத்தை அறத்தின் அடிப்படையில் நிலை நிறுத்த சமணர்கள் முயற்சி செய்கின்றனர். அநீதிக்குத் துணை போயினர். நாவுக்கரசரைக் கொடுமைக்குள்ளாக்கினர். இந்தச் சூழலில் தெய்வங்கள் மனிதனுக்கு நெருக்கமாக வந்து சேர்கின்றன. தெய்வத்துக்குள் செயல்படுவது எந்த அறம். மனிதனுக்கு ஏன் தெய்வங்கள் தேவை. இப்படி எல்லாம் நாம் சிந்திக்க முடியும்.

தமிழ் இலக்கியங்கள் இப்படித்தான் இயங்கின. அறம் என்ற புள்ளியில் எல்லாவற்றையும் ஒருமுகப்படுத்த முடியும் என்று தோன்றுகிறது. அறத்தை அழிக்கிற சக்திகள் ஒரு புறம்; அறத்தை நிலைநாட்டுகிற சக்திகள் மறுபுறம். இடையறாத போராட்டங்கள். இந்தக் கருப்பொருளைத் தாங்கியதாகத்தான் தமிழ் இலக்கியங்கள் செயல்படுகின்றன. இங்கு அறமும் அன்பும் ஒன்று.

"அறத்திற்கே அன்புசார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்று வள்ளுவர் கூறினார். அன்பு இல்லாமல் அறம் இல்லை. மனிதனுக்குள் மன உறுதி இல்லாமல் அறமும் இல்லை, அன்பும் இல்லை, அப்புறம் கருணை இல்லை. தெய்வங்கள் அறத்தை உள்ளடக்கமாகக் கொண்டு இயங்க வேண்டும். அறம்தான் மனிதனைப் படைக்கும்;

வளர்க்கும். இத்தகையவன்தான் இன்பத்தை விரும்பமாட்டான்; துன்பமே இயல்பென்பான். இவனைத்தான் கணியன் பூங்குன்றன் பாரரட்டுவார். இத்தகையவனால்தான் உலகம் இயங்குகிறது என்பான் பாண்டியன் அறிவுடைநம்பி.

இந்த அறத்திற்கு நாம் இன்று சொல்லும் பெயர் சமதர்மம். தமிழ் இலக்கியம் முழுவதையும் இந்த அறத்தில் மையப்படுத்த முடியும். மேல்மட்டத்தில் பார்க்கும்பொழுது வகைவகையான இலக்கியப் போக்குகள். இவற்றை ஊடுருவிப் பார்க்கும்பொழுது அடி ஆழத்தில் வற்றாத நீரோட்டம்; அறம் என்ற நீரோட்டம். இன்றும் நாம் வேண்டுவது இந்த அறத்தைத்தான். இந்த அறம்தான் இயற்கையைக் காப்பாற்றும்; உயிர்களைக் காப்பாற்றும்; நம்மைக் காப்பாற்றும். இந்த அறத்தின் நாயகனைத்தான் கம்பர் பாடினார். இவனைத்தான் சான்றோர் என்றார் வள்ளுவர். இவன் ஒரு சித்தன். இவன்தான் தமிழ் இலக்கியத்தின் கரு. கவிதையின் அடி ஆழத்தில் இயங்கும் மெய்யியலை இப்படித்தான் நாம் மதிப்பிடுகிறோம்.

11. *தமிழில் பக்தி இலக்கியம்*

1. தமிழில் பக்தி இலக்கியம் குறித்து 20–ஆம் நூற்றாண்டுச் சூழலில் நமக்கு எத்தகைய பார்வை இருக்க முடியும் என்பது குறித்து இப்பொழுது பார்க்கலாம். மிகுந்த கவனத்தோடு பக்தி இலக்கியங்கள் வழியே நாம் பயணம் செய்தாக வேண்டும். பக்தி இலக்கியம் சமயச் சார்புடையது. இலக்கியம் என்று வாசிக்கும்பொழுது சமயச் சார்பிலிருந்து நாம் விலகி நிற்கத்தான் வேண்டும். இதை இலக்கியமாகப் பயில வேண்டும். மனித வாழ்வின் எல்லைக்கு வெளியில் நாம் போய்விட முடியாது. குறிப்பிட்ட வாழ்வுக்குள்தான் சமயமும் இயங்க வேண்டும். சமயத்தை மூடநம்பிக்கை என நம்மால் மறுக்க முடியாது. சமயங்கள் எந்த ஆதாரத்தில் மக்கள் வாழ்வில் இன்றும் நிலவுகின்றன என்றும் நாம் பார்க்க வேண்டும். வரலாற்றுச் சூழலில்தான் சமயங்கள் தோன்றின. கடவுளை ஒப்புக் கொள்கிற சமயங்கள் மட்டுமல்லாமல், கடவுளை மறுத்து அந்த இடத்தில் அறத்தையோ, ஆன்ம விடுதலையையோ வைக்கிற சமயங்களும் உண்டு.

சமயத்தினுள்ளும் வர்க்கப் போராட்டங்கள் என்று சொல்வதற்குரிய முரண்பாடுகளும் மோதல்களும் உண்டு. அரசு முதலிய ஆதிக்கங்கள் சமயங்களைப் பயன்படுத்திக் கொள்வதை வரலாற்றில் நாம் தொடர்ந்து பார்க்கிறோம். நிறுவன வடிவத்தில் சமயங்களுக்குள் ஏதோ ஒரு வடிவில்

ஆதிக்கமும் நுழைந்து விடுகிறது. சமயத்திற்குள் மக்களை இவை திரட்டுகின்றன; மக்களைப் பிளவுபடுத்தவும் செய்கின்றன. சமயத்தினுள் தத்துவம் என்ற ஒரு பகுதியும் உண்டு. தத்துவங்கள் மனித விடுதலையை இறுதி இலக்காகக் கொண்டவை. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் மனிதனின் தோற்றம், பிரபஞ்ச இயக்கம், இயற்கையின் இயக்கம் முதலியவற்றைப் புரிந்து கொள்வதன் தேவைக்காக அன்று நிலவிய அறிவியல் முதலியவற்றின் அடிப்படையில் சமயங்கள் உருவாயின.

தேசம், காலம், மக்களின் பழக்கவழக்கங்கள், அரசு மற்றும் தனிவுடமை ஆகியவையும் சமய உருவாக்கத்தினுள் செயல்பட்டிருக்க முடியும். மனிதர்களின் ஆர்வங்கள், தேவைகள், சிக்கல்கள், தீர்வுகள் முதலியவற்றின் கலப்பில்லாமல் சமயங்கள் உருவாகி விடுவதில்லை. இப்படி ஒரு பொதுவான பார்வையை முன்வைத்துக் கொண்டுதான் பக்தி இலக்கியங்கள் குறித்து நாம் பார்க்கிறோம்.

2. தமிழில் சரிபாதி என்று சொல்லும் அளவுக்குப் பக்தி இலக்கியங்கள் உள்ளன. தேவாரம், திருவாசகம் முதலியவற்றை உள்ளடக்கிய திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவை பக்தி இலக்கியங்களில் முதன்மை பெறுகின்றன. திருவிளையாடற் புராணம், கந்த புராணம், தாயுமானவர் பாடல்கள், அருணகிரியாரின் பாடல்கள் முதலியனவும் பக்தி இலக்கியத்தில் சேர்கின்றன. பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலியனவும் பக்தி இலக்கியத்தில் சேர்கின்றன. சங்க இலக்கியம் என்ற தொகுப்பினுள் இடம்பெறும் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் என்பனவும் பக்தி இலக்கியத்தின் பகுதிகள். சமணர்கள் அருக தேவனையும் பவுத்தர்கள் புத்தரையும் தெய்வ நிலையில் வைத்துப் பாடியனவும் பக்தி இலக்கியத்தில் இடம் பெறும். கம்பரின் காவியம், வில்லி பாரதம் முதலியனவும் பக்தி உணர்வைக் கொண்டவை. இன்றுவரை பக்திப் பாடல்கள் தொடர்ந்து படைக்கப்படுவதையும் காண்கிறோம்.

பக்தி இல்லாமல் மனிதன் இல்லை. என்னதான் அறிவு / பகுத்தறிவு என்று மனிதன் பேசினாலும் மனிதனுக்குள் அறிவியக்கத்தோடு உணர்வியக்கமும் இருக்கத்தான் செய்கிறது. மனிதனிடமிருந்து உணர்ச்சிகள், உணர்வுகளை எந்த ஒரு காலத்திலும் களைந்துவிட முடியாது. மனிதன் கனவு காண்பவன், கற்பனை செய்பவன்.

தொல்காப்பியர் கூறுவது போல எங்கெங்கோ நடைபெறுவனவற்றை ஓரிடத்தில் ஒரு வரிசையில் தொகுத்து நாடகம்

செய்கிறோம். இவனுக்குள் இருக்கும் கலைஞன் புற உலகத்தைத் தனக்கு ஏற்றவாறு அகத்தில் படைத்துக் கொள்பவன். காதல் உணர்வு தொடங்கி அருள் உணர்வு வரை மனிதனுக்கு இயல்பாகிவிட்ட பல உணர்வுகள். தேசம், மொழி என்பனவற்றையும் தெய்வமாக பார்ப்பவன் மனிதன். தலைவனையும் தத்துவங்களையும் நம்பி இவன் செய்வது பக்தி அல்லாமல் வேறு என்ன. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று சொல்கிறார்கள். மக்கள் சக்தியே மகேசன் சக்தி என்று மாற்றிச் சொல்வதிலும் அர்த்தம் உண்டு.

நம்பிக்கை இல்லாமல் மனிதன் வாழ முடியாது. ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை எப்படி ஏற்பட்டது என்பதை மனிதன் தன்னையும் வரலாற்றையும் தோண்டிப் பார்ப்பதுகூட தேவை என்ற போதிலும் பெரும்பாலான சமயங்களில் சாத்தியமும் இல்லை. இத்தகைய மனிதனிடம் இறை நம்பிக்கை என்பது காலங்காலமாகச் செயல்பட்டு வருகிறது. "நம்பினோர் கெடுவதில்லை; இது நான்கு மறைத் தீர்ப்பு" என்ற ஆற்றல் மிக்க ஓர் வாசகமும் மந்திரம் போல் ஒலிக்கத்தான் செய்கிறது.

சமய நம்பிக்கை பற்பல சந்தர்ப்பங்களில் மனிதனிடத்தில் ஏற்படுத்தும் பரவச உணர்வு, ஓர் அற்புதம் என்று சொல்லத் தகும் அளவுக்குப் பேருணர்வாக இருக்கிறது. தெய்வத்தை முன் நிறுத்தி மனிதன் காணும் பெரும் காட்சிகள் அற்புதமானவை. இறைவனும் தானும் ஒன்று என்பதுகூட மனிதனின் உணர்வாக வெளிப்பட்டிருக்கிறது. வானமும் மண்ணும் இறைவனின் தோற்றங்கள்; இயற்கையும் பிரபஞ்சமும் இறைவனின் அற்புத வடிவங்கள். எல்லா உயிர்களுக்குள்ளும் இறைவன் இருக்கிறான். அவன் கருணை மிகுந்தவன். படைப்பதில் மட்டுமல்லாமல், அழிப்பதிலும் அவன் கருணையே வெளிப்படுகிறது. நல்வினைகளைத் தருவதோடு மட்டுமல்லாமல், தீவினைகளைத் தந்தும் நம்மைப் புனிதப்படுத்துகிறான்.

நீரின் தண்மையும், தீயின் வெம்மையும் இறைவனின் ஆக்கங்கள். இத்தகைய உணர்வுகளின்போது மனிதன் துய்ப்பது பேரின்பம் என்பதில் அய்யமில்லை. தமிழில் இடம் பெறும் பக்தி இலக்கியங்களில் இன்னும் எவ்வளவோ பார்க்கிறோம்.

3. நாயன்மார்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த எத்தனையோ அற்புதங்கள் குறித்துச் சமய நம்பிக்கை உள்ளவர்கள் பல படச் சொல்கிறார்கள்; நம்பியும் இரசித்தும் சொல்கிறார்கள். அற்புதங்கள் செய்பவன் இறைவன் என்பதை

நம்பிச் சொல்கிறார்கள். மனித வாழ்வில் அற்புதங்கள் இல்லாமல் இல்லை. நுட்பமாகப் பார்க்கத் தெரிந்தவனுக்கு ஒரு புல்லும்கூட ஓர் அற்புதமான வடிவம். வானமும் பூமியும் அற்புதங்கள். காற்றும் மழையும் அற்புதங்கள். தாய்மை ஓர் அற்புதம். இப்படி எவ்வளவோ சொல்ல முடியும். மனித வாழ்விலும் எதிர்பாராத நிகழ்ச்சிகள். மனிதனுக்குள் நடைபெறும் படைப்பியக்கம் ஓர் அற்புதம். குழந்தைகள் விளையாட்டு ஓர் அற்புதம்.

சமய நம்பிக்கை உடையவர்களின் பார்வையில் மேலும் எத்தனையோ அற்புதங்கள். இறைவனின் அருள் இருந்தால் கடலில் கல் மிதக்கும்; சுண்ணாம்புச் சூளையும் தாமரைத் தடாகம் ஆகும். இறைவன் அருள் கிடைத்தால் எலும்பைப் பெண் உரு ஆக்கலாம்; மந்திரம் சொல்லித் தீராத நோய்களைத் தீர்க்கலாம்; மூன்று வயதில் ஒரு குழந்தை கவிதை பாடலாம்; அடைக்கப்பட்ட கோயில் கதவை இறைவன் பெயர் சொல்லி திறக்கலாம்; முதலை உண்ட பாலகனை மீண்டும் உயிர்ப்பிக்கலாம். நாயன்மார்கள் வாழ்வில் இப்படி எவ்வளவோ நடைபெற்றன. இவற்றை எல்லாம் மனிதனுக்குள் செயல்படும் கவித்துவம் என்று நாமும் காண முடியும்.

ஒரு காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இன்னும் சில தலைமுறைகள் கடந்த பிறகு கதைகள் ஆகின்றன, புராணங்கள் ஆகிவிடுகின்றன. மேற் குறிப்பிட்ட பல நிகழ்ச்சிகள் புராண வடிவம் பெற்றுள்ளன. இவை குறித்துப் பேசுவதற்கு முன்பு, பக்தி இலக்கியத்தின் இலக்கியக் கூறுகள் குறித்து சுருக்கமாகக் காண்போம்.

4. காரைக்கால் அம்மையார் தன் பதிகங்களில் சுடுகாட்டில் ஆடுகின்ற சிவனையே இரசித்துப் பாடுகிறார்; நமக்கு வியப்பாக இருக்கிறது. அம்மையாரின் வாழ்க்கை குறித்துச் சொல்லப்படும் கதையோடு இந்தக் காட்சி இணைகிறது. ஒருவகையானப் பேய்த்தன்மை கூட மனிதனின் உணர்வு எல்லைக்குள் அடங்க முடியும்.

இதே போல சம்பந்தருடைய பாடல்களில் பிச்சை ஏற்று உண்ணும் சிவபெருமான்தான் அதிகம் இடம் பெறுவதாக அறிஞர் கூறுகின்றனர். சம்பந்தரின் தமிழ் உணர்வு அவரது பாடல்களில் ஆழமாக இடம் பெறுகிறது. சம்பந்தரிடம் வீர உணர்வு மிகுந்திருப்பதையும் அவர்கள் பாடல்கள்வழியே எடுத்துரைக்கின்றனர். சம்பந்தர் இறைவனிடம் தோய்வதைப் போலவே, இயற்கையில் தோயும் உணர்வுக்குக் குறைவில்லை.

இவர் வர்ணிக்கும் இயற்கைக் காட்சிகளில் குரங்குகள் செய்யும் வேடிக்கைகூட இடம் பெறுகிறது. இறைவனை முழுமையாக நம்புகிறவர் நாள், கோள் என்று பார்க்க வேண்டியதில்லை; சம்பந்தர் பார்க்கவில்லை என்பது வியப்பாகத்தான் இருக்கிறது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்று நம்பிக்கையோடு சம்பந்தர் பேசுகிறார். மறையவர் என்றாலும் வேள்வி செய்வதை இவர் போற்றவில்லை. இவர் சாதி வேறுபாடு பார்க்கவில்லை; பாணாழ்வாரை எப்போதும் தன்னோடு இருத்திக் கொண்டார்; மக்களின் வறுமை தீர்க்கவும் பாடினார்; இசையோடு கூடிய இவரது தமிழ்ப் பாடல்கள் தமிழின் வற்றாத சுவைக்குச் சான்றுகள்.

வேறு யார் ஒருவரைக்காட்டிலும் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்தவர் நாவுக்கரசர். அன்பும் பணிவும் இவரது அற்புதமான குணங்கள். இறைவனை உண்மையாக நம்பும் ஒருவர் இறைவனைத் தவிர இன்னொருவருக்கு அடிமையாக முடியாது. "நாமார்க்கும் குடி அல்லோம்" என்பது இவரது உறுதியான வீர முழக்கம். சிவபெருமானுக்கு அன்பர் என்றால், புலையரும் நாம் வணங்கத்தக்க கடவுள் என்று இவர் கருதினார்; உழவாரப் படை கொண்டு கோயில்தோரும் இவர் திருப்பணி செய்தார்; இறைவனைக் குறித்து இவர் கண்ட ஒரு பெரும் காட்சி அற்புதமானது; திருவையாற்றை இவர் நெருங்கும்பொழுது, ஆண், பெண் என இயற்கையில் உள்ள எல்லா உயிர்களினுள்ளும் அவர் இறைவனையும், இறைவியையும் கண்டு உணர்ந்து பாடினார். "ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே" என்ற இவரது பாடல் எல்லா மனிதருள்ளும் இறைவனைக் காண்கிற பாடல்.

வாழ்வியல் அனுபவங்கள் என்ற முறையில் இவர் பெற்ற அனுபவங்கள் மிக விரிவானவை. இவை எல்லாம் இவரது கவிதைக்கு வளம் சேர்த்திருக்கின்றன. சம்பந்தருக்கு அவர் கவிதை பாடிய உடனே இறைவன் அருள்புரிவதும் நாவுக்கரசரைப் பொருத்தவரை சற்றுக் காலம் தாழ்த்தி அருள் புரிவதும் என்று சொல்லப்படும் நிகழ்ச்சிகள் சுவையானவை.

சுந்தரர் வாழ்வில் இறைவன் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் திரும்பத் திரும்பச் சொல்லத் தகுந்தவை. இறைவனைத் தோழனாகவும் கொள்ளலாம் என்பதற்கு இவர் சான்றாகிறார். மனிதப் பிறவியின் மாண்பை இவர் போற்றுகிறார். இறைவனே நமக்குச் சோறும் கூரையும்

தருவான் என்று பாடுகிறார். பொய்மையாளர்களைப் பாட வேண்டாம் என்றும் இறைவனையே பாடுங்கள் என்றும் புலவர்களுக்கு அறிவுறுத்துகிறார். திருத்தொண்டர் தொகை பாடியதன்மூலம் சைவ சமய வரலாற்றை இவர் தொகுக்கிறார்.

இம் மூவரது பாடல்களும் தமிழ் இசை நயம் தோய்ந்தவை. தமிழுக்கு இவை பெரும் செல்வம். கவிதை பாடிய சிவனடியார்கள் மேலும் பலர். இவர்களில் மாணிக்கவாசகர் பெற்ற சிறப்புப் பெரியது. திருப்பெருந்துறையில் குரு வடிவில் இறைவனை இவர் கண்டார். குரு மறைந்த நிலையில் குரு வடிவில் இருந்த இறைவனை மீண்டும், மீண்டும் காண்பதற்காக இவர் தேடி அலைந்தார். இறைவனைக் காணாத போது இவர் நெஞ்சம் வருந்தியதையும் கண்டபோது இவர் ஆடிப் பாடியதையும் அற்புதமாக வெளிப்படுத்துகின்றன இவரது பாடல்கள். நாட்டார் கலைகள் என்று அறியத்தக்க எளிய மனிதர்களின் இசைப் பாடல்களில் இவர் எத்தனையோ நயங்களைக் கூட்டிப் பாடுகிறார். இறைவனை இவர் விண்ணுலகில் மட்டும் காணவில்லை! மண்ணுலகில் எத்தனையோ வடிவங்களில் இவர் கண்டார். நெருப்பினுள் தீ என்றும் நீரினுள் தண்மையும் என்றும் எவ்விடத்தும் இறைவனைக் கண்டார். பித்துப் பிடித்தவரைப் போல இவர் தனக்குள் உருகினார்.

இவரது கவிதைகளைத் தனக்குள் கொண்டிருக்கும் தமிழுக்கு அழிவு இருக்கமுடியாது. கடவுள் நம்பிக்கை இல்லாதவரும் இவரது பாடல்களைத் தொடர்ந்து படிக்கும்பொழுது கண்ணீர் சொரியாமல் படிக்க முடியாது. இவர் பெற்ற வேதனைகள் கல் நெஞ்சையும் கரைய வைக்கும்.

திருமந்திரம் குறித்தும் சொல்ல வேண்டும். திருமந்திரத்தைத் தமிழ் நெறி எனப் போற்றுவது தகும். இறைவனை வழிபட ஒரு பச்சிலை போதும் என்கிறார் திருமூலர்; ஏழைக்கிடும் உணவு இறைவனுக்குப் படைக்கும் அமுது என்கிறார். யோகம் குறித்து நிறையச் சொல்லுகிறார்; அறநெறிகள் என்ற முறையில், வள்ளுவர் கூறும் அறநெறிகளைத் தன் பார்வையில் வைத்து அழகாகச் சொல்கிறார்; மந்திரம் என்று சொல்லத் தக்க வகையில் எளிய, அதே சமயம் செறிவான பாடல்கள் இவர் தந்தவை.

ஆழ்வார்களில் குறிப்பிடத்தக்க ஒரு சிலரை இங்கு காணலாம். கண்ணனைக் குழந்தையாக வைத்து, குழந்தை செய்யும் சேட்டைகளைப் பெரியாழ்வார் பாடுகிறார். பெரியவருக்குக் குழந்தையிடம்தான் எத்தனைக் கொஞ்சல். ஆயர்பாடியில் எல்லோரையும் வேடிக்கை செய்து

விளையாடியவன் கண்ணன். குலசேகரரைப் பொருத்தவரை திருவேங்கடத்தானின் மலையில் உள்ள சுனையில் ஒரு மீனாகப் பிறக்க வேண்டும். சுனையின் படிக்கட்டாக இருக்கவேண்டும் என்றெல்லாம் மனம் உருகப் பாடுகிறார்.

ஆண்டாளின் கவிதைக்கு நிகராகத் தமிழில் மட்டுமல்லாமல், உலகளவில் எந்தக் கவிதையாவது சொல்ல முடியுமா? என்றுதான் நாம் கருதுகிறோம். கண்ணனைத் தன் காதலனாக, மணவாளனாக வரித்துக் கொண்டாள் ஆண்டாள். "கற்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ, திரு பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ" என்று தொடங்கி இவர் பாடிய அற்புதமான வரிகள் எத்தனையோ. இறுதியில் என்னதான் இவர் ஆகி இருப்பார் என்று நாம் கவல்கிறோம். பருகும் நீர், தின்னும் வெற்றிலை என்று எல்லாவற்றிலும் கண்ணனைக் கண்டவர் நம்மாழ்வார். என் நெஞ்சிலும் தோளிலும் உச்சியிலும் சுற்றிலும் இருப்பவன் கண்ணன் என்று இவர் பாடினார்.

இங்கு மேலும் ஒன்றைச் சொல்ல வேண்டும். சிவபெருமான் மற்றும் திருமாலின் மூர்த்தங்கள் ஆழ்ந்த உட்பொருள் உடையவை; வாழ்வியலை உள்ளடக்கியவை. சிவபெருமானின் தோற்றங்கள் தான் எத்தனை வகை. மனித வாழ்வை முழுதும் உணர வேண்டும் என்றால் ஒருவன் காதல் செய்ய வேண்டும்; குழந்தைகளைப் பெறவேண்டும்; மனைவியைப் பிரிந்து தனிவாழ்வு வாழவேண்டும்; பிச்சை எடுத்து உண்ண வேண்டும்; எதிரிகளோடு போராட வேண்டும்; அவரது இருப்பிடங்களை எரிக்க வேண்டும்; சுடுகாட்டிலும் கொஞ்ச காலம் வாழவேண்டும், ஆடவேண்டும்; இறுதியில் தவம் செய்ய வேண்டும். இப்படி எல்லாம் வாழ்ந்தவன் மட்டுமே மனிதனாக இருக்க முடியும். மனித வாழ்வின் ஆழமும் விரிவும் அர்த்தங்களும் அறிய முடியும். இவ் வகையில் சிவபெருமான் ஒரு மாபெரும் கலைப் படைப்பு.

திருமால் சிவபெருமானிலிருந்து வேறுபட்டவர். இளம் வயதில் இவன் செய்யாத விளையாட்டுக்கள் / அக்கிரமங்கள் இல்லை. பெண்களை ஏமாற்றினான்; காதல் வசப்படுத்தினான்; எதிரிகளோடு போராடினான்; மன்னனானான். இவன் ஆமையாகவும் இருந்திருக்கிறான்; பன்றியாகவும் இருந்திருக்கிறான். வாழ்வின் எல்லா முகங்களும் இவனுக்கு உண்டு. இவனை அனுபவிக்க வாழ்வின் பல பக்கங்களில் நாமும் பயணம் செய்ய வேண்டும். எல்லாவற்றினுள்ளும் ஆக்கங்கள் இருக்கின்றன. அழிவும்கூட ஒரு வகையில் ஆக்கம்.

திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்று தொடங்கி நாம் இன்னும் நெடும்பயணம் செய்ய வேண்டும். தாயுமானவர் கவிதை தமிழின் உச்சங்களில் ஒன்று. அருணகிரியாரைப் போல சந்தங்களாகத் தமிழை மாற்றியவர் வேறு யார். வள்ளலாரின் கருணை தமிழில் ஒரு வற்றாத நீரோடை. இந்தப் பயணத்தை இங்கு நிறுத்துவோம். மீண்டும் ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொள்வோம்.

5. இறைவனது பேராற்றலைப் பற்றி நாவுக்கரசர் சொல்லும்பொழுது "கற்றூணில் பிணித்துக் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நம சிவாயவே" என்று பாடுகிறார். கல்லில் பிணித்து கடலுக்குள் தள்ளினாலும் சிவபெருமான் காப்பாற்றுவான் என்பதற்கு மேல் தன்னை அவன் காப்பாற்றினான் என்ற பொருள் இப் பாடலில் இல்லை. இறைவன் நினைத்தால் நரியைப் பரியாக்கமுடியும்; பரியை நரியாக்க முடியும் என்று மாணிக்கவாசகர் ஓரிடத்தில் பாடுகிறார். மாணிக்கவாசகர் வரலாற்றில் சிவபெருமான் இப்படிச் செய்தார் என்பதற்கு ஆதாரமில்லை. "எத்தனையோ திருவிழாக்கள் முதலியவற்றைக் காணாமல் பூம்பாவையே நீ போகிறாயே" என்ற பொருளில்தான் சம்பந்தர் பாடினார். எலும்பைப் பெண்ணுருவாக்கினார் என்பதற்கு இக் கவிதை சான்றாக முடியாது. இறைவனின் அருளாற்றலை மேம்படுத்திச் சொல்வதற்காக எத்தனையோ கதைகள் புனையப்பட்டிருக்கின்றன. இவை குறித்தெல்லாம் சற்றுச் சங்கடத்தோடுதான் நாம் பேச வேண்டி இருக்கிறது.

சைவத்தைப் பெருமைப்படுத்துவதற்காக இவ் வகைக் கதைகளை இன்றும் உண்மைதான் எனச் சிலர் பேசுகிறார்கள். வாழ்வில் அற்புதங்களுக்கு இடம் உண்டு என்பதை நாம் மறுப்பதில்லை. எனினும், எலும்பைப் பெண் உருவாக்க முடியாது; முதலை உண்ட பாலகனை மீட்க முடியாது; மந்திரம் சொல்லி மருத்துவம் செய்யலாம். இன்னும் சிலவற்றைச் செய்ய முடியும். மூன்று வயதில் கவிதை பாடலாம். ஆபத்தில் எனக்கு வந்து உதவி செய்தவரை இறைவன் என்றே கருதலாம். இங்கு மீண்டும் சொல்லலாம்; ஒரு விதை மண்ணில் முளைப்பது முதற்கொண்டு வளர்ந்து காயாகி கனியாவது வரை அற்புதங்கள்தான். மழை பெய்வது ஒரு அற்புதம். இப்படி எவ்வளவோ.

இவற்றை எல்லாம் இறை அருள் என்று சொல்வதன் உண்மை குறித்து இங்குச் சற்று பார்க்கலாம். பிரபஞ்சம்தான் மனிதன்வரை எத்தனையோ உயிர்களுக்கும் உலகங்களுக்கும் கோடிக்கணக்கான

நட்சத்திரங்களுக்கும் இருப்பிடம். எல்லாவற்றினுள்ளும் நடைபெறுவது ஒரு மாபெரும் உயிர் இயக்கம். மனிதனுக்குள்ளும் இயங்குவது இந்த உயிர் இயக்கம். எல்லையற்ற இந்தப் பிரபஞ்சம் மற்றும் இயற்கைதான் நம்மைப் படைக்கிறது, காப்பாற்றுகிறது என்று சொல்வதில் தவறு இல்லை. மனிதர்களைப் பற்றிச் சொல்லும்பொழுது வரலாறு, சமூகம் என்பனவற்றைச் சேர்த்துச் சொல்ல வேண்டும். இவற்றினுள்ளும் ஓர் உயிரியக்கத்தை நாம் காண முடியும். உயிருக்கும் அழிவில்லை.

தொடர்ந்து தன்னை உயிர் புதுப்பித்துக் கொள்கிறது. அழிவுக்குள்ளும் ஆக்கம் உண்டு. மனிதன் நான் யார் என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு தனக்குள் தேடிச் செல்கிறான். சமய வகைப்பட்ட தேடலின்போது மனிதன் தன்னையே பிரம்மம் / இறை என்று உணர்கிறான். வரலாறு முதலியவற்றின் வழியே மனிதன் தன்னைக் காண முடியும். பிரபஞ்சம் / இயற்கை / வரலாறு / சமூகம் என்பனவற்றின்வழியே தன்னைக் காண முடியும். தானும் அதுவும் ஒன்று என உணர முடியும். இப்படித் தனக்குள் பேரியக்கத்தைக் காணும் ஒருவன் எல்லா உயிர்களையும் நேசிக்க முடியும், அன்பு செய்ய முடியும். இப்படிக் காண்பதும் மனித வாழ்வை மேம்படுத்துகிற ஒரு பார்வை; மனித வாழ்வுக்குள் இயங்குகிற ஒரு பார்வை.

சமயங்கள் பிரபஞ்ச அளவிலான பேரியக்கத்தினுள் இறைவனைக் காண்கின்றன. பிரம்மம் / இறை என்ற அளவில் மனிதனால் வைத்துக் கொள்ள இயலவில்லை. குணமற்றதைக் குணம், குறி முதலியவை உள்ளதாக மனிதன் காண்கிறான். மனிதன் தன் வடிவில்தான் இறைவன் என்ற உருவகத்தைப் படைக்கிறான். இந்த உருவகத்தை உருவமாக்கி உறவுகள் கற்பிக்கிறான். பிறகு கோயில், திருவிழாக்கள் என்றெல்லாம் கொண்டாடுகிறான்.

நம் உயிர் வாழ்வுக்கு ஆதாரமாக இருப்பது பிரபஞ்சம். நம்மை வாழ்விப்பது அதன் பேரியக்கம். மழையாகவும் நீராகவும் நெருப்பாகவும் இயங்குவது இந்தப் பேரியக்கம். இந்தப் பேரியக்கத்தை இறைவன் எனக் காண்பவன் சமயவாதி. நிறுவனங்கள் வந்து விடுகின்றன. தம்மை நிலைநிறுத்திக் கொள்ள எவ்வளவோ கதைகள் சொல்கின்றன. நாளடைவில் மனிதன் இந்தக் கதைகளில் மாட்டிக் கொள்கிறான். திரும்பத் திரும்பத் தன்னைத் தொலைத்துவிட்டுத் தேடுகிறான். இறைவனை மறுப்பவர்கள் பேரறம் என்கிறார்கள்; சூன்யம் என்று

சொல்லுகிறார்கள். எல்லாமே மனிதனுக்குகந்த ஆக்கங்கள். மனித வாழ்வை இவை நெறிப்படுத்துகின்றன.

இறைவன் என்பதை மறுப்பது எளிது. இறைவன் என்பதை ஒரு கருத்தாக்கம் என – அதாவது மனிதன் தன்னைத்தானே புரிந்து கொள்ள – இயற்கையின் இயக்கம் முதலியவற்றைப் புரிந்து கொள்ள மனிதன் தானே படைத்துக் கொண்ட ஒரு கருத்தாக்கம்தான் இறைவன் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும். வரலாற்றில் அன்று புரிந்து கொள்ள முடியாததை இன்று புரிந்து கொள்கிறோம். இறைவன், ஆன்மா, வீடுபேறு, நல்வினை, தீவினை என்ற கருத்தாக்கங்கள் இல்லாமல் வரலாற்றில் மனிதன் வரவில்லை, வளரவில்லை.

மதங்கள் இல்லாமலும் மனிதன் இல்லை. வரலாற்றுச் சூழலில் புதிய அனுபவங்கள், புரிதல்கள் நேரும்பொழுது புதிய மதங்களை மனிதன் படைக்கிறான். எல்லாவற்றினுள்ளும் இவன் இருக்கிறான். வரலாற்றுச் சூழலுக்கு ஒத்த முறையில் இவன் படைத்துக் கொள்கிற கருத்தாக்கங்கள் நிறையும் குறையும் உடையவை. ஆதிக்கங்கள் இல்லாமலும் மனிதன் இல்லை. ஆதிக்கங்களுக்கு எதிராகப் போராடுவதன்மூலமும் தன்னைப் படைத்துக் கொள்கிறான் மனிதன். முன்பெல்லாம் இறைவன் என்று பேசியவர்கள் இப்பொழுது இறைமை என்றும் தெய்வமென்றும் உட்காட்சி என்றும் காலமற்றது என்றும் பேசுகிறார்கள். நாம் நிதானமாகப் பயணம் செய்து இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். சைவமும் வைணவமும் தமிழனின் சமயங்கள். சமணம் அரசியல் அதிகாரத்தோடு ஒத்துழைத்த நிலையில் இந்த அதிகாரத்திற்கு எதிராக சைவம் கிளம்பியது. துறவென்பது வாழ்வுக்குள் இருக்கலாம். ஆனால் வாழ்வின் நியதியாக மாறிவிட முடியாது.

ஆண், பெண் என்ற உறவின் அடிப்படையில் மனித வாழ்க்கை இயங்குகிறது. உழைப்பில்லாமல், உற்பத்தியில்லாமல் சமூக வாழ்க்கை இல்லை. இத்தகைய சூழலில்தான் மனித வாழ்வுக்கு அர்த்தமும் அழகும் உண்டு. இந்தச் சூழலில்வைத்துத் தமிழில் பக்தி இலக்கியத்தை நாம் பார்க்க முடியும். தமிழுக்குள் எத்தனையோ வரலாற்றுப் போக்குகள் மற்றும் இயக்கங்கள். பக்தியின் வழியிலும் மனிதனை மட்டுமெல்லாமல், இலக்கிய இயக்கத்தையும் அப்புறம் இதன் எல்லைகளையும் நம்மால் புரிந்து கொள்ள முடியும். தமிழின் உயிரியக்கத்தை இப்படி எல்லாம் கண்டு மதிக்க முடியும்.

●

2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட, தொடர்ச்சியான இலக்கிய வளர்ச்சியைக் கொண்டது தமிழ்மொழி. வகை வகையான இலக்கியங்களையும் தனக்குள் கொண்டிருப்பது தமிழ்மொழி. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டதைப் போலவே 20-ஆம் நூற்றாண்டிலும் புதுவகையான இலக்கியப் பார்வைகளை உள்வாங்கிக் கொண்டுத் தமிழ் செழித்து வருகிறது.

முப்பதாண்டுக்கு மேலாகத் தமிழ் இலக்கியத்தைப் புதிய, புதிய முறைகளில் ஞானி வாசித்து வருகிறார். மார்க்சியம் என்னும் தளத்தில் உறுதியாக நின்றுகொண்டே, பெரியாரியம், தலித்தியம், பெண்ணியம், நவீனத்துவம், பின்-நவீனத்துவம் என்ற அணுகுமுறைகளைத் தொடர்ந்துக் கடைப்பிடித்துத் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய வளம் சேர்க்கிறார். சமத்துவம் சமதர்மம் ஆகியவற்றைத் தனக்குள் நீரோட்டமாகக் கொண்டுள்ள தமிழ் மரபுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் அழிவு இல்லை எனறு உறுதியாக நம்புகிறார். மறுவாசிப்பில் தமிழ் இலக்கியம் என்ற இந்த நூல் இந்த உண்மையை உறுதிப் படுத்துகிறது.

-கண குறிஞ்சி